SYLLABUS

III SEMESTER

PAPER : XII ( CORE PAPER)

CBCS PATTERN

## CONTEMPORARY HISTORY OF INDIA FROM 1947 TO 2014 CE

### UNIT- I

Dawn of Independence-Framing of Indian Constitution - Constituent Assembly – Draft Committee Report – Declaration of Indian Constitution – Process of National Consolidation and Integration of Indian States – Role of Sardar Patel – Kashmir Issue-Indo – Pak war, 1948 .

### UNIT- II

Nehru Era – First General Election of 1952- Five Year Plans – Democratic Socialism and Mixed Economy – Planning and Land Reforms – LinguisticReorganisation of States 1956 - Kamaraj Plan and Bhuvaneswar Congress.

### UNIT- III

India After Nehru – the Role of Lal Bahadur Shastri – Pak Aggression – the Ttreaty of Tashkent – Vision of New India – Indira Gandhi – Congress Split – Economic Policy; Nationalization of Banks – Abolition of Privy Purse – 1971 – Mid-term Poll – 20 point Programme – Authoritarian Politics – Total Revolution-J.P.Narayan – Allahabad Judgement - Proclamation of Emergency – Policies of Repression – General Election 1977 – New Political Alignment - the Govt of Janata Party . –Prime Ministership of Morarji Desai – breakup – Charansingh

### UNIT- IV

Re-emergence of Indira Gandhi – Election of 1980 – NAM Conference at Delhi – Punjab Crisis - Blue Star Operation-Assassination of Indira Gandhi – Era of Liberalism-PrimeMinistership of Rajiv Gandhi – New Economic Policy – Domestic Policy – Nagar Palika and Panchayat Raj Acts

UNIT- V

National Front Govt-V.P. Singh – Mandal Commission - the Issue of Rama Janma Boomi – Fall of Govt, 1991 Election – Restoration of Congress Rule – Narashimha Rao – Economic Policies – the Role of Manmohan Sigh as Finance Minister – United Front Govt- Regionalism and Instablity in India –the Policies and Issues under the Prime Ministership of Manmohan Singh-General Election of 2014-Rise of BJP

## REFERENCE BOOKS:


1. Bipan Chandra, Mridula Mukherjee et al. India After Independence, Penguin, 2003,

. Bhambri CP, Indian Politics since Independence., 2 Vols. Shipra Publishers

Chatterjee Partha, Ed., State and Politics in India, OUP, New Delhi, 1999.

Gopal, Sarvepalli-Jawaharlal Nehru: A Biographgy 3 Vols. Oup, New Delhi, 2012.

Mahajan, V.D.-Modern Indian History: From 1707 to the Present Day. Chand & Company, New Delhi, 2016.

Palmar, Norman D-The Indian Political System, 2nd Ed. Boston, 1971.

Venkatesan K-Contemporary, History of India-1947-2012, Rajapalayam: VC Publications, 2014.

______ Era of Rapid Charge, 1947-67, Publication Division, Govt. of India.

______ India 2017-A Reference Annual Book, Publication Division, Govt. of India.

# 1. சுதந்திர இந்தியா

> ...இந்த நள்ளிரவு நேரத்தில் உலகமே உறங்கிக் கொண்டிருக்கையில் இந்தியா சுதந்திரமாக வாழ்வதற்காக விழித்துக் கொள்கிறது.
>
> – ஜவகர்லால் நேரு.

## 1.1 1647 – 1947 பின் பார்வை

1647–இல் இங்கிலாந்தின் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் இருபத்தி மூன்று இடங்களில் வர்த்தகக் கிடங்குகளை நிறுவி நிர்வகித்து வந்தது. 1757–இல் நடைபெற்ற 'பிளாசிப் போரில்' வெற்றி பெற்றுக் கல்கத்தாவைக் கைப்பற்றிக் கொண்ட கம்பெனி வங்காளத்தில் அதன் மேலாதிக்கத்தை ஏற்படுத்தியது. 1857–இல் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக எழுந்த 'பெருங்கிளர்ச்சி' ஒடுக்கப்பட்டு இந்தியா இங்கிலாந்தின் முடியாட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. 1947–இல் இந்தியா பிரிட்டனின் பிடியிலிருந்து விடுதலை அடைந்தது. 300 ஆண்டு கால அந்நிய ஆதிக்க இருள் விலகி இந்தியாவில் சுதந்திர ஒளிபடர்ந்தது.

## 1.2 விடுதலையின் போது இந்தியா

இந்தியா 1947 ஆகஸ்டு மாதம் 14–15ம் நாள் நள்ளிரவில் பிரிட்டிஷ் பேராதிக்கத்தின் பிடியிலிருந்து விடுதலை அடைந்த போது ஒரு சகாப்தம் முடிந்து மற்றொரு சகாப்தம் ஆரம்பித்தது. சுதந்திர இந்தியா பிரிட்டிஷ் ஆட்சி போட்டுக் கொடுத்த பாதையை செப்பனிட்டு, மறுசீரமைத்து, சீர்திருத்தி மிகுந்த நம்பிக்கையோடு பயணத்தைத் தொடர்ந்தது. தேச விடுதலைக்குப் போராடிய தலைவர்கள் புதிய தொலைநோக்குடன் தேசப் புனரமைப்புக்குப் பொறுப்பேற்றனர்.

### 1.2.1 அட்லியின் அறிவிப்பு (The Attlee Declaration, 1947 பிப்ரவரி)

1946 ஆகஸ்டு 16–ம் தேதி "இடைக்கால அரசாங்கத்தை" (Interim Government) அமைக்குமாறு வைசிராய் வேவல் பிரபு, ஜவகர்லால் நேருவைக் கேட்டுக் கொண்டார். நேரு அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார். ஆனால் ஜின்னா இடைக்கால அரசாங்கத்தில் சேர முதலில் மறுத்துவிட்டார். மாறாக, அந்நாளைத் 'துக்கதின'மாகவும், **நேரடி நடவடிக்கை நாளாகவும்** (Direct Action Day) அனுசரிக்க வேண்டுமென்று அறிவித்தார், கல்கத்தா இனக்கலவரக் களமாயிற்று. திட்டமிட்ட தாக்குதல்களால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. வைசிராய் வேவல் பிரபு செயலிழந்தார்! அந்த நெருக்கடியான நேரத்தில் தொழிற்கட்சியின் பிரிட்டிஷ் பிரதமர் **கிளமண்ட் அட்லி** (Clement Attlee) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பை வெளியிட்டார் (1947 பிப்ரவரி 20).

பிரிட்டிஷ் பிரதமர் அட்லியின் அறிவிப்பின்படி 1) 1948 ஜூன் முதல் தேதிக்குள் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு அதிகார மாற்றம் செய்துவிடும்; 2) இந்தியாவில் யாரிடம் அதிகாரப் பொறுப்பை ஒப்படைப்பது என்பதைப் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு

செய்யும்; 3) வேவல் பிரபுவுக்குப் பதில் மௌண்ட்பேட்டன் பிரபு இந்திய வைசிராய் நியமிக்கப்படுவார். சுருங்கக்கூறின், அட்லியின் அறிவிப்பு வெள்ளையன் இந்தியா விட்டு வெளியேறுவதை உறுதி செய்தது.

## 1.2.2 மௌன்ட்பேட்டன் திட்டம் (The Mountbatten Plan, 1947)

பிரிட்டிஷ் பிரதமர் அட்லியின் அறிவிப்பைத் தொடர்ந்து வைசிராய நியமிக்கப்பட்ட **மௌன்ட்பேட்டன் பிரபு** இந்தியாவுக்கு வந்தார் (1947 மார்ச் 22) வைசிராயாகப் பதவியேற்ற உடனேயே அவர் ஜின்னா, நேரு, வல்லபாய் பட்டேல், அபு கலாம் ஆசாத், காந்தி மற்றும் முக்கிய தலைவர்களுடன் கலந்தாலோசித்தார். அதன்பின் மௌன்ட்பேட்டன் அட்லியின் அறிவிப்பையொட்டி ஒரு திட்டத்தைத் தயாரித்தா அத்திட்டத்தைத் தயாரிக்க நேருவும், வைசிராயின் 'சீர்திருத்தக் கமிஷனராகயிருந் **வி.பி.மேனனும்** உறுதுணையாக இருந்தனர். பிரிட்டிஷ் அமைச்சரவையின் ஒப்புதலை பெற்ற அத்திட்டமே **'மௌன்ட்பேட்டன் திட்டம்'** என்று அறியப்படுகிறது. இதுவே இந்தியப் பிரிவினைக்கு (Partition of India) அடிப்படையாக அமைந்தது.

**மாபெரும் மோசடி**

மௌன்ட்பேட்டன் திட்டம் ஒரு கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்த 400 மில்லியன் மக்களையும், அவர்கள் நூற்றாண்டு காலமாகச் சேர்த்து வைத்த சொத்துக்களையும் சமாதான சகவாழ்வையும் சீர்குலைத்து விட்டது. இந்தியா விடுதலை அடைவதற்கு சரியாக எழுபத்தி மூன்று நாட்களுக்கு முன் இந்தியாவை இரண்டாகப் பிளந்து விடுவதற்கான முடிவெடுத்தார் மௌன்ட்பேட்டன். 1947 ஜூன் 3 ஆம் தேதி இந்திய பிரிவினையைப் பற்றி மௌன்ட்பேட்டனும், நேருவும், ஜின்னாவும் டெல்லி வானொலி மூல அறிவித்தனர். அந்த அறிவிப்புக்கு இந்திய விடுதலைச் சட்டம் வடிவம் கொடுத்தது இந்திய தேசிய காங்கிரஸ் அங்கீகாரம் அளித்தது. உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய சிக்கல் மிக்க 'விவாகரத்து' நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜின்னாவின் பிடிவாதத்துக்கு வன்முறைப் போக்குக்கும் வளைந்து கொடுத்த இந்தியத் தலைவர்கள் கொள்கை விட்டுக் கொடுத்து, மனச்சான்றை அடகு வைத்து, அதிகார ஆசைக்கு ஆட்பட் இந்தியாவின் இரண்டு வளமிக்க மாகாணங்களான பஞ்சாபையும், வங்காளத்தையு கூறுபோட இசைந்தனர். இந்தியப் பிரிவினை சமகால வரலாற்றில் நிகழ்த்தப்பட் மாபெரும் மோசடியாகும்.

### 1.2.3 இந்திய விடுதலைச் சட்டம் (Indian Independence Act, 1947 ஜூலை)

'இந்தியப் பிரிவினை' முடிவானதும் பிரிட்டிஷ் அரசாங்கம் துரிதமாகச் செயல்பட்டது. பிரிவினைத் திட்டத்துக்கு வடிவம் கொடுக்கப்பட்டது. இந்திய விடுதலை மசோதா தயாரிக்கப்பட்டு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு (ஜூலை 4), இந்திய விடுதலைச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது (ஜூலை 18).

### 1.2.4 விடுதலை விடிதல் (Dawn of Independence, 1947 ஆகஸ்ட் 15)

சுதந்திர இந்தியா 1947 ஆகஸ்டு மாதம் 14–15 நள்ளிரவில் பிறந்தது. புது டெல்லியில் நாடாளுமன்றக் கட்டிடத்தின் மைய மண்டபத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றம் கூடியது. அதற்கு ராஜேந்திரப் பிரசாத் ... இரவு பனிரெண்டு மணிக்கு ... உணர்ச்சியோடு ...



முன்மொழிந்து பேசினார். அவரது குரல் நள்ளிரவின் நிசப்தத்துக்கிடையே கணீரென ஒலித்தது.

"நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னால் நாம் விதியோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம். அந்த ஒப்பந்தத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளும் நேரம் வந்துவிட்டது. இந்த நள்ளிரவு நேரத்தில் உலகமே உறங்கிக் கொண்டிருக்கையில் இந்தியா சுதந்திரமாக வாழ்வதற்காக விழித்துக் கொள்கிறது"!

நேரு முன்மொழிந்த தீர்மானத்தை சௌதரி காலிகுவாஸ்மன் வழிமொழிந்தார். அந்நிகழ்ச்சியின் இறுதியில் உரையாற்றிய தத்துவ வித்தகர் டாக்டர் **எஸ்.ராதாகிருஷ்ணன்** தீர்க்கதரிசனத்தோடு குறிப்பிட்டதாவது:

"... நமக்குள்ள வாய்ப்புகள் பெரிது... நாம் அதற்கான தகுதியையும் திறமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். உயர் பதவிகளில் ஊழல், உறவினர்களுக்குச சலுகை, அதிகார ஆசை, நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு ஆதாயம் பெறல், கருப்புச் சந்தை ஆகியவற்றின் அடிச்சுவடுகளை அகற்றாவிடில் நிர்வாகத் திறமையையும், நல்வாழ்வுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்தி மற்றும் வினியோகத்தையும் உறுதி செய்ய முடியாது".

அரசியலமைப்புச் சட்டமன்ற உறுப்பினர்களின் சுதந்திர தின சூளுரைக்குப் பின் பெண்களின் சார்பாக **ஹன்சா மேத்தா** மூவர்ண தேசியக் கொடியை எடுத்துக் கொடுக்க, இந்தியாவின் கடைசி வைசிராயும் முதல் கவர்னர்–ஜெனரலுமான மௌன்ட்பேட்டன் பிரபு கொடி மரத்திலிருந்து யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு அதற்குப் பதில் சுதந்திர இந்தியாவின் அசோகச் சக்கரம் பதிக்கப்பட்ட மூவர்ணக் கொடியை ஏற்றினார். **'இந்தியா விடுதலை அடைகிறது'** என்று அரசியலமைப்புச் சட்டமன்றப் பிரகடனத்தில் கையெழுத்திட்டார். அன்றிலிருந்து அரசியலமைப்புச் சட்டமன்றம் இந்தியாவின் நாடாளுமன்றமாயிற்று. மக்களின் ஆரவாரத்துக்கிடையே இராணுவ அணிவகுப்புடன் முதல் பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு, அவரது சகாக்களுடன் சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஆனால் அக்காட்சியைக் காண மகாத்மா காந்தி அங்கில்லை. அவர் நவகாளியில் இந்து–முஸ்லீம் இனக்கலவரத் தீயை அணைப்பதில் முழுமூச்சுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்!

## 1.3 இந்தியப் பிரிவினை (Partition of India)

### 1.3.1 ராட்கிளிப் எல்லைக் கமிஷன் (The Radcliffe Boundary Commission)

மௌன்ட்பேட்டன் திட்டத்தின்படி இந்தியப் பிரிவினை முடிவாயிற்று. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சேரவேண்டிய பகுதிகளைப் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் ஒரு எல்லைக் கமிஷனை அமைத்தது. **அக்கமிஷனின் தலைவராக சர் சிரில் ராட்கிளிப்** (Sir Cyril Radcliffe) நியமிக்கப்பட்டார். ராட்கிளிப் செல்வச் செழிப்பு மிக்க விளையாட்டு வீரரின் மகன். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் சட்டக்கல்வியில் தேர்ச்சி பெற்றார். திறமைமிக்க பாரிஸ்டராகப் புகழ்பெற்றார். பல்கலை வல்லவர். ஆனால் அவருக்குப் பஞ்சாப் – வங்காள எல்லைகளைப் பற்றியோ

ராட்கிளிப் இந்தியா வந்தவுடன் இந்தியா – பாகிஸ்தான் எல்லைப் பிரச்னை பற்றி வைசிராய் மௌன்ட்பேட்டனுடன் கலந்தாலோசித்தார். முஸ்லீம்களும் முஸ்லீம்கள் தோரும் பெரும்பான்மையினராக உள்ள பகுதிகளையும் பிற காரணிகளை கணக்கிலெடுத்துக் கொண்டு எல்லைக் கோடுகளை முடிவு செய்யுமாறு யோசனை கூறினார் மௌன்ட்பேட்டன். ஆனால் அவர் 'பிற காரணிகள்' யாவை என்பது பற்றி எதுவும் கூறவில்லை. இந்திய இராணுவத் தலைவராயிருந்த **சர் கிளாட் அச்சின்லெக்** (Sir Claude Auchinleck) எல்லைக் கோடுகளை வகுக்கையில் பாதுகாப்புப் பிரச்னை பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று ராட்கிளிப்புக்கு உறுதி கூறினார்.

எல்லைப் பிரிவினைத் திட்டத்தை 1947 ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்குள் கொடுத்துவிட வேண்டும் என்ற வைசிராய் மௌன்ட்பேட்டனின் நிபந்தனை ராட்கிளிப்புக்குப் பெரும் கவலையை அளித்தது. பிரிக்கபபட வேண்டிய எல்லைப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிடவோ, எல்லைப் பகுதி மக்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிவதற்கோ ராட்கிளிப்புக்குப் போதிய கால அவகாசமில்லை. அவசரமாக எல்லைக் கோடுகளை வகுப்பதில் தவறுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாது என்று எச்சரித்தார் ராட்கிளிப். எனினும் அந்த '**அறுவை சிகிச்சை**'யை மௌன்ட்பேட்டனும், ஜின்னாவும் நேரும் ஏற்றுக் கொண்டனர்.

### 1.3.2 ராட்கிளிப் தீர்ப்பு (Radcliffe Award)

நிலப்படங்கள், மக்கள் தொகை அட்டவணைகள், ஆவணங்கள், புள்ளி விவரங்கள், அறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்குச் சேரவேண்டிய பஞ்சாப் – வங்காள எல்லைப் பகுதிகளை முடிவு செய்தார் ராட்கிளிப். அவருக்குக் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கால் அங்கீகரிக்கப்பட்ட எட் உயர்நீதி மன்ற நீதிபதிகள் உதவி செய்தனர். பிரிவினைக்குப் பின்னரும் பஞ்சாபிலும் வங்காளத்திலும் பெரும்பான்மைச் சமூகத்தினரிடையே சிறுபான்மைச் சமூகத்தின விடுபடுவது தவிர்க்க முடியாததாயிற்று. இதன் பின்விளைவுகளைப் பற்றி ராட்கிளி நன்கறிந்திருந்தார். எனினும் கால நெருக்கடியின் கட்டாயத்துக்குட்பட்டு அவரிட ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றினார். ராட்கிளிப் தீர்ப்பு 1947 ஆகஸ்டு 17 ஆ தேதி – அதாவது இந்தியா சுதந்திரம் பெற்று இரண்டு நாட்களுக்குப் பின்ன வழங்கப்பட்டது!

**பஞ்சாப் பிரிவினை (The Partition of Punjab)**

ராட்கிளிப் எல்லைக் கமிஷன் தீர்ப்பின்படி பஞ்சாப் இருகூறுகளாக பிரிக்கப்பட்டது. மேற்கு பஞ்சாப் பாகிஸ்தானுடனும், கிழக்கு பஞ்சாப் இந்தியாவுடனும் இணைக்கப்பட வேண்டும் என்று முடிவாயிற்று. சிந்து நதியிலிருந்து டெல்லியின் எல்லை வரை உள்ள ஒவ்வொரு நகரமும், கிராமமும், நெல் மற்றும் கோதுமை வயல்களு பிரிக்கப்பட்டன! அதன் விளைவாக இந்தியாவின் கிழக்குப் பஞ்சாபில் வாழ்ந் முஸ்லீம்கள் பாகிஸ்தானுக்கும், பாகிஸ்தானின் மேற்கு பஞ்சாபில் வாழ்ந்த இந்துக்களு சீக்கியர்களும் இந்தியாவுக்கும் குடிபெயர்ந்து செல்லவேண்டியதாயிற் பன்னெடுங்காலமாகப் பஞ்சாப் இந்தியாவின் நெற்களஞ்சியமாகவும், உழைப்பி உறைவிடமாகவும், வீரத்தின் விளை நிலமாகவும் திகழ்ந்து வந்தது. அங்கு சீக்கியர்களு இந்துக்களும், முஸ்லீம்களும் மத நம்பிக்கைகளாலும் நடைமுறைகளாலு மாறுபட்டிருந்தாலும், மொழியாலும் மரபாலும் பொருளாதாரம் ஒன்றுபட்டிருந்தனர். எனவே, பஞ்சாப்பை



**வங்காளப் பிரிவினை (The Partition of Bengal)**

ராட்கிளிப் தீர்ப்பின்படி பஞ்சாப்பைப் போன்றே வங்காளமும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. கிழக்கு வங்காளம் பாகிஸ்தானுடனும், மேற்கு வங்காளம் இந்தியாவுடனும் இணைக்கப்பட வேண்டும் என்று முடிவாயிற்று. வங்காளத்தில் வாழ்ந்து வந்த 35 மில்லியன் முஸ்லீம்களும், 30 மில்லியன் இந்துக்களும் சமயவழி வேறுபட்டிருந்தாலும் மொழி – கலாச்சார – பொருளாதார வழி ஒன்றுபட்டிருந்தனர். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15 ஆம் நாளை இன வேறுபாடின்றி வங்காளப் புத்தாண்டாகக் கொண்டாடி வந்தனர். தாகூரைப் போன்ற கவிஞர்களை இரு இனத்தவரும் போற்றிப் பாராட்டிப் புகழ்ந்தனர். வங்காளத்தின் கிழக்குப் பகுதியில் பெரும்பான்மையினராயிருந்த முஸ்லீம்களும், மேற்குப் பகுதியில் பெரும்பான்மையினராயிருந்த இந்துக்களும் தேசிய உணர்வால் உந்தப்பட்டவர்கள். சணல் சாகுபடியை நம்பியிருந்த முஸ்லீம்கள் நெல் சாகுபடியைச் சார்ந்திருந்த இந்துக்களை நம்பியிருந்தனர். பஞ்சமும், பெரு வெள்ளமும் மாறி மாறி வங்காளத்தை வாட்டிய போதெல்லாம் இந்து–முஸ்லீம்கள் அவற்றை இணைந்தே எதிர்கொண்டனர். 1905–ல் இவர்களை இனவழிப் பிரிவினை செய்து தோல்வி கண்டார் கர்சன் பிரபு. இமயமலையின் அடிவாரத்திலிருந்த வங்காளத்தைக் கங்கையும், பிரம்மபுத்திராவும் வளமாக்கி விட்டு வங்காள விரிகுடாவில் கலந்தன. இத்தகைய வங்காளம் பிரிக்கப்பட்டு கிழக்கு வங்காளம் இந்தியாவின் மேற்குக் கோடியில் 970 மைல்களுக்கு அப்பாற்பட்டிருந்த பாகிஸ்தானோடு இணைக்கப்பட்டது. கிழக்கு வங்காளம் 'கிழக்கு பாகிஸ்தான்' ஆயிற்று. இதை '**பூகோள அபத்தம்**' (Geographical Aberration) என்று வர்ணித்துள்ளனர் கோவின்ஸ் மற்றும் லாப்பியேர்.

## 1.4 பிரிவினையின் விளைவுகள்

### 1.4.1 இனக்கலவரங்கள் (Communal Riots)

**பஞ்சாப் படுகொலை (Punjab Massacre)**

ராட்கிளிப் பஞ்சாப் பிரிவினை பற்றிய தீர்ப்பு குளவிக்கூட்டில் கைவிட்ட கதையாயிற்று! பஞ்சாபியரின் பெரும்பான்மையோர் அத்தீர்ப்பை ஏற்கவில்லை. 1947 துவக்கத்திலிருந்தே பஞ்சாபில் நிலவி வந்த இன ஒற்றுமை குலையத் துவங்கியது. முஸ்லீம் லீக் 'இன வெறியர்கள்' பஞ்சாப் முஸ்லீம்களை இரகசியமாகச் சந்தித்து அவர்களது உள்ளங்களில் இனவாத நச்சு விதைகளை விதைத்து வந்தனர்; இன வெறுப்பைத் தூண்டி விட்டனர்.

இந்தியப் பிரிவினை நடைமுறைக்கு வருமுன்னரே பஞ்சாபில் இனக்கலவரம் எரிமலையாய் வெடித்தது. 1947 மார்ச் மாதம் ஒரு சீக்கியத் தலைவர் முஸ்லீம் லீக்கின் கொடிக் கம்பத்தை வெட்டிச் சாய்த்ததன் விளைவாக மூவாயிரம் இந்துக்கள் – பெரும்பாலும் சீக்கியர்கள் – கொன்று குவிக்கப்பட்டனர். திட்டமிட்ட கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் பஞ்சாப்பை இனமோதல் படுகளமாக்கின. பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பஞ்சாப்பை ஆட்சி செய்து வந்த கூட்டணி அரசாங்கம் (Coalition Government) பதவி விலகியது. பஞ்சாப் ஆளுநர் **சர் இவான் ஜென்கின்ஸ்** (Sir Evan Jenkins) நிர்வாகப் பொறுப்பேற்றார்.

மார்ச் மாதம் படுகொலையால் பாதிக்கப்பட்ட சீக்கியர்கள் பழிக்குப் பழி வாங்கக்

கொண்டிருக்கையில் சீக்கியர்கள் லாகூரில் **மாஸ்டர் தாராசிங்** தலைமை எதிர்த்தாக்குதல் பற்றித் திட்டமிட்டனர்.

இந்தியா சுதந்திரம் பெற்றபோது மேற்கு பஞ்சாபிலிருந்து இந்து சீக்கியர்களையும், கிழக்கு பஞ்சாபிலிருந்து முஸ்லீம்களையும் விரட்டும் முயற்சியி கைக்கூலிகளும், இன வெறியர்களும், சமூக விரோத சக்திகளும் மேற்கொண்ட லாகூரில் இந்து–சீக்கியர்களின் வீடுகள் தீக்கரையாகின, சொத்துக்க சூறையாடப்பட்டன, கிடங்குகளில் அடைக்கப்பட்டு முஸ்லீம் காவல் படையினரால் சுட்டு கொல்லப்பட்டனர். கற்பழிப்புக்கஞ்சி பல பெண்கள் தீக்குளித்தனர். அதேபோன் அமிர்தசரசில் முஸ்லீம்களின் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன, வயல்க நாசமாக்கப்பட்டன, வாய்க்கால்கள் பிணங்களால் நிறைந்தன. சீக்கியர்களி சீற்றத்திலிருந்து காப்பாற்றப் பல முஸ்லீம்கள் தங்கள் மனைவிகளையும் பெண்களை கொன்று விட்டனர். தற்காப்புக்காக லாகூரிலும் அமிர்தசரசிலும் முஸ்லீம்க சீக்கியர்களையும், சீக்கியர்கள் முஸ்லீம்களையும் கொன்று குவித்தனர். இம்மனி மிருகத்தாக்குதலிலிருந்து எந்த ஒரு நகரமும், கிராமமும், தெருவும் தப்பவில்ல வெறுப்புக்கு இன, மத, மொழி வேறுபாடு இல்லை அல்லவா?

**மேஜர் ஜெனரல் ரீஸ்** (Major General Rees) தலைமையில் அமைக்கப்பட்ட பஞ்சா **எல்லைப் படை** (Punjab Boundary Force) மேற்கொண்ட 'நெருப்பணை நடவடிக்கை'யால் பஞ்சாப் படுகொலையைத் தடுக்கவோ இனக்கலவரங்களை ஒடுக்கவே முடியவில்லை. பஞ்சாப் எல்லைப்படை இனக்கலவரத்தை எதிர்கொள்ளக்கூடிய போதி பலம் பெற்றிருக்கவில்லை. அதற்குக் குதிரைப் படையும் கொடுக்கப்படவில்லை. மேலு அப்படை வீரர்களிடையே கட்டுப்பாடும் ஒழுங்குணர்வும் குறைந்தே காணப்பட்ட அவர்களில் சிலர் இனக்கலவரங்களில் சார்புடையவர்களாக நடந்து கொண்டனர் என் சந்தேகிக்கப்பட்டது. பஞ்சாபில் நிர்வாகம் முற்றிலும் சீர்குலைந்து போயிற்று. அமிர்தசர இனக்கொலைக்குப் பதிலாக லாகூரிலிருந்து அமிர்தசரஸ் சென்ற டென்–டவு எக்ஸ்பிரஸில் பயணம் செய்த சீக்கிய அகதிகள் அனைவரையும் கொன்று பிணமா அனுப்பினர்.

மதவெறி மட்டும் பஞ்சாப் படுகொலைக்குக் காரணமல்ல. நிலப் பேராசை அதற்கு அடிப்படைக் காரணம் என்று கூறுகிறார் **எஸ்.கே.சின்ஹா.** மேற்கு பஞ்சா முஸ்லீம்கள் அங்கு இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் சொந்தமான நிலங்கள், கடைக வீடுகள், பிற சொத்துக்கள் அனைத்தும் தங்களுக்கே சொந்தம் என்று கருதின அதேபோன்று கிழக்கு பஞ்சாப் இந்துக்களும் சீக்கியர்களும் அங்கிருந்த முஸ்லீம்களை பாகிஸ்தானுக்கு விரட்டிவிட்டு அவர்களது சொத்துக்களை அபகரித்துக் கொள் வேண்டுமென்று விரும்பினர். எனவே, மதமுலாம் பூசப்பட்ட சொத்தாசையே பஞ்சா படுகொலைக்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

### 1.4.2 வங்காள இனக்கலவரங்கள் (Bengal Communal Riots)

இந்தியப் பிரிவினை மீண்டும் வங்காளத்தில் இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டத 1946 ஆகஸ்ட் 16–ம் தேதி முஸ்லீம் லீக் கட்டவிழ்த்து விட்ட நேரடி நடவடிக்கை நாளன் பாதிக்கப்பட்ட மோசமான பகுதிகளில் ஒன்று நவகாளி. நவகாளி கங்கை – பிரம்மபுத்திர சதுப்பு நிலப்பகுதியில் உள்ள ஸ்ரீராம்பூரில் இருக்கிறது. நாற்பது ... பரப்பளவேயுடைய நவகாளியில் ...



அமைத்துக் கொண்டு, அசாதாரணத் துணிவுடன் கிராமம் கிராமமாக நடந்தே சென்று, கல்லடியையும் சொல்லடியையும் எதிர்கொண்டு, முஸ்லீம்களின் மூர்க்கத்தனத்தை முனை மழுங்கச் செய்தார். அச்செயலை உலகே வியந்து பாராட்டியது. நாட்டுப் பிரிவினையையொட்டி வெடித்த கல்கத்தா இனக் கலவரத்தை அடக்க எந்த எல்லைப் படையும் அனுப்பப்படவில்லை. மாறாக, மகாத்மா காந்தி **தனி மனித எல்லைப் படை** (One Man Boundary Force)யாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் வைசிராய் மௌன்ட்பேட்டன் பிரபு.

மகாத்மா காந்தி வைசிராயின் வேண்டுகோளை ஏற்று இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முப்பத்தியாறு மணி நேரத்துக்கு முன்னால் நவகாளி சோடேபூர் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டு பத்து மைல்களுக்கப்பால் இருந்த கல்கத்தாவுக்குச் சென்றார். கல்கத்தா முஸ்லீம்களின் தனிப்பெரும் தலைவராகத் திகழ்ந்த **ஷாகீத் சூரவத்தியுடன்** ஒரே காரில் கல்கத்தா வீதிகளுக்குச் சென்று இன ஒற்றுமையையும் அமைதியையும் நிலைநாட்டினார். 1947 ஆகஸ்ட் 14 ஆம் தேதி மாலை சரியாக ஐந்து மணிக்குப் பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசிய காந்தி "... நாளையிலிருந்து நாம் பிரிட்டிஷ் ஆட்சித் தளையிலிருந்து விடுபடுவோம். ஆனால் இன்றிரவு இந்தியா இரு கூறுகளாகப் பிரிக்கப்படும். நாளை இன்பகரமான நாள்; துக்ககரமான நாளும் கூட". கல்கத்தா 77 வயதான '**நவகாளி நாயகர்**' காந்தியின் காந்தக் கவர்ச்சிக்குக் கட்டுப்பட்டிருந்தது. 55,000 படை வீரர்களைக் கொண்ட பஞ்சாப் எல்லைப் படை செய்ய முடியாத அதிசயத்தை காந்தி என்ற தனிமனித எல்லைப்படை வீரர் கல்கத்தாவில் நிகழ்த்திக் காட்டினார்.

### 1.4.3 வரலாறு காணாத குடியேற்றம் (Unprecedented Migration)

1947 மார்ச் மாதத்திலிருந்தே இனக் கலவரங்களின் விளைவாக மேற்கு பஞ்சாபிலிருந்து சீக்கியர்களும் இந்துக்களும் குடிபெயர்ந்து இந்தியாவுக்கு வரத் துவங்கிவிட்டனர். ஆகஸ்ட் 14 ஆம் தேதி லாகூரில் இனக்கலவர பூகம்பம் வெடித்தது. அதன் எதிரொலி அமிர்தசரசிலும் கேட்டது. ஒரு நாளைக்கு ஐந்திலிருந்து ஆறு மில்லியன் சீக்கியர்களும் இந்துக்களும் மேற்கு பஞ்சாபிலிருந்து இந்தியாவுக்கும், அதே எண்ணிக்கையில் முஸ்லீம்கள் கிழக்கு பஞ்சாபிலிருந்து பாகிஸ்தானுக்கும் அகதிகளாகச் சென்றனர். முன்னுதாரணமற்ற இக்குடியேற்றத்தின் போது பல்லாயிரக்கணக்கானோர் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களால் உயிரிழந்தனர். இதை '**வரலாறு காணாத குடியேற்றம்**' என்று வர்ணித்துள்ளனர் கோலின்ஸ் – லாப்பியேர்.

இந்தியப் பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட இனக்கலவரங்களில் இறந்தோர் பற்றி ஆய்வு செய்த **நீதிபதி ஜி.டி.கோஷ்லா, பென்டர்சன் மூன், எச்.வி.ஹட்சன்** ஆகியோர் முறையே 5,00,000, 2,00,000, 2,50,000 என்று கணக்கிட்டுள்ளனர். பஞ்சாபின் முதல் இந்திய ஆளுநராயிருந்த **சர் சந்துலால் திரிவேதி** இறந்தோரின் எண்ணிக்கை 2,25,000 ஆக இருக்கக் கூடும் என்று மதிப்பிட்டார். **ஐயான் ஸ்டீபன்ஸ்** 5,00,000 என்றும், **எம்.எட்வர்ட்ஸ்** 6,00,000 என்றும் குறிப்பிட்டுள்ளனர். அதிகபட்சம் இரண்டு மில்லியன் மக்கள் மாண்டிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது!

பாகிஸ்தானிலிருந்து வெள்ளம் போல் வந்த அகதிகள் டெல்லியில் குடியேறினர். டெல்லியில் வெடித்த இனக்கலவரம் அகதிகள் பிரச்னையை மேலும் சிக்கலாக்கியது. பிரதமர் ... மௌன்ட்பேட்டன், சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர்–ஜெனரல் லூயி மௌன்ட்பேட்டன், ... வல்லபாய் பட்டேல் ஆகிய மூவரும் அகதிகளின் ...

4) ரயில்வே, பாதைப் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு முறைகள் இந்தி பல்வேறு பகுதிகளையும் மக்களையும் ஒருங்கிணைத்ததோடு விரைவான பொருளா வளர்ச்சிக்கும் உதவியாக இருந்தன; 5) உயர் மற்றும் தொழில் கல்வியும் பயிற்சியும் மனித வளம் பொருளாதார வளர்ச்சிப் பொறுப்பேற்கத் தயாராக இருந்தது.

### 1.5.2 சமூக நிலை

இந்தியா சுதந்திரம் பெற்ற போது நாட்டின் சமூக நிலை மிகவும் மோச நிலையில் இருந்தது. சமூக அமைப்பின் முதுகெலும்பாக இருந்த சாதிமுறை ( System) மக்களின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருந்தது. ஒரு காலத்தில் சமூ பொருளாதாரப் பாதுகாப்பைக் கொடுத்து வந்த சாதி முறை சமுதாயத்தைப் பல குழுக்களாகப் பிரித்து, குலத் தொழிலை ஊக்குவித்து, உழைப்பாளர்களின் வே நாடலையும் இடமாற்றத்தையும் தடுக்கும் தடைக்கற்களாக இருந்தன.

சாதிமுறையைப் போன்றே **கூட்டுக் குடும்ப முறை** (Joint Family System) முக்கிய சமூக அமைப்பாகவே நீடித்தது. இம்முறையில் குடும்ப உறுப்பினர்கள் அனைவ ஒன்றுபட்டு உழைத்து, வளங்களையும் வருவாயையும் பகிர்ந்து கொண்டு, கடமைகளை பங்கேற்று வாழ்ந்து வந்தனர். **கூட்டுக் குடும்ப அமைப்பில் திடமாக உணர்வு**, [illegible] பரிவு, ஆதரவற்றோர் விதவைகள் மற்றும் நோயுற்றோருக்குப் போதிய பாதுகாப்பு இருந்த அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பிரிவுபடாமல் இருந்தன. ஆனால் ஒரு சில வருவாயை ஈட்டிய பலர் வறுமையையும் வசதியின்மையையும் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. சார்புடைமையும் சோம்பேறித்தனமும் பெருகின. கடின உழைப்பு ஊக்கமில்லாமல் போயிற்று.

இந்திய **கிராமங்களின் [illegible]** காட்சியளித்தது. கிராம மக்கள் அறியாமையிலும், மூட நம்பிக்கைகளிலும், போலிக் கட்டுப்பாடுகளிலும் மூழ்கிக் கிடந்தன. கிராமங்கள் நகரிய நீரோட்டத்திலிருந்து விலக்கப்பட்டே இருந்தன. அவை அறிவிய தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளவில்லை. "**கிரா என்பது பிராந்தியவாதத்தின் சாக்கடைப் புதைகுழி; அறியாமை, குறு மனப்பான்மை மற்றும் இனவாதத்தின் குகை**" என்று வர்ணித்தார் பி.ஆர். அம்பேத்கர். இந்திய கிராமங்கள் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, சமூக நீதியும் சமத்துவமு இன்றி, வறுமைக் கடலில் மிதக்கும் தீவுகளைப் போன்று காட்சியளித்தன.

### 1.5.3 இந்து – முஸ்லிம் இன நிலை

இந்துக்களும், முஸ்லிம்களும் இருவேறு இனங்கள் என்ற ஜின்னாவின் **இரு தேசக் கோட்பாட்டின்** (Two-nation Theory) அடிப்படையில் இந்தியா பிரிக்கப்பட்ட ஆனால் இந்தியப் பிரிவினை **இந்து – முஸ்லிம் இனப்பிரச்சனைக்குத் தீர்** அமையவில்லை. அதற்குக் காரணம் பிரிவினைக்குப் பின்னர் இந்தியாவை விட்டு பாகிஸ்தானுக்குச் சென்ற முஸ்லிம்களை விட இந்தியாவிலேயே [illegible] எண்ணிக்கை அதிகமாக இருந்தது [illegible] இந்து – முஸ்லிம் இனக் கலவரங்கள் [illegible]



## 1.6 மதிப்பீடு

1947 ஆகஸ்டு 14–15 ஆம் தேதி நள்ளிரவில் இந்திய சுதந்திரம் இனக்கலவர வலியோடு பிறந்தது. இந்தியாவும் பாகிஸ்தானும் '*சீசரிய அறுவை சிகிச்சை*' (Caesarean Section)-க்குப் பிறகு பிறந்த இரட்டைக் குழந்தைகள். பிரிவினையால் இந்தியா பெரிதும் பாதிக்கப்பட்டது. இனக் கலவரங்களும், அகதிகள் பிரச்சனையும் இந்தியா விடுதலை அடைந்ததற்காகக் கொடுக்கப்பட்ட விலையாகும். இந்தியப் பிரிவினை இனக்கலவர இரத்தக்களறியில் முடியும் என்ற யதார்த்தத்தைக் காந்தி, ராட்கிளிப் தவிர மௌண்ட்பேட்டனோ, நேருவோ, ஜின்னாவோ, பஞ்சாப் ஆளுநரோ, அதிகார வர்க்கத்தினரோ சற்றும் எதிர்பார்க்கவில்லை. குறிப்பாக நேருவும், ஜின்னாவும் இன உணர்வுகளைக் குறைத்து மதிப்பிட்டு விட்டனர். இந்தியப் பிரிவினையை இரு சகோதரர்களுக்கிடையேயான சொத்துத் தகராறு என்று எண்ணினார் ஜின்னா.

சொத்தாசை இன வெறுப்புடன் சேரும்போது விளைவுகள் விபரீதமாகும் என்பதை இந்தியப் பிரிவினை கோடிட்டுக் காட்டியது. எல்லைப்படை வீரர்களில் சிலர் இனக்கலவரங்களில் கலந்து கொண்டது துரதிஷ்டமானது. டெல்லியில் குடியேறிய அகதிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட துயர் துடைப்புப் பணிகள் மௌண்ட்பேட்டன், நேரு, பட்டேல் ஆகியோரின் மனிதாபிமானத்துக்கும், நிர்வாகத் திறமைக்கும், அரசியல் விவேகத்துக்குமான சிறந்த எடுத்துக்காட்டாகும். உலகில் வேறு எந்த நாடும் சுதந்திரமடைந்த போது இத்தகைய இனக் கலவரச் சவாலை சந்திக்கவில்லை என்று கூறுகின்றனர் கோலின்ஸ்–லாப்பியேர். இந்தியப் பிரிவினை இன வெறுப்பை நீடிக்கச் செய்ததேயன்றி நீக்கவில்லை. தேசப் பிரிவினை தீர்மானத் தவறு (Error of Judgement) என்பதை நேரு நேர்மையுடன் ஒத்துக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார் எஸ்.கோபால்.

# ...ங்கள் இணைப்பு

> என்னுடைய வாரிசு நேரு. எனக்குப் பின் என்னுடைய மொழியை அவர்தான் பே...
> நேருவின் கரங்களில் இந்த நாடு பத்திரமாக இருக்கும்.
>
> – மகாத்மா கா...

## முதல் பிரதமர்

**ஜவகர்லால் நேரு 1947** ஆகஸ்டு 15–ஆம் தேதியிலிருந்து 1964 மே 27 ... சுதந்திர இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றினார். பதினேழு ஆண்டுகள் தொ... பிரதமராக இருந்து இந்திய அரசாங்கத்துக்கு உறுதியையும், தொடர்ச்சியை... நம்பகத்தன்மையையும் கொடுத்தார். இந்திய விடுதலைப் போராட்டத்... குறிக்கோள்களை, கனவுகளை, திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் வாய்... அவருக்கு இருந்தது. சுதந்திர இந்திய சவால்களைச் சாதுர்யமாகச் சமாளித்... இந்தியப் பிரிவினையால் உருவான அகதிகள் பிரச்னை; பிரிந்திருந்த இந்தி... பகுதிகளை ஒருங்கிணைத்தல்; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் தீட்... பொருளாதார, சமூக, கலாச்சாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்... மாநிலங்களை மறுசீரமைத்தல்; வெளிநாட்டுக் கொள்கையைக் கொடுத்து உ... நாடுகளுடன் சமாதான சகவாழ்வு உறவு கொள்ளல் போன்ற ஆக்கப்பூர்வமா... நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தியாவுக்குப் பெருமைக்குரிய இடத்தை... பெற்றுத்தந்த சிறப்பு நேருவுக்கு உண்டு. இந்தியாவில் இறையுரிமையுடைய ஜனநாய... சோஷலிச, நாடாளுமன்ற மக்களாட்சி மலர்வதற்கு நேருவின் பங்களிப்புகள் வரலாற்... முக்கியத்துவமுடையவை. எனவே, நேருவின் ஆட்சிக்காலம் **'நேரு சகாப்தம்'** (The Ne... Era) என்று அழைக்கப்படுகிறது.

## ஜவகர்லால் நேரு

ஜவகர் **1889** நவம்பர் **14–**ஆம் தேதி அலகாபாத்தில் காஷ்மீர் பிராமண... குடும்பத்தில் மோதிலால் நேருவுக்கும் சொரூபராணிக்கும் மகனாகப் பிறந்தா... வழக்கறிஞர் தொழிலில் செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்த மோதிலால் நே... ஜவஹருக்குத் தரமான துவக்கக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்தார். ஜவஹர் த... இளமைக் காலத்தில் ஆங்கிலத்தாதிகளால் – குறிப்பாக புரூக்ஸ் – வீட்டிலேயே கல்... கற்பிக்கப்பட்டார். பின்னர் உயர்கல்வி பெற இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அவ... அங்கு புகழ் பெற்ற ஹாரோ, கேம்பிரிட்ஜ், டிரினிட்டி கல்வி நிறுவனங்களில் பயின்... பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.

ஜவகர்லால் நேரு இங்கிலாந்தில் மாணவராக இருந்தபோதே **'பேபியன் சோஷலிஸ்டு'**களான **சிட்னி வெப், பியாட்ரிஸ் வெப், ஜார்ஜ் பெர்னார்டு ஷா** போன்...

வரலாற்றில் மனதைப் பறி கொடுத்தார். ஆச்சரியமல்ல. இங்கிலாந்தில் இந்திய மாணவர்கள் நடத்தி வந்த **'மஜ்லிஸ்'** என்ற அமைப்பின் [illegible] சந்திரபால், லாலா லஜபதிராய், கோபாலகிருஷ்ண கோகலே போன்ற பிரபல இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு நாட்டுப்பற்று கொண்டார்.

1912 இல் இந்தியா திரும்பிய ஜவகர்லால் நேரு அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வக்கீல் வாழ்க்கையைத் தொடங்கினார். ஆனால் நேருவுக்கு வக்கீல் தொழிலை விட சமூக சேவையிலும், அரசியல் தொண்டிலும் நாட்டம் அதிகமாக இருந்தது. பாட்னாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார் (1912 டிசம்பர்). கோகலே துவக்கிய **இந்திய ஊழியர்கள் சங்கத்தில்** (Servants of Indian Society) உறுப்பினர் ஆனார். தென் ஆப்பிரிக்காவில் காந்தி நடத்திய போராட்டத்துக்கு நிதி திரட்டும் பணியில் நேரு, கோகலேக்கு உறுதுணையாக இருந்தார் (1914). மேடைப் பேச்சாளரானார் (1915). இரண்டாண்டுகள் அலகாபாத் நகராட்சி மன்றத் தலைவராகவும் தொண்டாற்றினார். 1916 பிப்ரவரி 8–ஆம் தேதி நேரு டெல்லி வணிகர் பண்டிதர் ஜவஹர் முல் என்பவரின் மகள் **கமலா கௌள**வைத் திருமணம் செய்து கொண்டார். அதன்பின் இந்தியரின் அரசியல் விடுதலைக்காக அன்னிபெசண்ட் அம்மையார் தொடங்கிய **'ஹோம் ரூல்'** இயக்கத்தில் தீவிர பங்கேற்றார் (1917). கிஸான் (உழவர்) சபையின் துணைத் தலைவராகி அயோத்தி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தார்; சுதேசியாக மாறினார் **(1918).**

தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய காந்தி 1920 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கிய போது நேரு, காந்தியின் காந்தக் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டார். வக்கீல் தொழிலைத் துறந்துவிட்டு இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வருகை தந்த போது அவருக்கெதிராக ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்தமைக்காக நேரு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் (1921). காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரு (1923) பின்னர் அதன் பொதுச் செயலாளர் ஆனார் (1924). சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் 'பூரண சுதந்திரம்' பற்றிய தீர்மானத்தை கொண்டு வந்தார் நேரு (1927).

இந்தியா விடுதலை அடைவதற்கு முன் நேரு ஐந்து முறை காங்கிர... **தலைவராகத்** தேர்ந்தெடுக்கப்பட்டார் (1929, 1930, 1936, 1937, 1946). உ... சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு இருமுறை சிறை தண்டனை பெற்று நைனிட... சிறையில் அடைக்கப்பட்டார் (1930). அதன்பின் துவக்கப்பட்ட விடுதலை... போராட்டங்களில் பங்கேற்றுப் பலமுறை சிறை சென்றார் நேரு. ஜவஹர்லால் நேரு த... பொது வாழ்வில் 3262 நாட்கள் – சுமார் பத்து ஆண்டுகள் சிறைப் பறவை... இருந்துள்ளார்! 1946 செப்டம்பர் 2–ஆம் தேதி இந்திய வைசிராய் வேவல் பிர... அழைப்பை ஏற்று காங்கிரஸ் தலைவராக இருந்த நேரு இடைக்கால அரசாங்கத்து... தலைமைப் பொறுப்பேற்றார். 1947 ஆகஸ்டு 15 ஆம் தேதி இந்தியா சுத... பெற்றதிலிருந்து 1964 மே 27 ஆம் தேதி வரை ஜவஹர்லால் நேரு பாரதப் பிரத... இருந்து நாட்டை நல்வழி நடத்திச் சென்றார்.

## 2.1 மன்னர் மாநிலங்கள்

**மூவகை இந்தியா**

... எதிர் கொண்டிருந்த நேரு அரசாங்கம் ...

... போது மூன்று பகுதிகளா...

பிரிந்திருந்தது:

1. **பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள்** (British Indian Provinces) சென்னை, பம்பா... உத்திரப்பிரதேசம், பீகார், மத்திய மாநிலங்கள், ஒரிசா, பஞ்சாப், வங்காளம், அஸ்ஸா... சிந்து ஆகிய மாகாணங்களை உள்ளடக்கியது பிரிட்டிஷ் இந்தியா.
2. **தலைமைக் கமிஷனர் மாகாணங்கள்** (Chief Commissioner's Provinces) பிரிட்டி... பலுசிஸ்தானம், வடமேற்கு எல்லை மாகாணமும் தலைமைக் கமிஷனரா... நிர்வகிக்கப்பட்டு வந்தன.
3. **மன்னர் மாநிலங்கள்** (Princely States) மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்... ஐநூறுக்கும் மேற்பட்ட பகுதிகள் இந்திய மாநிலங்கள் (Indian States) என்... அழைக்கப்பட்டன.

இம்மூன்று பகுதிகளின் பிரதிநிதிகளைக் கொண்டுதான் 1946 அமைச்சரவை தூதுக் குழுவின் (Cabinet Mission) பரிந்துரைப்படி அரசியலமைப்புச் சட்டமன்றம் அமைக்கப்பட்டது. அப்போது ஜவஹர்லால் நேருவின் தலைமையில் செயல்பட்ட **இடைக்கால அரசாங்கம்** (Interim Government) இந்தியப் பகுதிகள் – மன்னர் மாநிலங்கள் – இணைப்புப் பிரச்னையைத் தீர்க்க ஒரு **தனி அமைச்சரகத்தை** (State Ministry) ஏற்படுத்தியது. அதற்குப் பொறுப்பாக இருந்த **சர்தார் வல்லபாய் பட்டேல்** மன்னர் மாநிலங்களை இந்தியாவுடன் இணைத்து அருஞ்சாதனை புரிந்தார்.

## 2.2 மாநிலங்கள் இணைக்கப்படல்

### 2.2.1 இணைப்பு உடன்பாடுகள்

இந்தியா சுதந்திரம் பெற்ற போது பிரிட்டிஷ் இந்தியாவுடன் தலைமைக் கமிஷனர் மாகாணங்களை இணைப்பதில் எவ்வித இடர்ப்பாடும் இல்லை. ஆனால் மன்னர் மாநிலங்களை சட்டப்படி இந்தியாவுடன் சேர்ப்பதில் சில சிக்கல்கள் இருந்தன. ஏனெனில் மன்னர்கள் தங்களது தனித்தன்மையையும், சலுகைகளையும் சுயாட்சியையும் நிலைநிறுத்திக் கொள்ள விரும்பினர். எனவே, அவர்களுக்குச் சட்ட நிலைமையை எடுத்துக் கூறுவதற்காக கவர்னர் ஜெனரல் மௌன்ட்பேட்டன் பிரபு 1947 ஜூலை 25-ஆம் தேதி **'இந்திய மன்னர்கள் மாநாடு'** ஒன்றைக் கூட்டினார். அம்மாநாட்டில் அவர் இந்தியாவில் பிரிட்டிஷ் மேலாதிக்கம் ஆகஸ்டு 15 ஆம் தேதியுடன் முடிவடைகிறது என்றும், அதற்குள் மன்னர்கள் தங்களது ஆள் நிலப் பகுதிகளை பூகோள நிலைமைக்கேற்றவாறு இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைத்துக் கொள்ளலாம் என்றும் அறிவித்தார். தனது செல்வாக்கைப் பயன்படுத்தி மன்னர்களின் எதிர்கால வாழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் உறுதியளித்தார் கவர்னர் ஜெனரல். அதன் பின் சர்தார் வல்லபாய் பட்டேல் மன்னர்களுடன் கலந்து பேசி இணைப்பு உடன்பாடுகளுக்கு அவர்களது இசைவிணக்கத்தைப் பெற்றார். **மன்னர்களுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்து வந்த ஆதரவையும், சலுகைகளையும் நீடிப்பதாக உத்திரவாதமளித்தார் பட்டேல்.** அந்த உத்திரவாதத்தின் பேரில் 550 மன்னர்கள் தங்களது ஆட்சிப் பகுதிகளை **இந்தியாவுடன் இணையும்** இணைப்பதற்கான **இணைப்புப் பத்திரத்தில்** (Instrument of Accessio...) இந்தியாவுடன் சட்டப்படி கையொப்பமிட்டனர். ஆனால் ஜூனகத், ஐதராபாத் மற்றும் காஷ்மீர் ... அவ்வாறு இணைவதற்கு இணங்கவில்லை!



### 2.2.2 ஜுனகத் இணைப்பு (Accession of Junagadh)

ஜுனகத் பம்பாய்க்கு வடக்கே மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ளது. நவாபின் ஆட்சியின் கீழ் இருந்த அப்பகுதியின் 6,20,000 மக்கள் தொகையில் 80 விழுக்காட்டுக்கு மேல் இந்துக்கள். இந்துக்களை மிகப் பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த ஜுனகத்துக்கு முஸ்லீம் நவாப் 'மகாராஜா'வாக இருந்தார்! நவாப் ஒரு நாய்ப் பிரியர். மக்களை விட அவர் வளர்த்த நாய்கள் மீது அத்துமீறிய அன்பும் அக்கறையும் காட்டினார். அவரது அரண்மனையில் நாய்க்கென அனைத்து வசதிகளையும் கொண்ட தனி அறைகள் ஒதுக்கப்பட்டன. அது மட்டுமல்ல 'ரோஷனா'வுக்கும் 'பாபி'க்கும் நடந்த திருமணத்துக்கு வைசிராய் முதல் இந்தியப் பிரமுகர்கள் அழைக்கப்பட்டனர். 1,50,000 பேர் கலந்து கொண்ட அந்த 'நாய்த் திருமணம்' கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

ஜுனகத்துக்குப் பாகிஸ்தானுடன் எவ்வித பூகோளத் தொடர்பும் இல்லை. அப்பகுதி மக்கள் இந்தியாவுடன் சேர்வதையே விரும்பினர். எனினும் ஜுனகத் நவாப் இந்தியாவுடன் இணைவதை விரும்பவில்லை. மாறாக, ஜுனகத் பாகிஸ்தானுடன் இணைவதாகத் தன்னிச்சையாக அறிவித்தார் (1947 ஆகஸ்டு 15)! அந்த அறிவிப்பை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சியை எதிர்கொள்ள முடியாத நவாப் கராச்சிக்குத் தப்பிச் சென்றார். ஜுனகத் திவானாக இருந்த **ஷா நவாஸ் புட்டோ** ஜுனகத் நிர்வாகத்தை மேற்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தார் (நவம்பர் 8). அவரது வேண்டுகோளுக்கிணங்க இந்திய அரசாங்கம் ஜுனகத் நிர்வாகத்துக்குப் பொறுப்பேற்றது. பின்னர் மக்கள் வாக்கெடுப்பு (Plebicite)–க்குப் பின் ஜுனகத் இந்தியாவுடன் முறையாக இணைக்கப்பட்டது (1948 பிப்ரவரி 20).

### 2.2.3 ஐதராபாத் இணைப்பு (Accession of Hyderabad)

**'நிலை ஒப்பந்தம்'**

ஆந்திராவின் பகுதியான ஐதராபாத் இந்தியாவின் வயிற்றுப் பாகத்தில் உள்ளது. இருபது மில்லியன் இந்துக்களையும், மூன்று மில்லியன் முஸ்லீம்களையும் கொண்ட ஐதராபாத்துக்கு **பத்தேஜங்** என்ற முஸ்லீம் நிஜாமாக இருந்தார். ஐதராபாத் நிஜாம் 1947 ஆகஸ்டு 15–ஆம் தேதிக்குள் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைய இசையவில்லை. இந்திய வைசிராய் மௌன்ட்பேட்டன் பிரபுவின் வற்புறுத்தலின் பேரில் இந்திய அரசாங்கம் நிஜாமுடன் ஓராண்டு கால நிலை ஒப்பந்தம் (Standstill Agreement) செய்து கொண்டது. அதற்குள் ஐதராபாத் இணைப்புப் பிரச்னைக்குத் திருப்திகரமான தீர்வு காண முடியும் என்று நம்பப்பட்டது. ஆனால் நிஜாம் அந்த நம்பிக்கையைப் பொய்ப்பித்தார்.

**ஒப்பந்த மீறல்**

ஐதராபாத் நிஜாம் ஓராண்டு கால நிலை ஒப்பந்தத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இராணுவத்தைப் பலப்படுத்தினார்; ஐரோப்பிய நாடுகளிலிருந்து போர்த் தளவாடங்களை வாங்கினார். **சர் வால்டேர் மான்க்டன்** (Sir Walter Monekton) என்ற ஆங்கிலேய சட்ட வல்லுநரின் ஆலோசனையைப் பெற்றார். இந்தியாவுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு ...

**ராஸாகார்கள்**

இதற்கிடையில் ஐதராபாத் நிஜாமுக்கு ஆதரவாக 'ராஸாகார்கள்' (Razakars) எ முஸ்லீம் தீவிரவாதிகள் பாகிஸ்தானின் துணையுடன் ஐதராபாத்தை ஒரு சுதந்திர முஸ் நாடாக்கி விட வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டனர். இந்தியா ஐதராபாத்தை கைப்பற்ற முனைந்தால் இந்துக்களைக் கொன்று விடுவதாக ராஸாகார்கள் தலைவரான **காசிம் ராஸ்வி** (Kasim Razvi) அச்சுறுத்தினார். 1948 மார்ச் 31 ஆ தேதியன்று **போராயுத வாரத்தை** (Arms-Week)த் துவக்கினார். ஐதராபாத் முஸ்லீம்கள் இந்தியாவின் மீது படையெடுத்துச் செல்லுமாறு தூண்டிவிட்டார். அப்படையெடுப் போது இந்தியாவில் இருந்த ஐந்து கோடி முஸ்லீம்களும் ஐதராபாத்துக்கு ஆதரவ இருப்பார்கள் என்ற காசிம் ராஸ்வி அறிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளார் வி.பி.மேன ஐதராபாத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, ராஸாகார்கள் ஐதராபாத் வழிய பம்பாயிலிருந்து சென்னைக்குச் சென்று கொண்டிருந்த புகை வண்டியை வழி நிறுத்தி தாக்கினர். ஐதராபாத்தில் **பயங்கர ஆட்சி** (Reign of Terror) கட்டவிழ்த்து விடப்பட்டு பல இந்துக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் சிறையிலடைக்கப்பட்டன

**இந்திய விரோத நடவடிக்கைகள்**

ஐதராபாத் இணைப்புப் பிரச்னைக்கு சமாதானத் தீர்வு காண விரும்பினார் நேரு சமரசப் பேச்சுவார்த்தையாலும், பொருளாதாரத் தடையாலும், அச்சுறுத்தலாலும் நிஜாமை வழிக்குக் கொண்டு வர முயன்றார். ஆனால் நிஜாம் நேருவின் 'நில் – கவனி' (Wait an Watch) போக்கைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு இந்திய விரோத நடவடிக்கைகளி ஈடுபடலானார். கராச்சியிலிருந்து போர்த் தளவாடங்களைப் பெற்றார். கிழக்கு வங்காளத்திலும், மேற்கு பாகிஸ்தானிலும் ஈராக் மற்றும் ஈரானிலும் இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்த விமானப் படையைத் தயார் நிலையில் வைத்திருந்தார். பிரிட்டிஷ் இரகசியப் படையினரின் உதவியைப் பெற்றார். ஐதராபாத்தை சுதந்திரப் பகுதியாக அங்கீகரிக்க வேண்டுமென்று பிரிட்டனை வற்புறுத்தி வந்தார். இந்தியாவுக்கு எதிராகக் கோவாவைப் பயன்படுத்திக் கொள்ள போர்ச்சுகலுடன் உடன்படிக்கை செய்து கொண்டதாகவும் கூறுகிறார் எஸ்.கோபால்.

**இராணுவத் தீர்வு**

1948 ஜூன் மாதம் மௌன்ட்பேட்டன் இந்தியாவை விட்டுச் சென்ற பின்னரும் கூட நேரு ஐதராபாத் இணைப்புக்கு சமாதானத் தீர்வையே விரும்பினார். ஆனால் சர்தார் வல்லபாய் பட்டேல் முள்ளை முள் கொண்டு எடுக்கத் தீர்மானித்தார். ராஸாகார்களின் தான்தோன்றித் தலைவரான காசிம் ராஸ்வி ஐதராபாத்தின் முழு அதிகாரத்தையும் அபகரித்துக் கொண்டதாகக் கருதினார் பட்டேல். காசிமின் நடவடிக்கை வால் நாயை ஆட்டும் செயலாக இருந்தது. சுதந்திர இந்தியாவில் ஐதராபாத் தனித்தீவாக இருப்பது இந்திய உடலில் குத்திய முள்ளாக இருக்கும் என்று எண்ணினார். எனவே, இரத்தம் சிந்தியாவது இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றத் துணிந்தார் பட்டேல். 1948 செப்டம்பர் 13–ஆம் தேதி இந்திய இராணுவம் 'சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட' ஐதராபாத்துக்குள் நுழைந்தது. நிஜாமின் படை நான்கு நாட்களில் இந்தியாவிடம் சரணடைந்தது.

**இந்தியாவுடன் இணைக்கப்பட்டது**

ஐதராபாத் இந்தியாவுடன் இணைக்கப்...
நடவடிக்கை இந்தியா...



ஏற்பட்டது. இந்த நெருக்கடியின் போது இந்தியாவின் பிற பகுதிகளில் வாழ்ந்த முஸ்லீம்கள் தங்களது நினைப்பாலும் நடத்தையாலும் இந்தியாவின் முழுமையான குடிமக்கள் என்பதைத் தெளிவுபடுத்தினர். சமயம் சாராமை இந்த இரண்டாவது சோதனையையும் வெற்றிகரமாக கடந்தது" என்று மதிப்பீடு செய்துள்ளார் எஸ்.கோபால்.

## 2.2.4 காஷ்மீர் இணைப்பு (Accession of Kashmir)

**மகாராஜா ஹரிசிங்**

ஜுனகத், ஐதராபாத் போலன்றி இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்தது சிக்கலானது; சிக்கலாக்கப்பட்டது. ஜம்மு–காஷ்மீர் பகுதி எழில்மிகு இமாலயப் பள்ளத்தாக்கு. **'கிழக்கு உலகின் வெனிஸ்'** (Venice of Orient) என்று வர்ணிக்கப்பட்டது. 85,000 சதுரமைல் பரப்புள்ள இப்பகுதி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடைப்பட்ட இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இந்தியப் பிரிவினையின் போது ஜம்மு–காஷ்மீரின் மக்கள் தொகை நான்கு மில்லியன். அவர்களுள் நான்கில் மூன்று பகுதியினர் முஸ்லீம்கள். இந்துக்கள் பெரும்பான்மையினராக இருந்த ஜுனகத்தையும், ஐதராபாத்தையும் முஸ்லீம் நவாபும், நிஜாமும் ஆட்சி செய்ததைப் போன்று முஸ்லீம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஜம்மு – காஷ்மீரை **இந்து அரசர் ஹரி சிங்** (Hari Singh) ஆட்சி செய்து வந்தார். ஹரி சிங் தோக்ரா ராஜபுத்திர வகுப்பைச் சேர்ந்தவர். அவர் பிராமணப் பண்டிதர்களை அரசாங்க ஊழியர்களாக வைத்துக் கொண்டு ஜம்மு–காஷ்மீரை ஆண்டு வந்தார்.

**ஷேக் அப்துல்லா**

1932 ஆம் ஆண்டு **'காஷ்மீர் சிங்கம்'** என்றழைக்கப்பட்ட ஷேக் அப்துல்லா **'அகில ஜம்மு–காஷ்மீர் முஸ்லீம் மாநாடு'** (All Jammu and Kashmir Muslim Conference) என்ற அமைப்பை ஏற்படுத்தி மாநில நிர்வாகத்தில் ஜம்மு–காஷ்மீர் முஸ்லீம்களுக்கும் உரிய பங்கு வேண்டும் என்று கோரினார். அக்கோரிக்கையை அம்மாகாண இந்துக்களும் சீக்கியர்களும் கூட ஆதரித்தனர். அவர்களுடைய ஆதரவோடு ஷேக் அப்துல்லா தான் துவக்கிய அமைப்பை அகில ஜம்மு–காஷ்மீர் தேசிய மாநாடு (All Jammu and Kashmir National Conference) என்று பெயர் மாற்றம் செய்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின் மகாராஜா ஹரிசிங் ஓரளவு அதிகாரத்தை முஸ்லீம்களுடன் பகிர்ந்து கொண்டார். அதில் திருப்தியடையாமல் மேலும் அதிக அதிகாரம் கோரியதால் ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

**மகாராஜாவின் மனக்குழப்பம்**

பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகார மாற்றத்தை அறிவித்த போது ஹரிசிங் ஜம்மு–காஷ்மீரை இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைக்க விரும்பவில்லை. அவர் ஆட்சி செய்த மாகாணம் **'ஆசியாவின் சுவிட்சர்லாந்தாகவே'** சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். காந்தியும் நேருவும் மகாராஜா ஹரி சிங்குக்கு 1947 ஆகஸ்டு 15–ஆம் தேதிக்குள் இந்தியாவுடன் இணைந்து விடுமாறு ஆலோசனை கூறினார்கள். ஆனால் வைசிராய் மௌன்ட்பேட்டன் பிரபு ஹரிசிங் இந்தியாவுடனோ

மகாராஜாவின் மனக்குழப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண் பாகிஸ்தான் காஷ்மீரைக் கைப்பற்றத் துணிந்தது. மகாராஜா ஹரி சிங்கின் பலவீனத்தை பயன்படுத்திக் கொண்டு காஷ்மீரின் மேற்குக் கோடியில் இருந்த **பூஞ்ச்** (Poonch) பகு முஸ்லீம் விவசாயிகள் தோக்ரா ராஜபுத்திர நிலச்சுவான்தாரர்களின் அடக்கு முறைக் எதிராகக் கிளர்ச்சி செய்தனர். **பூஞ்ச் கிளர்ச்சிக்கு** ஆதரவாக பாகிஸ்தானா தூண்டிவிடப்பட்ட ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் பாகிஸ்தானி வடமேற்கு எல்லைப் புறத்திலிருந்து புறப்பட்டு வந்து காஷ்மீரைத் தாக்கினர். **கார்கி** (Ga மற்றும் **டோமெல்** (Domel) ஆகிய இரு காஷ்மீர் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டன அதன்பின் காஷ்மீரின் புகழ் பெற்ற நகரமான முஸபராபாத் (Muzafarabad)க்குள் நுழைந் முகாமிட்டனர். அங்கிருந்து பாராமுலா (Baramula)வைக் கைப்பற்றிக் கொண்டு யூரி (U நோக்கி முன்னேறி ஸ்ரீநகரை அடையத் திட்டமிட்டனர். அப்போது காஷ்மீ இராணுவத்துக்குப் பொறுப்பாயிருந்த **பிரிகேடியர் ராஜேந்திர சிங்** மலைவாழ் மக்களி தாக்குதலைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு விரைந்து சென்று யூரி பாலத்தைத் தகர்த்து விட்டார். படையெடுப்பாளர்களுடன் இரண்டு நாட்கள் போரிட்டு அவரு படைவீரர்களுடன் வீர மரணமடைந்தார். படையெடுப்பாளர்கள் முன்னேறிச் சென்று ஸ்ரீநகருக்கு மின்சாரம் கொடுத்து வந்த மகூரா மின் நிலையத்தைக் கைவசப்படுத்திக் கொண்டனர். காஷ்மீரின் கோடைகாலத் தலைநகரான ஸ்ரீநகர் இருளில் மூழ்கியது ஸ்ரீநகர் நோக்கி முன்னேறிய பாகிஸ்தான் ஆக்கிரமிப்பாளர்கள் 1947 அக்டோபர் 26 ஆ தேதி 'ஈத்' பண்டிகையை ஸ்ரீநகரிலிருந்து கொண்டாடப்போவதாக அறிவித்தனர்.

**மகாராஜாவின் வேண்டுகோள்**

இதற்கிடையே ஜம்மு–காஷ்மீர் மகாராஜா ஹரி சிங் ஸ்ரீநகரிலிருந்து தப்பிச் சென்று குளிர்காலத் தலைநகரான ஜம்முவை அடைந்தார். பூஞ்ச் கிளர்ச்சியை அவனை பதவியிலிருந்து இறக்குவதற்கான சதி என்று கருதினார். பாகிஸ்தான் படையெடுப்பாளர்களின் போக்கைக் கண்ட ஹரிசிங் புதுடெல்லியின் ஆதரவை நாடினா ஷேக் அப்துல்லாவை சிறையிலிருந்து விடுவித்து நேருவிடம் பேச்சுவார்த்தை நடத்த புதுடெல்லிக்கு அனுப்பினார். அதேபோன்று அவரது பிரதம அமைச்சர் மெகர் சந் மகாஜனையும் டெல்லிக்கு அனுப்பிப் பிரதமர் நேருவிடம் காஷ்மீர் நிலைமையை விளக்க சொன்னார் (அக்டோபர் 24). 1947 அக்டோபர் 26 ஆம் தேதி ஜம்மு–காஷ்மீ இந்தியாவுடன் இணைவதாகவும், ஸ்ரீநகரைக் காப்பாற்ற இராணுவ உதவி வேண்டு என்று இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

**இந்தியாவுடன் இணைந்தது**

1947 அக்டோபர் 24 ஆம் தேதி இரவு காஷ்மீர்ப் படையெடுப்பு பற்றிய தகவல் இந்திய அரசாங்கத்துக்குக் கிடைத்தது. அடுத்த நாள் கூடிய பாதுகாப்புக் கமிட்டி (Defence Committee) இந்திய இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்பத் தீர்மானித்தது. மகாராஜா ஹரி சிங், ஷேக் அப்துல்லாவின் துணையுடன் படையெடுப்பை எதிர்கொள்ள வேண்டு என்று விரும்பினார். மௌண்ட்பேட்டன் தற்காலிக இணைப்பை ஆதரித்தார். அடுத்த நாள் (அக்டோபர் 25) காஷ்மீர் பிரதம அமைச்சர் நேருவை சந்தித்து இந்திய இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டபோது அக்கோரிக்கைக்கு இணங்கவில்லை. பட்டேலும் ஷேக் அப்துல்லாவும் நேருவை சம்மதிக்க வைத்தனர். தற்காப்புப் போருக்குத் தயாரானார் நேரு.



பிரதமர் நேரு அமைச்சரவையைக் கூட்டி ஆலோசித்தார். அமைச்சரவையில் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. வல்லபாய் பட்டேல் இந்திய இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்புவதை ஆதரித்தார். வேறு சிலர் அப்படிச் செய்வது இந்தியாவைப் பாகிஸ்தானுடன் நேரடிப் போரில் ஈடுபடுத்திவிடும் என்று கருதினர். எனவே, நேருவும் பட்டேலும் காந்தியிடம் ஆலோசனை கேட்டனர். அரிய நேரத்தை வீணாக்காமல் உரிய நேரத்திலேயே இராணுவத்தை அனுப்பியிருக்க வேண்டும் என்றார் காந்தி. தீமைக்கு அடிபணிவதால் காஷ்மீரில் அமைதி நிலவாது என்று கருதினார் காந்தி. பாகிஸ்தானுக்கு இறுதி எச்சரிக்கை கொடுத்து விட்டு, இறுதியாகப் போர் தொடுக்கலாம் என்றார் ஷேக் அப்துல்லா. காஷ்மீரில் முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக இருப்பதால் படையெடுப்பாளர்களை அகற்றி விட்டு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியபின், மக்கள் வாக்கெடுப்பு நடத்தலாம் என்ற நிபந்தனைகளோடு ஹரி சிங் ஜம்மு – காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்ததை ஏற்றுக் கொள்ளலாம் என்றார் மௌன்ட்பேட்டன். அவரது ஆலோசனையை நேருவின் அமைச்சரவை ஏற்றுக் கொண்டது. அப்போது மாநிலங்கள் அமைச்சகத்தின் செயலராக இருந்த வி.பி.மேனனை அனுப்பி '**இணைப்பு ஒப்பந்தத்தில்**' காஷ்மீர் மகாராஜா ஹரி சிங்கின் கையெழுத்தைப் பெற்றார் நேரு. ஜம்மு–காஷ்மீர் முறையாக இந்தியாவுடன் இணைந்தது (1947 அக்டோபர் 26)

**காஷ்மீரில் இந்திய இராணுவம்**

ஜம்மு–காஷ்மீர் முறையாக சட்டப்படி இந்தியாவுடன் இணைந்ததற்கு அடுத்த நாளே (அக்டோபர் 27) இந்தியத் துருப்புகள் ஆகாய விமானங்கள் மூலம் டெல்லியிலிருந்து ஸ்ரீநகருக்கு அனுப்பப்பட்டது. சரியான சமயத்தில் காஷ்மீரின் தலைநகர் ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதலினின்றும் காப்பாற்றப்பட்டது. பாகிஸ்தானின் படையெடுப்புத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. ஸ்ரீநகரைக் கைப்பற்றிய உடன் ஜின்னா வெற்றி வாகை சூடி அந்நகருக்குள் நுழையும் ஆசை நிராசையாயிற்று. படையெடுப்பாளர்கள் பின்வாங்கிச் சென்றனர். ஏமாற்றமுற்ற பாகிஸ்தான் அதிபரும் கவர்னர் ஜெனரலுமான முகமது அலி ஜின்னா இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்ப முயன்றார். ஆனால் பிரிட்டிஷ் தளபதி கிரேசி (General Gracey) பீல்டு மார்ஷல் அச்சின்லெக் (Auchinleck)கின் அனுமதியின்றி செயல்பட இயலாது என்று கூறி விட்டார். அச்சின்லெக் லாகூர் சென்று ஜின்னாவை சந்தித்து காஷ்மீர் சட்டப்படி இந்தியாவுடன் இணைந்து விட்டதால் பாகிஸ்தான் இராணுவத்தை அனுப்ப முடியாது என்றும், அப்படி அனுப்புமாறு வற்புறுத்தினால் ஜின்னாவின் கீழ் பணிபுரியும் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் அனைவரும் பதவி விலக வேண்டியிருக்கும் என்பதையும் தெளிவுபடுத்தினார் (அக்.28). எனவே, ஜின்னா காஷ்மீர்ப் படையெடுப்புத் திட்டத்தைக் கைவிட்டார்.

**அஸாத் காஷ்மீர்**

காஷ்மீருக்குச் சென்ற இந்தியப் படை ஆக்கிரமிப்பாளர்களை பின்வாங்கச் செய்தனரேயன்றி அவர்கள் கைப்பற்றிக் கொண்ட பகுதிகளை மீட்கவில்லை. படையெடுப்பாளர்கள் யூரி மற்றும் பூஞ்ச் பகுதிகளில் தங்களை நிலைப்படுத்திக் கொண்டனர். அவர்கள் கைப்பற்றிய பகுதிகளை **அஸாத் காஷ்மீர்** (Azad Kashmir) அதாவது சுதந்திர காஷ்மீர் என்றும், அதன் தலைநகர் முசபராபாத் என்றும், படையெடுப்பாளர்களே அஸாத் காஷ்மீரின் இராணுவம் என்றும் அறிவித்து அப்பகுதியை பாகிஸ்தானுடன் இணைத்து விட்டனர். ஷேக் அப்துல்லா எஞ்சிய ஜம்மு–காஷ்மீரின்

பிரதமர் நேரு ஆக்கிரமிப்பாளர்களைக் காஷ்மீர்ப் பகுதிகளிலிருந்து வேண்டும்; அதன் பின்னரே ஜம்மு–காஷ்மீரில் 'மக்கள் வாக்கெடுப்பு' நடத்த என்பதில் குறியாக இருந்தார். பாகிஸ்தான் அதிபர் ஜின்னா இந்திய இரா காஷ்மீருக்குள் புகுந்தோரும் ஒரே நேரத்தில் வெளியேறியபின் மக்கள் வாக்கெடு வேண்டும் என்றார். பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதியாக இருந்ததால் விவகாரத்திற்கு ஒரு தீர்வைக் கொடுக்க முடியும் என்று கருதினார் காந்தி. இனவாத சக்திகள் முஸ்லீம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட காஷ் இந்தியாவுடன் இணைப்பதை எதிர்த்தனர். இறுதி எச்சரிக்கை கொடுத்து பாகிஸ்தானுடன் போர் தொடுக்கலாம் என்பதை வலியுறுத்தினார் ஷேக் அப்து போரின்றி ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற வேண்டும் என்று விரும்பினார் பாகிஸ்தானுடன் போர் தொடுக்காமல் நேருவின் நோக்கத்தை நிறைவேற்றுவது நேர்வழி காஷ்மீர் ஆக்கிரமிப்பைப் பற்றி ஐக்கிய நாடுகள் சபையிடம் புகார் செ ஆகும் என்று ஆலோசனை கூறினார் கவர்னர் ஜெனரல் மௌன்ட்பேட்டன் பிரபு. அ ஆலோசனையின்படி பாகிஸ்தானின் காஷ்மீர் ஆக்கிரமிப்பு பற்றி ஐ.நாவிடம் செய்தார் பிரதமர் நேரு. அந்நடவடிக்கையைக் காந்தியும் பட்டேலும் அரைமன ஏற்றுக் கொண்டனர்.

காஷ்மீர் விவகாரத்தை ஐ.நா. சபைக்குக் கொண்டு சென்ற பின்னரும் ஜ காஷ்மீரில் 'தற்காப்புப் போரை'த் தொடர வேண்டும், ஆக்கிரமிப்பாளர்களை அ வேண்டும் என்பதில் குறியாக இருந்தார் நேரு. அப்படிச் செய்வது ஐ.நா. நீதிமன்ற வி விசாரணைக்கு முரணானது (Subjudice) என்று கூறி நேருவின் கையைக் கட்டிவிட் மௌன்ட்பேட்டன். அதுமட்டுமல்ல. இந்தியா காஷ்மீரில் இராணுவ நடவடிக்கை எடுத்த கவர்னர்–ஜெனரல் பதவியிலிருந்து விலகி விடுவதாக அச்சுறுத்தினார் மௌன்ட்பே என்று குறிப்பிட்டுள்ளார் ஆலன் காம்பெல் – ஜான்சன். நேரு, மௌன்ட்பேட்டன் காட் வழி சென்றார். ஐ.நாவின் போர் நிறுத்த ஏற்பாடு 1949 ஜனவரி முதல் தேதியிலிரு ஜம்மு–காஷ்மீரில் நடைமுறைக்கு வந்தது. ஐ.நா. காஷ்மீர் விவகாரத்தை இந்திய பாகிஸ்தான் பிரச்னையாக மாற்றிவிட்டது. காஷ்மீர் விவகாரத்தை ஐநாவுக்குக் கொண் செல்ல மௌன்ட்பேட்டன் நேருவை சம்மதிக்கச் செய்தது அவப்பேறாகும் என் குறிப்பிட்டுள்ளார் எஸ்.கோபால்.

**காஷ்மீர் பிரச்னை!**

காஷ்மீரிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை அகற்றும் முயற்சியை இந்தி கைவிட்டது. பாகிஸ்தான் அசாத் காஷ்மீரைத் தக்க வைத்துக் கொண்டது. என காஷ்மீர் விவகாரம் தீரும் வரை இந்தியா பாகிஸ்தானுக்குக் கொடுக்க வேண் **'பிரிவினை இழப்பீட்டுத் தொகை'**யான 55 கோடி ரூபாயைக் கொடுக்காமல் நிறு வைப்பதென்று 1948 ஜனவரி மாதம் நேருவின் அமைச்சரவை முடிவு செய்தது. அதற்கு காரணம் பாகிஸ்தான் அந்தப் பணத்தைக் கொண்டு போர்த்தளவாடங்களை வா இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தும் என்று அமைச்சரவை கருதியதேயாகும். ஆன பாகிஸ்தானின் காஷ்மீர் ஆக்கிரமிப்புக்கெதிராக இந்திய இராணுவத்தை அனுப்பியிருக் வேண்டும் என்று கூறிய காந்தி பாகிஸ்தானுக்கு இந்தியா கொடுக்க வேண்டிய பணத்தை நிறுத்தி வைப்பது நாணயமற்ற நேர்மையற்ற செயல் என்று கருதினார். எனவே 194 ஜனவரி மாதம் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். நேருவின் அமைச்சரவை

**SYLLABUS**

**III SEMESTER** **PAPER : XII ( CORE PAPER)**

**CBCS PATTERN**

**CONTEMPORARY HISTORY OF INDIA FROM 1947 TO 2014 CE**

**UNIT- I**

Dawn of Independence-Framing of Indian Constitution - Constituent Assembly – Draft Committee Report – Declaration of Indian Constitution – Process of National Consolidation and Integration of Indian States – Role of Sardar Patel – Kashmir Issue- Indo – Pak war, 1948 .

**UNIT- II**

Nehru Era – First General Election of 1952- Five Year Plans – Democratic Socialism and Mixed Economy – Planning and Land Reforms – LinguisticReorganisation of States 1956 - Kamaraj Plan and Bhuvaneswar Congress.

**UNIT- III**

India After Nehru – the Role of Lal Bahadur Shastri – Pak Aggression – the Ttreaty of Tashkent – Vision of New India – Indira Gandhi – Congress Split – Economic Policy; Nationalization of Banks – Abolition of Privy Purse – 1971 – Mid-term Poll – 20 point Programme – Authoritarian Politics – Total Revolution-J.P.Narayan – Allahabad Judgement - Proclamation of Emergency – Policies of Repression – General Election 1977 – New Political Alignment - the Govt of Janata Party . –Prime Ministership of Morarji Desai – breakup – Charansingh

**UNIT- IV**

Re-emergence of Indira Gandhi – Election of 1980 – NAM Conference at Delhi – Punjab Crisis - Blue Star Operation-Assassination of Indira Gandhi – Era of Liberalism- PrimeMinistership of Rajiv Gandhi – New Economic Policy – Domestic Policy – Nagar Palika and Panchayat Raj Acts

**UNIT- V**

National Front Govt-V.P. Singh – Mandal Commission - the Issue of Rama Janma Boomi – Fall of Govt, 1991 Election – Restoration of Congress Rule – Narashimha Rao – Economic Policies – the Role of Manmohan Sigh as Finance Minister – United Front Govt- Regionalism and Instablity in India –the Policies and Issues under the Prime Ministership of Manmohan Singh-General Election of 2014-Rise of BJP

**REFERENCE BOOKS:**


1. Bipan Chandra, Mridula Mukherjee et al. India After Independence, Penguin, 2003.
2. Bhambri CP, Indian Politics since Independence., 2 Vols. Shipra Publishers
3. Chatterjee Partha, Ed., State and Politics in India, OUP, New Delhi, 1999.
4. Gopal, Sarvepalli-Jawaharlal Nehru: A Biographgy 3 Vols. Oup, New Delhi, 2012.
5. Mahajan, V.D.-Modern Indian History: From 1707 to the Present Day. Chand & Company. New Delhi, 2016.
6. Palmar, Norman D-The Indian Political System, 2nd Ed. Boston, 1971.
7. Venkatesan K-Contemporary, History of India-1947-2012, Rajapalayam: VC Publications, 2014.
8. _____ Era of Rapid Charge, 1947-67, Publication Division, Govt. of India.
9. _____ India 2017-A Reference Annual Book, Publication Division, Govt. of India.

# 1. சுதந்திர இந்தியா

> ...இந்த நள்ளிரவு நேரத்தில் உலகமே உறங்கிக் கொண்டிருக்கையில்
> இந்தியா சுதந்திரமாக வாழ்வதற்காக விழித்துக் கொள்கிறது.
>
> – ஜவகர்லால் நேரு.

## 1.1 1647 – 1947 பின் பார்வை

1647–இல் இங்கிலாந்தின் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் இருபத்தி மூன்று இடங்களில் வர்த்தகக் கிடங்குகளை நிறுவி நிர்வகித்து வந்தது. 1757–இல் நடைபெற்ற 'பிளாசிப் போரில்' வெற்றி பெற்றுக் கல்கத்தாவைக் கைப்பற்றிக் கொண்ட கம்பெனி வங்காளத்தில் அதன் மேலாதிக்கத்தை ஏற்படுத்தியது. 1857–இல் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக எழுந்த 'பெருங்கிளர்ச்சி' ஒடுக்கப்பட்டு இந்தியா இங்கிலாந்தின் முடியாட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. 1947–இல் இந்தியா பிரிட்டனின் பிடியிலிருந்து விடுதலை அடைந்தது. 300 ஆண்டு கால அந்நிய ஆதிக்க இருள் விலகி இந்தியாவில் சுதந்திர ஒளிபடர்ந்தது.

## 1.2 விடுதலையின் போது இந்தியா

இந்தியா 1947 ஆகஸ்டு மாதம் 14–15ம் நாள் நள்ளிரவில் பிரிட்டிஷ் பேராதிக்கத்தின் பிடியிலிருந்து விடுதலை அடைந்த போது ஒரு சகாப்தம் முடிந்து மற்றொரு சகாப்தம் ஆரம்பித்தது. சுதந்திர இந்தியா பிரிட்டிஷ் ஆட்சி போட்டுக் கொடுத்த பாதையை செப்பனிட்டு, மறுசீரமைத்து, சீர்திருத்தி மிகுந்த நம்பிக்கையோடு பயணத்தைத் தொடர்ந்தது. தேச விடுதலைக்குப் போராடிய தலைவர்கள் புதிய தொலைநோக்குடன் தேசப் புனரமைப்புக்குப் பொறுப்பேற்றனர்.

### 1.2.1 அட்லியின் அறிவிப்பு (The Attlee Declaration, 1947 பிப்ரவரி)

1946 ஆகஸ்டு 16–ம் தேதி "இடைக்கால அரசாங்கத்தை" (Interim Government) அமைக்குமாறு வைசிராய் வேவல் பிரபு, ஜவகர்லால் நேருவைக் கேட்டுக் கொண்டார். நேரு அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார். ஆனால் ஜின்னா இடைக்கால அரசாங்கத்தில் சேர முதலில் மறுத்துவிட்டார். மாறாக, அந்நாளைத் 'துக்கதின'மாகவும், **நேரடி நடவடிக்கை நாளாகவும்** (Direct Action Day) அனுசரிக்க வேண்டுமென்று அறிவித்தார், கல்கத்தா இனக்கலவரக் களமாயிற்று. திட்டமிட்ட தாக்குதல்களால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. வைசிராய் வேவல் பிரபு செயலிழந்தார்! அந்த நெருக்கடியான நேரத்தில் தொழிற்கட்சியின் பிரிட்டிஷ் பிரதமர் **கிளமண்ட் அட்லி** (Clement Attlee) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பை வெளியிட்டார் (1947 பிப்ரவரி 20).

பிரிட்டிஷ் பிரதமர் அட்லியின் அறிவிப்பின்படி 1) 1948 ஜூன் முதல் தேதிக்குள் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு அதிகார மாற்றம் செய்துவிடும்; 2) இந்தியாவில் யாரிடம் அதிகாரப் பொறுப்பை ஒப்படைப்பது என்பதைப் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு

...வை உறுதி செய்தது.

### 1.2.2 மௌண்ட்பேட்டன் திட்டம் (The Mountbatten Plan, 1947)

பிரிட்டிஷ் பிரதமர் அட்லியின் அறிவிப்பைத் தொடர்ந்து வைசிராயாக நியமிக்கப்பட்ட மௌண்ட்பேட்டன் பிரபு இந்தியாவுக்கு வந்தார் (1947 மார்ச்). வைசிராயாகப் பதவியேற்ற உடனேயே அவர் ஜின்னா, நேரு, வல்லபாய் படேல், அபுல் கலாம் ஆசாத், காந்தி மற்றும் முக்கிய தலைவர்களுடன் கலந்தாலோசித்தார். அதன்பின் மௌண்ட்பேட்டன் அட்லியின் அறிவிப்பையொட்டி ஒரு திட்டத்தைத் தயாரித்தார். அத்திட்டத்தைத் தயாரிக்க நேருவும், வைசிராயின் சீர்திருத்தக் கமிஷனராக இருந்த **வி.பி.மேனனும்** உறுதுணையாக இருந்தனர். பிரிட்டிஷ் அமைச்சரவையின் ஒப்புதல் பெற்ற அத்திட்டமே '**மௌண்ட்பேட்டன் திட்டம்**' என்று அறியப்படுகிறது. இதுவே இந்தியப் பிரிவினைக்கு (Partition of India) அடிப்படையாக அமைந்தது.

**மாபெரும் மோசடி**

மௌண்ட்பேட்டன் திட்டம் ஒரு கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்த 400 மில்லியன் மக்களையும், அவர்கள் நூற்றாண்டு காலமாகச் சேர்த்து வைத்த சொத்துக்களையும் சமாதான சகவாழ்வையும் சீர்குலைத்து விட்டது. இந்தியா விடுதலை அடைவதற்கு சரியாக எழுபத்தி மூன்று நாட்களுக்கு முன் இந்தியாவை இரண்டாகப் பிரிப்பதற்கான முடிவெடுத்தார் மௌண்ட்பேட்டன். 1947 ஜுன் 3 ஆம் தேதி இந்தியப் பிரிவினையைப் பற்றி மௌண்ட்பேட்டனும், நேருவும், ஜின்னாவும் டெல்லி வானொலி மூலம் அறிவித்தனர். அந்த அறிவிப்புக்கு இந்திய விடுதலைச் சட்டம் வடிவம் கொடுத்தது. இந்திய தேசிய காங்கிரஸ் அங்கீகாரம் அளித்தது. உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய சிக்கல் மிக்க 'விவாகரத்து' நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜின்னாவின் பிடிவாதத்துக்கும் வன்முறைப் போக்குக்கும் வளைந்து கொடுத்த இந்தியத் தலைவர்கள் கொள்கையை விட்டுக் கொடுத்து, மனச்சான்றை அடகு வைத்து, அதிகார ஆசைக்கு ஆட்பட்டு இந்தியாவின் இரண்டு வளமிக்க மாகாணங்களான பஞ்சாபையும், வங்காளத்தையும் கூறுபோட இசைந்தனர். இந்தியப் பிரிவினை சமகால வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட மாபெரும் மோசடியாகும்.

### 1.2.3 இந்திய விடுதலைச் சட்டம் (Indian Independence Act, 1947 ஜுலை)

'இந்தியப் பிரிவினை' முடிவானதும் பிரிட்டிஷ் அரசாங்கம் துரிதமாகச் செயல்பட்டது. பிரிவினைத் திட்டத்துக்கு வடிவம் கொடுக்கப்பட்டது. இந்திய விடுதலை மசோதா தயாரிக்கப்பட்டு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு (ஜுலை 4), இந்திய விடுதலைச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது (ஜுலை 18).

### 1.2.4 விடுதலை விடிதல் (Dawn of Independence, 1947 ஆகஸ்ட் 15)

சுதந்திர இந்தியா 1947 ஆகஸ்டு மாதம் 14–15 நள்ளிரவில் பிறந்தது. புது டெல்லியில் நாடாளுமன்றக் கட்டிடத்தின் மைய மண்டபத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றம் கூடியது. அதற்கு ராஜேந்திரப் பிரசாத் தலைமை தாங்கினார். சரியாக இரவு பனிரெண்டு மணிக்கு சுசேதா கிருபளானி 'வந்தே மாதரம்' பாடலை உணர்ச்சியோடும் பெருமிதத்தோடும் பாடினார். ராஜேந்திரப் பிரசாத்தின் தலைமை உரைக்குப் பின் ஜவஹர்லால் நேரு இந்திய சுதந்திரம் பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார். அவரது [illegible] நள்ளிரவின் [illegible] ஒலித்தது.

"நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னால் நாம் விதியுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம். அந்த ஒப்பந்தத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளும் நேரம் வந்துவிட்டது. இந்த நள்ளிரவு நேரத்தில் உலகமே உறங்கிக் கொண்டிருக்கையில் இந்தியா சுதந்திரமாக வாழ்வதற்காக விழித்துக் கொள்கிறது."

நேரு முன்மொழிந்த தீர்மானத்தை செளதரி கலிகுஸ்ஸமான் வழிமொழிந்தார். அந்நிகழ்ச்சியின் இறுதியில் உரையாற்றிய தத்துவ வித்தகர் டாக்டர் **எஸ். ராதாகிருஷ்ணன்** தீர்க்கதரிசனத்தோடு குறிப்பிட்டதாவது:

"... நமக்குள்ள வாய்ப்புகள் பெரிது. நாம் அதற்கான தகுதியையும் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். உயர் பதவிகளில் ஊழல், உறவினர்களுக்குச் சலுகை, அதிகார ஆசை, நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு ஆதாயம் பெறும் கறுப்புச் சந்தை ஆகியவற்றின் அடிச்சுவடுகளை அகற்றாவிடில் நிர்வாகத் திறமையையும், நலவாழ்வுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தையும் உறுதி செய்ய முடியாது."

அரசியலமைப்புச் சட்டமன்ற உறுப்பினர்களின் சுதந்திர தின ஆரவாரத்துக்கு இடையே பெண்களின் சார்பாக **ஹன்சா மேத்தா** மூவர்ண தேசியக் கொடியை எடுத்துக் கொடுக்க, இந்தியாவின் கடைசி வைசிராயும் முதல் கவர்னர்–ஜெனரலுமான மௌண்ட்பேட்டன் அரசு கொடிமரத்திலிருந்து யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு அதற்குப் பதில் சுதந்திர இந்தியாவின் அசோகச் சக்கரம் பதிக்கப்பட்ட மூவர்ணக் கொடியை ஏற்றினார். '**இந்தியா விடுதலை அடைகிறது**' என்று அரசியலமைப்புச் சட்டமன்றப் பிரகடனத்தில் கையெழுத்திட்டார். அன்றிலிருந்து அரசியலமைப்புச் சட்டமன்றம் இந்தியாவின் நாடாளுமன்றமாயிற்று. மக்களின் ஆரவாரத்துக்கிடையே இராணுவ அணிவகுப்புடன் முதல் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, அவரது சகாக்களுடன் சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஆனால் அக்காட்சியைக் காண மகாத்மா காந்தி அங்கில்லை. அவர் நவகாளியில் இந்து–முஸ்லீம் இனக்கலவரத் தீயை அணைப்பதில் முழுமூச்சுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்!

## 1.3 இந்தியப் பிரிவினை (Partition of India)

### 1.3.1 ராட்கிளிஃப் எல்லைக் கமிஷன் (The Radcliffe Boundary Commission)

மௌண்ட்பேட்டன் திட்டத்தின்படி இந்தியப் பிரிவினை முடிவாயிற்று. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சேர வேண்டிய பகுதிகளைப் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் ஒரு எல்லைக் கமிஷனை அமைத்தது. **அக்கமிஷனின் தலைவராக சர் சிரில் ராட்கிளிஃப்** (Sir Cyril Radcliffe) நியமிக்கப்பட்டார். ராட்கிளிஃப் செல்வச் செழிப்பு மிக்க விளையாட்டு வீரரின் மகன். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் சட்டக்கல்வியில் தேர்ச்சி பெற்றார். திறமைமிக்க பாரிஸ்டராகப் புகழ்பெற்றார். பல்கலை வல்லவர். ஆனால் அவருக்குப் பஞ்சாப் – வங்காள எல்லைகளைப் பற்றியோ அல்லது இந்திய எல்லைச் சட்டச் சிக்கல்கள் பற்றியோ எதுவும் தெரியாது. அவர் இந்தியாவுக்கும் வந்ததில்லை! அதன் காரணமாகவே ராட்கிளிஃப் பாரபட்சமின்றி செயல்படுவார் என்று கருதி எல்லைக் கமிஷன் தலைவராக நியமிக்கப்பட்டார் (1947 ஜுன் 24).

... யகளும் முஸ்லிம்கள் ... தோரும் பெரும்பான்மையினராக உள்ள பகுதிகளையும் பிற காரணிகளை கணக்கிலெடுத்துக் கொண்டு எல்லைக் கோடுகளை முடிவு செய்யுமாறு யோசனை கூறினார் மௌண்ட்பேட்டன். ஆனால் அவர் 'பிற காரணிகள்' யாவை என்பது பற்றி எது கூறவில்லை. இந்திய இராணுவத் தலைவராயிருந்த **சர் கிளாட் அச்சின்லெக்** (Sir Cla... Auchinleck) எல்லைக் கோடுகளை வகுக்கையில் பாதுகாப்புப் பிரச்னை பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று ராட்கிளிப்புக்கு உறுதி கூறினார்.

எல்லைப் பிரிவினைத் திட்டத்தை 1947 ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்குள் கொடுத்துவிட வேண்டும் என்ற வைசிராய் மௌண்ட்பேட்டனின் நிபந்தனை ராட்கிளிப்புக்குப் பெரு கவலையை அளித்தது. பிரிக்கபபட வேண்டிய எல்லைப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிடவோ, எல்லைப் பகுதி மக்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிவதற்கோ ராட்கிளிப்புக்குப் போதிய கால அவகாசமில்லை. அவசரமாக எல்லை கோடுகளை வகுப்பதில் தவறுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாது என்று எச்சரித்தார் ராட்கிளிப். எனினும் அந்த '**அறுவை சிகிச்சை**'யை மௌண்ட்பேட்டனும், ஜின்னாவு நேரும் ஏற்றுக் கொண்டனர்.

## 1.3.2 ராட்கிளிப் தீர்ப்பு (Radcliffe Award)

நிலப்படங்கள், மக்கள் தொகை அட்டவணைகள், ஆவணங்கள், புள்ளி விவரங்கள், அறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா மற்று பாகிஸ்தானுக்குச் சேரவேண்டிய பஞ்சாப் – வங்காள எல்லைப் பகுதிகளை முடிவு செய்த ராட்கிளிப். அவருக்குக் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கால் அங்கீகரிக்கப்பட்ட எ... உயர்நீதி மன்ற நீதிபதிகள் உதவி செய்தனர். பிரிவினைக்குப் பின்னரும் பஞ்சாபிலு வங்காளத்திலும் பெரும்பான்மைச் சமூகத்தினரிடையே சிறுபான்மைச் சமூகத்தின விடுபடுவது தவிர்க்க முடியாததாயிற்று. இதன் பின்விளைவுகளைப் பற்றி ராட்கிளி நன்கறிந்திருந்தார். எனினும் கால நெருக்கடியின் கட்டாயத்துக்குட்பட்டு அவரிட ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றினார். ராட்கிளிப் தீர்ப்பு 1947 ஆகஸ்டு 17 ஆ தேதி – அதாவது இந்தியா சுதந்திரம் பெற்று இரண்டு நாட்களுக்குப் பின்ன வழங்கப்பட்டது!

### பஞ்சாப் பிரிவினை (The Partition of Punjab)

ராட்கிளிப் எல்லைக் கமிஷன் தீர்ப்பின்படி பஞ்சாப் இருகூறுகளாக பிரிக்கப்பட்டது. மேற்கு பஞ்சாப் பாகிஸ்தானுடனும், கிழக்கு பஞ்சாப் இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டும் என்று முடிவாயிற்று. சிந்து நதியிலிருந்து டெல்லியின் எல்லை வரை உள்ள ஒவ்வொரு நகரமும், கிராமமும், நெல் மற்றும் கோதுமை வயல்களு பிரிக்கப்பட்டன! அதன் விளைவாக இந்தியாவின் கிழக்குப் பஞ்சாபில் வாழ்ந்த முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கும், பாகிஸ்தானின் மேற்கு பஞ்சாபில் வாழ்ந்த இந்துக்களு சீக்கியர்களும் இந்தியாவுக்கும் குடிபெயர்ந்து செல்லவேண்டியதாயிற் பன்னெடுங்காலமாகப் பஞ்சாப் இந்தியாவின் நெற்களஞ்சியமாகவும், உழைப்பி உறைவிடமாகவும், வீரத்தின் விளை நிலமாகவும் திகழ்ந்து வந்தது. அங்கு சீக்கியர்களு...



### வங்காளப் பிரிவினை (The Partition of Bengal)

ராட்கிளிப் தீர்ப்பின்படி பஞ்சாப்பைப் போன்றே வங்காளமும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. கிழக்கு வங்காளம் பாகிஸ்தானுடனும், மேற்கு வங்காளம் இந்தியாவுடனும் இணைக்கப்பட வேண்டும் என்று முடிவாயிற்று. வங்காளத்தில் வாழ்ந்து வந்த 35 மில்லியன் முஸ்லீம்களும், 30 மில்லியன் இந்துக்களும் சமயவழி வேறுபட்டிருந்தாலும் மொழி – கலாச்சார – பொருளாதார வழி ஒன்றுபட்டிருந்தனர். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15 ஆம் நாளை இன வேறுபாடின்றி வங்காளப் புத்தாண்டாகக் கொண்டாடி வந்தனர். தாகூரைப் போன்ற கவிஞர்களை இரு இனத்தவரும் போற்றிப் பாராட்டிப் புகழ்ந்தனர். வங்காளத்தின் கிழக்குப் பகுதியில் பெரும்பான்மையினராயிருந்த முஸ்லீம்களும், மேற்குப் பகுதியில் பெரும்பான்மையினராயிருந்த இந்துக்களும் தேசிய உணர்வால் உந்தப்பட்டவர்கள். சணல் சாகுபடியை நம்பியிருந்த முஸ்லீம்கள் நெல் சாகுபடியைச் சார்ந்திருந்த இந்துக்களை நம்பியிருந்தனர். பஞ்சமும், பெரு வெள்ளமும் மாறி மாறி வங்காளத்தை வாட்டிய போதெல்லாம் இந்து–முஸ்லீம்கள் அவற்றை இணைந்தே எதிர்கொண்டனர். 1905–ல் இவர்களை இனவழிப் பிரிவினை செய்து தோல்வி கண்டார் கர்சன் பிரபு. இமயமலையின் அடிவாரத்திலிருந்த வங்காளத்தைக் கங்கையும், பிரம்மபுத்திராவும் வளமாக்கி விட்டு வங்காள விரிகுடாவில் கலந்தன. இத்தகைய வங்காளம் பிரிக்கப்பட்டு கிழக்கு வங்காளம் இந்தியாவின் மேற்குக் கோடியில் 970 மைல்களுக்கு அப்பாற்பட்டிருந்த பாகிஸ்தானோடு இணைக்கப்பட்டது. கிழக்கு வங்காளம் 'கிழக்கு பாகிஸ்தான்' ஆயிற்று. இதை '**பூகோள அபத்தம்**' (Geographical Aberration) என்று வர்ணித்துள்ளனர் கோவின்ஸ் மற்றும் லாப்பியேர்.

## 1.4 பிரிவினையின் விளைவுகள்

### 1.4.1 இனக்கலவரங்கள் (Communal Riots)

#### பஞ்சாப் படுகொலை (Punjab Massacre)

ராட்கிளிப் பஞ்சாப் பிரிவினை பற்றிய தீர்ப்பு குளவிக்கூட்டில் கைவிட்ட கதையாயிற்று! பஞ்சாபியரின் பெரும்பான்மையோர் அத்தீர்ப்பை ஏற்கவில்லை. 1947 துவக்கத்திலிருந்தே பஞ்சாபில் நிலவி வந்த இன ஒற்றுமை குலையத் துவங்கியது. முஸ்லிம் லீக் 'இன வெறியர்கள்' பஞ்சாப் முஸ்லீம்களை இரகசியமாகச் சந்தித்து அவர்களது உள்ளங்களில் இனவாத நச்சு விதைகளை விதைத்து வந்தனர்; இன வெறுப்பைத் தூண்டி விட்டனர்.

இந்தியப் பிரிவினை நடைமுறைக்கு வருமுன்னரே பஞ்சாபில் இனக்கலவரம் எரிமலையாய் வெடித்தது. 1947 மார்ச் மாதம் ஒரு சீக்கியத் தலைவர் முஸ்லீம் லீக்கின் கொடிக் கம்பத்தை வெட்டிச் சாய்த்ததன் விளைவாக மூவாயிரம் இந்துக்கள் – பெரும்பாலும் சீக்கியர்கள் – கொன்று குவிக்கப்பட்டனர். திட்டமிட்ட கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் பஞ்சாப்பை இனமோதல் படுகளமாக்கின. பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பஞ்சாப்பை ஆட்சி செய்து வந்த கூட்டணி அரசாங்கம் (Coalition Government) பதவி விலகியது. பஞ்சாப் ஆளுநர் **சர் இவான் ஜென்கின்ஸ்** (Sir Evan Jenkins) நிர்வாகப் பொறுப்பேற்றார்.

... சீக்கியர்கள் பழிக்குப் பழி வாங்கக் ...

கொண்டிருக்கையில் சீக்கியர்கள் லாகூரில் மாஸ்டர் தாராசிங் தலைமை...
எதிர்த்தாக்குதல் பற்றித் திட்டமிட்டனர்.

இந்தியா சுதந்திரம் பெற்றபோது மேற்கு பஞ்சாபிலிருந்து இந்து, சீக்கியர்களையும், கிழக்கு பஞ்சாபிலிருந்து முஸ்லீம்களையும் விரட்டும் முயற்சியி... கைக்கூலிகளும், இன வெறியர்களும், சமூக விரோத சக்திகளும் மேற்கொண்டன... லாகூரில் இந்து–சீக்கியர்களின் வீடுகள் தீக்கரையாகின, சொத்துக்க... சூறையாடப்பட்டன, கிடங்குகளில் அடைக்கப்பட்டு முஸ்லீம் காவல் படையினரால் சுட்டு... கொல்லப்பட்டனர். கற்பழிப்புக்கஞ்சி பல பெண்கள் தீக்குளித்தனர். அதேபோன்... அமிர்தசரசில் முஸ்லீம்களின் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன, வயல்க... நாசமாக்கப்பட்டன, வாய்க்கால்கள் பிணங்களால் நிறைந்தன. சீக்கியர்களி... சீற்றத்திலிருந்து காப்பாற்றப் பல முஸ்லீம்கள் தங்கள் மனைவிகளையும் பெண்களை... கொன்று விட்டனர். தற்காப்புக்காக லாகூரிலும் அமிர்தசரசிலும் முஸ்லீம்க... சீக்கியர்களையும், சீக்கியர்கள் முஸ்லீம்களையும் கொன்று குவித்தனர். இம்ம... மிருகத்தாக்குதலிலிருந்து எந்த ஒரு நகரமும், கிராமமும், தெருவும் தப்பவில்லை... வெறுப்புக்கு இன, மத, மொழி வேறுபாடு இல்லை அல்லவா?

**மேஜர் ஜெனரல் ரீஸ்** (Major General Rees) தலைமையில் அமைக்கப்பட்ட பஞ்சா... எல்லைப் படை (Punjab Boundary Force) மேற்கொண்ட 'நெருப்பணை... நடவடிக்கை'யால் பஞ்சாப் படுகொலையைத் தடுக்கவோ இனக்கலவரங்களை ஒடுக்கவோ... முடியவில்லை. பஞ்சாப் எல்லைப்படை இனக்கலவரத்தை எதிர்கொள்ளக்கூடிய போதி... பலம் பெற்றிருக்கவில்லை. அதற்குக் குதிரைப் படையும் கொடுக்கப்படவில்லை. மே... அப்படை வீரர்களிடையே கட்டுப்பாடும் ஒழுங்குணர்வும் குறைந்தே காணப்பட்ட... அவர்களில் சிலர் இனக்கலவரங்களில் சார்புடையவர்களாக நடந்து கொண்டனர் என... சந்தேகிக்கப்பட்டது. பஞ்சாபில் நிர்வாகம் முற்றிலும் சீர்குலைந்து போயிற்று. அமிர்தசர... இனக்கொலைக்குப் பதிலாக லாகூரிலிருந்து அமிர்தசரஸ் சென்ற டென்–டவு... எக்ஸ்பிரஸில் பயணம் செய்த சீக்கிய அகதிகள் அனைவரையும் கொன்று பிணம... அனுப்பினர்.

மதவெறி மட்டும் பஞ்சாப் படுகொலைக்குக் காரணமல்ல. நிலப் பேராசை... அதற்கு அடிப்படைக் காரணம் என்று கூறுகிறார் **எஸ்.கே.சின்ஹா**. மேற்கு பஞ்... முஸ்லீம்கள் அங்கு இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் சொந்தமான நிலங்கள், கடைக... வீடுகள், பிற சொத்துக்கள் அனைத்தும் தங்களுக்கே சொந்தம் என்று கருதின... அதேபோன்று கிழக்கு பஞ்சாப் இந்துக்களும் சீக்கியர்களும் அங்கிருந்த முஸ்லீம்களை... பாகிஸ்தானுக்கு விரட்டிவிட்டு அவர்களது சொத்துக்களை அபகரித்துக் கொ... வேண்டுமென்று விரும்பினர். எனவே, மதமுலாம் பூசப்பட்ட சொத்தாசையே பஞ்... படுகொலைக்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

### 1.4.2 வங்காள இனக்கலவரங்கள் (Bengal Communal Riots)

இந்தியப் பிரிவினை மீண்டும் வங்காளத்தில் இனக்கலவரத்தைத் தூண்டிவி...



அமைத்துக் கொண்டு, அசாதாரணத் துணிவுடன் கிராமம் கிராமமாக நடந்தே சென்று, கல்லடியையும் சொல்லடியையும் எதிர்கொண்டு, முஸ்லீம்களின் மூர்க்கத்தனத்தை முனை மழுங்கச் செய்தார். அச்செயலை உலகே வியந்து பாராட்டியது. நாட்டுப் பிரிவினையையொட்டி வெடித்த கல்கத்தா இனக் கலவரத்தை அடக்க எந்த எல்லைப் படையும் அனுப்பப்படவில்லை. மாறாக, மகாத்மா காந்தி **தனி மனித எல்லைப் படை** (One Man Boundary Force)யாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் வைசிராய் மௌண்ட்பேட்டன் பிரபு.

மகாத்மா காந்தி வைசிராயின் வேண்டுகோளை ஏற்று இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முப்பத்தியாறு மணி நேரத்துக்கு முன்னால் நவகாளி சோடேபூர் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டு பத்து மைல்களுக்கப்பால் இருந்த கல்கத்தாவுக்குச் சென்றார். கல்கத்தா முஸ்லீம்களின் தனிப்பெரும் தலைவராகத் திகழ்ந்த **ஷாகித் சூரவர்த்தியுடன்** ஒரே காரில் கல்கத்தா வீதிகளுக்குச் சென்று இன ஒற்றுமையையும் அமைதியையும் நிலைநாட்டினார். 1947 ஆகஸ்ட் 14 ஆம் தேதி மாலை சரியாக ஐந்து மணிக்குப் பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசிய காந்தி "... நாளையிலிருந்து நாம் பிரிட்டிஷ் ஆட்சித் தளையிலிருந்து விடுபடுவோம். ஆனால் இன்றிரவு இந்தியா இரு கூறுகளாகப் பிரிக்கப்படும். நாளை இன்பகரமான நாள்; துக்ககரமான நாளும் கூட". கல்கத்தா 77 வயதான 'நவகாளி நாயகர்' காந்தியின் காந்தக் கவர்ச்சிக்குக் கட்டுப்பட்டிருந்தது. 55,000 படை வீரர்களைக் கொண்ட பஞ்சாப் எல்லைப் படை செய்ய முடியாத அதிசயத்தை காந்தி என்ற தனிமனித எல்லைப்படை வீரர் கல்கத்தாவில் நிகழ்த்திக் காட்டினார்.

### 1.4.3 வரலாறு காணாத குடியேற்றம் (Unprecedented Migration)

1947 மார்ச் மாதத்திலிருந்தே இனக் கலவரங்களின் விளைவாக மேற்கு பஞ்சாபிலிருந்து சீக்கியர்களும் இந்துக்களும் குடிபெயர்ந்து இந்தியாவுக்கு வரத் துவங்கிவிட்டனர். ஆகஸ்ட் 14 ஆம் தேதி லாகூரில் இனக்கலவர பூகம்பம் வெடித்தது. அதன் எதிரொலி அமிர்தசரசிலும் கேட்டது. ஒரு நாளைக்கு ஐந்திலிருந்து ஆறு மில்லியன் சீக்கியர்களும் இந்துக்களும் மேற்கு பஞ்சாபிலிருந்து இந்தியாவுக்கும், அதே எண்ணிக்கையில் முஸ்லீம்கள் கிழக்கு பஞ்சாபிலிருந்து பாகிஸ்தானுக்கும் அகதிகளாகச் சென்றனர். முன்னுதாரணமற்ற இக்குடியேற்றத்தின் போது பல்லாயிரக்கணக்கானோர் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களால் உயிரிழந்தனர். இதை 'வரலாறு காணாத குடியேற்றம்' என்று வர்ணித்துள்ளனர் கோலின்ஸ் – லாப்பியேர்.

இந்தியப் பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட இனக்கலவரங்களில் இறந்தோர் பற்றி ஆய்வு செய்த **நீதிபதி ஜி.டி.கோஷ்லா, பெண்டர்சன் மூன், எச்.வி.ஹட்சன்** ஆகியோர் முறையே 5,00,000, 2,00,000, 2,50,000 என்று கணக்கிட்டுள்ளனர். பஞ்சாபின் முதல் இந்திய ஆளுநராயிருந்த **சர் சந்துலால் திரிவேதி** இறந்தோரின் எண்ணிக்கை 2,25,000 ஆக இருக்கக் கூடும் என்று மதிப்பிட்டார். **ஐயான் ஸ்டீபன்ஸ்** 5,00,000 என்றும், **எம்.எட்வர்ட்ஸ்** 6,00,000 என்றும் குறிப்பிட்டுள்ளனர். அதிகபட்சம் இரண்டு மில்லியன் மக்கள் மாண்டிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது!

பாகிஸ்தானிலிருந்து வெள்ளம் போல் வந்த அகதிகள் டெல்லியில் குடியேறினர்.

கமிட்டி (Emergency Committee)யை அமைக்க முடிவு செய்தனர். அமைப்பாற்றலுக்கு விரைந்து முடிவெடுக்கும் திறனுக்கும் பெயர் பெற்ற மௌன்ட்பேட்டனால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அக்கமிட்டி விரைந்து செயல்பட்டது.

### 1.4.4 துயர்துடைப்பு நடவடிக்கை – அகதிகள் பிரச்னை

அகதிகளின் துயர்துடைப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. டெல்லியில் 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ரயில்களை வழிமறித்துத் தாக்கியோரைச் சுட்டுக் கொல்ல ஆணையிடப்பட்டு பாதுகாப்புப் படையினர் முடுக்கிவிடப்பட்டனர். இராணுவத்தினர் வீதிகளில் சிதறிக்கிடந்த பிணங்களைச் சேகரித்து எரித்தனர். பொது மற்றும் ஞாயிறு விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டன. ரயில்கள் இராணுவப் பாதுகாப்புடன் ஓடின. அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டன. பாகிஸ்தானுக்குப் போக விரும்பிய டெல்லி முஸ்லீம்கள் ஹுமாயூ நினைவு மண்டபத்திலும், புராண கிலாவிலும் தக்க பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டன அவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் செய்துதரப்பட்டன.

அகதிகள் பிரச்னையைத் தீர்க்க உறங்காமல் உழைத்தார் நேரு. "இந்தியாவ் **ஆறு மணி நேரம் உறங்க வேண்டியது அவசியம்; ஏழு மணி நேரம் உறங்குவ ஆடம்பரம்; எட்டு மணி நேரம் உறங்குவது பாவம்**" என்றார். மௌன்ட்பேட்ட துயர்துடைப்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியதற்கா ஏற்பாடுகளைச் செய்தார். திருமதி **எட்வினா மௌன்ட்பேட்டன்** ஒரமைப்பின் கீழ் (Unit Council for Relief and Welfare) தொண்டு மன்றங்கள் மற்றும் செஞ்சிலுவைச் சங் பணிகளை ஒருங்கிணைத்தார். மருத்துவமனைகளையும், அகதிகள் முகாம்களை நேரில் சென்று பார்வையிட்டார். அவதியுற்ற அகதிகளுக்கு ஆறுதல் கூறினார். திரு மௌன்ட்பேட்டன் பயன்கருதாப் பணியால் நெகிழ்ந்துபோன மகாத்மா காந்தி அவ **'இரக்க தேவதை'** (The Angel of Mercy) என்று வெளிப்படையாகப் புகழ்ந்து பாராட்டின

## 1.5 இந்தியாவின் நிலை

**அரசியல் நிலை**

இந்தியா பிரிட்டிஷ் பேராதிக்கப் பிடியிலிருந்து விடுபட்டதேயன்றி ஆங்கில அரசியலமைப்பு வளையத்திலிருந்து வெளியேறவில்லை. பிரிட்டிஷார் வகுத்துக் கொடு 1935 அரசியலமைப்புச் சட்டத்தின்படிதான் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. சுதந் இந்தியாவுக்கென பிரத்யேக அரசியலமைப்புச் சட்டமன்றம் அமைக்கப்பட்டு அரசி சாசனம் எழுதப்பட வேண்டிய நிலையில் இருந்தது இந்தியா. பிரிட்டிஷ் வரிசைப்படி மு சிவப்பு நாடா நிர்வாகம் நீடித்தது. **பிரிட்டிஷ் இந்தியா** (British India), **மன்னர்கள் இந்தி** (Princely India) என்று இரு பகுதிகளாக இருந்த இந்தியாவில் பிரிட்டிஷ் இந்தி பகுதிக்குத்தான் ஆட்சி அதிகார மாற்றம் செய்யப்பட்டது. எஞ்சியிருந்த 562 மன்ன மாநிலப் பகுதிகள் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ அல்லது தனித்திருக்கவோ உரிமை பெற்றிருந்தன! அவை சுதந்திர இந்திய உடலில் குத்திய முட்களாக இருந்த மன்னர் மாநிலங்களை இணைப்பது சுதந்திர இந்தியாவின் சவாலாக இருந்தது.

### 1.5.1 பொருளாதார நிலை



கிழக்கிந்தியக் கம்பெனி மற்றும் ஆங்கிலேய அரசாங்கத்தின் ஆதரவோடு பிரிட்டிஷ் வணிகர்கள் இந்தியாவோடு தொடர்பு கொண்டு தங்களுக்குச் சாதகமாக வர்த்தகச் சுரண்டலில் திட்டமிட்டு ஈடுபட்டனர். 2) **நிதி மூலதனச் சுரண்டல்** (Exploitation of Financial Capital). பிரிட்டிஷ் வங்கியாளர்களும், நிதி நிபுணர்களும் இந்தியத் தொழிலதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் நிதியுதவி அளித்துத் தங்களையும் தங்களைச் சார்ந்த நிறுவனங்களையும் வளப்படுத்திக் கொண்டனர். 3) **தொழில் மூலதனச் சுரண்டல்** (Exploitation of Industrial Capital). பிரிட்டிஷ் தொழிலதிபர்கள் இந்தியாவிலிருந்து குறைந்த விலையில் மூலப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு செய்பொருள்களை அதிக விலைக்கு விற்றுக் கொள்ளை இலாபம் பெற்று வந்தனர். இம்மூவகைச் சுரண்டல்களின் ஒட்டுமொத்த விளைவாக இந்தியா சுதந்திரம் பெற்ற போது:

1. விவசாயம் வளமிழந்திருந்தது. விவசாய உற்பத்தித் திறன் உலகிலேயே கீழ் நிலையில் இருந்தது. விவசாயிகள் வறுமையில் வாடினர். பஞ்சத்துக்குப் பஞ்சமில்லை.
2. தொழில் கட்டமைப்பு மிகவும் பலவீனமாக இருந்தது. அடிப்படைக் கனரகத் தொழில்கள் தோன்றவில்லை. இருந்த தொழில்களும் சில நகரங்களிலேயே குவிந்திருந்தன. குடிசைத் தொழில்கள் நசிந்துவிட்டன. மூலதனத் தட்டுப்பாடும், திறமையற்ற மேலாண்மையும் விரைவான தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாக இருந்தன. தொழிலதிபர்கள் வளமோடு வாழ தொழிலாளர்கள் அடிப்படை வசதிகளின்றி வாடினர்.
3. வங்கி மற்றும் ஆயுள் காப்பீட்டு வசதிகளும் பாதுகாப்பும் செல்வந்தர்களுக்கே கிடைத்தன. நிதி நிறுவனங்கள் நகரங்களிலேயே செயல்பட்டன. சேமிப்பு விகிதம் மிகவும் குறைவாக இருந்தது.
4. மக்கள் தொகைப் பெருக்கத்துக்கேற்ப வேலைவாய்ப்புகள் அதிகரிக்கவில்லை. மக்கள் தொகைப் பெருக்கம், வேலையின்மை, வறுமை ஆகியவை இந்தியப் பொருளாதாரம் தேக்கமடையக் காரணங்களாக இருந்தன.
5. கிராமக் குடிசைத் தொழில்களும், கைத்தொழில்களும், சிறுகுறு தொழில்களும் குலைந்து கலைந்து போயின. கைவினைஞர்களும், நெசவாளிகளும், கலைஞர்களும் **'பொருளாதார அனாதைகள்'** ஆயினர்.
6. இந்தியாவின் வர்த்தகச் சமநிலை (Balance of Payment) பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அதற்குக் காரணம் ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகரித்ததேயாகும். அந்நியச் செலவாணி பற்றாக்குறையால் இந்தியா சர்வதேசச் சந்தையில் செல்வாக்கு இழந்திருந்தது.

கருவானத்தில் ஒளிக்கீற்றைப் போன்று இந்தியா சுதந்திரம் பெற்ற போது பிரிட்டிஷார் நன்கொடைகளாக விட்டுச் சென்ற சில பங்களிப்புகளும் இந்தியாவுக்குச் சாதகமாக இருந்தன: 1) நிர்வாக நீதிமன்ற நிறுவனங்கள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் இந்தியாவில் அரசியலமைப்பு ஒருங்கிணைப்பு ஏற்பட்டு இருந்தது; 2) ஆங்கிலக் கல்வியின் பயனாக கற்றோரிடையே அரசியல் விழிப்புணர்வும், பகுத்தறியும் திறனும், அறிவியல் தொழில்நுட்ப மனப்பான்மையும், பயன்பாட்டு யதார்த்த நடைமுறையும் வளர்ந்திருந்தன; 3)தொழிற்சாலைகளின் தோற்றமும், நிதிநிறுவனங்களின் பெருக்கமும், நகரங்களின் வளர்ச்சியும் ... யை அமைத்துக் கொடுத்தன;

4) ரயில்வே, பாதைப் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு முறைகள் இந்திய பல்வேறு பகுதிகளையும் மக்களையும் ஒருங்கிணைத்ததோடு விரைவான பொருளா வளர்ச்சிக்கும் உதவியாக இருந்தன; 5) உயர் மற்றும் தொழில் கல்வியும் பயிற்சியும் மனித வளம் பொருளாதார வளர்ச்சிப் பொறுப்பேற்கத் தயாராக இருந்தது.

### 1.5.2 சமூக நிலை

இந்தியா சுதந்திரம் பெற்ற போது நாட்டின் சமூக நிலை மிகவும் பின்தங் நிலையில் இருந்தது. சமூக அமைப்பின் முதுகெலும்பாக இருந்த **சாதிமுறை** (Ca System) மக்களின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருந்தது. ஒரு காலத்தில் சமூக பொருள்தாரப் பாதுகாப்பைக் கொடுத்து வந்த சாதி முறை சமுதாயத்தைப் பல்வே குழுக்களாகப் பிரித்து, குலத் தொழிலை ஊக்குவித்து, உழைப்பாளர்களின் வேலை தாவலையும் இடமாற்றத்தையும் தடுக்கும் தடைக்கற்களாக இருந்தன.

சாதிமுறையைப் போன்றே **கூட்டுக் குடும்ப முறை** (Joint Family System)- முக்கிய சமூக அமைப்பாகவே நீடித்தது. இம்முறையில் குடும்ப உறுப்பினர்கள் அனைவ ஒன்றுபட்டு உழைத்து, வளங்களையும் வருவாயையும் பகிர்ந்து கொண்டு, சுகதுக்கங்க பங்கேற்று வாழ்ந்து வந்தனர். கூட்டுக் குடும்ப அமைப்பில் தியாக உணர்வு, பரஸ்ப பரிவு, வயதானோர் விதவைகள் மற்றும் நோயுற்றோருக்குப் போதிய பாதுகாப்பு இருந்த அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பிரிவுபடாமல் இருந்தன. ஆனால் ஒரு சிலரி வருவாயை நம்பிப் பலர் வறுமையையும் வசதியின்மையையும் பகிர்ந்து கொள்ள வேண்டி நிலை ஏற்பட்டது. சார்புடைமையும் சோம்பேறித்தனமும் வேரூன்றின. கடின உழைப்பு ஊக்கமில்லாமல் போயிற்று.

இந்தியா **கிராமங்களின் கிடங்காகக்** காட்சியளித்தது. கிராம மக்க அறியாமையிலும், மூட நம்பிக்கைகளிலும், போலிக் கட்டுப்பாடுகளிலும் மூழ்கிக் கிடந்தன அறியாமையிலும் ... கிராமங்கள் நாகரிக நீரோட்டத்திலிருந்து விலக்கப்பட்டே இருந்தன. அவை அறிவிய தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளவில்லை. **"கிராம என்பது பிராந்தியப் பற்றின் சாக்கடைப் புதைகுழி; அறியாமை, குறுகி மனப்பான்மை மற்றும் இனப்பற்றின் குகை"** என்று வர்ணித்தார் பி.ஆர்.அம்பேத்கா இந்திய கிராமங்கள் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, சமூக நீதியும் சமத்துவமு இன்றி, வறுமைக் கடலில் மிதக்கும் தீவுகளைப் போன்று காட்சியளித்தன.

### 1.5.3 இந்து – முஸ்லீம் இன நிலை

இந்துக்களும், முஸ்லீம்களும் இருவேறு இனங்கள் என்ற ஜின்னாவின் இ **தேசக் கோட்பாட்டின்** (Two-nation Theory) அடிப்படையில் இந்தியா பிரிக்கப்பட்ட ஆனால் இந்தியப் பிரிவினை இந்து – முஸ்லீம் இனப்பிரச்னைக்குத் தீர்வா அமையவில்லை. அதற்குக் காரணம் பிரிவினைக்குப் பின்னர் இந்தியாவை விட்டு பாகிஸ்தானுக்குச் சென்ற முஸ்லீம்களை விட இந்தியாவிலேயே தங்கிவிட்டோரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது! இது முப்பெரும் பிரச்சனைகளைத் தோற்றுவித்த 1) இந்து – முஸ்லீம் இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டோரின் உயிருக்கும் உடமைக்கு பாதுகாப்பளித்தல்; 2) பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்த ... 3) சுதந்திர இந்தியாவில் இந்



### 1.6 மதிப்பீடு

1947 ஆகஸ்டு 14–15 ஆம் தேதி நள்ளிரவில் இந்திய சுதந்திரம் இனக்கலவர வலியோடு பிறந்தது. இந்தியாவும் பாகிஸ்தானும் **'சிசரிய அறுவை சிகிச்சை'** (Caesarean Section)-க்குப் பிறகு பிறந்த இரட்டைக் குழந்தைகள். பிரிவினையால் இந்தியா பெரிதும் பாதிக்கப்பட்டது. இனக் கலவரங்களும், அகதிகள் பிரச்னையும் இந்தியா விடுதலை அடைந்ததற்காகக் கொடுக்கப்பட்ட விலையாகும். இந்தியப் பிரிவினை இனக்கலவர இரத்தக்களறியில் முடியும் என்ற யதார்த்தத்தைக் காந்தி, ராட்கிளிப் தவிர மௌன்ட்பேட்டனோ, நேருவோ, ஜின்னாவோ, பஞ்சாப் ஆளுநரோ, அதிகார வர்க்கத்தினரோ சற்றும் எதிர்பார்க்கவில்லை. குறிப்பாக நேருவும், ஜின்னாவும் இன உணர்வுகளைக் குறைத்து மதிப்பிட்டு விட்டனர். இந்தியப் பிரிவினையை இரு சகோதரர்களுக்கிடையேயான சொத்துத் தகராறு என்று எண்ணினார் ஜின்னா.

சொத்தாசை இன வெறுப்புடன் சேரும்போது விளைவுகள் விபரீதமாகும் என்பதை இந்தியப் பிரிவினை கோடிட்டுக் காட்டியது. எல்லைப்படை வீரர்களில் சிலர் இனக்கலவரங்களில் கலந்து கொண்டது துரதிஷ்டமானது. டெல்லியில் குடியேறிய அகதிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட துயர் துடைப்புப் பணிகள் மௌன்ட்பேட்டன், நேரு, பட்டேல் ஆகியோரின் மனிதாபிமானத்துக்கும், நிர்வாகத் திறமைக்கும், அரசியல் விவேகத்துக்குமான சிறந்த எடுத்துக்காட்டாகும். உலகில் வேறு எந்த நாடும் சுதந்திரமடைந்த போது இத்தகைய இனக் கலவரச் சவாலை சந்திக்கவில்லை என்று கூறுகின்றனர் கோலின்ஸ்–லாப்பியேர். இந்தியப் பிரிவினை இன வெறுப்பை நீடிக்கச் செய்ததேயன்றி நீக்கவில்லை. தேசப் பிரிவினை **தீர்மானத் தவறு** (Error of Judgement) என்பதை நேரு நேர்மையுடன் ஒத்துக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார் எஸ்.கோபால்.

# 2. மன்னர் மாநிலங்கள் இணைப்பு

என்னுடைய வாரிசு நேரு. எனக்குப் பின் என்னுடைய மொழியை அவர்தான் பேசு(வா)
நேருவின் கரங்களில் இந்த நாடு பத்திரமாக இருக்கும்.

– மகாத்மா காந்

## முதல் பிரதமர்

**ஜவகர்லால் நேரு** 1947 ஆகஸ்டு 15–ஆம் தேதியிலிருந்து 1964 மே 27 வ(ரை) சுதந்திர இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றினார். பதினேழு ஆண்டுகள் தொட(ர்ந்து) பிரதமராக இருந்து இந்திய அரசாங்கத்துக்கு உறுதியையும், தொடர்ச்சியை(யும்) நம்பகத்தன்மையையும் கொடுத்தார். இந்திய விடுதலைப் போராட்டத்(தின்) குறிக்கோள்களை, கனவுகளை, திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு வாய்(ப்பு) அவருக்கு இருந்தது. சுதந்திர இந்திய சவால்களைச் சாதுர்யமாகச் சமாளித்(தார்). இந்தியப் பிரிவினையால் உருவான அகதிகள் பிரச்னை; பிரிந்திருந்த இந்(திய) பகுதிகளை ஒருங்கிணைத்தல்; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் தீட்(ட)ல்; பொருளாதார, சமூக, கலாச்சாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்த(ல்); **மாநிலங்களை மறுசீரமைத்தல்; வெளிநாட்டுக் கொள்கையைக் கொடுத்து உல(க) நாடுகளுடன் சமாதான சகவாழ்வு உறவு கொள்ளல் போன்ற ஆக்கப்பூர்வமா(ன) நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தியாவுக்குப் பெருமைக்குரிய இடத்தை(ப்) பெற்றுத்தந்த சிறப்பு நேருவுக்கு உண்டு. இந்தியாவில் இறையாண்மையுடைய ஜனநா(யக) சோஷலிச, நாடாளுமன்ற மக்களாட்சி மலர்வதற்கு நேருவின் பங்களிப்புகள் வரலா(ற்று) முக்கியத்துவமுடையவை எனவே, நேருவின் ஆட்சிக்காலம் 'நேரு சகாப்தம்'** (The Ne(hru) Era) என்று அழைக்கப்படுகிறது.

## ஜவகர்லால் நேரு

**ஜவகர் 1889 நவம்பர் 14–ஆம் தேதி அலகாபாத்தில் காஷ்மீர் பிராமண குடும்பத்தில் மோதிலால் நேருவுக்கும் சொருபராணிக்கும் மகனாகப் பிறந்தா(ர்). வழக்கறிஞர் தொழிலில் செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்த மோதிலால் நே(ரு) ஜவஹருக்குத் தரமான துவக்கக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்தார். ஜவஹர் த(ம்) இளமைக் காலத்தில் ஆங்கிலத்தாதிகளால் – குறிப்பாக புருக்ஸ் – வீட்டிலேயே கல்(வி) கற்பிக்கப்பட்டார். பின்னர் உயர்கல்வி பெற இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அ(ங்கு) புகழ் பெற்ற ஹாரோ, கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கல்வி நிறுவனங்களில் பயி(ன்று) பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.**

**ஜவகர்லால் நேரு இங்கிலாந்தில் மாணவராக இருந்தபோதே 'பேபிய(ன்) சோஷலிஸ்டு'களான சிட்னி வெப், பீயாட்ரிஸ் வெப், ஜார்ஜ் பெர்னார்டு ஷா போ(ன்ற) சிந்தனையாளர்களின் எண்ணங்களால் ஈர்க்கப்பட்டார். பிரிட்டிஷ் பாராளுமன்(ற) ஜனநாயக முறை நேருவின் கவனத்தைக் கவர்ந்தது. வரலாற்று வித்த(க)** [illegible]

வரலாற்றில் மனதைப் பறி கொடுத்தார். அதுமட்டுமல்ல. இங்கிலாந்தில் இந்திய மாணவர்கள் நடத்தி வந்த 'மஜ்லீஸ்' என்ற அமைப்பின் மூலம் பிபின் சந்திரபால், லாலா லஜபதிராய், கோபாலகிருஷ்ண கோகலே போன்ற பிரபல இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு நாட்டுப்பற்று கொண்டார்.

1912 இல் இந்தியா திரும்பிய ஜவகர்லால் நேரு அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வக்கீல் வாழ்க்கையைத் தொடங்கினார். ஆனால் நேருவுக்கு வக்கீல் தொழிலை விட சமூக சேவையிலும், அரசியல் தொண்டிலும் நாட்டம் அதிகமாக இருந்தது. பாட்னாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார் (1912 டிசம்பர்). கோகலே துவக்கிய **இந்திய ஊழியர்கள் சங்கத்தில்** (Servants of Indian Society) உறுப்பினர் ஆனார். தென் ஆப்பிரிக்காவில் காந்தி நடத்திய போராட்டத்துக்கு நிதி திரட்டும் பணியில் நேரு, கோகலேக்கு உறுதுணையாக இருந்தார் (1914). மேடைப் பேச்சாளரானார் (1915). இரண்டாண்டுகள் அலகாபாத் நகராட்சி மன்றத் தலைவராகவும் தொண்டாற்றினார். 1916 பிப்ரவரி 8–ஆம் தேதி நேரு டெல்லி வணிகர் பண்டிதர் ஜவஹர் முல் என்பவரின் மகள் **கமலா கௌலைத்** திருமணம் செய்து கொண்டார். அதன்பின் இந்தியரின் அரசியல் விடுதலைக்காக அன்னிபெசண்ட் அம்மையார் தொடங்கிய **'ஹோம் ரூல்'** இயக்கத்தில் தீவிர பங்கேற்றார் (1917). கிஸான் (உழவர்) சபையின் துணைத் தலைவராகி அயோத்தி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தார்; சுதேசியாக மாறினார் (1918).

தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய காந்தி 1920 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கிய போது நேரு, காந்தியின் காந்தக் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டார். வக்கீல் தொழிலைத் துறந்துவிட்டு இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வருகை தந்த போது அவருக்கெதிராக ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்தமைக்காக நேரு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் (1921). காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரு (1923) பின்னர் அதன் பொதுச் செயலாளர் ஆனார் (1924). சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் 'பூரண சுதந்திரம்' பற்றிய தீர்மானத்தைக் கொண்டு வந்தார் நேரு (1927).

இந்தியா விடுதலை அடைவதற்கு முன் நேரு ஐந்து முறை காங்கிரஸ் **தலைவராகத்** தேர்ந்தெடுக்கப்பட்டார் (1929, 1930, 1936, 1937, 1946). உப்பு **சத்தியாகிரகத்தில்** கலந்து கொண்டு இருமுறை சிறை தண்டனை பெற்று நைனிடால் **சிறையில்** அடைக்கப்பட்டார் (1930). அதன்பின் துவக்கப்பட்ட விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்றுப் பலமுறை சிறை சென்றார் நேரு. ஜவஹர்லால் நேரு தனது பொது வாழ்வில் 3262 நாட்கள் – சுமார் பத்து ஆண்டுகள் சிறைப் பறவையாக இருந்துள்ளார்! 1946 செப்டம்பர் 2–ஆம் தேதி இந்திய வைசிராய் வேவல் பிரபுவின் அழைப்பை ஏற்று காங்கிரஸ் தலைவராக இருந்த நேரு இடைக்கால அரசாங்கத்துக்குத் தலைமைப் பொறுப்பேற்றார். 1947 ஆகஸ்டு 15 ஆம் தேதி இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து 1964 மே 27 ஆம் தேதி வரை ஜவஹர்லால் நேரு பாரதப் பிரதமராக இருந்து நாட்டை நல்வழி நடத்திச் சென்றார்.

## 2.1 மன்னர் மாநிலங்கள்

**மூவகை இந்தியா**

அகதிகள் பிரச்னையை எதிர் கொண்டிருந்த நேரு அரசாங்கம் மன்னர் மாநிலங்களான சமஸ்தானங்களை (Princely States) இந்தியாவுடன் சட்டப்படி இணைக்க

பாந்திருந்தது: ...அடைந்த போது மூன்று பகுதிகளா...

1. **பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள்** (British Indian Provinces) சென்னை, பம்பா... உத்திரப்பிரதேசம், பீகார், மத்திய மாநிலங்கள், ஒரிசா, பஞ்சாப், வங்காளம், அஸ்ஸா... சிந்து ஆகிய மாகாணங்களை உள்ளடக்கியது பிரிட்டிஷ் இந்தியா.
2. **தலைமைக் கமிஷனர் மாகாணங்கள்** (Chief Commissioner's Provinces) பிரிட்டி... பலுசிஸ்தானம், வடமேற்கு எல்லை மாகாணமும் தலைமைக் கமிஷனரா... நிர்வகிக்கப்பட்டு வந்தன.
3. **மன்னர் மாநிலங்கள்** (Princely States) மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்... ஐநூறுக்கும் மேற்பட்ட பகுதிகள் இந்திய மாநிலங்கள் (Indian States) என்று அழைக்கப்பட்டன.

இம்மூன்று பகுதிகளின் பிரதிநிதிகளைக் கொண்டுதான் 1946 அமைச்சரவை தூதுக் குழுவின் (Cabinet Mission) பரிந்துரைப்படி அரசியலமைப்புச் சட்டமன்றம் அமைக்கப்பட்டது. அப்போது ஜவஹர்லால் நேருவின் தலைமையில் செயல்பட்ட **இடைக்கால அரசாங்கம்** (Interim Government) இந்தியப் பகுதிகள் – மன்னர் மாநிலங்கள் – இணைப்புப் பிரச்னையைத் தீர்க்க ஒரு **தனி அமைச்சரகத்தை** (State Ministry) ஏற்படுத்தியது. அதற்குப் பொறுப்பாக இருந்த **சர்தார் வல்லபாய் பட்டேல்** மன்னர் மாநிலங்களை இந்தியாவுடன் இணைத்து அருஞ்சாதனை புரிந்தார்.

## 2.2 மாநிலங்கள் இணைக்கப்படல்

### 2.2.1 இணைப்பு உடன்பாடுகள்

இந்தியா சுதந்திரம் பெற்ற போது பிரிட்டிஷ் இந்தியாவுடன் தலைமைக் கமிஷனர் மாகாணங்களை இணைப்பதில் எவ்வித இடர்ப்பாடும் இல்லை. ஆனால் மன்னர் மாநிலங்களை சட்டப்படி இந்தியாவுடன் சேர்ப்பதில் சில சிக்கல்கள் இருந்தன. ஏனெனில் மன்னர்கள் தங்களது தனித்தன்மையையும், சலுகைகளையும் சுயாட்சியையும் நிலைநிறுத்திக் கொள்ள விரும்பினர். எனவே, அவர்களுக்குச் சட்ட நிலைமையை எடுத்துக் கூறுவதற்காக கவர்னர் ஜெனரல் மௌன்ட்பேட்டன் பிரபு 1947 ஜூலை 25-ஆம் தேதி **'இந்திய மன்னர்கள் மாநாடு'** ஒன்றைக் கூட்டினார். அம்மாநாட்டில் அவர் இந்தியாவில் பிரிட்டிஷ் மேலாதிக்கம் ஆகஸ்டு 15 ஆம் தேதியுடன் முடிவடைகிறது என்றும், அதற்குள் மன்னர்கள் தங்களது ஆள் நிலப் பகுதிகளை பூகோள நிலைமைக்கேற்றவாறு இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைத்துக் கொள்ளலாம் என்றும் அறிவித்தார். தனது செல்வாக்கைப் பயன்படுத்தி மன்னர்களின் எதிர்கால வாழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் உறுதியளித்தார் கவர்னர் ஜெனரல். அதன் பின் சர்தார் வல்லபாய் பட்டேல் மன்னர்களுடன் கலந்து பேசி இணைப்பு உடன்பாடுகளுக்கு அவர்களது இசைவிணக்கத்தைப் பெற்றார். **இந்தியாவுடன் இணையும் மன்னர்களுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம்** ...



### 2.2.2 ஜுனகத் இணைப்பு (Accession of Junagadh)

ஜுனகத் பம்பாய்க்கு வடக்கே மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ளது. நவாபின் ஆட்சியின் கீழ் இருந்த அப்பகுதியின் 6,20,000 மக்கள் தொகையில் 80 விழுக்காட்டுக்கு மேல் இந்துக்கள். இந்துக்களை மிகப் பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த ஜுனகத்துக்கு முஸ்லீம் நவாப் 'மகாராஜா'வாக இருந்தார்! நவாப் ஒரு நாய்ப் பிரியர். மக்களை விட அவர் வளர்த்த நாய்கள் மீது அத்துமீறிய அன்பும் அக்கறையும் காட்டினார். அவரது அரண்மனையில் நாய்க்கென அனைத்து வசதிகளையும் கொண்ட தனி அறைகள் ஒதுக்கப்பட்டன. அது மட்டுமல்ல 'ரோஷனா'வுக்கும் 'பாபி'க்கும் நடந்த திருமணத்துக்கு வைசிராய் முதல் இந்தியப் பிரமுகர்கள் அழைக்கப்பட்டனர். 1,50,000 பேர் கலந்து கொண்ட அந்த 'நாய்த் திருமணம்' கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

ஜுனகத்துக்குப் பாகிஸ்தானுடன் எவ்வித பூகோளத் தொடர்பும் இல்லை. அப்பகுதி மக்கள் இந்தியாவுடன் சேர்வதையே விரும்பினர். எனினும் ஜுனகத் நவாப் இந்தியாவுடன் இணைவதை விரும்பவில்லை. மாறாக, ஜுனகத் பாகிஸ்தானுடன் இணைவதாகத் தன்னிச்சையாக அறிவித்தார் (1947 ஆகஸ்டு 15)! அந்த அறிவிப்பை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சியை எதிர்கொள்ள முடியாத நவாப் கராச்சிக்குத் தப்பிச் சென்றார். ஜுனகத் திவானாக இருந்த ஷா நவாஸ் புட்டோ ஜுனகத் நிர்வாகத்தை மேற்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தார் (நவம்பர் 8). அவரது வேண்டுகோளுக்கிணங்க இந்திய அரசாங்கம் ஜுனகத் நிர்வாகத்துக்குப் பொறுப்பேற்றது. பின்னர் மக்கள் வாக்கெடுப்பு (Plebicite)–க்குப் பின் ஜுனகத் இந்தியாவுடன் முறையாக இணைக்கப்பட்டது (1948 பிப்ரவரி 20).

### 2.2.3 ஐதராபாத் இணைப்பு (Accession of Hyderabad)

**'நிலை ஒப்பந்தம்'**

ஆந்திராவின் பகுதியான ஐதராபாத் இந்தியாவின் வயிற்றுப் பாகத்தில் உள்ளது. இருபது மில்லியன் இந்துக்களையும், மூன்று மில்லியன் முஸ்லீம்களையும் கொண்ட ஐதராபாத்துக்கு **பத்தேஜங்** என்ற முஸ்லீம் நிஜாமாக இருந்தார். ஐதராபாத் நிஜாம் 1947 ஆகஸ்டு 15–ஆம் தேதிக்குள் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைய இசையவில்லை. இந்திய வைசிராய் மௌன்ட்பேட்டன் பிரபுவின் வற்புறுத்தலின் பேரில் இந்திய அரசாங்கம் நிஜாமுடன் ஓராண்டு கால நிலை ஒப்பந்தம் (Standstill Agreement) செய்து கொண்டது. அதற்குள் ஐதராபாத் இணைப்புப் பிரச்னைக்குத் திருப்திகரமான தீர்வு காண முடியும் என்று நம்பப்பட்டது. ஆனால் நிஜாம் அந்த நம்பிக்கையைப் பொய்ப்பித்தார்.

**ஒப்பந்த மீறல்**

ஐதராபாத் நிஜாம் ஓராண்டு கால நிலை ஒப்பந்தத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இராணுவத்தைப் பலப்படுத்தினார்; ஐரோப்பிய நாடுகளிலிருந்து போர்த் தளவாடங்களை வாங்கினார். சர் வால்டேர் மான்க்டன் (Sir Walter Monekton) ... பெற்றார். இந்தியாவுடன் சமரசப் ...

இதற்கிடையில் ஐதராபாத் நிஜாமுக்கு ஆதரவாக 'ராஸாகார்கள்' (Razakars) ... முஸ்லீம் தீவிரவாதிகள் பாகிஸ்தானின் துணையுடன் ஐதராபாத்தை ஒரு சுதந்திர ... நாடாக்கி விட வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டனர். இந்தியா ஐதராபாத்தை ... கைப்பற்ற முனைந்தால் இந்துக்களைக் கொன்று விடுவதாக ராஸாகார்கள் ... தலைவரான **காசிம் ராஸ்வி** (Kasim Razvi) அச்சுறுத்தினார். 1948 மார்ச் 31 ... தேதியன்று **போராயுத வாரத்தை** (Arms-Week)த் துவக்கினார். ஐதராபாத் முஸ்லீம்கள் ... இந்தியாவின் மீது படையெடுத்துச் செல்லுமாறு தூண்டிவிட்டார். அப்படையெடுப் ... போது இந்தியாவில் இருந்த ஐந்து கோடி முஸ்லீம்களும் ஐதராபாத்துக்கு ஆதர ... இருப்பார்கள் என்ற காசிம் ராஸ்வி அறிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளார் வி.பி.மே ... ஐதராபாத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, ராஸாகார்கள் ஐதராபாத் வழிய ... பம்பாயிலிருந்து சென்னைக்குச் சென்று கொண்டிருந்த புகை வண்டியை வழி நிறுத் ... தாக்கினர். ஐதராபாத்தில் **பயங்கர ஆட்சி** (Reign of Terror) கட்டவிழ்த்து விடப்பட் ... பல இந்துக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் சிறையிலடைக்கப்பட்ட ...

### இந்திய விரோத நடவடிக்கைகள்

ஐதராபாத் இணைப்புப் பிரச்னைக்கு சமாதானத் தீர்வு காண விரும்பினார் நே ... சமரசப் பேச்சுவார்த்தையாலும், பொருளாதாரத் தடையாலும், அச்சுறுத்தலாலும் நிஜா ... வழிக்குக் கொண்டு வர முயன்றார். ஆனால் நிஜாம் நேருவின் 'நில் – கவனி' (Wait ... Watch) போக்கைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு இந்திய விரோத நடவடிக்கைக ... ஈடுபடலானார். கராச்சியிலிருந்து போர்த் தளவாடங்களைப் பெற்றார். கிழக் ... வங்காளத்திலும், மேற்கு பாகிஸ்தானிலும் ஈராக் மற்றும் ஈரானிலும் இந்தியாவுக் ... எதிராகப் பயன்படுத்த விமானப் படையைத் தயார் நிலையில் வைத்திருந்தார். பிரிட் ... இரகசியப் படையினரின் உதவியைப் பெற்றார். ஐதராபாத்தை சுதந்திரப் பகுதிய ... அங்கீகரிக்க வேண்டுமென்று பிரிட்டனை வற்புறுத்தி வந்தார். இந்தியாவுக்கு எதிராக ... கோவாவைப் பயன்படுத்திக் கொள்ள போர்ச்சுகலுடன் உடன்படிக்கை செய் ... கொண்டதாகவும் கூறுகிறார் எஸ்.கோபால்.

### இராணுவத் தீர்வு

1948 ஜூன் மாதம் மௌன்ட்பேட்டன் இந்தியாவை விட்டுச் சென்ற பின்னரும் ... நேரு ஐதராபாத் இணைப்புக்கு சமாதானத் தீர்வையே விரும்பினார். ஆனால் சர்தா ... வல்லபாய் பட்டேல் முன்னை முன் கொண்டு எடுக்கத் தீர்மானித்தார். ராஸாகார்களின் ... தான்தோன்றித் தலைவரான காசிம் ராஸ்வி ஐதராபாத்தின் முழு அதிகாரத்தை ... அபகரித்துக் கொண்டதாகக் கருதினார் பட்டேல். காசிமின் நடவடிக்கை வால் நா ... ஆட்டும் செயலாக இருந்தது. சுதந்திர இந்தியாவில் ஐதராபாத் தனித்தீவாக இருப்ப ... இந்திய உடலில் குத்திய முள்ளாக இருக்கும் என்று எண்ணினார். எனவே, இரத்த ... சிந்தியாவது இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றத் துணிந்தார் பட்டேல். 1948 ... செப்டம்பர் 13–ஆம் தேதி இந்திய இராணுவம் 'சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட ... ஐதராபாத்துக்குள் நுழைந்தது. நிஜாமின் படை நான்கு நாட்களில் இந்தியாவிடம் ... சரணடைந்தது.

### இந்தியாவுடன் இணைக்கப்பட்டது

ஐதராபாத் இந்தியாவுடன் இணை ...



ஏற்பட்டது. இந்த நெருக்கடியின் போது இந்தியாவின் பிற பகுதிகளில் வாழ்ந்த முஸ்லீம்கள் தங்களது நினைப்பாலும் நடத்தையாலும் இந்தியாவின் முழுமையான குடிமக்கள் என்பதைத் தெளிவுபடுத்தினர். சமயம் சாராமை இந்த இரண்டாவது சோதனையையும் வெற்றிகரமாக கடந்தது" என்று மதிப்பீடு செய்துள்ளார் எஸ்.கோபால்.

## 2.2.4 காஷ்மீர் இணைப்பு (Accession of Kashmir)

### மகாராஜா ஹரிசிங்

ஜூனகத், ஐதராபாத் போலன்றி இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்தது சிக்கலானது; சிக்கலாக்கப்பட்டது. ஜம்மு–காஷ்மீர் பகுதி எழில்மிகு இமாலயப் பள்ளத்தாக்கு. **'கிழக்கு உலகின் வெனிஸ்'** (Venice of Orient) என்று வர்ணிக்கப்பட்டது. 85,000 சதுரமைல் பரப்புள்ள இப்பகுதி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடைப்பட்ட இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இந்தியப் பிரிவினையின் போது ஜம்மு–காஷ்மீரின் மக்கள் தொகை நான்கு மில்லியன். அவர்களுள் நான்கில் மூன்று பகுதியினர் முஸ்லீம்கள். இந்துக்கள் பெரும்பான்மையினராக இருந்த ஜூனகத்தையும், ஐதராபாத்தையும் முஸ்லீம் நவாபும், நிஜாமும் ஆட்சி செய்ததைப் போன்று முஸ்லீம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஜம்மு – காஷ்மீரை இந்து அரசர் ஹரி சிங் (Hari Singh) ஆட்சி செய்து வந்தார். ஹரி சிங் தோக்ரா ராஜபுத்திர வகுப்பைச் சேர்ந்தவர். அவர் பிராமணப் பண்டிதர்களை அரசாங்க ஊழியர்களாக வைத்துக் கொண்டு ஜம்மு–காஷ்மீரை ஆண்டு வந்தார்.

### ஷேக் அப்துல்லா

1932 ஆம் ஆண்டு **'காஷ்மீர் சிங்கம்'** என்றழைக்கப்பட்ட ஷேக் அப்துல்லா **'அகில ஜம்மு–காஷ்மீர் முஸ்லீம் மாநாடு'** (All Jammu and Kashmir Muslim Conference) என்ற அமைப்பை ஏற்படுத்தி மாநில நிர்வாகத்தில் ஜம்மு–காஷ்மீர் முஸ்லீம்களுக்கும் உரிய பங்கு வேண்டும் என்று கோரினார். அக்கோரிக்கையை அம்மாகாண இந்துக்களும் சீக்கியர்களும் கூட ஆதரித்தனர். அவர்களுடைய ஆதரவோடு ஷேக் அப்துல்லா தான் துவக்கிய அமைப்பை அகில ஜம்மு–காஷ்மீர் தேசிய மாநாடு (All Jammu and Kashmir National Conference) என்று பெயர் மாற்றம் செய்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின் மகாராஜா ஹரிசிங் ஓரளவு அதிகாரத்தை முஸ்லீம்களுடன் பகிர்ந்து கொண்டார். அதில் திருப்தியடையாமல் மேலும் அதிக அதிகாரம் கோரியதால் ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

### மகாராஜாவின் மனக்குழப்பம்

பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகார மாற்றத்தை அறிவித்த போது ஹரிசிங் ஜம்மு–காஷ்மீரை இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைக்க விரும்பவில்லை. அவர் ஆட்சி செய்த மாகாணம் **'ஆசியாவின் சுவிட்சர்லாந்தாகவே'** சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். காந்தியும் நேருவும் மகாராஜா ஹரி சிங்குக்கு 1947 ஆகஸ்டு 15–ஆம் தேதிக்குள் இந்தியாவுடன் இணைந்து விடுமாறு ஆலோசனை கூறினார்கள். ஆனால் வைசிராய் மௌன்ட்பேட்டன் பிரபு ஹரிசிங் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ அவர் விருப்பம் போல் சேரலாம் என்று கூறினார். காஷ்மீர் மகாராஜா இருதலைக் கொள்ளி எறும்பானார். முடிவெடுக்க முடியாமல் குழம்பினார். இக்குழப்பத்திலிருந்து விடுபட இரு நாடுகளுடனும் **நிலை ஒப்பந்தம்** (Standstill Agree-

மகாராஜாவின் மனக்குழப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொ பாகிஸ்தான் காஷ்மீரைக் கைப்பற்றத் துணிந்தது. மகாராஜா ஹரி சிங்கின் பலவீனத்தை பயன்படுத்திக் கொண்டு காஷ்மீரின் மேற்குக் கோடியில் இருந்த **பூஞ்ச்** (Poonch) பகு முஸ்லீம் விவசாயிகள் தோக்ரா ராஜபுத்திர நிலச்சுவான்தாரர்களின் அடக்கு முறை எதிராகக் கிளர்ச்சி செய்தனர். **பூஞ்ச் கிளர்ச்சி**க்கு ஆதரவாக பாகிஸ்தான தூண்டிவிடப்பட்ட ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் பாகிஸ்தானி வடமேற்கு எல்லைப் புறத்திலிருந்து புறப்பட்டு வந்து காஷ்மீரைத் தாக்கினர். **கார்கி** (Ge மற்றும் **டோமெல்** (Domel) ஆகிய இரு காஷ்மீர் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டன அதன்பின் காஷ்மீரின் புகழ் பெற்ற நகரமான முஸபராபாத் (Muzafarabad)க்குள் நுழைந்து முகாமிட்டனர். அங்கிருந்து பாராமுலா (Baramula)வைக் கைப்பற்றிக் கொண்டு யூரி (U நோக்கி முன்னேறி ஸ்ரீநகரை அடையத் திட்டமிட்டனர். அப்போது காஷ்மீ இராணுவத்துக்குப் பொறுப்பாயிருந்த **பிரிகேடியர் ராஜேந்திர சிங்** மலைவாழ் மக்களி தாக்குதலைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு விரைந்து சென்று யூரி பாலத்தைத் தகர்த்து விட்டார். படையெடுப்பாளர்களுடன் இரண்டு நாட்கள் போரிட்டு அவர படைவீரர்களுடன் வீர மரணமடைந்தார். படையெடுப்பாளர்கள் முன்னேறிச் சென் ஸ்ரீநகருக்கு மின்சாரம் கொடுத்து வந்த மகூரா மின் நிலையத்தைக் கைவசப்படுத்தி கொண்டனர். காஷ்மீரின் கோடைகாலத் தலைநகரான ஸ்ரீநகர் இருளில் மூழ்கியது ஸ்ரீநகர் நோக்கி முன்னேறிய பாகிஸ்தான் ஆக்கிரமிப்பாளர்கள் 1947 அக்டோபர் 26 ஆ தேதி 'ஈத்' பண்டிகையை ஸ்ரீநகரிலிருந்து கொண்டாடப்போவதாக அறிவித்தனர்.

**மகாராஜாவின் வேண்டுகோள்**

இதற்கிடையே ஜம்மு–காஷ்மீர் மகாராஜா ஹரி சிங் ஸ்ரீநகரிலிருந்து தப்பிச் சென்று குளிர்காலத் தலைநகரான ஜம்முவை அடைந்தார். பூஞ்ச் கிளர்ச்சியை அவரை பதவியிலிருந்து இறக்குவதற்கான சதி என்று கருதினார். பாகிஸ்தான் படையெடுப்பாளர்களின் போக்கைக் கண்ட ஹரிசிங் புதுடெல்லியின் ஆதரவை நாடினார் ஷேக் அப்துல்லாவை சிறையிலிருந்து விடுவித்து நேருவிடம் பேச்சுவார்த்தை நடத்த புதுடெல்லிக்கு அனுப்பினார். அதேபோன்று அவரது பிரதம அமைச்சர் மெகர் ச மகாஜனையும் டெல்லிக்கு அனுப்பிப் பிரதமர் நேருவிடம் காஷ்மீர் நிலைமையை விளக்க சொன்னார் (அக்டோபர் 24). 1947 அக்டோபர் 26 ஆம் தேதி ஜம்மு–காஷ்மீ இந்தியாவுடன் இணைவதாகவும், ஸ்ரீநகரைக் காப்பாற்ற இராணுவ உதவி வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

**இந்தியாவுடன் இணைந்தது**

1947 அக்டோபர் 24 ஆம் தேதி இரவு காஷ்மீர்ப் படையெடுப்பு பற்றிய தகவல் இந்திய அரசாங்கத்துக்குக் கிடைத்தது. அடுத்த நாள் கூடிய பாதுகாப்புக் கமிட்டி (Defence Committee) இந்திய இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்பத் தீர்மானித்தது. மகாராஜா ஹரி சிங், ஷேக் அப்துல்லாவின் துணையுடன் படையெடுப்பை எதிர்கொள்ள வேண்டும் என்று விரும்பினார். மௌன்ட்பேட்டன் தற்காலிக இணைப்பை ஆதரித்தார். அடுத்த நாள் (அக்டோபர் 25) காஷ்மீர் பிரதம அமைச்சர் நேருவை சந்தித்து இந்திய இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டபோது அக்கோரிக்கைக்கு இணங்கவில்லை. பட்டேலும் ஷேக் அப்துல்லாவும் நேருவை சம்மதிக்க வைத்தனர். தற்காப்புப் போருக்குத் தயாரானார் நேரு.



பிரதமர் நேரு அமைச்சரவையைக் கூட்டி ஆலோசித்தார். அமைச்சரவையில் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. வல்லபாய் பட்டேல் இந்திய இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்புவதை ஆதரித்தார். வேறு சிலர் அப்படிச் செய்வது இந்தியாவைப் பாகிஸ்தானுடன் நேரடிப் போரில் ஈடுபடுத்திவிடும் என்று கருதினர். எனவே, நேருவும் பட்டேலும் காந்தியிடம் ஆலோசனை கேட்டனர். அரிய நேரத்தை வீணாக்காமல் உரிய நேரத்திலேயே இராணுவத்தை அனுப்பியிருக்க வேண்டும் என்றார் காந்தி. தீமைக்கு அடிபணிவதால் காஷ்மீரில் அமைதி நிலவாது என்று கருதினார் காந்தி. பாகிஸ்தானுக்கு இறுதி எச்சரிக்கை கொடுத்து விட்டு, இறுதியாகப் போர் தொடுக்கலாம் என்றார் ஷேக் அப்துல்லா. காஷ்மீரில் முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக இருப்பதால் படையெடுப்பாளர்களை அகற்றி விட்டு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியபின், மக்கள் வாக்கெடுப்பு நடத்தலாம் என்ற நிபந்தனைகளோடு ஹரி சிங் ஜம்மு – காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்ததை ஏற்றுக் கொள்ளலாம் என்றார் மௌன்ட்பேட்டன். அவரது ஆலோசனையை நேருவின் அமைச்சரவை ஏற்றுக் கொண்டது. அப்போது மாநிலங்கள் அமைச்சகத்தின் செயலராக இருந்த வி.பி.மேனனை அனுப்பி '**இணைப்பு ஒப்பந்தத்தில்**' காஷ்மீர் மகாராஜா ஹரி சிங்கின் கையெழுத்தைப் பெற்றார் நேரு. ஜம்மு–காஷ்மீர் முறையாக இந்தியாவுடன் இணைந்தது (1947 அக்டோபர் 26)

**காஷ்மீரில் இந்திய இராணுவம்**

ஜம்மு–காஷ்மீர் முறையாக சட்டப்படி இந்தியாவுடன் இணைந்ததற்கு அடுத்த நாளே (அக்டோபர் 27) இந்தியத் துருப்புகள் ஆகாய விமானங்கள் மூலம் டெல்லியிலிருந்து ஸ்ரீநகருக்கு அனுப்பப்பட்டது. சரியான சமயத்தில் காஷ்மீரின் தலைநகர் ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதலினின்றும் காப்பாற்றப்பட்டது. பாகிஸ்தானின் படையெடுப்புத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. ஸ்ரீநகரைக் கைப்பற்றிய உடன் ஜின்னா வெற்றி வாகை சூடி அந்நகருக்குள் நுழையும் ஆசை நிராசையாயிற்று. படையெடுப்பாளர்கள் பின்வாங்கிச் சென்றனர். ஏமாற்றமுற்ற பாகிஸ்தான் அதிபரும் கவர்னர் ஜெனரலுமான முகமது அலி ஜின்னா இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்ப முயன்றார். ஆனால் பிரிட்டிஷ் தளபதி கிரேசி (General Gracey) பீல்டு மார்ஷல் அச்சின்லெக் (Auchinleck)கின் அனுமதியின்றி செயல்பட இயலாது என்று கூறி விட்டார். அச்சின்லெக் லாகூர் சென்று ஜின்னாவை சந்தித்து காஷ்மீர் சட்டப்படி இந்தியாவுடன் இணைந்து விட்டதால் பாகிஸ்தான் இராணுவத்தை அனுப்ப முடியாது என்றும், அப்படி அனுப்புமாறு வற்புறுத்தினால் ஜின்னாவின் கீழ் பணிபுரியும் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் அனைவரும் பதவி விலக வேண்டியிருக்கும் என்பதையும் தெளிவுபடுத்தினார் (அக்.28). எனவே, ஜின்னா காஷ்மீர்ப் படையெடுப்புத் திட்டத்தைக் கைவிட்டார்.

**அஸாத் காஷ்மீர்**

காஷ்மீருக்குச் சென்ற இந்தியப் படை ஆக்கிரமிப்பாளர்களை பின்வாங்கச் செய்தனரேயன்றி அவர்கள் கைப்பற்றிக் கொண்ட பகுதிகளை மீட்கவில்லை. படையெடுப்பாளர்கள் யூரி மற்றும் பூஞ்ச் பகுதிகளில் தங்களை நிலைப்படுத்திக் கொண்டனர். அவர்கள் கைப்பற்றிய பகுதிகளை **அஸாத் காஷ்மீர்** (Azad Kashmir) அதாவது சுதந்திர காஷ்மீர் என்றும், அதன் தலைநகர் முசபராபாத் என்றும், படையெடுப்பாளர்களே அஸாத் காஷ்மீரின் இராணுவம் என்றும் அறிவித்து அப்பகுதியை பாகிஸ்தானுடன் இணைத்து விட்டனர். **ஷேக் அப்துல்லா** எஞ்சிய ஜம்மு–காஷ்மீரின் முதல் பிரதமரானார்.

இந்தியாவுடன் [illegible] தொடுக்கலாம் [illegible]
பாகிஸ்தானுடன் போர் தொடுக்கலாம் அகற்ற வேண்டும் [illegible]
போரின்றி ஆக்கிரமிப்பாளர்களை நேருவின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான
பாகிஸ்தானுடன் போர் தொடுக்காமல் ஐக்கிய நாடுகள் சபையிடம் புகார் செய்வதே
நேர்வழி காஷ்மீர் ஆக்கிரமிப்பைப் பற்றி ஜெனரல் மௌன்ட்பேட்டன் பிரபு. அவரது
ஆகும் என்று ஆலோசனை கூறினார் கவர்னர் ஆக்கிரமிப்பு பற்றி ஐ.நாவிடம் புகார்
ஆலோசனையின்படி பாகிஸ்தானின் காஷ்மீர் காந்தியும் பட்டேலும் அரைமனதுடன்
செய்தார் பிரதமர் நேரு. அந்நடவடிக்கையைக்
ஏற்றுக் கொண்டனர்.

காஷ்மீர் விவகாரத்தை ஐ.நா. சபைக்குக் கொண்டு சென்ற பின்னரும் ஜம்மு-
காஷ்மீரில் 'தற்காப்புப் போரை'த் தொடர வேண்டும், ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற
வேண்டும் என்பதில் குறியாக இருந்தார் நேரு. அப்படிச் செய்வது ஐ.நா. நீதிமன்ற முறை
விசாரணைக்கு முரணானது (Subjudice) என்று கூறி நேருவின் கையைக் கட்டிவிட்டார்
மௌன்ட்பேட்டன். அதுமட்டுமல்ல. இந்தியா காஷ்மீரில் இராணுவ நடவடிக்கை எடுத்தால்
கவர்னர்–ஜெனரல் பதவியிலிருந்து விலகி விடுவதாக அச்சுறுத்தினார் மௌன்ட்பேட்டன்
என்று குறிப்பிட்டுள்ளார் ஆலன் காம்பெல் – ஜான்சன். நேரு, மௌன்ட்பேட்டன் காட்டிய
வழி சென்றார். ஐ.நாவின் போர் நிறுத்த ஏற்பாடு 1949 ஜனவரி முதல் தேதியிலிருந்து
ஜம்மு–காஷ்மீரில் நடைமுறைக்கு வந்தது. ஐ.நா. காஷ்மீர் விவகாரத்தை இந்தியா -
பாகிஸ்தான் பிரச்னையாக மாற்றிவிட்டது. காஷ்மீர் விவகாரத்தை ஐநாவுக்குக் கொண்டு
செல்ல மௌன்ட்பேட்டன் நேருவை சம்மதிக்கச் செய்தது அவப்பேராகும் என்று
குறிப்பிட்டுள்ளார் எஸ்.கோபால்.

**காஷ்மீர் பிரச்னை!**

காஷ்மீரிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை அகற்றும் முயற்சியை இந்தியா கைவிட்டது. பாகிஸ்தான் அசாத் காஷ்மீரைத் தக்க வைத்துக் கொண்டது. எனவே, காஷ்மீர் விவகாரம் தீரும் வரை இந்தியா பாகிஸ்தானுக்குக் கொடுக்க வேண்டிய **'பிரிவினை இழப்பீட்டுத் தொகை'**யான 55 கோடி ரூபாயைக் கொடுக்காமல் நிறுத்தி வைப்பதென்று 1948 ஜனவரி மாதம் நேருவின் அமைச்சரவை முடிவு செய்தது. அதற்குக் [illegible]ாரணம் பாகிஸ்தான் அந்தப் பணத்தைக் கொண்டு போர்த்தளவாடங்களை வாங்கி [illegible]ந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தும் என்று அமைச்சரவை கருதியதேயாகும். ஆனால் [illegible]கிஸ்தானின் காஷ்மீர் ஆக்கிரமிப்புக்கெதிராக இந்திய இராணுவத்தை அனுப்பியிருக்க [illegible]ண்டும் என்று கூறிய காந்தி பாகிஸ்தானுக்கு இந்தியா கொடுக்க வேண்டிய பணத்தை [illegible]த்தி வைப்பது நாணயமற்ற நேர்மையற்ற செயல் என்று கருதினார். எனவே 1948 [illegible]வரி மாதம் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். நேருவின் அமைச்சரவை

[illegible] அல்லது பாகிஸ்தானுடனோ [illegible] மன்னர்களின் [illegible] முன்பே மன்னர்களையும் [illegible]வுக்குக்
இன்றியமையாமையைக் கோடிட்டுக் காட்டினார். ஆள்நிலப் பகுதிகள்
மிகப் பெரும்பான்மையான மன்னர் இணைய வேண்டியதன்
மௌன்ட்பேட்டனின் முயற்சியும், அரசியல் சாதுர்யமும், மாநிலங்கள் இந்தியாவுடன் இணைவதற்கு
காரணமாகும். பேராசை கொண்ட, சுதந்திரமாக நிர்வாகத் திறமையும் முக்கியக்
தன்னிச்சையாகவோ, சமாதானப்படுத்தியோ இருக்க விரும்பிய மன்னர்களைத்
இணையச் சம்மதிக்க வைத்ததில் மௌன்ட்பேட்டனுக்குப் அல்லது நிர்ப்பந்தத்துக்குட்பட்டோ
எனினும் ஐதராபாத் நிஜாம் மற்றும் காஷ்மீர் பெருமைக்குரிய பங்கு உண்டு.
சார்புடன் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளானார் மகாராஜா சம்பந்தப்பட்டவரை
மான்ங்டனின் பக்கபலத்தோடு ஐதராபாத் நிஜாம் மௌன்ட்பேட்டன். மற்றும்
எதிராகச் செயல்பட்டார் என்று சந்தேகிக்கப்பட்டது. ஒப்பந்த விதிகளை மீறி இந்தியாவுக்கு
விவகாரம் பற்றிப் புகார் செய்யாவிடில் பாகிஸ்தானுடன் அதேபோன்று ஐ.நாவில் காஷ்மீர்
வழியில்லை என்ற காரணத்தைக் கூறி நேருவை சம்மதிக்க போரிடுவதைத் தவிர வேறு
போர் நிறுத்தம் மற்றும் மக்கள் வாக்கெடுப்பு உள்ளிட்ட வைத்தார் மௌன்ட்பேட்டன்.
தீர்ப்புக்கு விட வேண்டும் என்று பொதுவான பிரச்னையை ஐநாவின்
ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துவதை வலியுறுத்தினார். அசாத் காஷ்மீரிலிருந்
ஐ.நாவுக்குக் கொண்டு செல்லுமாறு மௌன்ட்பேட்டன் விட்டுவிட்டுக் காஷ்மீர் விவகாரத்தை
திசை திருப்பிய செயலாகும். கவர்னர் ஜெனரல் ஆலோசனை கூறியது நேருவை
அச்சுறுத்தி நேருவைத் தன்வழிக்குக் கொண்டு பதவியிலிருந்து விலகப் போவதா
தகுதிக்கும் ஏற்றதாக இல்லை. காஷ்மீர் விவகாரம் வந்தது மௌன்ட்பேட்டனின் பதவிக்கு
மாறியதற்கு மௌன்ட்பேட்டன் முக்கிய இந்தியா – பாகிஸ்தான் பிரச்னைய
பங்கேற்றார்.

## 2.4 'இரும்பு மனிதர்' பட்டேல் (1875 – 1950)

வல்லபாய் பட்டேல் 1875 அக்டோபர் 21–ஆம் தேதி குஜராத்தில் ஒரு குக்கிராமத் பிறந்தார். அவரது தந்தை 1857 பெருங்கிளர்ச்சியின் போது தலத் தலைவரோடு சேர் பிரிட்டிஷாரோடு போரிட்டவர். பட்டேல் குழந்தையாக இருந்தபோதே கிராமக் காற்றே கிளர்ச்சிக் காற்றையும் சுவாசித்தார். இளவயதில் அகமதாபாத் சென்று [illegible] ஆலைகளில் பணியாற்றினார். பகலில் வேலை. இரவில் படிப்பு. வக்கில் தொழிலுக் 'ப்ளீடர்' பட்டம் பெற்றார் (1900) வக்கீல் தொழில் தொடங்கினார். சிக்கனமாக வா[illegible] பணம் சேமித்து, தனது 33–வது வயதில் லண்டன் சென்றார். தினமும் பத்து மைல் [illegible] 'இன்ஸ் ஆப் கோர்ட்' (Inns of Court) நூலகத்தை நன்கு பயன்படுத்தினார். சட்டக் [illegible] பயின்று 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றார் (1910).

இந்தியா திரும்பிய வல்லபாய் பட்டேல் அகமதாபாத்தில் வக்கீல் தொழி[illegible] துவங்கினார். தொழிலதிபர்களின் ஆதரவோடு அத்தொழிலில் வெற்றி பெ[illegible]

அர்ப்பணித்துக் கொண்டார். பட்டேலின் நாட்டுப் பற்றையும் தலைமைத் திறனையும் கண்டு தன்னை தேசப் பணி... காந்தி **பர்தோலி சத்தியாகிரகத்தை** (Bardoli Satyagraha) நடத்தும் பொறுப்பை அவரி... ஒப்படைத்தார். (1922). 137 கிராமங்களில் இருந்த 87,000 மக்களை ஒன்று சேர்... சத்தியாகிரகத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்தார் பட்டேல். பட்டேலி... அமைப்பாற்றலைப் பாராட்டி அவருக்குச் '**சர்தார்**' என்ற பெயரைச் சூட்டினார் காந்... அன்றிலிருந்து சர்தார் வல்லபாய் பட்டேல் காந்தியின் தலைமையின் கீழ் நேருவு... இணையாக இருந்து இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார்.

சர்தார் வல்லபாய் பட்டேல் **காங்கிரஸ் தலைவராகத்** தேர்ந்தெடுக்கப்ப... (1931). தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு ஏழு மாகாணங்களில் காங்கிர... அமைச்சரவை அமையக் காரணமாக இருந்தார் (1937). நாடாளுமன்ற போர்டி... தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். '**வெள்ளையனே வெளியேறு**' இயக்கத்தி... பங்கேற்று (1942) மூன்றாண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார். நேருவின் தலைமையி... அமைக்கப்பட்ட '**இடைக்கால அரசாங்க**'த்தில் துணைப் பிரதமரானார் பட்டேல் (194... முஸ்லீம் லீக் கட்டவிழ்த்து விட்ட 'நேரடி நடவடிக்கை'யால் ஏற்பட்ட கலவரத்தை துணிவுடனும் சாதுர்யமாகவும் சமாளித்தார் சர்தார் பட்டேல். மௌன்ட்பேட்டன் திட்டத்தி... 'இந்தியப் பிரிவினை'யைத் தீவிரமாக எதிர்த்தார். சூழ்நிலைக் கட்டாயத்தா... அத்திட்டத்துக்கு இணங்கினார்.

இந்தியா விடுதலை அடைந்தவுடன் நேருவின் அமைச்சரவையில் **துணை பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும்** பங்கேற்றார் பட்டேல். இந்திய பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட இனக்கலவரங்களை எதிர்கொள்ளவும் இந்தியாவுக்கு வந்த பல்லாயிரக்கணக்கான அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கவும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் பட்டேல் பிரதமர் நேருவுக்கு உறுதுணையாக இருந்தா...

மண்ணாசைமிக்க மன்னர்களுடன் கலந்து பேசி இந்தியாவுடன் இணைவதற்... அவர்களது இசைவிணக்கத்தைப் பெற்றார். ஐதராபாத் நிஜாம் போர்க்கொடி உயர்த்தி... போது குருதி கொட்டியாவது இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றத் துணிந்தா... பட்டேல். ஐதராபாத் இணைப்புப் பிரச்னைக்கு '**அரசியல் தீர்வு**' காணவேண்டும் என்... நேருவின் அணுகுமுறையிலிருந்து மாறுபட்டார். 'இப்பிரச்னையை இந்தியாவின் காஷ்மீ... கொள்கையின் பகுதியாகப் பார்த்தார் நேரு. ஆனால் பட்டேல் இதை இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்னையாகக் கருதினார்'. பட்டேல் இந்திய இராணுவத்தின் துணைகொண்டு ஐதராபாத்தை இந்தியாவுடன் இணைத்தார். அதேபோன்று ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதற்கு **இராணுவத் தீர்வையே** விரும்பினார் பட்டேல் சமகால இந்தியாவில் மன்னர் மாநிலங்களை இந்தியாவுடன் இணைத்தது இணையற்ற '**இரத்தம் சிந்தாப் புரட்சி**' ஆகும். ஐரோப்பிய வரலாற்றில் ஜெர்மனி மற்றும் இத்தாலி ஐக்கியத்துக்குக் காரணமான பிஸ்மார்க், கவூர் ஆகியோரோடு ஒப்பிடப்பட்டார் பட்டேல் சர்தார் வல்லபாய் பட்டேல் '**இந்தியாவின் இரும்பு மனிதர் பிஸ்மார்க்**' என்... போற்றப்பட்டார். நேரு பட்டேலை '**நவ இந்தியாவை நிர்மானித்தவர்**' என்... பெருமையோடும் பெருந்தன்மையோடும் வர்ணித்தார்.



காந்திக்குப் பேரிடியாக இருந்தது. அவரது இந்து–முஸ்லீம் ஒற்றுமைக் கனவு கலைந்தது. வாய்மை வழி சென்ற காந்தி காலத்தின் கட்டாயத்துக்கு வளைந்து கொடுக்க வேண்டியதாயிற்று. அவரால் வரலாற்றின் போக்கை மாற்ற முடியவில்லை. இந்தியாவைப் பங்கிட்டு ஜின்னாவும் நேருவும் தனித்தனியே ஆட்சி செய்வதைவிட ஒன்றுபட்ட இந்தியாவை ஜின்னாவே தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லலாம் என்று கூறினார் காந்தி. காந்தியின் அந்த யோசனை நடைமுறை சாத்தியமற்றதாகக் கருதப்பட்டது. நாடு துண்டாடப்பட்டது. காந்தி இந்தியப் பிரிவினைக்குத் துணைபோனதை தீவிரவாத இந்துக்கள் ஏற்கவில்லை.

இந்தியப் பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட இனக்கலவரங்களும், டெல்லிக்கு அலை அலையாக வந்த அகதிகளும் காந்திக்கு அதிர்ச்சியை அளித்தன. கல்கத்தாவிலிருந்து டெல்லி திரும்பிய காந்தியை முஸ்லீம் பிரதிநிதிகள் சந்தித்து இந்தியத் தலைநகரிலேயே தங்குமாறு கேட்டுக் கொண்டனர். புதுடெல்லியில் பிர்லா மாளிகையில் தங்கிய காந்தி தினமும் அகதி முகாம்களுக்குச் சென்று இந்து–முஸ்லீம் அகதிகளுக்கு ஆறுதல் கூறினார். இந்தியா, பாகிஸ்தானுக்குக் கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்கக் கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டார். இந்தியப் பிரிவினைக்குப் பின்னரும் காந்தி முஸ்லீம்களுக்கு 'வக்காலத்து' வாங்கியதைத் தீவிர இந்துக்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை!

**ராஷ்ட்ரீய சுவயம்சேவக் சங்** (RSS) தீவிரவாத இந்துக்களின் கோட்டையாக இருந்தது. பூனாவைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்ட அந்த அமைப்பைச் சேர்ந்தோர் 'இந்து இந்தியா'வை நிர்மானிக்க நினைத்தனர். இந்தியப் பிரிவினையால் ஏமாற்றமடைந்தனர். கோபமுற்றனர். முஸ்லீம்களை அந்நியர்களாக சித்தரித்தனர். இந்து–முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட காந்தியை முதல் விரோதியாகக் கருதினர். காந்தியைக் கொல்ல சதித்திட்டம் தீட்டினர். நாதுராம் கோட்சே கொலைக் கருவியானார்.

1948 ஜனவரி 19–20 தேதிகளில் காந்தியைக் கொல்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அம்முயற்சி வெற்றி பெறவில்லை. காந்தியின் பாதுகாப்பு கேள்விக்குறியாயிற்று. 'என் உயிர் கடவுள் கையில்' என்றார் காந்தி. 1948 ஜனவரி 30 ஆம் தேதி மாலை 5.17 மணிக்கு பிர்லா மாளிகைப் புல்வெளியில் பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வழக்கத்துக்கு மாறாகச் சற்று காலதாமதமாக வந்தார் காந்தி. நாதுராம் கோட்சே காந்தியை வழிமறித்து கைத்துப்பாக்கியால் மூன்று முறை சுட்டார். 'ஹே ராம்' என்று முனகிக் கொண்டே உயிர் நீத்தார் மகாத்மா.

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும், இந்து–முஸ்லீம் இன ஒற்றுமைக்காகவு பாடுபட்ட '**தேசபிதா**' காந்தி இன வெறிக்குப் பலியானார். இன்முறையை போதித்து வந்... அவர் வன்முறைக்கு இரையானார். மகாத்மாவின் மரணம் இனக்கலவரங்களை முடிவுக்குக் கொண்டு வந்தது. கண்கள் குளமாக நேரு வானொலியில் பேசினார்: "... வாழ்க்கையில் ஒளி வீசிக் கொண்டிருந்த விளக்கு அணைந்து விட்டது. இந்த ஒ... விளக்கு வரும் ஆயிரம் ஆண்டுகளுக்கு உலகுக்கு வழிகாட்டுவதாக இருக்கும்". புத்... ஏசுவைப் போன்று காந்தியும் அமரரானார். "இந்தியா காந்தி பின்பற்றிய வழியை... சந்தேகித்தது. ஆனால் அவரது குறிக்கோளை கவுரவித்தது. காந்தியை அரசி... விவேகியாக ஏற்றுக் கொள்ளாத இந்தியா அவரை ஒரு ஞானியாக நெஞ்... ..." என்று குறிப்பிட்டுள்ளார் வில் டூரண்ட். தனி மனித...

நேரு சகாப்தம் பல சவால்களின் தொகுப்பு. பிரதமர் நேரு எதிர்கொண்ட முத சவால் இந்தியப் பிரிவினையின் விளைவாக எழுந்த இனக்கலவரக் கொந்தளிப்பாகு காந்தி, பட்டேல் மற்றும் மௌன்ட்பேட்டன் துணை கொண்டு அச்சவாலை வெற்றிகரமா சமாளித்தார் நேரு. நேரு எதிர்கொண்ட இரண்டாவது சவால் மன்னர் மாநிலங்கள் அல்லது சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைப்பதாகும். நேரு அச்சவால சமாளிக்க சர்தார் வல்லபாய் பட்டேல் தோன்றாத் துணையாக இருந்தார். 216 மன்ன ஆள்நிலப் பகுதிகள் இந்திய மாகாணங்களுடன் இணைக்கப்பட்டன. 310 சமஸ்தானங் ஆறு யூனியன் பிரதேசங்களாக உருவாக்கப்பட்டன. 5 பகுதிகள் மத்திய அரசின் நே ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. முரண்டு பிடித்த ஐதராபாத் பிரிக்கப்பட்டு ஆந்தி மகாராஷ்டிரம், கர்நாடகம் ஆகிய மாகாணங்களோடு சேர்க்கப்பட்டது. இந்தியாவு இணைந்த ஜம்மு–காஷ்மீர் பாகிஸ்தானின் படையெடுப்பினின்றும் காப்பாற்றப்பட்டது

பிரதமர் அதிகாரம், மன்னர் மானியம், மன்னர் மாநிலங்களை இந்தியாவு இணைப்பதற்குக் கையாள வேண்டிய அணுகுமுறை, சொத்துரிமை ஆகியவை ப நேருவுக்கும் பட்டேலுக்குமிடையே கடுமையான கருத்து வேறுபாடுகள் இருந்த எனினும் அவர்கள் இருவரும் நாட்டின் ஒற்றுமை, முன்னேற்றம், நலன் கருதி கருத் வேறுபாடுகளைக் கடந்து தேசப் பணியில் ஒன்றுபட்டு ஈடுபட்டனர். நேருவும் பட்டே இந்தியாவின் மாமனிதர்கள். இந்தியாவின் கடைசி வைசிராயும் முதல் கவர் ஜெனரலுமான லூயி மௌன்ட்பேட்டன் பிரபு மன்னர் மாநிலங்களை இந்தியாவு இணைப்பதில் பெரும் பங்கு வகித்தார். ஆனால் பெருமைக்குரிய பங்கேற்கவில்லை. ஆ ஐதராபாத் மற்றும் ஜம்மு–காஷ்மீர் இணைப்பு சம்மந்தப்பட்டவரை நடுநிலையோடு நடந் கொண்டார் என்று கூறுவதற்கில்லை.

மன்னர் சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைவதற்கு உதவியவைகளி குறிப்பிடத்தக்கவர் **வி.பி.மேனன்** ஆவார். பதிமூன்றாவது வயதில் பள்ளிப் படிப நிறுத்திக் கொண்ட மேனன் பல வேலைகளைச் செய்து படிப்படியாக உழைப்பால் உயர் தட்டச்சாளராக இருந்த மேனன் மௌன்ட்பேட்டனின் நம்பிக்கைக்குரிய அலுவலர் ஆன மௌன்ட்பேட்டன் திட்டத்தை ஆறு மணி நேரத்தில் மறுவரைவு செய்து கொடுத்த பெரு இவருக்கு உண்டு. இந்தியா சுதந்திரமடைந்த போது வெடித்த இனக்கலவரங்கள எதிர்கொள்ள குறிப்பிட்ட அரசாங்க அதிகாரிகளை இரகசியமாகக் கூட்டி நிலைமை கட்டுப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டார். ஜோத்பூர் மற்றும் ஜெய்சல் மகாராஜாக்கள் ஜின்னா விரித்த வலையில் விழ இருந்ததை உரிய நேரத்தி மௌன்ட்பேட்டனிடம் கூறி அவர்கள் இந்தியாவுடன் இணைவதற்கு ஏற்பாடு செய்த மேனன். வி.பி.மேனன் காஷ்மீர் மகாராஜாவை சந்தித்து அமைச்சரவை நிபந்தனைகள விளக்கி இணைப்புப் பத்திரத்தில் கையொப்பம் வாங்கினார். திரை மறைவிலிரு கொண்டு மன்னர் மாநிலங்கள் இந்தியாவுடன் இணைவதற்கு வி.பி.மேனனின் பங் நினைவு கூறத்தக்கது. சமஸ்தானங்கள் இந்தியப் பகுதியானவுடன் பூகோள ஒருமைப் முழுமை அடைந்தது. ஆனால் இந்திய ஒருமைப்பாட்டுக்காகவும் இன ஒற்றுமைக்காக ஓயாது உழைத்த மகாத்மா காந்தியை நாடு இழக்க நேர்ந்தது.

**2.6 மதவாதத்திற்கு எதிரான போர் (1947 – 1951) (War against Communalism)**

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் முஸ்லிம் ... வேர்விட்டு வளர்ந்த இந்து மதவாதம் நாடு ...

# 3. இந்திய அரசியலமைப்புச் சட்ட உருவாக்கம் 1947 - 1950

> அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்கள் தங்களது திறமையாலும் உறுதியாலும் 1787–இல் பிலடெல்பியாவில் சட்டகர்த்தாக்கள் சாதித்தது போல் செயல்பட்டனர்
>
> – கிரன்வில் ஆஸ்டின்.

## 3.1 அரசியலமைப்புச் சட்டமன்றக் கோரிக்கை

இந்தியா அரசியல் சுதந்திரம் அடைந்த போது அதற்கென பிரத்யேக அரசியலமைப்புச் சட்டம் எதுவுமில்லை. இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றிய 1935 இந்திய அரசாங்கச் சட்டத்தின் (The Government of India Act, 1935) கீழ் ஆட்சி செய்யப்பட்டன. 1946 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்திய **அரசியலமைப்புச் சட்டமன்றம்** அல்லது அரசியல் நிர்ணய சபை (The Constituent Assembly) உருவாக்கிய இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950 ஜனவரி 26–ஆம் தேதி செயல்படுத்தப்பட்டது.

## 3.2 அரசியலமைப்புச் சட்டமன்றம்

அட்லியின் அறிவிப்பைத் தொடர்ந்து அரசியலமைப்புச் சட்டமன்றத்துக்கான தேர்தல் நடைபெற்றது (1946 ஜூலை). டாக்டர் **ஆர்.ராஜேந்திரப் பிரசாத்** அரசியல் அமைப்புச் சட்டமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1946 டிசம்பர் 11). 1946 டிசம்பர் மாதம் நடைபெற்ற மன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் நேரு அரசியலமைப்புச் சட்டமன்ற நோக்கங்கள் பற்றியத் தீர்மானத்தை (Objectives Resolution)க் கொண்டு வந்தார். இந்தியா விடுதலை அடைந்த பின்னரும் அச்சட்டமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தை வரைவதில் தொடர்ந்து ஈடுபட்டது. 1947 ஆகஸ்டு 15–ஆம் தேதி அதிகார மாற்றம் செய்யப்பட்டது. இந்தியா சுதந்திரம் பெற்றது லூயி மௌன்ட்பேட்டன் பிரபு சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகவும், ஜவஹர்லால் நேரு பிரதமராவும் பொறுப்பேற்றனர். அரசியலமைப்புச் சட்டமன்றம் இரண்டு நிலைகளில் செயல்பட்டது. ஒன்று, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் மன்றம்; இரண்டு, சட்ட மன்றம் அல்லது நாடாளுமன்றம். ஆர்.ராஜேந்திர பிரசாத் அரசியலமைப்புச் சட்டமன்றத் தலைவராகவும், ஜி.வி. மௌலங்கர் சட்டமன்ற சபாநாயகராகவும் இருந்து வழிநடத்தினர்.

### வரைவுக் குழு

அரசியலமைப்புச் சட்டமன்றம் டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் தலைமையில் செயல்பட்டது. 1947 ஆகஸ்டு 29 ஆம் தேதி இச்சட்டமன்றம் ஒரு **வரைவுக் குழு** (Drafting

Committee ... ...சாக இ...

பெற்றிருந்த டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார் வரைவுக் குழுவின் தலைவராகவு...
என்.கோபாலசுவாமி ஐயங்கார், அல்லாடி கிருஷ்ணசுவாமி ஐயர், கே.எம்.முன்ஷி, ச...
முகமது சாதுல்லா, என்.மாதவராவ், டி.பி.கைத்தான் ஆகியோர் உறுப்பினர்களாகவு...
இருந்தனர். வரைவுக் குழு அடிப்படை உரிமைகள், யூனியன் அரசியலமைப்புச் சட்...
யூனியன் அதிகாரங்கள், மாநில அரசியலமைப்புச் சட்டங்கள், சிறுபான்மையின...
பட்டியலிடப்பட்ட பகுதிகள், பட்டியலிடப்பட்ட சாதிகள் பற்றிய துணைக் குழுக்க...
நியமித்தது. வரைவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட துணைக் குழுக்களின் அறிக்கைக...
நன்கு பரிசீலிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தி...
முன்வரைவு தயாரிக்கப்பட்டது.

## சட்ட முன்வரைவு

1948 பிப்ரவரி 21 ஆம் தேதி கூடிய இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றக் கூட்டு...
கூட்டத்தில் அரசியலமைப்புச் சட்டத்தின் முன்வரைவு விரிவாக சரத்து வாரியா...
விவாதிக்கப்பட்டது. மொத்தம் 7,635 திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அவற்று...
2473 திருத்தங்கள் விவாதத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன. 165 நாட்கள் விவாத...
நடைபெற்றது. இவற்றில் 114 நாட்கள் அரசியலமைப்புச் சட்ட முன்வரை...
விவாதிப்பதற்கே செலவிடப்பட்டது. அரசியலமைப்புச் சட்டமன்றம் 1946 டிசம்பர் 9 ஆ...
தேதியிலிருந்து மொத்தம் 2 ஆண்டுகள், 11 மாதங்கள், 17 நாட்கள் கூடியது...
அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க 6.4 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 12...
உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர். 1949 நவம்பர் 26 ஆம் தேதி வ...
விவாதம் நீடித்தது. அரசியலமைப்புச் சட்டமன்றம் **395 சரத்துக்களையும்** (Articles), 8
**அட்டவணைகளையும்** (Schedules) கொண்ட அரசியலமைப்புச் சட்டத்தைப் பலத்...
ஆரவாரத்துடன் ஏற்றுக் கொண்டது.

## அரசியலமைப்புச் சட்டம்

டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் இந்தியக் குடியரசுத் தலைவராக ஒரு மனதாக
தேர்ந்தெடுக்கப்பட்டார். **1950 ஜனவரி 26 ஆம் தேதி இந்திய அரசியலமைப்புச் சட்...**
**நடைமுறைக்கு வந்தது.** 1930 ஜனவரி 26 ஆம் தேதி இந்தியாவை அந்நி...
ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க, மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் மேற்கொண்...
முடிவிலிருந்து சரியாக, இருபதாண்டுகளுக்குப் பின் இந்தியா **இறையுரிமையுடை...**
**ஜனநாயகக் குடியரசாக** (Sovereign Democratic Republic)ப் பிரகடனப் படுத்தப்பட்ட...
வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். 42வது சட்டத்தின் மூலம் **'சோஷலிச...'**
**'மதச்சார்பற்ற'** என்ற சொற்கள் சேர்க்கப்பட்டன.

## 3.3 அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்பியல்புகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நாட்டின் **ஆதார ஆவணமாகும்.** இதற்...
மிஞ்சிய அரசியல் அதிகார அமைப்பு முறை வேறெதுவுமில்லை. இந்தியாவின் அனைத்து...
சட்டங்களும் இச்சட்டத்துக்குட்பட்டே இருத்தல் வேண்டும். மத்திய மாநில அரசாங்கங்...
அரசியலமைப்புச் சட்டத்துக்குட்பட்டே செயல்பட முடியும். இச்சட்டத்தின் சட்டம் இந்தி...
அரசியல் முறை ஏற்பாட்டின் மணி முடியாகும். இது இந்திய அரசியலமைப்பு வரலாற்று...
தொடர்ச்சியை உறுதி செய்கிறது. சுதந்திர இந்தியாவின் ...
எதிர்பார்ப்புக்களையும், குறிக்கோள்களையும் ...
காலத்தைவிடச் சிறப்பாக இருக்க வேண்டும் ...



சமூக அமைப்பை உருவாக்க முனைகிறது. நவீன இந்தியா எத்திக்கு நோக்கிச் செல்ல வேண்டும் என்பதைக் காட்டுகிறது. சுருங்கக் கூறின், தனித்தன்மையுடைய இந்திய அரசியலமைப்புச் சட்டம் சமகால இந்தியாவின் சிறப்பான சாதனையாகும். இதன் சிறப்பியல்புகளாவன:

### 3.3.1 பல்வேறு மூலங்களின் ஒருங்கிணைப்பு (Integration of Several Sources)

இந்திய அரசியலமைப்புச் சட்டம் வரலாற்றுச் சூழ்நிலைகளின் பரிணாம வளர்ச்சியின் விளைவாகும். 1909, 1919, 1935 இந்திய அரசாங்கச் சட்டங்கள் இதற்கு முன்னோடிச் சட்டங்களாகும். 1935 சட்டத்தைப் பின்பற்றியே மத்திய – மாநில அதிகாரப் பங்கீடு, குடியரசுத் தலைவரின் அவசர கால அதிகாரங்கள் போன்ற பகுதிகள் சேர்க்கப்பட்டன. ஒரு விதத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1935 இந்திய அரசாங்கச் சட்டத்தின் விரிவாக்கமாகும். அதேபோன்று இந்திய அரசியலமைப்புச் சட்டகர்த்தாக்கள் எழுதப்படா பிரிட்டிஷ் பாராளுமன்றச் சட்டம், அமெரிக்க, ரஷ்ய, சுவிட்சர்லாந்து, கனடா, அயர்லாந்து போன்ற நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களின் சிறப்புக் கூறுகளை இந்தியச் சூழ்நிலைக்கேற்ப சட்டத்தில் சேர்த்துக் கொண்டனர். அதனால் தான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 'வெட்டு–ஒட்டு வேலை' (Scissor and Paste Work), 'அழகான ஒட்டுத்தையல்' (Beautiful Patchwork), 'பல்வண்ண ஓவியம்' (Multi-coloured Mosaic), 'இரவல் பை' (Bag of Borrowing) என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறது. "இச்சட்டத்தில் புதிதாக ஏதேனும் இருக்குமேயானால் அது நாட்டின் தேவைகளுக்கேற்ப செய்யப்பட்ட மாற்றங்களேயாகும்" என்று கூறினார் அம்பேத்கார். கூட்டாட்சிக் கூறுகளும், அடிப்படை உரிமைகளும், வழிகாட்டு விதிகளும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வெறும் ஒட்டு வேலை மட்டுமல்ல என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகும்.

### 3.3.2 எழுதப்பட்ட சட்டம் (Written Constitution)

இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுத்து வடிவத்தில் உள்ள ஆவணமாகும். இது
எழுதப்படா பிரிட்டிஷ் சட்டத்திலிருந்து மாறுபட்டதாகும். இந்தியச் சட்டம் வழக்காறுகளின்
தொகுப்பல்ல. இச்சட்டம் விரிவாக வரையப்பட்டதற்குப் பல காரணங்கள் உண்டு:
1)அரசியலமைப்புச் சட்டமன்றம் போராடிப் பெறப்பட்டதால் அம்மன்றம் முடிவு செய்த சட்டம்
எழுத்து வடிவில் இருக்க வேண்டிய இன்றியமையாததாயிற்று; 2) இந்தியப் பிரிவினைக்கு
முன் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்திய விடுதலைச் சட்டத்தின்
முக்கிய சரத்துக்களை புதுச் சட்டத்தில் எழுத வேண்டியது அவசியமாயிற்று; 3) பிரிட்டிஷ்
அரசாங்கத்திடமிருந்து சுதந்திர இந்திய அரசாங்கத்துக்கு சுமூகமான அதிகார மாற்றம்
ஏற்பட வேண்டுமாயின் சட்டச் சரத்துக்கள் தெளிவாக எழுதப்பட வேண்டிய கட்டாயம்
இருந்தது. **"தெளிவாக எழுதப்படாத அரசியலமைப்புச் சட்டம் தவறாகப் புரிந்து**
**கொள்வதற்கும், மாறுபாடுகளுக்கும் இடமளிக்கும்"** என்று கூறியுள்ளார் டைசி;
4)இந்தியத் துணைக் கண்டத்தின் பலதரப்பட்ட வேறுபாடுகளையும் மாறுபாடுகளையும்
கொண்ட அரசியல் – பொருளாதார – சமூக – சமயக் கூறுகளுக்கிடையே
ஒருமைப்பாட்டை உருவாக்க அரசியலமைப்புச் சட்டம் சந்தேகத்துக்கிடமின்றி எழுதப்பட
வேண்டியது அவசியம்; 5) நிர்வாகத் தொடர்ச்சிக்கு எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டம்
முன் தேவையாகும்; 6) எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில்தான் மத்திய – மாநில
அரசாங்கங்களின் அதிகாரங்களும், தொடர்புகளும் எளிமையாகவும், தெளிவாகவும்,
...வும்.

.3.3 மிகவும் நீளமான சட்ட

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உலகிலேயே மிகவும் நீளமான ஆவணமா
பிற நாடுகளின் சட்டங்களோடு ஒப்பிட்டால் இச்சட்டம் மிகப் பருமனானதும் கூட. இந்தி
சட்டத்தை வரைய கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் ஆயின. அமெரிக்க அரசியலமை
சட்டம் நான்கு மாதங்களிலும், தென்னாப்பிரிக்கச் சட்டம் ஒரு ஆண்டிலும், கனடா சட்
இரண்டு ஆண்டுகள் ஐந்து மாதங்களிலும் எழுதப்பட்டன. இந்தியச் சட்
நிறைவேற்றப்பட்ட போது அதில் 395 சரத்துக்களும் 8 இணைப்புப் பட்டியல்களு
இருந்தன. அதன் பின் இச்சட்டத்தில் 57 ஆண்டுகளில் 83 திருத்தங்கள் செய்யப்பட்
4 இணைப்புகள் சேர்க்கப்பட்டன.

இந்தியச் சட்டத்தின் நீளத்துக்கும் பருமனுக்குமான காரணங்கள்: 1) மத்தி
அரசாங்கம், மாநில அரசாங்கங்கள், யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றின் அதிகாரங்க
வரையறுக்கப்பட்டுள்ளன; 2) அரசாங்கத்தின் முப்பெரும் தூண்களான ஆட்சித் துறை
சட்டத் துறை. நீதித்துறை ஆகியவற்றின் அதிகாரங்களும் எல்லைகளும் விரிவா
வகைப்படுத்தப்பட்டன; 3) குடியுரிமை, தேசிய மொழி, மத்திய – மாநிலத் தொடர்புக
சிறுபான்மையினர் பாதுகாப்பு, பிராந்தியப் பற்று, பட்டியலிடப்பட்ட வகுப்பார் போன்
நிர்வாகம் சம்மந்தப்பட்ட பிரச்சனைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன; 4) பிற நாட்
அரசியலமைப்புச் சட்டங்களில் காணப்படும் சிறப்பு அம்சங்கள் பொருத்தமா
எடுத்தாளப்பட்டுள்ளன; 5) அடிப்படை உரிமைகளும், வழிகாட்டு விதிகளு
வரிசைப்படுத்தப்பட்டன. பின்னர் குடிமக்களின் கடமைகள் சேர்க்கப்பட்டன; 6) குடியரசு
தலைவரின் அவசரகால அதிகாரங்கள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன; 7) பொதுப் பணி
கமிஷன், தேர்தல் கமிஷன், நிதிக் கமிஷன் போன்ற நிறுவனங்களின் அமைப்புக
அதிகாரங்கள், செயல்பாடுகள் விவரிக்கப்பட்டுள்ளன.

“சிறந்த அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று அதன் சுருக்க
தான்” என்றார் தற்கால அரசியலமைப்புச் சட்ட நிபுணரான கே.ஜி.வியர். அமெரிக்
அரசியலமைப்புச் சட்டம் குறுகத்தரித்த சட்டத்துக்குச் சிறந்த முன்மாதிரியாகும். இந்தி
சட்டம் மிகவும் நீளமாக எழுதப்பட்டது காலத்தின் கட்டாயமாகும். தெளிவற்ற, குழப்பமா
சிக்கலான சூழ்நிலையில் எழுதப்பட்ட இச்சட்டத்தின் பருமன் தவிர்க்க முடியாததாயிற்
இந்திய சட்டகர்த்தாக்கள் செய்வதறிந்தே செய்தனர். வரைவுக் கமிட்டித் தலை
அம்பேத்கார் தெளிவோடும் தொலைநோக்கோடும் கூறினார்: “அரசியலமைப்
சட்டத்துக்கும் நிர்வாகத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. அரசியலமை
ஒழுக்கத்தைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புண்டு. ஒழுக்கம் இயல்பா
உணர்வன்று. அது வளர்க்கப்பட வேண்டியது. நமது மக்கள் அரசியலமைப்பு ஒழுக்கத்
இன்னும் கற்றுக் கொள்ளவில்லை என்பதை ... இந்தி



அரசியலமைப்புச் சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது; 2) அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கம் வரையறுக்கப்பட்டுள்ளது. அ) சமூக, பொருளாதார, அரசியல் **நீதி** (Justice). ஆ) எண்ணம், கருத்துக்கூறல், நம்பிக்கை, வழிபாட்டு **உரிமை** (Liberty). **இ)**அந்தஸ்து மற்றும் வாய்ப்புச் **சமத்துவம்** (Equality) ஈ) தனிமனித கவுரவத்தையும் **தேசத்தின்** ஒற்றுமையையும் உறுதி செய்யவல்ல **சகோதரத்துவம்** (Fraternity); 3) குடியரசுத் தலைவர் முடியரசரோ அல்லது பொறுப்பற்ற சர்வாதிகாரியோ அல்ல. மாறாக, இவர் மறைமுகமாக குறிப்பிட்ட காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்புமிக்க அதிபர் என்பதை தெளிவுபடுத்துகிறது; 4) மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மக்களுக்குப் பதில் சொல்லும் பொறுப்புடையவர்கள் என்பது வலியுறுத்தப்படுகிறது. சட்டப் பீடிகை அரசியல் அமைப்புச் சட்டத்தின் சரத்தல்ல. அதாவது, இதை **நீதிமன்றங்கள் மூலம் நடைமுறைப்படுத்த முடியாது.** எனினும், சட்டப் பீடிகை அரசியலமைப்புச் சட்டகர்த்தாக்களின் உட்கிடக்கையையும், சட்டத்தின் நோக்கத்தையும் குறிப்பிட்டுக் காட்டுவதாக உள்ளது.

### 3.3.5 அரசியலமைப்பு முறையின் தன்மை (Nature of the Political System)

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நாட்டின் அரசியலமைப்பு முறையின் இயல்பு அல்லது தன்மை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. துவக்கத்தில் இந்தியா ஒரு இறையுரிமையுடைய, ஜனநாயக, குடியரசு (Sovereign, Democratic, Republic) என்று பிரகடனப்படுத்தப்பட்டது. சர்வதேச விவகாரங்களில் இந்தியா பிற நாடுகளுக்குச் சமமாக இருப்பதாலும், உள்நாட்டு விவகாரங்களில் மத்திய அரசாங்கத்துக்கு மிஞ்சிய மேலாதிக்கம் வேறெதுவுமின்மையாலும் இந்தியா ஒரு இறையுரிமையுடைய நாடாகும். பிரிட்டிஷ் முடியாட்சிப் பேரரசின் பிடியிலிருந்து விடுபட்டு, சுதந்திர நாடாகி, தனக்குத்தானே ஜனநாயக முறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டதை வேறுபடுத்திக் காட்டுவதற்காக இந்தியா ஜனநாயக நாடு என்று அழைக்கப்படுகிறது. வயது வந்தோர் அனைவரும் வாக்குரிமை பெற்று, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்களால், மக்களுக்காக, மக்களுடைய அரசாங்கத்தை அமைத்துக் கொள்வதால் இந்தியா குடியரசாகும். 42வது சட்டத்திருத்தத்தின் மூலம் சோஷலிச (Socialist), மற்றும் சமயச் சார்பற்ற (Secular) என்ற சொற்கள் சேர்க்கப்பட்டுத் தற்போது இந்தியா ஒரு **இறையுரிமையுடைய, ஜனநாயக, குடியரசு, சோஷலிச, சமயச் சார்பற்ற நாடாகத்** திகழ்கிறது.

### 3.3.6 நாடாளுமன்ற அரசாங்க முறை (Parliamentary System of Government)

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நாடாளுமன்ற அரசாங்க முறையை **ஏற்படுத்தியுள்ளது.** விடுதலைப் போராட்டத்தின் போது ஆங்கிலக் கல்வி பெற்று, பிரிட்டிஷ் பாராளுமன்ற முறையைப் பற்றி நன்கறிந்த தலைவர்கள் அந்த முறையே இந்தியாவுக்கு **வேண்டுமென்று** கோரினர். நாடாளுமன்ற அரசாங்க முறையைத் தெரிந்தே தேர்வு **செய்தோம்** என்றார் நேரு. பிரிட்டிஷ் பாராளுமன்ற அரசாங்கம் பற்றிய நூறாண்டு கால ... என்று கேட்டார் கே.எம்.முன்ஷி. 1919, 1935 இந்திய ... இருந்தன. பிரிட்டிஷ்

நெருங்கிய தொடர்பு இரு... ...ளது; 5) யதேச்சதி...
அறிந்து கொண்டு தவறுகளைத் திருத்திக் ... கட்டுப்படுத்தப்படும்; 6) நிலைத்தன்மை...
போக்கும், அதிகாரத் துஷ்பிரயோகம் கட்டுப்படுத்தப்படும்; அதிகாரச் சமநிலையும் (Balance of Government Authority), ...
(Stability), அரசாங்க அதிகாரச் சமநிலையும் ... பொறுப்பும் (Accountability) நாடாளுமன்ற அரசாங்க முறையின் ...
சொல்லும் பொறுப்பும் (Accountability) நாடாளுமன்ற அரசாங்க முறையின் ... பலமாகும்.

### 3.3.7 கூட்டாட்சிக்கும், ஒற்றையாட்சிக்கும் இடைப்பட்ட இல்லம் (A Half-way House between Federal and Unitary Forms of Government)

இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்தியாவை **'மாநிலங்களின் ஒன்றியம்'** (Union of States) என்று கூறுகிறது. எந்த இடத்திலும் கூட்டாட்சி (Federation) என்று கு... குறிப்பிடப்படவில்லை. எனினும் இந்திய சட்டத்தில் கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி சிறப்புக் கூறுகள் காணப்படுகின்றன. **கூட்டாட்சிக் கூறுகள்: 1)** அரசியலமைப்புச் சட்... நெகிழ்ச்சியற்ற எழுதப்பட்ட ஆவணம்; 2) மத்திய–மாநில அரசாங்கங்களின் எல்லை... முறையாக வகுக்கப்பட்டு அதிகாரப் பங்கீடு (Division of Powers) செய்யப்பட்டுள்ளது; 3)அரசியலமைப்புச் சட்ட முதல் மேன்மை (Supremacy of the Constitution) கோட்பா... காப்பட்டுள்ளது; 4) நாடாளுமன்றம் மக்களவை (Lok Sabha), மாநிலங்களவை (Rajya Sabha) என்று ஈரவைச் சட்டமன்றமாக (Bicameral Legislature)ச் செயல்படுகிறது; 5)அரசியலமைப்புச் சட்டத்துக்குப் பொருள் விளக்கம் கூறவும், அச்சட்ட சரத்துக்கள்... வழக்குகளை விசாரிக்கவும் அதிகாரம் பெற்று உச்ச நீதிமன்றம் (Supreme Court) சிறப்பு... பெற்றுள்ளது; 6) அமெரிக்க நீதித்துறையைப் போன்றே இந்திய நீதித்துறைக்கு நீதிப்புனராய்வு (Judicial Review) செய்யும் அதிகாரம் உண்டு. அதாவது, மத்திய மாநில சட்டங்களும், நடவடிக்கைகளும் அரசியலமைப்புச் சட்டத்துக்குட்பட்டு உள்ளன என்பதைத் தீர்மானித்தல்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் காணப்படும் **ஒற்றையாட்சிக் கூறுகள்:** ... அதிகாரப் பங்கீடு மத்திய அரசாங்கத்துக்குச் சாதகமாகவே உள்ளது; 2) மத்திய – மாநில அரசாங்கங்களுக்கிடையே பிரிக்கப்பட்ட அதிகாரங்களைத் தவிர எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) அனைத்தும் மத்திய அரசாங்கத்திடமே ஒப்படைக்கப் பட்டுள்ளன; 3) மாநிலங்களவையில் மாநிலங்களுக்குச் சமப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை; 4)மாநில ஆளுநர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்; 5) மத்திய அரசாங்கம் 356 சட்டச் சரத்தைப் பிரயோகித்து எந்த மாநிலத்திலும் நெருக்கடி நிலை பிரகடனம் செய்து அதன் நிர்வாகத்தைத் தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரலாம்; 6)மாநிலங்கள் அனைத்தும் சம அந்தஸ்துடையதாக இல்லை; 7) மத்திய அரசாங்க சட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு மாநிலங்களுக்கும் உண்டு; 8) அமெரிக்க சுவிட்சர்லாந்து சட்டங்களோடு ஒப்பிட்டால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவது எளிது; 9) மாநில நிர்வாகத்தில் பிரதானப் பொறுப்புகளை வகிக்கும் ஐ.ஏ.எஸ் ஐ.பி.எஸ் போன்ற ஆட்சிப் பணி...



கூட்டாட்சியின் **மூன் தேவைகள்** இரண்டு என்று கூறுகிறார் வீயர்: 1) கூட்டாட்சியின் உறுப்புப் பகுதி ஒவ்வொன்றும் முழு சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும்; 2) கூட்டாட்சிக்குப் பொதுவான விஷயங்களில் உறுப்புப் பகுதிகள் பொது அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். அதேபோன்று கூட்டாட்சியில் மைய அரசாங்கம் குடிமக்கள் அனைவரின் மீதும் நேரடியாக அதிகாரம் செலுத்துகிறது என்று கூறுகிறார் வீயர். அதாவது, இரட்டைக் குடியுரிமை (Dual Citizenship) உள்ள கூட்டாட்சியில் மைய அரசு மாநிலக் குடிமக்கள் மீதும் அதிகாரப் பிரயோகம் செய்கிறது. ஆனால் இந்தியாவில் **ஒற்றைக் குடியுரிமை** (Single Citizenship)யே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சிக் கூறுகளை விட ஒற்றையாட்சி அம்சங்களே அதிகம் காணப்படுகின்றன. எனவே இந்திய அரசியலமைப்பு உருவத்தால் கூட்டாட்சியாகவும், உணர்வால் ஒற்றையாட்சியாகவும் உள்ளது. அதனால் தான் இந்திய அரசியலமைப்பு **'கூட்டாட்சிக் கூறுகளைக் கொண்ட ஒற்றையாட்சி'** என்று கூறி உள்ளார் வீயர். 'இந்தியா ஒரு ஒன்றியமே' என்றார் கே.எம்.முன்ஷி. கூட்டாட்சி போன்று காணப்படுவதால் இதை 'அரையளவான கூட்டாட்சி' (Quasi Federation) என்று கூறுவர். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சிக் கூறுகளும், ஒற்றையாட்சி இயல்புகளும் காணப்படுவதால் இதை **இவ்விரண்டு அரசாங்க முறைகளுக்கும் இடைப்பட்ட இல்லம்** என்று கூறுவதே பொருத்தமாகும்.

### 3.3.8 குடியுரிமை (Citizenship)

குடியுரிமை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும். இந்தியா விடுதலை அடைவதற்கு முன் இந்தியர் அனைவரும் பிரிட்டிஷ் அரசருக்கு விசுவாசமுள்ள பிரிட்டிஷ் பிரஜைகளாக (British Subjects) இருந்தனர். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் மக்கள் அனைவரும் **குடிமக்கள்** (Citizens) ஆயினர்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 5, 6, 7, 8வது சரத்துகள் இந்தியக் குடிமக்கள் பற்றியவை. இந்தியக் குடியுரிமை பெற 1) இந்திய நிலப்பகுதியில் பிறந்திருக்க வேண்டும்; 2)பெற்றோரில் ஒருவர் இந்தியாவில் பிறந்திருக்க வேண்டும்; 3) இவர் இந்தியாவில் ஐந்தாண்டுகளாவது குடியிருப்பாளராக (Resident) இருந்திருக்க வேண்டும். இக்குடியுரிமை 1948 ஜூலை 19 ஆம் தேதிக்கு முன் இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து வந்தோருக்கு வழங்கப்பட்டது. 1947 மார்ச் முதல் தேதிக்குப் பின் பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்து சென்றோருக்கு மறுக்கப்பட்டது. சில நிபந்தனைகளுக்குட்பட்ட **குடியுரிமை வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.** 11வது சரத்தின்படி குடியுரிமையைக் கொடுக்கவும், எடுக்கவும் மற்றும் குடியுரிமைத் தொடர்பான விஷயங்களையும் நெறிப்படுத்தும் அதிகாரத்தை நாடாளுமன்றம் பெற்றது. இச்சாத்தின் படிதான் **1955 இந்தியக் குடியுரிமைச் சட்டம்** (Indian Citizenship Act, 1955) இயற்றப்பட்டது.

வழக்கமாகக் குடியுரிமையை நிர்ணயிக்க **இரண்டு நெறிமுறைகள்** ...ண்டு: **1) பிறப்பிடம்** (Jus Soli or the Place of Birth) இங்கிலாந்து இதைப் ... (Jus Sanguinis or the Nationality of the ...) பெற்றோர் ...

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பல சிறப்பு அம்சங்களைக் கொண்ட தனித்தன்மை வாய்ந்த புனிதமான ஆவணமாகும். இது ஒட்டுப்போட்ட அரசியலமைப்புச் சட்டை அல்ல. மாறாக இது இந்தியா மற்றும் உலக நாடுகளின் அரசியலமைப்பு அனுபவங்களின் சங்கமம் ஆகும். சுதந்திரம், உரிமை, சமத்துவம், பரந்த நோக்கம், பொது வாழ்வுத் திறன், சமூக நீதி போன்ற பல இலட்சியங்களின் கலவை. வறுமையும், படிப்பறிவின்மையும் விரவிக் கிடக்கும் நாட்டில் நடைமுறை சாத்தியமான அரசியலமைப்புச் சட்டத்தை வடித்துக் கொடுத்தது சட்டகர்த்தாக்களின் விவேகத்துக்கான எடுத்துக் காட்டாகும். இச்சட்டத்தின் செயல்பாடு ஆட்சியாளர்களின் தகுதியையும் தரத்தையும் திறத்தையும் பொறுத்தது. முழுக் கருத்தொற்றுமையின்றி அரசியலமைப்புச் சட்டத்தின் கட்டமைப்பைக் கலைக்க முற்படுவது ஜனநாயகத் தற்கொலைக்கு ஒப்பாகும்.

இந்தியாவில் ஜனநாயக முறை வெற்றிகரமாக செயல்படுமா என்று பலர் சந்தேகப்பட்டனர். ஆனால் அவர்களது சந்தேகம் பொய்த்துப் போயிற்று. அரசியலமைப்புச் சட்டமும், அச்சட்டத்தால் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்களும் பல சவால்களைத் தாண்டி நீடித்து வருகின்றன. இவை காலத்தின் தேவைகளுக்கேற்ப வளைந்து கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன. நெருக்கடி காலத்தில் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டுக்கோப்பை சட்டத்திருத்தத்தின் மூலம் மாற்ற முயற்சியும், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் இச்சட்டத்தை மறுபரிசீலனை செய்ய முற்பட்டதும் தோல்வியில் முடிந்தன. அரசியல் அமைப்புச் சட்டமும், அதன் நிறுவனங்களும் செயல்படுவதில் குறைகள் உள்ளன. இக்குறைகள் பெரும்பாலும் சட்டத்தைச் செயல்படுத்துவோரின் குறைபாடுகளின் வெளிப்பாடுகளேயாகும். உலகின் பல நாடுகளில் அரசியல் அமைப்புச் சட்டத்தின் நம்பகத்தன்மை நலிவடைந்துள்ள நிலையில் இந்திய சட்டம் திறமையாக செயல்படுவது அதன் தனித்தன்மையையும் பெருமையையும் உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

## 5.4 ஐந்தாண்டுத் திட்டங்கள், 1951 – 1966 (Five Year Plans)

இந்தியா விடுதலை அடைந்தவுடன் நெருக்கடிக்கு மேல் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இனக்கலவரங்கள் அடக்கப்பட்டன. அகதிகள் பிரச்னை தீர்க்கப்பட்டது. நாடாளுமன்ற ஜனநாயக முறையை ஏற்படுத்துவதற்கான அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து நேரு அரசாங்கம் அதன் கவனத்தைப் பொருளாதார வளர்ச்சி மீது திருப்பியது. புதிதாகப் பெற்ற சுதந்திரம் நிலைக்க வேண்டுமாயின் வளத்தை நோக்கி முன்னேறுவதை மக்கள் உணர வேண்டும். இல்லாவிடில் இந்தியா எந்த இலட்சியங்களுக்காகப் போராடியதோ அவை நீர்க்குமிழிகளாக மறைந்துவிடும். அதுமட்டுமல்ல சோவியத் யூனியனிலும், சீனாவிலும், கிழக்காசிய நாடுகளிலும் ஏற்பட்ட பொருளாதாரப் புரட்சி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியதன் இன்றியமையாமையை அடிக்கோடிட்டுக் காட்டியது. எனவே, நேரு அரசாங்கம் இந்தியாவின் பொருளாதார உணர்வு தேவைகளை ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் நிறைவேற்ற உறுதி பூண்டது.

### 5.4.1 முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951–1956)

**நோக்கம்**

1951 ஜூலை மாதம் திட்டக் கமிஷன் முதல் ஐந்தாண்டுத் திட்டவரைவை சமர்ப்பித்தது. நேரு அரசாங்கம் பலதரப்பு விமர்சனங்களையும் பரிசீலித்த பின் 1952 டிசம்பர் மாதம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வெளியிட்டது. முதல் திட்டம் சுதந்திர இந்தியாவின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கான "கன்னி முயற்சி" ஆகும். அதன் **மூல நோக்கங்கள்** இரண்டு: 1) உலகப் போர்களாலும், இந்தியப் பிரிவினையாலும் உருக்குலைந்து போயிருந்த இந்தியப் பொருளாதாரத்தைச் சீரமைத்தல். 2) மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வளமிக்கப் பன்முக வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்கல்.

**திட்டம்**

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றப் பொருள் வளங்களைத் தொழில் நுட்ப ரீதியாகப் பெருக்கி, மனித வளத்தைச் செம்மைப்படுத்தி, மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. பொருள் உற்பத்தியைப் பெருக்கல், தேசிய வருவாயை உயர்த்தல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், நிலையான சொத்துக்களைச் சேர்த்தல் ஆகியவற்றுக்கிடையே சமநிலையை ஏற்படுத்துவது திட்டக் கமிஷனின் முன்னுரிமையாக இருந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் அடுத்துவரும் திட்டங்களுக்கான முன்னோடியாகும். முதல் திட்டம் இந்தியப் பொருளாதார நிலத்தைச் சமன் செய்து அதன் மீது திட்டப் பொருளாதார மாளிகையைக் கட்டுவதற்கான முயற்சியாகும். அம்முயற்சி **"மிகவும் மோசமாகத் தேக்கமுற்றிருந்த பொருளாதாரத்துக்குத் தேவையான குறைந்தபட்ச உந்துதலைக் கொடுத்தது"** என்று குறிப்பிட்டுள்ளார் ஏ.எச்.ஹான்சன்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் பொருளாதார நோக்கங்களுக்குச் செயலுருவம் கொடுப்பதற்கான முயற்சியாகும். நடைமுறையில் இருந்த பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் ஒரு குடையின் கீழ் கொண்டு வரப்பட்டன. முதல் திட்டம் தேசிய பொருளாதார அணுகுமுறையை அறிமுகப்படுத்தியது. விரைவான தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டுமானத்தைப் பலப்படுத்தியது. நம்பகமான புள்ளி விவரங்கள் இல்லாத போதும் முதல் திட்டம் அறிவியல்பூர்வமாகத் திட்டப்பட்டு முனைப்பார்வத்துடன் செயல்படுத்தப்பட்டது. விவசாயத்துக்கும் தொழில் வளர்ச்சிக்கும் சிறப்பிடம் கொடுக்கப்பட்டது. உணவு அமைச்சராயிருந்த ஜெயராம்தாஸ் நேரு எதிர்பார்த்த அளவுக்குச் செயல்படவில்லை. நிதி அமைச்சர் ஜான் மத்தாயிக்கு திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியில் நம்பிக்கையில்லை. பல நடைமுறை இடர்ப்பாடுகள் இருந்தன. எனினும், நேரு பொருளாதார வளர்ச்சியின் அவசியத்தையும், அவசரத்தையும் உணர்ந்து திட்டமிட்டப் பொருளாதார ஏற்றத்துக்காக விரைந்து செயல்பட்டார் என்று கூறியுள்ளார் எஸ்.கோபால்!

## சமுதாய வளர்ச்சித் திட்டம் (1952)

**'கிராம ராஜ்யம்'** காந்தி கண்ட கனவு. அக்கனவை நனவாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டார் பிரதமர் நேரு. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி மூலம் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1952 அக்டோபர் 2 ஆம் தேதி காந்தி பிறந்த நாளன்று 17,000 கிராமங்களை உள்ளடக்கிய 55 சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் (Community Development Projects) துவக்கப்பட்டன. **'அமைதியான ஆரவாரமற்ற புரட்சி'** என்று குறிப்பிட்டார் நேரு. சமூக வளர்ச்சித் திட்டத்தை 'யக்ஞம்' என்று வர்ணித்த குடியரசுத் தலைவர் ராஜேந்திரப் பிரசாத் இத்திட்டத்தை ஒரு கைதேர்ந்த தோட்டக்காரரால் கவனமாக வளர்க்கப்பட்ட தோட்டத்தோடு ஒப்பிட்டார். சமூக நலத் திட்டத்தின் சிற்பியாகக் கருதப்பட்ட எஸ்.கே.டே சமூக வளர்ச்சித் திட்டம் **'கிராம மக்களின் மகிழ்ச்சிக்கான மாக்னா கார்ட்டா'** 'செயல்படும் இதிகாசம்' என்றெல்லாம் புகழ்ந்தார்.

கிராமங்களில் சமூக – பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதே சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் என்று முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டது. **'கிராம இந்தியாவின் முகத்தை மாற்றி இந்திய மக்களின் பெரும்பான்மையோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இம்முயற்சியின் நோக்கம்'** என்று நேரு முதலமைச்சர்களுக்கு எழுதிய கடிதத்தில் அடிக்கோடிட்டுக் காட்டினார். கிராமப் புனரமைப்பும், மக்கள் பங்கேற்பும் இத்திட்டத்தின் இருகண்கள். சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் **சிறப்பியல்புகளாவன:** 1) இது சமூக, பொருளாதார, கலாச்சார, பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்ட – பன்முகக் கிராம மறுச்சீரமைப்பு ஒருங்கிணைந்த திட்டம்; 2) இது கிராம மண்ணில் வேர்விட்டு வளர்க்கப்பட்ட ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடைய உயிர்த்துடிப்புள்ள திட்டம்; 3) விவசாய உற்பத்தியை அதிகரித்தலும், விவசாயத் தொடர்புடைய கைத்தொழில்களை ஊக்குவித்தலும் இத்திட்டத்தின் முன்னுரிமைகள்; 4) பொருளாதார வளர்ச்சி, சமூக ... ஜனநாயக செயல்பாடு ஆகியவற்றுக்கான வழி.

## கூட்டுப் பொருளாதாரம் (Mixed Economy)

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தலையாய நோக்கம் **வளர்ச்சி உத்தி** (Development Strategy)–யை உருவாக்குவதேயாகும். முன்பே தேசிய வருவாயின் விரைவான வளர்ச்சி, வேலைவாய்ப்பு அதிகரிப்பு, வருவாய் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், சேமிப்பு மற்றும் முதலீட்டுப் பெருக்கம், பொருள் உற்பத்தித் தொழில்நுட்ப அபிவிருத்தி, பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைப் பெருக்கல், உற்பத்தியைப் பலவகைப்படுத்துதல் போன்றவை பொருளாதார வளர்ச்சியின் முன் தேவைகள் என்பது உணரப்பட்டிருந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் இவற்றின் மூலம் சோஷலிச பாணியில் சமுதாயத்தை அமைக்க விரும்பினார் நேரு. அதன் விளைவே வளர்ச்சி உத்தியாகும்.

வளர்ச்சி உத்தியின் மூலம் வளர்ச்சியடையாதிருந்த **இந்தியாவை முற்போக்கு முன்னேற்ற நாடாக மாற்ற முடியும்** என்று நம்பினார் நேரு. அதற்குக் குறைந்த முயற்சியால் நிறைந்த வளர்ச்சி விகிதத்தை எட்ட வேண்டும். அதுமட்டுமல்ல, பொருளாதார மாற்றத்துக்கான கால இடைவெளி அதிகமாக இருத்தலாகாது. அதற்கு ஒரே வழி **இந்தியாவை விரைந்து தொழில் மயமாக்குவதேயாகும்.** அடிப்படை கனரக பொருள் உற்பத்தி செய்யும் தொழில்கள் மூலமே இது சாத்தியமாகும். நுகர்வோர் பொருள்களை (Consumer Goods) உற்பத்தி செய்வதால் தேசத்தைத் தொழில்மயமாக்க முடியாது என்று கருதினார் நேரு. உண்மையான தொழில்மயமானால் இந்தியா வெளிநாடுகளிலிருந்து உற்பத்தியாளர் பொருள்களை (Producer Goods) இறக்குமதி செய்வதை வெகுவாகக் குறைத்துக் கொள்ளும்.

இந்தியா தொழில்மயமாவதற்கான முன் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமாயின் அதற்கு அதிகமான **முதலீட்டு மூலதனம்** (Investment Capital) தேவை. அதற்கேற்ற **உட்கட்டுமான அமைப்பும்** அவசியம். இவ்விரண்டையும் கொடுக்கும் நிலையில் தனியார் துறை (Private Sector) வளர்ந்திருக்கவில்லை. எனவே, அரசாங்கம் பொருளாதாரப் பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. எனவே, உற்பத்தியாளர் பொருள்களுக்கான கடமையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. நுகர்வோர் பொருள்களை உற்பத்தி செய்வது தனியார் துறைக்கு விடப்பட்டது. இரும்பு, எஃகு, மின்சார உற்பத்தி, நிலக்கரி, கனரக இரசாயனத் தொழில் போன்ற அடிப்படைத் தொழில்களை மத்திய அரசாங்கம் தன்வசம் வைத்துக் கொண்டது. அரசாங்கத்தின் பொதுத்துறையும், தனியார் துறையும் இணைந்து பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட்டதால் 'கூட்டுப் பொருளாதாரம்' என்று அழைக்கப் படுகிறது.

இந்தியக் கூட்டுப் பொருளாதாரம் சோவியத் ரஷ்யாவின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி பாணியை முன் மாதிரியாகக் கொண்டது. கூட்டுப் பொருளாதாரத்தின் **சிறப்பியல்புகளாவன:** 1) பொதுத் துறையை அரசாங்கக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு விரைந்து விரிவுபடுத்தல்; 2) அடிப்படை கனரகத் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்தல்; 3) தனியார் துறை மேற்கொள்ள முடியாத அல்லது மேற்கொள்ள முன்வராத பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் சேவைப் பொறுப்புகளை அரசாங்கம் மேற்கொள்ளல். 'கூட்டுப் பொருளாதாரம்' இந்தியப் பொருளாதாரத்தின் தனிச் சிறப்பாகும்.

## கூட்டுறவு விரிவாக்கம்

இரண்டாவது திட்டக் காலத்தில் கூட்டுறவு விரிவாக்கத்துக்கு (Expansion of Co-operative Sector) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1956–ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'புதிய

...கொள்கைத் தீர்மானம்' பொது மற்றும் தனியார் ...
முறையைக் கையாள வேண்டியதன் முக்கியத்துவத்தைக் ...
குறிப்பாக விவசாயம், சிறுதொழில், வினியோகம், கட்டுமானம், ...
வழங்கல் ஆகிய துறைகளில் கூட்டுறவு முறை நடைமுறைப்படுத்...
என்பதில் நேரு அரசாங்கம் குறியாக இருந்தது. அரசாங்க ...
வழங்கப்பட்டது. **கூட்டுறவுத் துறை** (Co-operative Sector)...
எப்போதுமில்லாத அளவுக்கு முதலீடு செய்யப்பட்டது.

## கூட்டுறவு முறை விவசாயம்

கூட்டுறவு மூலம் கிராம உயர்வுக்கான முயற்சி மேற்கொள்ளப்... முறை விவசாயம் அறிமுகப்படுத்தப்பட்டது. நில உடைமைகள் சிதறிக் ... கூட்டுறவு விவசாயம் சிறந்ததாகக் கருதப்பட்டது. மேலும் இது ஜமீ... அரசாங்க உடைமைக்கு நல்ல மாற்று முறையாகவும் இருக்கும் என்று எதிர்... முன்பே நடைமுறையில் இருந்த சமூக வளர்ச்சித் திட்டமும் தேசிய ... கூட்டுறவு விவசாயத்தைப் பலப்படுத்த முடுக்கிவிடப்பட்டன. கிராம ... **நோக்கு கூட்டுறவு சங்கம்; 2) கிராமப் பஞ்சாயத்து;** 3) கிராமப் ப... முப்பெரும் நிறுவனங்களைச் சுற்றிச் சுழல வேண்டும் என்பதே திட்ட... விருப்பம் ஆகும். இவற்றின் மூலம் இந்தியாவின் கூட்டுறவுக் காமன்வெ... operative Commonwealth)க் காண முடியும் என்று கனவு கண்டார் நேரு.

## மதிப்பீடு

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 'பெரிய முற்போக்குப் பாய்ச்ச... Leap Forward) என்று புகழப்பட்டது. இதன் **சாதனைகள்** பெருமைக்குரிய... முதலீடு ரூ.6,750 கோடியில் ரூ.3,650 கோடி பொதுத்துறைக்காகச் செலவிட... தேசிய வருமானம் 20% ஆக உயர்ந்தது; 3) தனி நபர் வருமானம் ரூ.284லிரு... ஆக அதிகரித்தது; 4) விவசாய உற்பத்தி 40% ஆகப் பெருகியது ... கைத்தொழில்கள் புத்துயிர் பெற்றன; 5) பொருள் உற்பத்தி இரண்டு ம... பெருகியது; 6) முதலீட்டு விகிதம் கணிசமாக அதிகரித்தது.

எனினும் குறைபாடுகள் கவலைக்குரியதாக இருந்தன: 1) ... அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வளர்ச்சி மாதிரி (Growth Model) ந... சாத்தியமற்றது; 2)கிடைத்த நிதி ஆதார வசதிகளுக்கும் முதலீட்டுக் குறி... சம்பந்தமில்லாமல் இருந்தது; 3)பொதுத்துறை வளர்ச்சிக்கு அதிக முக்கி... அளிக்கப்பட்டது. 4)பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் ஏற்றுமதி... இறக்குமதி அதிகமாக இருந்தமையால் இந்தியாவின் அன்னியச் செலாவணி ... வெகுவாகக் குறைத்து விட்டது; 5) அதன் காரணமாக மத்திய அ... வெளிநாடுகளிலிருந்து பரவலாகக் கடன் வாங்க வேண்டிய கட்டாயத்துக்கு உ... 6) எதிர்பார்த்தபடி வேலை வாய்ப்புகள் அதிகரிக்கவில்லை; வருமான ஏற்ற... குறையவில்லை; பொருளாதார வளம் சரியாகவும் பகிர்ந்தளிக்கப்படவில்லை... வளர்ச்சித் திட்டம் திருப்திகரமாக செயல்படவில்லை; விவசாய... பலம் பெறவில்லை.

இருந்தது. வரை

## 6.2 மொழிவழி மாநிலங்கள் கமிஷன், 1948 (The Linguistic Provinces Commission)

**தார் கமிஷன்**

இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றம் தேசிய மொழிப் பிரச்னை பற்றி விவாதித்த போது மொழி வழி மாகாண மறு சீரமைப்பு கோரிக்கை தலை தூக்கியது. சட்ட உறுப்பினர்களில் சிலர் மொழிவழி மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். அதுமட்டுமல்ல. அத்தகைய மறுசீரமைப்பு பற்றி அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே தீர்மானிக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். எனவே அரசியலமைப்புச் சட்ட மன்றத் தலைவர் ராஜேந்திர பிரசாத் மாகாணங்கள் மறுசீரமைப்புக் கமிஷனை நியமித்தார் (1948).

ஓய்வு பெற்ற அலகாபாத் உயர்நீதிமன்ற **நீதிபதி எஸ்.கே.தார்** (S.K.Dar) அக்கமிஷனின் தலைவர். ஓய்வுபெற்ற ஐ.சி.எஸ். அதிகாரி டாக்டர் பன்னாலாலும், அரசியலமைப்புச் சட்டமன்ற உறுப்பினர் ஜகத் நாராயணன் பிற அங்கத்தினர்கள். சட்ட தார் கமிஷன் (Dar Commission) மொழிவழி மாகாணங்கள் அமைக்கப்படுவது பற்றியும், அவ்வாறு மறுசீரமைப்பு செய்வதால் ஏற்படக் கூடிய நிர்வாக, நிதி மற்றும் பிற விளைவுகள் பற்றியும் பரிசீலித்து தார் கமிஷன் மாநிலங்களின் கருத்தறிய நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. அது சென்ற இடங்களிலெல்லாம் மொழிவழி மாகாண மறுசீரமைப்பு பற்றிய கோரிக்கை பலமாக இருந்தது. அதே போன்று சிலர் மொழிவழி மாகாணங்களை மாற்றி அமைப்பதைக் கடுமையாக எதிர்த்தனர். மொழியை அடிப்படையாகக் கொண்டு மாகாணங்களின் எல்லைகளை மாற்றி அமைப்பதை ஆதரித்தும் எதிர்த்தும் 'கருத்துக் குறிப்புகள்' (Memorandum) அக்கமிஷனிடம் கொடுக்கப்பட்டன. தார் கமிஷன் பொது விசாரணைகள் மூலமாகவும் தகவல்களைத் திரட்டின.

1948 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்பே தார் கமிஷன் அதன் அறிக்கையை சமர்ப்பித்தது. உடனடியாக மொழிவழி மாகாணங்கள் மறுசீரமைக்கப்படுவது விரும்பத்தக்கதல்ல, என்று கருதியது அக்கமிஷன். அதற்குக் காரணம் இந்தியா கடுமையான பொருளாதார நெருக்கடிக்கும், அந்நிய ஆக்கிரமிப்புக்கும், இனக் கலவரங்களுக்கும் இலக்காயிருந்ததேயாகும். மேலும் மன்னர் மாநிலங்கள் இந்தியாவுடன் உறுதியாக இணைக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியது தார் கமிஷன். மேலும் மொழிவழி மாகாண மறுசீரமைப்பால் ஏற்படக்கூடிய பொருளாதார நிர்வாகச் செலவுகளைத் தாங்கக் கூடிய நிலையில் நாடு இல்லை என்று கருதியது அக்கமிஷன்.

அரசியலமைப்புச் சட்டமன்றத்தில் தேசிய மொழிக் கொள்கை விவாதிக்கப்பட்டதும், அதன் விளைவாக தார் கமிஷன் நியமிக்கப்பட்டதும் நாட்டில் மொழிவழி மாகாணங்கள்

மறுசீரமைப்பு பற்றிய சர்ச்சையை தீவிரப்படுத்தியது. தனி ஆந்திர மாநிலக் கோரிக்கை புது பலம் பெற்றது. அச்சூழ்நிலையில் தார் கமிஷன் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்படுவதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தது. எனினும், சில மாகாணங்களை நிர்வாகக் காரணங்களுக்காக மாற்றியமைக்கலாம் என்று பரிந்துரைத்தது.

ஒன்றுபட்ட உறுதியான இந்தியாவைக் காண விரும்பிய பிரதமர் நேரு மொழிவழி மாகாண மறுசீரமைப்புக்கு முன்னுரிமை தரவில்லை. கமிட்டியைப் பின் நியமித்து மொழிவழி மாகாணச் சீரமைப்புப் பிரச்னையை ஒத்திவைப்பதில் இருந்தார் நேரு. மொழிவழி மாகாணங்களை அமைப்பது பற்றி முடிவெடுப்பதில் பலவீனம் நிலவியதாகக் கருதுகிறார் எஸ்.கோபால். மொழிவழி மாகாணத்தில் காந்திக்கு இருந்த ஆர்வம் நேருவுக்கு இல்லை என்பது ஸ்டான்லி வால்பெர்ட்டின்

## 6.3 ஜே.வி.பி. கமிட்டி (J.V.P.Committee), 1948

தார் கமிஷன் அன்றி மொழிவாரி மாநிலங்களை அமைப்பது பற்றி ஆராய காங்கிரஸ் கட்சியும் ஒரு கமிட்டியை அமைத்தது (டிசம்பர் 1948). அக்கமிட்டியில் ஜவஹர்லால் நேரு, 2) வல்லபாய் பட்டேல், 3) பட்டாபி சீத்தாராமய்யா ஆகியோர் இடம் பெற்றனர். இக்குழு இவர்களது பெயர்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு ஜே.வி.பி.என்று அறியப்பட்டது.

ஜே.வி.பி.கமிட்டி இந்தியாவை மொழிவழி பிரிப்பதற்குச் சில அளவுகோல்களை நிர்ணயித்தது: 1) இந்திய தேசிய காங்கிரஸ் மொழிவழி மாகாணக் கொள்கையை மேற்கொண்டபோது அக்கொள்கையின் நடைமுறை விளைவுகளை எதிர்கொள்ளவில்லை. எனவே மொழிவழி மாகாணங்களை அமைப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். 2) இந்தியாவின் பாதுகாப்பு, ஒற்றுமை, பொருளாதார வளம் ஆகியவை முன்னுரிமை பெற வேண்டும். பிரிவினை சக்திகளுக்குப் பின்னடைவு ஏற்பட வேண்டும். 3) மொழி மக்களை ஒன்று சேர்ப்பதைப் போன்று பிரிக்கவும் செய்யும். எனவே, மொழியை மட்டும் அளவுகோலாகக் கொண்டு மாகாண மறுசீரமைப்பு செய்வது பொருந்தாது. 4) மொழிவழி மாகாணம் பற்றிய காங்கிரஸ் கொள்கை நாட்டின் அரசியல், பொருளாதாரப் பாதுகாப்புக்கு ஊறு நேரா வண்ணம் மிகக் கவனமாக ஒவ்வொரு கோரிக்கையையும் நன்று பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டும். எனவே மொழிவழி புதிய மாகாணங்களை அமைப்பதைச் சில ஆண்டுகளுக்காவது தள்ளிப்போட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது ஜே.வி.பி.கமிட்டி. இம்முடிவு காங்கிரஸ் இந்தியா விடுதலை அடைவதற்கு முன் தீவிரமாகப் பின்பற்றி வந்த மொழிவழி மாகாணக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். மொழிவழி மாகாணங்கள் கமிஷன் அறிக்கையும், ஜே.வி.பி.கமிட்டியின் முடிவும் மொழிவழி மாகாண மறுசீரமைப்பு கோரியவர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது.

பிரதமர் நேரு மொழிவழி மாகாண மறுசீரமைப்பை ஒத்திப் போடுவதில் குறியாக இருந்தார். கமிஷனையும், கமிட்டியையும் அமைப்பதே அதற்குச் சிறந்த வழி என்று கருதினார். ஜே.வி.பி. கமிட்டியின் அறிக்கையை அவரே வரைந்தார். கட்சியின் அறிக்கையை அரசாங்கத்தை ஏற்கச் செய்தார். மொழிவழி மாகாண அமைப்பைச் சில ஆண்டுகளுக்காவது தள்ளிப் போட விரும்பினார்

... கொடுத்தது எனலாம். ...யாகவும் நடத்துவதற்கான

## 7.5.2 முதல் பொதுத் தேர்தல், 1951 – 1952

'வயது வந்தோருக்கு வாக்குரிமை' என்ற அடிப்படையில் முதல் தேர்தல் நடத்தப்பட்டது. 21 வயதான இந்தியக் குடிமக்கள் அனைவரும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெற்றனர். முதல் பொதுத் தேர்தல் 1951 அக்டோபர் மாதத்திலிருந்து 1952 மார்ச் வரை நடைபெற்றது. மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 173,213,635. இந்தியா முழுவதும் 3,772 தொகுதிகளுக்கான 4000 இடங்களுக்கு 59 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 17,000 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

முதல் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளில் காங்கிரஸ் தான் மிகப் பெரிய பலமிக்க கட்சியாகும். நேரு சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டார். 25,000 மைல்கள் பிரயாணம் செய்து 35 மில்லியன் மக்களிடையே தேர்தல் பிரச்சாரம் செய்தார். ஜெயப்பிரகாஷ் நாராயண் உள்ளிட்ட சோஷலிஸ்டுகள் நேருவின் கொள்கைகளையும் திட்டங்களையும் கடுமையாக விமர்சித்தனர். குறிப்பாக, ஜெயப்பிரகாஷ் நாராயண் நேருவின் 'வெளிப்படையான பாசிசப் போக்கை'க் கண்டித்துப் பேசினார். நேருவின் அரசாங்கம் தொழிலாளர்களைப் பொறுத்தவரை ஹிட்லரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாகக் குற்றம் சாட்டினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் காங்கிரசின் 'பூர்ஷுவா போக்கை' எதிர்த்தனர். நேருவின் அமைச்சரவையிலிருந்து வெளியேறிய எஸ்.பி.முகர்ஜி பாரதிய ஜனசங்கத்தைத் தோற்றுவித்து, இத்தேர்தலில் பங்கேற்று இனவாதப் பிரச்சாரம் செய்தார்.

தேர்தல் முடிவுகள் காங்கிரசுக்கு அமோக வெற்றியைக் கொடுத்தன. மொத்த நாடாளுமன்ற மக்களவைக்கான 489 இடங்களுக்குக் கட்சிகள் வெற்றி பெற்ற இடங்கள் வருமாறு: காங்கிரஸ் 364; இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 16; சோஷலிஸ்ட் கட்சி 12; கம்யூனிஸ்ட்களின் ஆதரவு பெற்ற கட்சிகள் 11; பிற கட்சிகளும் சுயேட்சைகளும் 86. காங்கிரஸ் 26 மாநிலங்களில் 22–ல் பெரும்பான்மை பலம் பெற்றது. மேலும் 4 மாநிலங்களில் தனிப் பெரும் கட்சியாக இருந்தது. ஜனசங்கம் மக்களவையில் 3 இடங்களையும், மாநிலங்களில் 35 இடங்களையும் பெற்றது. கம்யூனிஸ்ட் கட்சி மாநில சட்டப்பேரவைகளில் 106 இடங்களைப் பிடித்தது.

இந்தியாவின் சமகால வரலாற்றில் முதல் பொதுத் தேர்தல் நாடா
நாயக அரசியலில் நிகழ்ந்த அமைதிப் புரட்சி ஆகும். 'வயது வந்தே
குரிமை' என்ற வாய்ப்பை வாக்காளர்கள் விவேகத்தோடு பயன்படு
ந்தியச் செல்வாக்குகளும், குறுகிய அணுகுமுறைகளும், கட்சிச் சச்சர
ணப்படினும் இப்பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும் பாரபட்சமின்றியும் நடை
ாலாம். உலகிலேயே 173 மில்லியன் வாக்காளர்களைக் கொண்ட தே
வற்றிகரமாக நடத்திய பெருமை இந்தியாவுக்குக் கிடைத்தது. இத்தேர்தல்
ட்சிகளுக்கும் மக்களுக்குமிடையே நெருக்கத்தை ஏற்படுத்தியது. கா
ஜஸ்தானிலும், தென் மாநிலங்களிலும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை
அக்கட்சியே மத்தியிலும் மாநிலங்களிலும் மிகப் பெரும்பான்மையான இடங
பெற்றது. இத்தேர்தலின் மூலம் மக்கள் நேருவின் தலைமையை அங்கீகரித்தன
தேர்தல் இந்தியாவின் ஒற்றுமை, ஸ்திரத்தன்மை, சமயச் சார்பின்மை, தி
பொருளாதாரம், சமத்துவ சமுதாயம் ஆகிய குறிக்கோள்களை நிறை
காங்கிரசுக்குக் கொடுத்த '**உரிமைக் கட்டளை**' (Mandate) ஆகும். சுருங்கக்
இத்தேர்தல் தேர்தல் கமிஷனின் செயல்பாட்டுக்கும் நேருவின் தலைமைக்கும்
ரிகரமாக வெற்றியாகும்.

## 8.6 காமராஜர் திட்டம் (Kamaraj Plan)

சீன ஆக்கிரமிப்பு நேருவின் உடல் நிலையையும், மனநலத்தையும் பெரிதும் பாதித்தது. ஏமாற்றமுற்ற நேரு சோகச் சித்திரமானார். நாட்டு நலனை மனதில் கொண்டு இந்திய இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கான பல நடவடிக்கைகளை எடுத்தார். அதேபோன்று நிர்வாகத்துக்கு ஆதாரமான காங்கிரஸ் அமைப்பைச் சீரமைக்க முற்பட்டார். காங்கிரசாரிடையே பதவிப்பித்தும் ஒழுங்கின்மையும் பெருகிவிட்டதால் காங்கிரசைப் பலப்படுத்த விரும்பினார். இதுபற்றி நேரு சென்னை மாநில முதலமைச்சரான காமராஜரைக் கலந்தாலோசித்தார். அந்த சந்திப்பு ஐதராபாத்தில் நடைபெற்றது.

மூத்த காங்கிரஸ் தலைவர்கள் நிர்வாகத்திலிருந்து நீங்கி கட்சிப் பணிகளைக் கவனித்தால் காங்கிரசைப் பலப்படுத்த முடியும் என்று காமராஜர் கருதினார். காமராஜரின் கருத்தை நேரு ஏற்றுக் கொண்டார். அதுவே காமராஜர் திட்டமாக உருவெடுத்தது. காமராஜர் திட்டத்தைக் காங்கிரஸ் கமிட்டியும் ஏற்றுக் கொண்டது (1963, ஆகஸ்ட் 10). காமராஜர் திட்டப்படி நேரு பிரதமர் பதவியைத் துறக்க முன்வந்தார். மத்திய அமைச்சர்களும் மாநில முதலமைச்சர்களும் பதவிகளை ராஜினாமா செய்தனர். மத்திய அமைச்சர்களான மொரார்ஜி தேசாய், ஜெகஜீவன் ராம், லால்பகதூர் சாஸ்திரி, எஸ்.கே.பட்டீல், பி.கோபாலரெட்டி, கே.எல்.ஸ்ரீமாலி ஆகியோரின் ராஜினாமாக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதேபோன்று மாநில முதலமைச்சர்களில் காமராஜர், பிஜு பட்நாயக், பக்ஷி குலாம் முகமது, பினோதாநந் ஜா, சி.பி.குப்தா, பி.எ.மன்ட்லோய் ஆகியோரின் ராஜினாமாக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பதவி விலகிக் கட்சிப் பணியில் ஈடுபட வேண்டும் என்பது காமராஜர் திட்டத்தின் சாரமாகும். அத்திட்டப்படி 6 மூத்த மத்திய அமைச்சர்களும், 6 மாநில முதலமைச்சர்களும் பதவி விலகினர். காமராஜர் திட்டம் நேருவின் சோஷலிசத் திட்டங்களில் ஆர்வம் இல்லாதவர்களை நீக்குவதற்கான உத்தி என்று கருதப்பட்டது. அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களைக் கொண்டு கட்சிப் பணியை எவ்வாறு பலப்படுத்த முடியும்? கிராம அளவில் இவர்களால் என்ன செய்ய இயலும்? மேலும் கட்சியைப் பலப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த செயல் திட்டம் எதுவும் தயாரிக்கப்படவில்லை. இது ஒரு 'பட்டாசுக் கத்தி வெட்டு' ஆகும். வேண்டாதவர்களை விலக்குவதற்கான சூழ்ச்சி. இந்திரா காந்தி பதவிக்கு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்பாடே இது என்று பின்னர் கருத்து தெரிவித்தார் மொரார்ஜி தேசாய். காமராஜர் திட்டம் செயல்படுத்தப்பட்ட நான்கு மாதங்களுக்குள் லால் பகதூர் சாஸ்திரியை அமைச்சரவையில் இலாகா இல்லாத மந்திரியாக சேர்த்துக் கொண்டார் நேரு. நேருவின் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டார் சாஸ்திரி.

இரு நாடுகளின் நல்லுறவுக்குத் தடையாக

## காஷ்மீர்ப் பிரச்னை (Kashmir Problem)

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் காஷ்மீர் மகாராஜா இந்தியாவுடன் இணைவதா, பாகிஸ்தானுடன் சேர்வதா அல்லது என்பதை முடிவெடுக்க முடியாமல் குழம்பினார். அக்குழப்பத்தைப் பயன்படுத்தி பத்தான் மலைவாழ் மக்கள் காஷ்மீருக்குள் நுழைந்து, நில ஆக்கிரமிப்பு நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே ஹரி சிங் 1947 அக்டோபர் இந்தியாவின் உதவியைப் பெரும் பொருட்டு இந்தியாவுடன் இணை ஆனால் பாகிஸ்தான் காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதை ஏற்றுக் காஷ்மீர்ப் பிரச்னை பிறந்தது.

இந்தியாவின் கவர்னர்–ஜெனரலாக இருந்த மௌண்ட்பேட்டன் பிரச்னைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண முயன்றார். பிரத நிபந்தனைகளுடன் பேச்சு வார்த்தை நடத்தச் சம்மதித்தார்: 1) காஷ்மீர் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்; 2) பாகிஸ்தான் ஆக்கிரமித்த பகு வெளியேற வேண்டும்; 3) பாகிஸ்தான் காஷ்மீரிலிருந்து வெளி காஷ்மீரிலிருந்து இந்தியப் படையை விலக்கிக் கொள்ளும்; 4) மக்களாட்சி அ கட்டுப்பாட்டில் ஐ.நா. வின் மேற்பார்வையில் காஷ்மீர் மக்களிடையே கருத் (Plebiscite) நடத்தப்படும்.

பிரதமர் நேரு காஷ்மீர்ப் பிரச்னை பற்றிப் பாகிஸ்தான் அதிபர் ஜி பேச்சுவார்த்தை நடத்தினார். பயனில்லை. எனவே, 1947 டிசம்பர் 31–ஆம் தே காஷ்மீர்ப் பிரச்னையை ஐ.நா.வின் பாதுகாப்பு அவைக்குக் கொண்டு சென்றது அவை ஐவர் கொண்ட இந்திய–பாகிஸ்தான் ஐ.நா. கமிஷனை (U.N. Commis dia and Pakistan) நியமித்தது. அக்கமிஷன் காஷ்மீரில் 1949 ஜனவரி முதல் தேதி போர் நிறுத்தம் செய்வதில் வெற்றி பெற்றது. அதன்பின் பாதுகாப்பு அவை பிரச்னையைத் தீர்ப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன. பாகி 'இராணுவத் தீர்வால்' தோற்றுவிக்கப்பட்ட 'காஷ்மீர்ப் பிரச்னை' இந்தியாவின் தீர்வால்' முடிவுக்கு வரவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை இப்ப தொடர்கதையாகவே உள்ளது.

### 11.2.2. இந்திய–சீன உறவுகள்

# 12. பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி 1964-1966

> உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
> அச்சாணி அன்னார் உடைத்து.
>
> – திருக்குறள் (667)

## 12.1 சிண்டிகேட் (The Syndicate)

நேரு இறந்தவுடன் குல்சாரிலால் நந்தா தற்காலிகப் பிரத... பொறுப்பேற்றார். எனினும் நேருவுக்கு அடுத்த பிரதமரை முறையாகத் தேர்ந்தெ... வேண்டியிருந்தது. எனவே, காங்கிரஸ் தலைவராயிருந்த காமராஜர் ஒரு உட்கு... உருவாக்கினார். அக்குழுவில் அரசியல் செல்வாக்குமிக்க மூத்த காங்கிரஸ்கார... காமராஜர் (சென்னை), அதுல்ய கோஷ் (மேற்கு வங்காளம்), எஸ்.கே.பட்டீல் (ம... என்.சஞ்சீவ ரெட்டி (ஆந்திரா), எஸ்.நிஜலிங்கப்பா (மைசூர்) ஆகியோர் இடம் பெற்... இந்த காங்கிரஸ் உட்குழு **'சிண்டிகேட்'** என்று அழைக்கப்பட்டது. அதன் நோ... காங்கிரசுக்குக் கூட்டு தலைமைப் பொறுப்பேற்று, அடுத்த பிரதமர் யார் என்பதை மு... செய்வதாகும். இவர்களைப் **'பிராந்திய அதிகார-இடைத்தரகர்கள்'** (Regional Pow... Brokers) என்று வர்ணித்துள்ளார் தாரிக் அலி.

பிரதமர் பதவிக்கு குல்சாரிலால் நந்தா, மொரார்ஜி தேசாய், லால் பக... சாஸ்திரி, இந்திரா காந்தி ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. தற்கா... பிரதமராயிருந்த நந்தா அவரே பிரதமராக நீடிக்க வேண்டுமென்று விரும்பினார். மொ... தேசாய் மூத்த தலைவர் என்ற முறையில் பிரதமர் பதவிக்குப் போட்டியிடுவதற்கான வே... மனு தாக்கல் செய்தார். காங்கிரஸ் காரியக் கமிட்டி தேர்தல் மூலம் பிரத... தேர்ந்தெடுக்கப்படுவதை விரும்பவில்லை. பிரதமர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்க... வேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியது. காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சி... சார்பாகப் பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு காங்கிரஸ் தலைவர் காமராஜரி... ஒப்படைக்கப்பட்டது. காமராஜர் காங்கிரஸ் தலைவர்களின் பொதுக் கருத்தறிந்து (Con... sensus) பிரதமர் பதவிக்கு **லால் பகதூர் சாஸ்திரியின்** பெயரைப் பரிந்துரைத்தார். அதை... காங்கிரஸ் காரியக் கமிட்டி ஆமோதித்தது. அதை கட்சிக் கட்டுப்பாட்டுக்குப் பணி... தனது வேட்பு மனுவை திரும்ப பெற்றுக் கொண்டார் மொரார்ஜி தேசாய். காங்கிரஸ் க... கட்சி பிளவு படுவது தவிர்க்கப்பட்டது. காங்கிரஸ் **'சிண்டிகேட்'** பொதுக்கருத்தறி... பிரதமரை முடிவு செய்யும் மரபை உருவாக்கியது. 1964 ஜூன் 2-ஆம் தேதி லால் பகது... சாஸ்திரி போட்டியின்றிப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேருவுக்குப் பின் பிரதமர் பதவிக்கு சாஸ்திரியைத் தேர்ந்தெடுப்பதற்கா... காமராஜர் 'சிண்டிகேட்' கையாண்ட **'பொதுக்கருத்து விதிமுறை'** (Consensus Formu... காங்கிரஸ் கலாச்சாரத்தின் முன்மாதிரியாயிற்று. சாஸ்திரியைப் பிரதமராக்கியதன் மூல... காமராஜர் **'தலைவரைத் தீர்மானிப்பவர்'** (King-maker) ஆனார். கட்சித் தலைமைக்குக் கட்டுப்பட்டவரே ஆட்சித் தலைவர் என்ற கருத்து உறுதி செய்யப்பட்டது. அதாவது கட்சித் தலைவர்களால் பிரதமர் பதவியைத் தீர்மானிக்க முடியும் என்பது உணர்த்தப்பட்டது. எனவே, பிரதமர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமின்றிக் கட்சித் தலைவர்களுக்கும் கட்டுப்பட வேண்டும் என்பது கோடிட்டுக் காட்டப்பட்டது. அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றில் காங்கிரசின் செல்வாக்கு இருக்க வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. சுருங்கக் கூறின் காங்கிரஸ் கட்சியின் மேலாண்மைக்கு அடங்கியே காங்கிரஸ் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தோடும் எதிர்பார்ப்போடும் காங்கிரஸ் சிண்டிகேட் லால் பகதூர் சாஸ்திரியைப் பிரதமராக்கியது.

## 12.2. உழைப்பால் உயர்ந்தவர்

லால் பகதூர் சாஸ்திரி 1904 அக்டோபர் 2-ஆம் தேதி காசி நகரத்துக்கு அருகாமையில் **முகல்சராய்** என்ற ஊரில் பள்ளி ஆசிரியருக்கு மகனாகப் பிறந்தார். இளவயதில் தந்தையை இழந்த லால் பகதூர் தாய் மாமன் வீட்டில் தங்கிப் படித்தார். உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போது காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டார் (1920). தடையை மீறி ஊர்வலம் நடத்த முயன்றதற்காகக் கைது செய்யப்பட்டார்(1921). காசி வித்யா பீடத்தில் நான்காண்டுகள் தத்துவப் பாடத்தில் தேர்ச்சி பெற்று 'சாஸ்திரி' பட்டம் பெற்றார்(1924). நாட்டுப் பற்றுமிக்க லால் பகதூர் சாஸ்திரி சமூக சேவையில் நாட்டங் கொண்டார். 'லோக் சேவா மண்டல்' என்ற அமைப்பில் சேர்ந்தார்(1926). 1927-இல் லலிதா தேவியைத் திருமணம் செய்து கொண்டார். அடுத்த ஆண்டே அலகாபாத் நகர சபைத் தலைவரானார்(1928).

லால் பகதூர் சாஸ்திரி அரசியல் மேடைப் பேச்சாளர். வரி கொடா இயக்கத்தின்போது அலகாபாத் அரசாங்கத்துக்கு எதிராகப் பேசிய குற்றத்துக்காக இரண்டரை ஆண்டுகால சிறை தண்டனை பெற்றார்(1930). பின்னர் அலகாபாத்தில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்(1936). ஜமீன்தாரி முறையின் சீர்கேடுகளை ஆய்வதற்காக நியமிக்கப்பட்ட காங்கிரஸ் குழுவின் அமைப்புச் செயலாளராகவும், உத்தரப் பிரதேச 'பார்லிமெண்ட் போர்டு' தலைவராகவும் பணியாற்றினார். பண்டித கோவிந்த வல்ல பந்த் உ.பி.யின் முதலமைச்சரான போது சாஸ்திரி அவரது அமைச்சரவையில் போலீஸ் மந்திரியானார்(1937). 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றார்(1942). விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மொத்தம் 9 ஆண்டுகள் சிறைவாசம் செய்தவர் சாஸ்திரி!

இந்தியா விடுதலை அடைந்தபின் நேரு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது லால் பகதூர் சாஸ்திரி பொதுச் செயலாளராக இருந்தார்(1950). 1951-இல் நாடாளுமன்ற மாநிலங்கள் அவை உறுப்பினரானார். நேரு அமைச்சரவையில் இரயில்வே அமைச்சராக சேர்த்துக் கொள்ளப்பட்டார்(1952). இவரது பதவிக் காலத்தில் மூன்றாம் வகுப்புப் பெட்டிகளிலும் மின்விசிறிகள், தூங்க வசதிகள், இடப்பதிவு வசதி முதலிய வசதிகள் செய்யப்பட்டன. சித்தரஞ்சன் இரயில் பெட்டித் தொழிற்சாலை, பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை, விசாகப்பட்டினம் கப்பல் கட்டும் தளம் முதலியன தொடங்கப்பட்டன. 1952-இல் அரியலூரில் நிகழ்ந்த இரயில் விபத்துக்குத் தார்மீகப் பொறுப்பேற்று அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். 1957 நாடாளுமன்றத் தேர்தலில் அலகாபாத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட லால் பகதூர் சாஸ்திரி மீண்டும் நேரு

அமைச்சரவையில் இடம் பெற்றார். வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சராகவும் [illegible]
58), உள்துறை அமைச்சராகவும் (1958–59) திறம்படப் பணியாற்றினார். [illegible]
திட்டப்படி அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப் பணியில் ஈடுபட்டார். [illegible]

நேரு நோய்வாய்ப்பட்டதால் அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான [illegible] சாஸ்திரி மீண்டும் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். [illegible] பிரதமராக' (Defacto Prime Minister)ச் செயல்பட்டார். நேரு இறந்த பின் [illegible] சாஸ்திரி இந்தியாவின் இரண்டாவது பிரதமராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். நேருவின் குடும்பப் பின்னணியும், அவரின் ஆளுமையும், அவருக்குக் கட்சியின் [illegible] கட்டுப்பாடும், சர்வதேச அந்தஸ்தும் சாஸ்திரிக்கு இல்லை. எனினும் வறுமையில் [illegible] வறுமையில் வளர்ந்த சாதாரண மனிதர் தேசப் பற்றாலும், தியாகத்தாலும் [illegible] உயர்ந்து நாட்டின் உன்னதமான உயர்பதவியைப் பெறமுடியும் என்பதற்கு [illegible] சாஸ்திரி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## 12.3 உறுதியான பிரதமர்

லால் பகதூர் சாஸ்திரி ஒரு பலவீனமான பிரதமராக இருப்பார் [illegible] தலைமைக்கு கட்டுப்பட்டு நடப்பார், கூட்டுத் தலைமையின் கீழ் ஆட்சி செலுத்துவார் என [illegible] சிண்டிகேட் தலைவர்கள் எதிர்பார்த்தனர். அவர்களைக் கலந்தாலோசித்தே [illegible] அரசாங்கத்தை நடத்துவார் என்று நம்பினர். ஆனால் சாஸ்திரி சிண்டிகேட்டின் கைப்பாவையாக இருக்க விரும்பவில்லை. அவர் பிரதமர் பதவிப் பொறுப்பேற்று சுதந்திரத்துடன் செயல்படத் துவங்கினார். குட்டையான மனிதர் நெட்டையான முடிவுகளை எடுத்தார். பஞ்சுபோல் மிருதுவாகத் தோன்றினாலும் இரும்புபோல் உறுதியாக இருந்தார். பிரதமர் பதவி பற்றிய மயக்கமோ மருட்சியோ அவருக்கில்லை. பிரதமர் பொறுப்புகள் பற்றி சாஸ்திரி தெளிவாக இருந்தார். அவரது பதவியின் பரிமாணங்களை [illegible] நன்கறிந்திருந்தார். நேர்மை, வாய்மை, தூய்மை ஆகியவற்றை வழிகாட்டியாகக் கொண்டு கடமையாற்றினார். பிரதமர் பொறுப்பேற்றவுடன் நாட்டு மக்களுக்கு [illegible] மூலம் உரையாற்றிய சாஸ்திரி மகாத்மா காந்திக்கும், பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் [illegible] எழுப்பக்கூடிய பொருத்தமான நினைவுச் சின்னம் 'சுதந்திரமான சுபிட்சமான, [illegible] இந்தியாவை நிர்மாணிப்பதாகும்' என்று குறிப்பிட்டார். அதன்படி 'நிலையில் [illegible] நடந்து கொண்டார்.

## 12.4 சாஸ்திரியின் அமைச்சரவை

பொதுக்கருத்து அடிப்படையில் பிரதமரானார் லால் பகதூர் சாஸ்திரி. [illegible] சாஸ்திரி சுதந்திரமாகவும், துணிச்சலுடனும் அவரது அமைச்சரவையை அமைத்தார். [illegible] பிரதமர் பதவிப் போட்டியில் தோல்வியுற்ற குல்சாரிலால் நந்தாவுக்கு அமைச்சரவையில் பிரதமருக்கு அடுத்த இடம் அளிக்கப்பட்டது. மொரார்ஜி தேசாய் இடம் பெறவில்லை. இந்திரா காந்திக்கு வெளியுறவு இலாகாவைக் கொடுக்காமல் தகவல் தொடர்பு ஒலிபரப்பு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது. இந்திரா காந்திக்கு வெளியுறவுத் துறை கொடுக்கப்பட்டிருந்தால் ரஷ்யர்களும் இடதுசாரிகளும் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்திருப்பர். அரிஜனத் தலைவர் ஜெகஜீவன் ராமுக்கு சாஸ்திரியின் அமைச்சரவையில் இடம் [illegible] தரவில்லை.



பகதூர் சாஸ்திரி இந்த விஷயத்தில் சாஸ்திரி சிண்டிகேட் தலைவர் காமராஜரைக் கலந்தாலோசிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயம் தமிழ்நாட்டைச் சேர்ந்த [illegible] சாஸ்திரி அமைச்சரவையில் இடமளிக்கப்பட்டது. [illegible] காபினட் அமைச்சர்கள். ஓ.வி. அழகேசன் [illegible] சி. சுப்பிரமணியமும் [illegible] டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன், சி.ஆர். பட்டாபிராமன், [illegible] சந்திரசேகர் ஆகிய நால்வரும் துணை அமைச்சர்கள்.

## 12.5 புதிய பொருளாதாரக் கொள்கை

### 12.5.1 பொருளாதார விளைவுகள்

லால் பகதூர் சாஸ்திரி நேரு வகுத்துக் கொடுத்த 'திட்டமிட்ட பொருளாதாரப் பாதை'யில் செல்ல வேண்டிய கட்டாயத்துக்குட்பட்டிருந்தார். சோஷலிசமே நமது குறிக்கோள் என்று முழங்கினார் எனினும், நேருவுக்கு சோஷலிச சித்தாந்தத்தில் இருந்த [illegible] சாஸ்திரிக்கு இல்லை. சாஸ்திரியின் உதடு 'சோஷலிசம்' என்ற சொல்லை உச்சரித்தாலும், அவரது உள்ளம் 'முதலாளித்துவ முறை'யில் உறைந்திருந்தது. நேரு ஒரு சிந்தனையாளர் சித்தாந்தி. மாறாக, சாஸ்திரி ஒரு யதார்த்தவாதி. காரியவாதி. [illegible] நடைமுறை விளைவில் நாட்டம் கொண்டவர். நேரு தூரத்துக் கனவுகள் கண்டார். [illegible] விரும்பினர். ஆனால், லால் பகதூர் சாஸ்திரி [illegible] பார்க்கத் துடித்தனர். எனவே, லால் பகதூர் சாஸ்திரி சித்தாந்தம் பேசுவதை விடுத்து வறுமை, விலைவாசி, வேலையின்மை, ஏழைகளின் ஏற்றம் பற்றிக் கவலைப்பட்டார். [illegible] சாஸ்திரி நேருவைப் போன்று 'சோஷலிச சமுதாய'த்துக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை.

நேருவின் ஆட்சிக்காலத்தில் ஆர்வத்துடன் நடைமுறைப் படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் எதிர்பார்த்த பொருளாதார விளைவுகளைத் தரவில்லை என்பதைக் கண்டார் சாஸ்திரி. எடுத்துக்காட்டாக, ஆண்டு நாட்டு வருமானம் மக்கள் தொகைப் பெருக்கத்துக்கேற்ப உயரவில்லை. விலைவாசி குறையவில்லை. உணவுப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. மூன்றாவது திட்டகாலத்தில் சாதனைகள் இலக்குகளுக்கு (Targets) மிகவும் குறைவாக இருந்தன. நிதி பற்றாக்குறை [illegible] திட்டங்களின் பயன்களும் திருப்திகரமாக இல்லை. பல திட்டங்கள் நிறைவடையாமல் நின்றன. பொதுத்துறை நிறுவனங்கள் அரசாங்க ஆதரவுடன் 'வெள்ளை யானை'களாக வளர்ந்து வந்தன. அவற்றோடு வறுமையும் வேலையின்மையும் வளர்ந்தன.

### 12.5.2 கிராமப் பொருளாதாரம்

லால் பகதூர் சாஸ்திரி ஒரு முழுமையான காந்தியவாதி. அவர் காந்தியடிகளின் கிராமப் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தில் நம்பிக்கை உடையவர். உண்மையான இந்தியா கிராமங்களில் உள்ளது என்ற யதார்த்தத்தை உணர்ந்தவர். ஆக்க [illegible] இயந்திரங்களைக் கொண்டு இந்தியாவைத் தொழில்மயமாக்குவதை விரும்பாதவர். குறைந்த [illegible] வறுமையும் வேலையின்மையும் நிறைந்த நாட்டில் அதிக முதலீடு செய்து [illegible] பொருளாதார [illegible] தொழிலாளர்களைக் கொண்டு [illegible] இயந்திரங்களைக் கொண்டு [illegible] நல்லதல்ல என்று நினைத்தார். எந்திரங்களைக் கொண்டு [illegible] முன்னுரிமை கொடுத்தார் நேரு. எந்திரங்களைக் கொண்டு [illegible] எனவே, குறைந்த [illegible] தயாரிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார் சாஸ்திரி. [illegible] நடைமுறை சாத்தியமான திட்டங்களைத் [illegible] விரைந்த பயனளிக்கக் கூடிய, சிறிய, நடைமுறை சாத்தியமான தேவைகளைப் பூர்த்தி [illegible] மக்களின் அன்றாடத் தேவைகளை [illegible] வேண்டியதன் [illegible]

இன்றியமையாமையை வலியுறுத்தினார். மேடைதோறும் 'ஜெய் ஜவான்
'ஜெய்ஹிந்' என்று முழக்கமிட்டார். சுருங்கக் கூறின், விவசாய
அடிப்படையாகக் கொண்ட கிராமப் பொருளாதாரமே சாஸ்திரியின்
குவிமையமாக இருந்தது.

## 12.5.3. விவசாய வளர்ச்சி

லால் பகதூர் சாஸ்திரி விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை
'இந்தியருக்கு கடவுள் ரொட்டி உருவத்தில்தான் காட்சியளிக்க
காந்தியடிகளின் வாக்கை வேதவாக்காகக் கொண்டார் சாஸ்திரி. எனவே
ஐந்தாண்டு திட்டத்தில் விவசாய வளர்ச்சிக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்
பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கான செயலுத்தி பற்றித் திட்டக் கமிஷனுக்
அமைச்சராயிருந்த சி.சுப்பிரமணியத்துக்குமிடையே கருத்து வேறுபாடு ஏ
பிரதமர் சாஸ்திரி உணவு அமைச்சர் கரங்களைப் பலப்படுத்தினார். விலைக
கொள்முதல் கட்டுப்பாடு, உணவுப் பொருள் கட்டுப்பாடு மூலம் அரசா
தலையீட்டை அதிகரிக்க வேண்டும் என்றது திட்டக்கமிஷன். மாறாக, விவசா
ஊக்கமளித்து, விவசாயப் பொருள்களுக்கு நியாய விலை நிர்ணயித்
விளைச்சலைக் கொடுக்கக்கூடிய விஞ்ஞான விவசாய முறைகளைப் பின்பற்றி
முதலீட்டை அதிகரித்து, பி.எல்.480 அமெரிக்க தானிய இறக்குமதி செய்
நெருக்கடியைத் தீர்க்கலாம் என்ற உணவு அமைச்சரின் 'புதிய விவசாயக் கொ
பிரதமரின் அங்கீகாரத்தைப் பெற்றது. அதனடிப்படையில் 'விவசாய விலைக் க
வகுக்கப்பட்டது. இரயில்வே அமைச்சர் எஸ்.கே.பட்டீலை அமெரிக்காவுக்
உடனடியாக நான்கு மில்லியன் டன் கோதுமை, மூன்று இலட்சம் டன் அரி
தயங்கவில்லை. சாஸ்திரி கம்யூனிஸ்டுகள் மற்றும் காங்கிரஸ் இடதுசா
கடுமையான விமரிசனத்தையும் எதிர்ப்பையும் மீறி புதிய விவசாய ம
கொள்கையைத் துணிவுடன் தொடர்ந்தார்.

## 12.5.4. தனியார் துறையின் பங்கு

நேருவின் 'கூட்டுப் பொருளாதார' (Mixed Economy)–த்தில் பொது
(Public Sector) தொழில் நிறுவனங்களுக்கும், முதலீட்டுக்குமே முக்கிய
கொடுக்கப்பட்டது. அதற்குக் காரணம் 'அந்நிய முதலீடு அந்நிய ஆதிக்க
அதிகரிக்கும்' என்று நேரு கருதியதே ஆகும். மாறாக, சாஸ்திரி வெளி
மூலமாகத்தான் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறமுடியும், அ
கடன்களைப் பெறும் தகுதியைப் பலப்படுத்திக் கொள்ள இயலும் என்று வா
அரசாங்க பொதுத்துறை நிறுவனங்களிலும் அந்நிய முதலீட்டை ஊக்குவி
பொதுத்துறையில் போடப்படும் பொதுப்பணம் புனித முதலீடாக இருக்க வேண்டு
எதிர்பார்த்தார். கூட்டுப் பொருளாதாரத்தில் தனியார் துறையின் பங்கையும், அ
முதலீட்டுப் பெருக்கத்தையும் ஊக்குவிக்க விரும்பினார் சாஸ்திரி. எனவே லால் ப
சாஸ்திரியை பொருளாதார தாராளமயக் கொள்கையின் முன்னோடி என்று கூறு
தவறில்லை.

## 12.5.5. திட்டக் கமிஷன் சீரமைப்பு

நேருவின் ஆட்சிக் காலத்...



முக்கியத்துவத்தைக் குறைக்கவில்லை. ஆனால் லால் பகதூர் சாஸ்திரி திட்டக் கமிஷன் அரசாங்கம் என்ற நாயின் வாலாக இருக்க வேண்டும்; வால் நாயை ஆட்டக்கூடாது என்று கருதினார். எனவே, திட்டக் கமிஷனின் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் படிப்படியாகக் குறைத்தார். திட்டச் செலவைப் பாதியாகக் குறைக்க வேண்டும் என்றார். வரி பளுவைக் குறைத்து, நிதிக் கட்டுப்பாட்டை அதிகரிக்க முற்பட்டார்.

திட்டக் கமிஷன் **'அறிவு ஜீவிகளின் பேச்சுக் கூடம்'** என்றார் சாஸ்திரி. சாஸ்திரியின் அணுக்க நண்பரான திரிலோகி நாத்சிங்கை திட்டக் கமிஷனராக்கி தனது எண்ணத்தை நிறைவேற்ற முற்பட்டார். அதே போன்று நிதி நிபுணரான லக்மி காந்த் ஜா–வைத் தனது செயலாளராக நியமித்துக் கொண்டு நிதிக்கட்டுப்பாட்டைக் கொண்டுவர முற்பட்டார். அதுமட்டுமல்ல. திட்டக் கமிஷன் உறுப்பினர்கள் காலக்கெடு எதுவுமின்றி பதவியில் நீடிப்பதை நிறுத்தினார். அமைச்சர்கள் நேரடியாகத் திட்டக் கமிஷனோடு விவாதித்துத் துறைத் திட்டங்களை முடிவு செய்யும் பழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அமைச்சகங்களுக்கிடையே திட்ட சம்பந்தமான கருத்து வேறுபாடுகள் இருப்பின் அவற்றை அமைச்சரவைக் கூட்டங்களிலேயே பேசித் தீர்த்துக் கொள்ளும் புதிய முறையைக் கொண்டு வந்தார். தேசி ய வளர்ச்சிக் குழு (National Development Council)–வை ஐந்து கமிட்டிகளாகப் பிரித்துத் திட்டக் கமிஷனை மேலும் பலவீனப்படுத்தினார். முதல் முறையாக மாநில முதலமைச்சர்கள் தேசியப் பொருளாதாரக் கொள்கையில் முறையாகப் பங்கேற்பதற்கு வழி செய்தார் லால் பகதூர் சாஸ்திரி.

## 12.5.6. மதிப்பீடு

லால் பகதூர் சாஸ்திரி நேருவின் சோஷலிச சமுதாயத்துக்கான திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சிக்கு மாற்றுத் திட்டத்தைக் கொண்டுவர முற்பட்டார். கிராமப் பொருளாதாரம், விவசாய வளர்ச்சி, தனியார் துறை மற்றும் அந்நிய முதலீட்டு ஊக்குவிப்பு, திட்டக் கமிஷன் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால் நினைப்பு வேறு நடைமுறை வேறு என்பதை விரைவிலேயே புரிந்து கொண்டார் சாஸ்திரி. நேருவின் சோஷலிசப் பொருளாதாரப் பாதையை விட்டு விலகுவது இயலாத காரியம் என்பதை உணர்ந்தார். 1965 ஜனவரி மாதம் துர்க்காப்பூரில் கூடிய காங்கிரஸ் ஆண்டுக் கூட்டத்தில் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் புதிய பொருளாதார அணுகுமுறை கடுமையாக விமரிசிக்கப்பட்டது. காங்கிரஸ் இடதுசாரிகள் **'சோஷலிசச் செயலுக்கான காங்கிரஸ் பேரவை'** (Congress Forum for Socialist Action) என்ற அமைப்பை ஏற்படுத்திப் புதிய பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்தனர். 'நேருவின் இலட்சியங்கள் நோக்கித் திரும்பவேண்டும்' என்று கோரினர்.

திட்ட விடுமுறை (A Plan Holiday) கொடுக்க விரும்பிய லால் பகதூர் சாஸ்திரி நேரு ஒப்புதல் கொடுத்த நான்காவது ஐந்தாண்டுத்திட்ட வழிகாட்டு நெறிகளை மீறிச்செல்ல அஞ்சினார். சிறு மாற்றங்களுடன் திட்டக்கமிஷன் தீட்டிய நான்காவது திட்டத்தை ஏற்றுக் கொண்டார். திட்டக் கமிஷனின் அதிகாரத்தைக் குறைக்க முற்பட்டு, தேசிய வளர்ச்சிக் குழுவைக் கமிட்டிகளாகப் பிரித்ததன் மூலம் பிரதமர் சாஸ்திரி மாநில முதலமைச்சர்களைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 'நேருவுடன் கருத்து வேறுபாடு கொண்ட முதலமைச்சர்கள் திட்டத்தை நிறைவேற்றினர்; ஆனால் சாஸ்திரியுடன் ஒத்துப்போன முதலமைச்சர்கள் திட்டத்தை நிறைவேற்றவில்லை' என்றார் முன்னாள் உள்துறைச் செயலாளர் எல்.பி.சிங். இந்திரா காந்தி சாஸ்திரியின் ... வெளிப்படையாகவே விமரிசிக்கலானார். இந்தியா–

கொடுக்க...
முழுப்புரட்சி' இந்திய மக்க...

### 15.2.5. ஜெயப்பிரகாஷ் நாராயண் (1902–1979)

ஜெயப்பிரகாஷ் நாராயண் (ஜே.பி.) 1902 அக்டோபர் 11–ஆம் தேதி பீகார் மாநிலத்தில் சீதாப்தியாரா என்ற கிராமத்தில் ஒரு மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே அளவுக்கு மீறிய அறிவாற்றலைப் பெற்றிருந்த ஜே.பி.பாட்னா கல்லூரிப் பள்ளியில் பயின்றார். பள்ளிப் பருவத்திலேயே பாட்னாவில் தேசிய அரசியல் மையமாக விளங்கிய சரஸ்வதி பவன் நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். 1920 மே 16 ஆம் தேதி ஜே.பி. பிரபாவதியைத் திருமணம் செய்து கொண்டார்.

1922 அக்டோபர் 8–ஆம் தேதி ஜே.பி. அமெரிக்கா சென்றார். அங்கு பகுதி நேர வேலை செய்து சம்பாதித்து கலிபோர்னிய, ஐயோவா, சிக்காகோ, ஓஹியோ பல்கலைக்கழகங்களில் மேற்படிப்பைத் தொடர்ந்தார். அறிவியல், கணிதம், பொருளாதாரம், சமூகவியல், உளவியல், வரலாறு, இலக்கியம், மொழியியல், உடற்கூறியல், நுண்ணுயிரியல் போன்ற பாடங்களை ஆர்வத்துடன் கற்றார். ஐரோப்பிய அறிவாளிகளுடன் தொடர்பு கொண்டு மார்க்சிய சித்தாந்தத்தில் ஆர்வம் கொண்டார். அமெரிக்காவில் ஏழாண்டுகளைக் கழித்த ஜே.பி. 1929 நவம்பர் மாதம் இந்தியா திரும்பினார்.

அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய ஜே.பி. இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். 1929 டிசம்பர் மாதம் வார்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது ஜே.பி. க்கு காந்தி, நேரு ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டது. நேரு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது ஜே.பி. காங்கிரஸ் தொழிலாளர் துறையின் செயலராக நியமிக்கப்பட்டார். பின்னர் காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினரானார். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் சார்பாக தென் மாநிலங்களில் பயணம் செய்து கொண்டிருந்த ஜே.பி. 1932 செப்டம்பர் 7–ஆம் தேதி சென்னை ரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டார். நாசிக் சிறையில் இருந்தபோது மினோ மசானி, அச்யுத் பட்வர்த்தன், அசோக் மேத்தா, என்.ஜி.கோரே, எஸ்.எம்.ஜோஷி எம். எல்.தண்ட்வாலா போன்றோருடன் சோஷலிஸ்ட் கட்சியைத் துவக்குவது பற்றிக் கலந்தாலோசித்தார். அதன் விளைவாக 1934–ஆம் ஆண்டு காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி துவக்கப்பட்டது.

(1943 மே). அச்சிறையிலிருந்து தப்பிய ஜே.பி. ... செய்யப்பட்டு ஹனுமான் நகர் சிறையில் ... விடுதலைப் போராட்ட ... இராணுவத்துடன் தொடர்பு கொள்ள முயன்றார். 1943 செப்டம்பர் 18 ... நேதாஜியின் ... அமிர்தசரசில் கைது செய்யப்பட்டு, லாகூர் கோட்டையில் சிறையிலிருந்து ... சிறைக்கு மாற்றப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார் (1946 ஏப்ரல் ...).

1946–இல் நேரு இடைக்கால அரசாங்கத்தில் சேர ... அரசியலமைப்புச் சட்டசபையில் இடம் பெற இசைந்ததையும் ஜே.பி. கடுமையாக ... இந்தியாவை மற்றொரு போராட்டத்துக்குத் தயார் செய்ய வேண்டுமென ... 1947 பிப்ரவரி மாதம் ஜே.பி. யும் அவரது சகாக்களும் காங்கிரஸ் சோஷலிஸ்ட் ... பெயரை சோஷலிஸ்ட் கட்சி என்று மாற்றினார். இந்தியா சுதந்திரம் பெற்ற ... பிரதமர் நேருவுடன் கருத்து மாறுபாடு கொண்டார். 1948 நாசிக் மாநாட்டில் ... கட்சி தாய்க்கட்சியான காங்கிரசை விட்டுப் பிரிவதென்று தீர்மானித்தது. ... மாதம் பாட்னாவில் ஜே.பி.யின் தலைமையில் பிரமாண்டமான 'விவசாயிகள் ... நடத்தப்பட்டது. 1952–இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சோஷலிஸ்ட் கட்சி ... எதிராகப் போட்டியிட்டது. 1954–ஆம் ஆண்டு ஜே.பி. சோஷலிஸ்ட் கட்சியை ... வினோபாவே அடிகள் துவக்கியிருந்த சர்வோதயா இயக்கத்தில் சேர்ந்தார்.

சர்வோதய இயக்கத்தில் சேர்ந்த ஜே.பி. வினோபாவே அடிகள் ... கிராமதான, பூதான, சம்பத்தான இயக்கங்களில் ஆர்வத்துடன் பங்கேற்ற ... பௌனார் ஆசிரமத்தில் வினோபாவே அடிகளுடன் தங்கியிருந்தபோது 'முழுப் ... Revolution) யின் தேவை பற்றிக் குரல் கொடுத்தார். பீகார் நக்சலைட்டுகள் ... முசாபர்பூரில் சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக்காரர்கள் ஜே.பி. யிடம் சரண ... முழுப்புரட்சியின் தேவையை உணர்த்தியது. 1974 இல் குஜராத்தில் வெடித்த ... ஜே.பி. யின் முழுப்புரட்சி துவக்கப்படுவதற்குத் தூண்டுகோலாக இருந்த ... கிளர்ச்சியின் போது முழுப்புரட்சி துவக்கப்பட்டது. அதன் விளைவாக 1977–இல் ... யின் தலைமையில் ஜனதா கட்சி துவக்கப்பட்டது. அக்கட்சி தேர்தலில் அமோக ... பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. ஜே.பி.யின் முழுப்புரட்சி 'ஜனதா புரட்சி ... உருவெடுத்தது.

### 15.2,6 முழுப்புரட்சி (Total Revolution)

ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு இலட்சிய சமுதாயம் பற்றிய தொலை ... இருந்தது. அந்த நோக்கை அடைவதற்காக அவர் மார்க்சிய, ஜனநாயக சோ ... சர்வோதய மார்க்கங்களில் சென்றார். அவருக்கு குறுகிய காலத் தீர்வுகளில் ந ... இல்லை. மக்களின் அடிப்படைப் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண முயன்றா ... புரட்சியே இந்தியாவின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான வழி என்பதை உணர்ந்தா ... கூறிவந்த மக்கள் பங்கேற்கும் ஜனநாயகம், மக்கள் விழிப்புணர்வுக் கல்வி, அ ... அதிகாரப் பரவல் முறை, நிர்வாகத்தில் தூய்மையும் அரசியல் கட்சி ... குறுக்கீடின்மையும், குறைந்தபட்ச ... கட்டுப்பட்ட ...

... மறைமுக தேர்தல் பற்றிய கருத்து ... உருவாக்கினார்.

**பொருள் விளக்கம்**

'முழுப்புரட்சி' என்பது புரட்சிகளின் புரட்சி. ''முழுப்புரட்சி என்பது ஏழு புரட்சிகளின் தொகுப்பு'' என்று வரையறுத்துள்ளார் ஜே.பி. அதாவது சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார, குறிக்கோள், கல்வி மற்றும் ஒழுக்கப் புரட்சிகளின் சங்கமமே முழுப்புரட்சியாகும். சமுதாயத்தின் ஒரு துறையிலோ அல்லது ஒருசில துறைகளிலோ மாற்றங்கள் ஏற்பட்டால் போதாது. சமுதாயப் பன்முக மாற்றமே முழுப்புரட்சியைத் தோற்றுவிக்கும். இம்மாற்றங்கள் ஏககாலத்தில் ஏற்பட வேண்டும். அப்போதுதான் சமுதாயச் சமநிலை மலர்ச்சியும், வளர்ச்சியும் உண்டாகும். வளர்ச்சித் திட்டங்களில் பயன் சமுதாயப் பலகணியின் கடைசிப் படியில் உள்ளவரை சென்றடையும். ''கடையனுக்கும் கடைத்தேற்றம்'' (Unto this last) என்ற சர்வோதய சமுதாயம் முடிவு என்றால் முழுப்புரட்சி அந்த இலக்கை அடைவதற்கான மார்க்கமாகும்.

**சிறப்பியல்புகள்**

ஜே.பி. யின் 'முழுப் புரட்சி' தனித்தன்மை வாய்ந்தது. அதன் சிறப்பியல்புகளாவன : 1) இலட்சிய சமுதாயம் சுதந்திரம், சமத்துவம், அமைதி, அகிம்சை, சகோதரத்துவம் ஆகிய மனிதப் பண்புகளின் அடிப்படையில் அமைக்கப்படும். 2) சிறிய சமுதாயமே அழகான அமைப்பாகும் (Small is Beautiful). 3) அனைவரது நலனும், மகிழ்ச்சியும், முன்னேற்றமுமே முக்கியம். 4) அமைதிவழி மனமாற்றமே சமூக சமத்துவத்துக்கான உத்திரவாதமாகும். 5)முடிவை (End) ப் போன்றே மார்க்கமும் (Means) முக்கியமாகும். 6) அதிகாரக் குவிப்பும் ஜனநாயகமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. 7) கிராம ராஜ்யம்தான் சுயாட்சியின் ஆணிவேர். 8) இளைஞர்களால் தான் முழுப்புரட்சியைக் கொண்டுவர முடியும். 9) அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மக்கள் பங்கேற்கும் சுதந்திரமான, நேர்மையான, ஊழலற்ற ஆட்சி. 10) ஏழை எளியோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் விகிதாச்சார பிரதிநிதித்துவம் (Proportional Representation) கொடுக்கப்பட வேண்டும். 11) அரசியல் கட்சிகளற்ற ஜனநாயகம் (partyless Democracy) சிறந்தது. 12) அநீதியும், சுரண்டலும், ஏற்றத்தாழ்வும் எந்த வடிவத்திலும் இருத்தலாகாது.

**சிறப்புக் கூறுகள்**

முழுப்புரட்சி **புரட்சிகளின் புரட்சி** (Revolution of Revolutions) ஆகும். இது ஏழு புரட்சிகளின் இரசாயனக் கலவையாகும்.

**1. சமூகப் புரட்சி**

சுரண்டலற்ற சமூக சமத்துவச் சீரமைப்பே சமூகப் புரட்சி ஆகும். சில சமுதாய வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவை. ஆனால் அசாதாரண வேறுபாடுகளும் மாறுபாடுகளும் நீக்கப்படுதல் வேண்டும் என்றார் ஜே.பி. கிராம நாகரிகமே சமூகப் புரட்சியின் குவிமையமாகும்.

**2. பொருளாதாரப் புரட்சி**

பொருளாதாரப் புரட்சி மனிதனை மையமாகக் கொண்டது. தனியார் முதலாளித்துவம் (Private Capitalism) மற்றும் அரசாங்க முதலாளித்துவம் (State Capitalism) இந்தியாவுக்குப் பொருத்தமற்றவை. மனித நடவடிக்கைகளையும்,

Property) தனிப்பட்ட உடைமை (Personal Property) யினின்றும் வேறு... மையப்படுத்த வேண்டும். தனி உ... உடைமையை சமுதாய உடைமையாக்கல் வேண்டும். 'வர்த்தக நோக்க... அறிவியலுக்கு பதில் மனிதநேய அறிவியல் பொருளாதார வளர்ச்சிக்கு உத... பொருளாதாரப் பரவல் முறையே சுயசார்புடைமை சமுதாயத்தின் அடிப்படை...

### 3. அரசியல் புரட்சி

ஜே.பி.யின் அரசியல் புரட்சி பற்றிய கருத்துக்களை 'சோஷலிசத்... சர்வோதயம் வரை' (From Socialism to Sarvodaya) என்ற நூலில் விவரித்துள்ளா... சமூகமே (Stateless Society) இலட்சிய சமூகமாகும். புதிய அரசியல் அமைப்பு... சிறப்பம்சங்களாவன: 1) ஒருமித்த கருத்து (Consensus) அடிப்படையில்... எடுக்கப்பட வேண்டும். 2) கட்சிகளற்ற அரசியல் 3) நலநாடு (Welfare State) ... பதில் நலச்சமூகம் (Welfare Society) உருவாதல் 4) கட்டாயப்படுத்தும் அதிகா... (Coersive authority) பதில் சுயகட்டுப்பாட்டு அதிகாரத்துக்கு (Self-regulating ... முன்னுரிமை கொடுக்க வேண்டும். 5) அரசியல் பிரச்னைகள் அகிம்சை வழி தீர்க்க... வேண்டும். 6) நேரடித் தேர்தலுக்கு (Direct Election) ப்பதில் மறைமுகத் தேர்த... Election) அடிப்படையில் பஞ்சாயத்து அதிகாரப் பரவல் முறை அரசிய... வாக்குறுதிகளை நிறைவேற்றாத பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்துக் கோரும்... (Right to Recall) மக்களுக்கு இருக்க வேண்டும்.

### 4. கலாச்சாரப் புரட்சி

ஒருவருடைய சுதர்மம் தன்னைப் பற்றியும் பிறரைப் பற்றியும் அ... கொள்வதாகும். பிறருக்காகச் செய்யும் சேவையே உண்மையான தியாகம் ஆகு... நலன்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் நற்செயல்கள் மக்கள்... அன்யோன்யத்தை வளர்க்கிறது. தீய செயல்கள் மக்களிடையே பிளவை ஏற்படுத்... மனித மதிப்புகளில் குறிப்பாகப் பொறுமை பணிவு, உண்மை, அன்பு, பரிவு... இருக்க வேண்டியது இன்றியமையாதது.

### 5. கல்விப் புரட்சி

கல்விக் கொள்கை தேசிய வளர்ச்சித் திட்டத்தோடு தொடர்புபடுத்த... வேண்டும். அனைவருக்கும் ஆதாரக் கல்வி அளிக்கப்பட வேண்டியது அவசிய... தொழிலைச் சுற்றிப் பின்னப்படுதல் வேண்டும். தொடர்புபடுத்தலும், சுயசார்பு... தேசிய கல்விக் கொள்கையின் குறிக்கோள்களாகும். கல்வி வாழ்க்கையோடு ஒ... வேண்டும்.

### 6. அறிவுப்புரட்சி

பிரச்னைகளுக்கு அறிவுப்பூர்வமாக அணுகும்போது மனிதன் புரட்சி... ஆகிறான். அறிவு, உணர்ச்சி, உறுதி ஆகியவற்றுக்கிடையே சமநிலையை ஏற்... முற்படுகிறான். அப்போதுதான் மனிதனால் கடந்த காலம், நிகழ்காலம், எதி... ஆகியவற்றுக்கிடையேயான தொடர்பைக் காண முடியும். ''புதிய கருத்துக்க... மதிப்புகளையும் ஏற்றுக் கொள்வது கடினம்தான். எனினும், சாதாரண மக்... படிப்படியாகப் புரட்சிக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளத்தக்க திட்டத்தை உரு... வேண்டும்'' என்று விரும்பினார் ஜே.பி.

### 7. ஒழுக்கப் புரட்சி

ஒழுக்கம் என்பது மனக்கட்டுப்பாடு. சுயகட்டுப்பாடின்றிப் பொருள்களைக் குவிப்பதும், ஆடம்பரமாக வாழ்வதும் ஒழுக்கக் கேடாகும். ''பேராசை, வரம்பு மீறல், தீய வழியில் சொத்து சேர்த்தல், ஆன்மீக விரோதச் செயல்களாகும்''. ஒழுக்கப் புரட்சி ஏற்பட்டால்தான் உயர்ந்தவர்–தாழ்ந்தவர்; பலமானவர்–பலவீனர் என்ற உட்சமூக முரண்பாடுகள் மறையும். அமைதி, சுதந்திரம், சமத்துவம் தழைக்கும்.

### மதிப்பீடு

ஜே.பி.யின் 'முழுப்புரட்சி' மேற்கண்ட ஏழு புரட்சிகளின் கூட்டு விளைவாகும் மக்கள் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளை மாற்றியமைக்கும் இப்புரட்சிகள் ஏககாலத்தில், இயல்பாக, படிப்படியாக, சாத்வீகமாக, மக்கள் பங்கேற்புடன் ஏற்பட வேண்டியது இன்றியமையாதது. ''அடிப்படை மாற்றங்களை முதலில் முறையாகச் செய்ய வேண்டும். அதன்பின் தனிமனித, சமூக மனமாற்றம் தொடரும்'' என்றார் ஜே.பி. சுருங்கக்கூறின், ஜே.பி. யின் 'முழுப்புரட்சி' மக்களை மையமாகக் கொண்டது, ஆக்கபூர்வமானது. பொருத்தமானது, யதார்த்தமானது, அறிவுபூர்வமானது, தேசியத்தன்மை கொண்டது.

## 15.3. உடனடிக் காரணம்

### 15.3.1. அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பு, 1975

**1975–ஆம் ஆண்டு** சமகால இந்திய வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்திய ஆண்டாகும். எதிர்பாரா நிகழ்ச்சிகள் இந்திய அரசியலில் கொந்தளிப்பையும், குழப்பத்தையும், நெருக்கடியையும் ஏற்படுத்தி விட்டன. அவ்வாண்டு ஜூன் மாதம் 12–ஆம் தேதி இந்தியப் பிரதமர் **இந்திரா காந்தி நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது** என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. காரணம் 1971–இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தி அவருக்கு எதிராகப் போட்டியிட்ட ராஜ் நாராயணை (Raj Narayan) விட 1,00,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்திரா காந்தி 'நியாயமற்ற நடவடிக்கைகளை' (Unfair Practices)க் கையாண்டு தேர்தலில் வெற்றி பெற்றதாக ராஜ் நாராயண் வழக்கு தொடர்ந்தார். அவ்வழக்கை விசாரித்த நீதிபதி **சின்ஹா** 1) இந்திரா காந்தியின் தேர்தல் செல்லாது; 2) அவர் அடுத்த ஆறு ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிடக் கூடாது; 3) அத்தீர்ப்பை எதிர்த்து இருபது நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம் என்று தீர்ப்பளித்தார். அத்தீர்ப்பு அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. நம்ப முடியாதது நடந்து விட்டது.

அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பு வதந்தியைக் கட்டவிழ்த்து விட்டது. பிரதமர் இந்திரா காந்தி பதவி விலகுவாரா? பதவி விலகினால் அதன் அரசியல் விளைவுகள் என்னவாக இருக்கும்? பதவி விலகாவிட்டால் என்னவாகும்? நீதிமன்றத் தீர்ப்பு நியாயமானதா? இந்திரா காந்தி தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வாரா? காங்கிரஸ் கட்சியின் நிலை என்னவாக இருக்கும்? எதிர்க் கட்சிகள் என்ன செய்யும்?...

### 15.3.2. மேல் முறையீடு

இந்திரா காந்தி அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இந்திரா காந்தி சார்பாக பம்பாயின் பிரபல வழக்கறிஞர் **நானி பல்கிவாலா** வழக்கை நடத்தினார். கோடை விடுமுறைக்கால உச்ச நீதிமன்ற நீதிபதி **கே.ஆர்.கிருஷ்ணய்யர்** வழக்கை விசாரித்து 1975 ஜூன் 22–ஆம் தேதி திங்கள் கிழமை பின்வருமாறு தீர்ப்பு வழங்கினார். 1) அலகாபாத் உயர்நீதிமன்றத்

...ப்பு வழங்கும் வரை இந்திரா காந்தி ... (Full Bench) ... partial stay order) மேல்முறையீட்டை ... நீடிக்கும் காலத்தில் அவர் நாடாளுமன்றப் பிரதமராக நீடிக்கலாம்; 3) அவர் ... வாக்களிக்கவோ ஊதியம் பெறவோ கூடாது! உச்ச நீதிமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ள ... நாட்டில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது. உச்ச நீதிமன்றத்தின் ...

## 15.3.3. பதவி விலகக் கோரிக்கை

உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்புக்குக் காத்திராமல் எதிர்க்கட்சிகள் 'இந்திரா காந்தி பதவி விலக வேண்டும்' என்று குரல் எழுப்பினர். ... பக்ருதீன் அலி அகமது மாளிகை முன் அமர்ந்து 'தர்ணா' செய்தனர். உச்ச ... தீர்ப்பு வெளியான பின் 1975 ஜூன் 25–ஆம் தேதி டெல்லி ராம் லீலா ... நடைபெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் பேசிய ஜெயப்பிரகாஷ் நாராயண் ... காந்தி பதவி விலகாமையைக் கடுமையாகக் கண்டித்தார். இராணுவத்தை ... போலீசாரையும் சட்ட விரோதமான உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டாம் ... கேட்டுக் கொண்டார். "முழுப்புரட்சியே நமது கோஷம்; எதிர்காலம் நமது" ... முழங்கினார். முழுப் புரட்சியின் செயல் திட்டத்தையும் அறிவித்தார். அதன் ... துவக்கமாக ஒரு வாரத்துக்கு (ஜூன் 29 லிருந்து ஜூலை 5 வரை) பிரதமர் இல்லம் ... முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று அறிவிக்கப்பட்டது.

## 15.3.4. நெருக்கடி நிலைப் பிரகடனம்

பிரதமர் இந்திரா காந்தி நாட்டின் அரசியல் நிலைமை கட்டுக்கடங்காமல் ... உள்நாட்டுப் போரில் முடிந்து விடுமோ என்று அஞ்சினார். எதிர்க்கட்சிகள் ... வலை' யிலிருந்து தப்ப முடிவு செய்தார். மேற்கு வங்காள முதலமைச்சரும் ... வல்லுநருமான **சித்தார்த் சங்கர் ரேயின்** ஆலோசனையின் பேரில் அரசியலமைப்புச் **சட்டத்தின் 352–வது சரத்தின் படி உள்நாட்டு நெருக்கடி** நிலைப் பிரகடனம் வெளியிட ... செய்தார். 1975 ஜூன் மாதம் 25–ஆம் தேதி இரவு எட்டு மணிக்குப் பிரதமர் இந்திரா காந்தியும் சித்தார்த் சங்கர் ரேயும் குடியரசுத் தலைவரைச் சந்தித்து நிலைமையை விளக்கினர். அன்று நள்ளிரவுக்கு முன் குடியரசுத் **தலைவர் பக்ருதீன்** அலி அகமது ... நெருக்கடி நிலைப் பிரகடனத்தில் கையொப்பமிட்டார். அமைச்சரவையின் ஒப்புதல் ... பிரதமரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்குச் சம்மதித்தார். உள் நாட்டு குழப்பங்களால் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து வந்து விட்டதாகக் கூறி நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது (ஜூன் 25 ...

## 15.4 நெருக்கடிக் கால நடவடிக்கைகள்

### 15.4.1. பிரகடனம்

**1975 ஜூன் 25–ஆம் தேதி ஜெயப்பிரகாஷ் நாராயண் முழுப்புரட்சித் திட்டத்தை** வெளியிட்டார். அன்றிரவே தேசிய உள்நாட்டு நெருக்கடி நிலைப் பிரகடனத்தில் ... கூட்டத்தில் தேசிய நெருக்கடி நிலைப் பிரகடனம் (National Emergency Proclamation) ... செய்யப்பட்டதையும், ஜே.பி. மொரார்ஜி தேசாய் போன்றோர் கைது செய்யப்பட்டதையும் அறிவித்தார் பிரதமர் இந்திரா காந்தி. பின்னர் அவர் தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் நெருக்கடி நிலை பற்றி உரையாற்றினார். நாடு உறைந்து போயிற்று. மீண்டும் நம்ப முடியாதது நடந்து விட்டது.

### 15.4.2 யதேச்சதிகாரம்

நெருக்கடி நிலையின் போது இந்தியாவில் ஜனநாயகக் கடிகாரம் நிறுத்தப்பட்டது. யதேச்சதிகார சர்வாதிகார வல்லாட்சி கட்டவிழ்த்து விடப்பட்டது. உள்நாட்டு நெருக்கடிப் பிரகடனத்தின் மூலம் 1) **42வது சட்ட திருத்தத்தின் மூலம்** இந்தியக் கூட்டமைப்புச் சொத்துக்களும், அடிப்படை உரிமைகளும் நிறுத்தி வைக்கப்பட்டன. பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. 2) அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் தடை செய்யப்பட்டன. அரசாங்க ஊழியர்களின் ஊதியம் முடக்கப்பட்டது. 3)ஜெயப்பிரகாஷ் நாராயண், மொரார்ஜி தேசாய், அடல் பிகாரி வாஜ்பாய், சந்திரசேகர் போன்ற காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், பிரதான பத்திரிக்கையாளர்கள், பேராசிரியர்கள், மாணவர் தலைவர்கள்– நூற்றுக்கணக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். 4) நாடாளுமன்றம் முடக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுக்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதற்கும், மன்ற நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கும் தடை விதிக்கப்பட்டன. 5) மாநில அரசாங்கங்கள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் திமுக அரசாங்கமும், குஜராத்தில் ஜனதா அரசாங்கமும் கலைக்கப்பட்டன. ஒத்துழைப்புத் தராத உத்திரப்பிரதேச மற்றும் ஒரிசா முதலமைச்சர்கள் மாற்றப்பட்டனர். 6) உச்ச நீதிமன்றத்தின் நீதிப்புனராய்வு (Judicial Review) அதிகாரம் பறிக்கப்பட்டது. நீதித்துறையை விட ஆட்சித்துறையே அதிகாரமிக்கது என்ற நிலை உருவாக்கப்பட்டது. சுருங்கக்கூறின், வரம்பற்ற ஆட்சி மற்றும் கட்சி அதிகாரம் பிரதமரிடம் குவிக்கப்பட்டது. நெருக்கடி நிலைப் பிரகடனத்தால் அதிர்ச்சியடைந்த காமராஜர் **"பிரிட்டிஷ் ஆட்சியில் கூட இதற்கு இணையான நிகழ்ச்சி நடந்ததில்லை. கண்ணைக் கட்டி காட்டில் விட்டதைப் போல் இருக்கிறேன்"** என்றார்.

### 15.4.3 விளைவு

பிரதமர் இந்திரா காந்திக்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை இருந்தபோதிலும் எதிர்ப்பை அரசியல் களத்தில் சந்திக்காமல் அரசியலமைப்புச் சட்டத்தை முடக்கி அவசரகால சர்வாதிகார ஆட்சியின் மூலம் முறியடிக்க முயன்றார். அச்சம் என்ற அங்குசத்தைப் பயன்படுத்தி எதிர்ப்பு யானையை அடக்கத் தீர்மானித்தார் ... அடக்குமுறைக்கு அஞ்சி மக்கள் யதேச்சதிகார ஆட்சிக்கு அடங்கினர். நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி நிலைநாட்டப்பட்டது. குற்றங்கள் குறைந்தன. இனக்கலவரங்கள் இல்லை. விலைவாசி வீழ்ந்தது. புகை வண்டிகள் காலம் தாழ்த்தாமல் ஓடின. அரசாங்க ஊழியர்கள் நேரப்படி அலுவலகங்கள் சென்றனர். குற்றவாளிகளும் கடத்தல்காரர்களும் சிறையிலடைக்கப்பட்டனர். பிச்சைக்காரர்களைப் பார்க்க முடியவில்லை. வீதிகள் சுத்தமாக இருந்தன. சுருங்கக்கூறின், வேலை நிறுத்தங்கள், பகிஷ்காரங்கள், ஆர்ப்பாட்டங்களின்றி மக்கள் ... கூடிய கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டனர். நாட்டில் சட்டம் ...

## 15.5. 20 அம்சத்திட்டம் (Twenty point Programme)

நெருக்கடி நிலை நடைமுறைக்கு வந்த நான்கு நாட்களுக்குப் பிறகு 1 முதல் தேதி பிரதமர் இந்திரா காந்தி 20 அம்சப் பொருளாதார சமூகத் அறிவித்தார். அத்திட்டத்தின்படி:

1. அத்யாவசியப் பொருள்களின் விலையைக் குறைத்து அவற்றின் விநியே சீரமைத்தல்
2. அரசாங்கச் செலவைச் சிக்கனப்படுத்தல்
3. நிலக்குறிப்பேடுகளை (Land Records)ச் சேகரித்தல், விவசாய உச் சட்டத்தைச் செயல்படுத்தல், உபரி நிலத்தை வினியோகித்தல்.
4. நிலமற்றோருக்கும், பலவீனப்பகுதியினருக்கும் வீட்டு மனைப்பட்டா வழங்க
5. அடிமைத் தொழிலாளர் (Bonded Labour) முறையைச் சட்ட விரோதமாக்கல்
6. கிராமக் கடனை ஒழித்தல்; நிலமற்றோர், உழைப்பாளிகள், சிறுவிவசாயிகள் கைவினைஞர்களின் கடன்களுக்குத் தவணை (Moratorium) அளித்தல்.
7. குறைந்தபட்ச விவசாயக்கூலி பற்றிய சட்டங்களை மதிப்பீடு செய்தல்.
8. 5 மில்லியன் ஹெக்டர் உபரி நிலத்துக்கு நீர்ப்பாசன வசதியை விரிவுபடுத்தல், நீரைப் பயன்படுத்துவதற்கான திட்டத்தைத் தயாரித்தல்.
9. மின்சார உற்பத்தியை அதிகரித்தல்.
10. கைத்தறித் துறையை வளர்த்தல்; மக்களுக்கு கிடைக்கக் கூடிய துணியின் த உயர்த்தல்.
11. நகர்ப்புறத்தைச் சமுதாயமயமாக்கல் (Socialisation); காலி மனைக்கு உச்ச நிர்ணயித்தல்.
12. ஆடம்பரப் பொருள்கள் நுகர்வு பற்றிய மதிப்பீடு செய்தல்; வரி ஏய்ப்பைத் தடு பொருளாதாரக் குற்றங்களை கடுமையாகத் தண்டித்தல்.
13. கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கான சிறப்புச் சட்ட இயற்றல்.
14. தொழில் முதலீடு செய்வதற்கான நடைமுறை விதிகளைத் தளர்த்தல்; இறக்கு உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுத்தல்.
15. தொழிலாளர் அமைப்புகளுக்குப் புதிய திட்டங்களைத் தயாரித்தல்.
16. சாலைப் போக்குவரத்து, தேசியப் பெர்மிட் திட்டங்கள் கொண்டு வரல்.
17. மத்தியதர வகுப்பாருக்கு வருமான வரிச்சலுகை அளித்தல்.
18. விடுதிவாழ் மாணவர்களுக்குக் கட்டுப்பாட்டு விலையில் அத்யாவசியப் பொருள் வழங்கல்.
19. மாணவர்களுக்குக் கட்டுப்பாட்டு விலையில் புத் வழங்கல்.

20. பின்தங்கிய பலவீனப் பிரிவினரின் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் தொழில் பயில்வோர் பயிற்சித் திட்டம் தயாரித்தல்.

இந்திரா காந்தி 20 அம்சத்திட்டம் நெருக்கடி நிலையின் பகுதியாக அறிவிக்கப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டங்களின் சங்கேத மொழி பாமர மக்களுக்குப் புரியவில்லை என்று கருதிய பிரதமர் அவர்களுக்கு எளிதில் புரியக்கூடியவாறு இத்திட்டத்தை கொண்டு வந்தார். ஒளிவுமறைவற்ற தெள்ளத்தெளிவான தன்மை இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். ஐந்தாண்டுத் திட்டங்களின் சாரம் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான நடைமுறைத் திட்டம். தனியார் துறையிலிருந்த கட்டுப்பாடு தளர்த்தல்; மத்தியதர வகுப்பாருக்கு வரிச்சலுகை, தீவிர நிலச் சீர்திருத்தம், ஏழை எளியோருக்கு வசதி—வாய்ப்பளித்தல் போன்ற அனைத்து தரப்பாரையும் திருப்திபடுத்தவல்ல பழைய—புதிய காங்கிரஸ் வாக்குறுதிகளின் தோரணமே இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டமாகும்.

## 17.8 மொரார்ஜி தேசாய் : மதிப்பீடு

மொரார்ஜி 1896 பிப்ரவரி 29-ஆம் தேதி ராய்கோத்ஜி தேசாய் ... அம்மையாருக்கும் குஜராத்தில் பாடெலி என்ற சிற்றூரில் பிறந்... குடும்பத்தைச் சேர்ந்த இவரது முன்னோர்கள் பேஷ்வாக்களின் சமஸ்தா... பதவியில் பணியாற்றிய "தேசாய்" குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ... படிப்பை பல்சார் நகரில் பாய் அவர் பாய் உயர்நிலைப் பள்ளியில் முடித்... மாணவராக இருந்தபோதே சுராஜ்பென் என்ற பெண்ணோடு தி... வைக்கப்பட்டார் (1911). உயர் கல்வியைப் பம்பாயில் வில்சன் கல்லூ... பட்டதாரியானார் (1917).

மொரார்ஜி தேசாய் கல்லூரிக் கல்வியை முடித்த பின் ... அகமதாபாத்தில் துணைக் கலெக்டராகப் பணியில் சேர்ந்தார். பதவி... காந்தியடிகள் துவங்கிய இந்திய விடுதலைப் போராட்டத்தால் ஈர்க்... துறந்து (1930 மே 21) உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்றார். கைது ... சென்றார் (1931). இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனைக்கு... செய்யப்பட்டார் (1933). 1937- இல் பம்பாய் மாநிலத்தில் பி.ஜி.... அமைக்கப்பட்ட அமைச்சரவையில் மொரார்ஜி தேசாய் விவசாய அமை... பின்னர் உள்துறை அமைச்சரானார். 1957-ஆம் ஆண்டு நடைபெற்... தேர்தலில் புல்சார் தொகுதியில் போட்டியிட்டு வென்று பம்பாய் மா... ஆனார். மொரார்ஜி தேசாயின் திறமையைக் கண்ட நேரு ... அமைச்சரவையில் நிதி அமைச்சர் பொறுப்பைக் கொடுத்... இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. 1963-இல் ... காமராஜ் திட்டப்படிப் பதவியை ராஜினாமா செய்தார்.

நேருவின் மறைவுக்குப் பின் மொரார்ஜி தேசாய் பிரதமராக ... பகதூர் சாஸ்திரி பிரதமராக்கப்பட்டதால் அந்த வாய்ப்பு மொரா... கிடைக்கவில்லை. சாஸ்திரியின் அகால மரணத்துக்குப் பின் மொரார்... பதவிக்காக இந்திரா காந்தியுடன் போட்டியிட்டுத் தோற்றார். இ... அமைச்சரவையில் மொரார்ஜி தேசாய் துணைப் பிரதமராகவும், நிதி... சேர்த்துக் கொள்ளப்பட்டார். கருத்து மாறுபாட்டின் காரண... பறிக்கப்பட்டதால், மொரார்ஜி தேசாய் இந்திரா காந்தி அமைச்ச... விலகினார்.

1969–இல் அகில இந்திய காங்கிரஸ் பிளவுபட்ட போது
காந்திக்கு எதிராக ஸ்தாபன காங்கிரசில் சேர்ந்தார். இந்திரா காந்தியின் செயல்பாடுகளை
கடுமையாக விமரிசித்தார். 1975 ஜூன்–26 ஆம் தேதி நெருக்கடி நிலை
பிரகடனப்படுத்தப்பட்ட போது பிற தலைவர்களுடன் மொரார்ஜி தேசாயும் உள்நாட்டுப்
பாதுகாப்புச் சட்டத்தின் (MISA) கீழ்க் கைது செய்யப்பட்டார். பின்னர் 1977 இல் ஏற்பட்ட
ஜனதா "புரட்சி"யின் விளைவாக மொரார்ஜி தேசாய் இந்தியாவின் நான்காவது
பிரதமரானார். எனினும் உட்கட்சிப் பூசலால் ஜனதா கட்சி பிளவுபட்டதால் பெரும்பான்மை
ஆதரவை இழந்த மொரார்ஜி தேசாய் 1978 ஜூலை இறுதியில் பிரதமர் பதவியிலிருந்து
விலக நேரிட்டது.

மொரார்ஜி தேசாய் நாட்டுப் பற்றுக்கும், இறை பக்திக்கும், எளிமைக்கும்,
நேர்மைக்கும், பிடிவாதப் போக்குக்கும் பெயர்போனவர். அவருடைய தனிப்பட்ட
வாழ்க்கையும், நடத்தையும் அப்பழுக்கற்றது. பிறரது உணர்வுகளைப்பற்றிக் கவலைப்
படாமல் வெளிப்படையாகப் பேசக் கூடியவர். காந்தியவாதியாகக் கருதப்பட்டவர்
மொரார்ஜி தேசாய் நல்லவர். வல்லவர் அல்லர். அவரால் ஒரு அணித் தலைவராகச்
செயல்பட முடியவில்லை. மொரார்ஜி தேசாயிடம் தனி மனிதத் திறமை இருந்த அளவுக்கு
தலைமைத் திறமை இல்லை. பதினோராண்டுகள் பாரதப் பிரதமராக இருந்த இந்திரா
காந்தியை கண்ணியத்தோடும் பெருந்தன்மையோடும் நடத்தாதது மொரார்ஜி தேசாயி
பெறறையின்மையின் வெளிப்பாடாகும். காழ்ப்புணர்வு அவரது கண்களை மறைத்
விட்டது. ஊழலுக்கும், ஒழுக்கக்கேட்டுக்கும், அதிகார துஷ்பிரயோகத்துக்
உறைவிடமாக இருந்த மகன் காந்திபாய் தேசாயை உடன் வைத்துக் கொண்
பாதுகாப்பளித்தது மொரார்ஜி தேசாயின் பொதுவாழ்க்கை பாதிக்கப்படுவதற்கு பெரி
காரணமாக இருந்தது. சுருங்கக் கூறின், **ஒரு நல்ல மனிதர் நல்ல பிரதமராக இரு
வேண்டிய அவசியமில்லை என்பதற்கு மொரார்ஜி தேசாய் ஒரு நல்ல உதாரணமா**

மொரார்ஜி தேசாயின் அரசியல் அஸ்தமனம் பதவிப் போட்டிக்குக் கொடுக்கப்
விலையாகும். தேசாய் திணிக்கப்பட்ட பிரதமர். ஜனதா தலைவர்கள் ஒவ்வொருவரு
பிரதமராகும் வெறி இருந்தது. வாஜ்பாயியும், ராமகிருஷ்ண ஹெக்டேயும் வேண்டுமெ
மொரார்ஜியையும், சரண்சிங்கையும் மோதவிட்டுக் கடைசியில் மொரார்ஜியைக்
தள்ளிவிட்டார்கள். உடனிருந்து குழிபறித்தோர் செய்த தவற்றுக்காக மொரார்ஜி தே
தார்மீகப் பொறுப்பேற்றார். அது அவரது உயர்ந்த குணத்தைக் காட்டுவதாக உ
என்று குறிப்பிட்டுள்ளார் சுப்பிரமணிய சுவாமி.

17.9 பிரதமர் சரண்சிங்

(empowerment) பெருமை வி.பி.சிங்கையே சேரும் எதற்கும் ஒரு விலையைக் கொடு வேண்டும் என்றார் வி.பி.சிங். மண்டல் அறிக்கையை நிறைவேற்றமுற்பட்ட வி.பி. பிரதமர் பதவியை விலையாகக் கொடுத்தார்.

### 22.3.7. ராமஜென்மபூமி பிரச்சனை

பிரதமர் வி.பி.சிங் மண்டல் கமிஷன் அறிக்கையை செயல்படுத்திய வடஇந்தியா எரிந்து கொண்டிருந்தபோது அயோத்தியாவில் ராமர் கோயில் கட் பிரச்னை விசுவரூப மெடுத்தது. 1989 இறுதியில் விஸ்வ இந்து பரிஷத் அயோத்தியா ராமர் கோயில் கட்டுவதற்காக அடித்தளம் அமைக்கும் திட்டத்தை (Shilanya தீவிரமாகப் பின்பற்றியது (நவ. 9). அதை ஆதரித்த பா.ஜ.க. 1989 பொதுத் தேர்தல் தன் பலத்தைப் பெருக்கிக் கொண்டது. தேசிய முன்னணி அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுத்தது. வி.பி.சிங் மண்டல் சீட்டை விளையாடிய

... தயங்கின; ...யினர்; ...
மூலப்பொருள்கள், குறிப்பாகப் பெட்ரோலியப் பொருள்கள், இறக்குமதி செய்வது இய...
காரியமாயிற்று.. சுருங்கக்கூறின் இந்தியப் பொருளாதாரம் நோயுற்ற நிலையில் இருந்த...

## 23.4.2. டாக்டர் மன்மோகன் சிங்

டாக்டர் மன்மோகன் சிங் நரசிம்ம ராவ்அரசாங்கத்தில் நிதி அமைச்சரா... இருந்தார். அவர் காங்கிரஸ் கட்சிக்கு வெளியிலிருந்துஅழைத்துவரப்பட்டவர், பொருளாதார மேதை. சர்வதேச நிதி நிறுவனங்களுடன் நன்கு தொடர்பு கொண்டிருந்தவர். உலக நிதி நிலைபற்றி நன்கறிந்தவர். இந்தியாவை எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியை, குறிப்பாக அந்நியச் செலாவணிச் சவாலைச் சமாளிக்கக்கூடிய திறமையுடையவர். அவரது பொருளாதார அணுகுமுறை சமகால இந்தியப் பொருளாதார வரலாற்றில் குறிப்பிடத்தக்க திருப்பு முனையை ஏற்படுத்தியது எனலாம்.

### 13.4.3. பொருளாதாரப் புரட்சி

மூச்சுத் திணறிக் கொண்டிருந்த இந்தியப் பெருளாதாரத்துக்கு உலக வங்கி (World Bank)க் கடன்கள் என்ற பிராண வாயுவைச் செலுத்தி உயிர்பிழைக்க வைக்கும் முயற்சியை மேற்கொண்டார் நிதி அமைச்சர் மன்மோகன் சிங், ஆனால் கடன் கொடுக்கும் நிறுவனங்கள் பல நிபந்தனைகளை விதித்தது; 1) பண வீக்கத்தை 8% ஆகக் கட்டுப்படுத்த வேண்டும்; 2) பணச் செலவுப் பற்றாக் குறையை (Fiscal deficit)க் குறைக்க வேண்டும்; 3) ரூபாய் மாற்று விகிதத்தை (Convertibility of rule)ப் படிப்படியாக மாற்றியமைக்க வேண்டும்; 4) தங்கத் தீர்வைத் தடையை நீக்க வேண்டும்; 5) அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை விலக்க வேண்டும். எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டு ராவ் அரசாங்கம் புதிய பொருளாதாரக் கொள்கையைத் தொலைநோக்குடன் வகுத்துத் துணிவுடன் செயல்படுத்தியது.

**அமைப்பு மாற்றம்** (Structural change), **தாராளமயமாக்கல்** (liberalisation), **தனியார் மயமாக்கல்** (Privitisation), **நவீனமயமாக்கல்** (modernisation), **உலகமயமாக்கல்** (globalisation) ஆகியவை புதிய பொருளாதாரக் கொள்கையின் பரிமாணங்கள் அல்லது சிறப்பியல்புகள் ஆகும். சோஷலிசம், கலப்புப் பொருளாதாரம், பொதுத்துறைக்கு முன்னுரிமை கைவிடப்பட்டது. மாறாக, தனியார் துறையை ஊக்குவித்து, போட்டிப் பொருளாதாரத்துக்கு வாய்ப்பளித்து, சந்தைப் பொருளாதார முறை பின்பற்றப்பட்டது. பிரதமர் ராஜீவ் காந்தி துவக்கிய பொருளாதாரப் புரட்சி ராவ் அரசாங்கத்தால் முழு மூச்சுடன் முன்கொண்டு செல்லப்பட்டது.

ஒருங்கிணைந்த புதிய பொருளாதாரத் திட்டத்தின் விளைவாக 1) பொருளாதார, தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் அரசாங்கக் குறுக்கீடும், கட்டுப்பாடும், நிர்வாக நடைமுறைகளும் தளர்த்தப்பட்டு, எளிதாக்கப்பட்டன; 2) சந்தைப் பொருளாதாரத்திற்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டது; 3) அரசு மானியம் படிப்படியாகக் குறைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது; 4) நஷ்டத்தில் இயங்கி வந்த பொதுத்துறை நிறுவனங்களின் அரசாங்க முதலீடு படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டு அதற்கு பதில் தனியார் முதலீடு ஊக்குவிக்கப்பட்டது; 5) அத்யாவசியத் தொழில்கள் தவிர பிற தொழில்களுக்கு உரிமம் (Licence) வழங்கும் முறை பெரிதும் தளர்த்தப்பட்டது அல்லது விலக்கிக் கொள்ளப்பட்டது; 6) சர்வதேச சந்தையின் தரக்கட்டுப்பாட்டுக்கேற்ப ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் ராவ் அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு நம்பகமான வடிவம் கொடுத்துச் செயல்படுத்தினார்.

புதிய பொருளாதாரச் சீர்திருத்தத்தின் விளைவாகப் பல **நன்மைகள்** ஏற்பட்டன. 1) பணவீக்க விகிதம் கணிசமாகக் குறைந்தது; 2) ஏற்றுமதி அதிகரித்ததால் அந்நியச் செலாவணி சேமிப்பு அதிகரித்தது; 3) தாராளமயப் பொருளாதாரக் கொள்கையால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலதனம் பெருகியது. 4) வரிக்கொள்கை மாற்றத்தின் மூலம் சேமிப்பை அதிகரித்தது; அரசாங்க வருவாயைப் பெருக்கி, உற்பத்தி அளவு உயர்த்தப்பட்டது; 5) இந்தியா சர்வதேச சந்தையில் வெளிநாடுகளுடன் போட்டியிட்டு விற்பனை செய்யும் தன்னம்பிக்கையையும் துணிவையும் பெற்றது; 6) வெளிநாட்டு இந்தியர்கள் தடையின்றித் தங்கம் கொண்டு வருவதற்கு அனுமதி அளித்ததின் மூலம் தங்கத்தின் விலை கட்டுப்படுத்தப்பட்டது; 7) அந்நியச் செலாவணி அதிகரித்ததன் மூலம் ...த்தின் சேமிப்பு உயர்ந்தது; 8) தொழில் நுட்பங்களால் ஏற்படும் ...க்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக 'தேசிய நவீன

### 23.7.1 'பாபர் மசூதி'

முகலாய மன்னர் சாகிர் உதீன் முகமது என்ற 'பாபர்' (சிங்கம்) இந்தியாவை ஆட்சி செய்த போது (1526 – 1930) தற்போதைய உத்திரப் பிரதேசத்தில் அயோத்தியில் 1528 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மசூதி 'பாபர் மசூதி' என அழைக்கப்படுகிறது. 18–ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாபர் மசூதிக்கு அருகில் இருந்த ஒரு சிறு மேடை தான் ராமர் பிறந்த இடம் என்று எண்ணி இந்து மக்கள் வழிபட்டதாக 1786ல் தீபன்தாபர் (P.Tieffenthaper) என்ற ஜெஸ்யூட் பாதிரியார் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது. 1853ல் இந்து துறவிகள் (Hindu ...) பாபர் மசூதி ராமர் பிறந்த இடத்தில் கட்டப்பட்டதாகக் கூறி அதைத் தாக்கினர். அதன் பின் ஏற்பட்ட சமரசப்படி பாபர் மசூதிக்கு வெளியே இருந்த மேடையில் இந்துக்கள் பூஜை செய்யலாம் என்று முடிவாயிற்று. அதன்படி இந்து பூசாரிகளும் பக்தர்களும் அந்த மேடையில் (Ghabookra) வழிபாடு செய்து வந்தனர். 1857 பெருங் கிளர்ச்சிக்குப் பின் பாபர் மசூதிக்கு உரிமை கொண்டாடி இந்துக்களும் முஸ்லிம்களும் ... நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்தனர். 1883ல் ஒரு பண்டிதர் இந்துக்கள் வழிபட்டு வந்த மேடை இருந்த இடத்தில் ஒரு கோயில் கட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை பிரிட்டிஷ் அதிகாரிகள் நிராகரித்ததாக குறிப்பிட்டுள்ளார் எஸ்.கே.திரிபாதி.

### 23.7.2 மசூதிக்குள் ராமர் சிலை!

இந்தியா விடுதலை அடைந்தவுடன் ராமஜென்ம பூமிப் பிரச்னை எழுப்பப்பட்டது. **'அகில பாரதீய ராமாயண மகாசபை'** என்ற அமைப்பைச் சேர்ந்தவர் பாபர் மசூதி முன்னால் 9 நாட்கள் தொடர்ந்து **'ராமச்சந்திரமானஸ்'** என்ற ராமாயணத்தை வாசித்து வந்தார்; பாபர் மசூதிக்குப் பக்கத்தில் இருந்த முஸ்லிம் கல்லறைகள் அவமதிக்கப்பட்டன என்று கூறுகிறார் எஸ்.ஸ்ரீவஸ்தவா. 1949 டிசம்பர் மாதம் நள்ளிரவில் சிலர் பாபர் மசூதியின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து ராமர் சிலைகளை வைத்து விட்டனர்! இந்துக்கள் இச்சிலைகளை 'அதிசயம்' என்றனர்; முஸ்லிம்கள் இதை 'அடாவடித்தனம்' என்றனர்.

### 23.7.3 சர்ச்சைக்குரிய பகுதி

பாபர் மசூதி ராமர் கோவிலாக மாற்றப்பட்டுவிட்டதாகவும், அந்த இடத்தில் பஜனை நடத்தப்பட்டதாகவும், அதில் மக்கள் பெருந்திரளாக வந்து கலந்து கொள்ள வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது. பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பேச்சுகள் மத உணர்ச்சியைத் தூண்டக் கூடியதாக இருந்தன. காந்தி, நேரு ஆகியோர் காங்கிரஸ்காரர்கள் வெளிப்படையாக நிந்திக்கப்பட்டனர்! அப்போது உத்திரப்பிரதேச முதலமைச்சராக இருந்த கோவிந்த் வல்லப பந்த் பாபர் மசூதிக்குள் வைக்கப்பட்ட ராமர் சிலைகளை அகற்றுமாறு பைசாபாத் நீதிபதி கே.கே. நாயருக்கு உத்தரவிட்டார். ஆனால் நாயர் அந்த ஆணையை நிறைவேற்ற மறுத்து விட்டார்! எனவே நாயர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் (பின்னர் நாயர் ஜன சங்கத்தில் சேர்ந்து ... நாடாளுமன்ற உறுப்பினராகவும் (1967) தேர்ந்தெடுக்கப்பட்டார்).

நேரு அரசா... அகற்றாமல், பாபர் மசூ... பகுதி' என்று அறிவித்தது! நேருவும் பட்டேலும் ... முயற்சியை முறியடித்துவிட்டதாகக் கூறுகிறார் டி.தாஸ். அரசாங்கத்தின் உறுதியா... நடவடிக்கையால் இந்து தேசியவாதிகள் ராமஜென்ம பூமி பிரச்னையை அரசிய... ஆதாயத்துக்குப் பயன்படுத்தப்படுவது தடுக்கப்பட்டது என்று கருதுகிறார் ஜாப் ரெனா...

### 23.7.4 ராமஜென்ம பூமி பிரச்னை

1950க்குப் பின் வலுவிழந்து மக்களால் மறக்கப்பட்ட ராமஜென்ம பூமி பிரச்னை 1980களில் மீண்டும் தலைதூக்கியது. 1984 ஏப்ரல் மாதம் விஎச்பி கூட்டிய முதல் **'தர்ம சனத்'** அயோத்தியில் 'ராமர் பிறந்த இடத்தை விடுவிக்க வேண்டும்' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அடுத்த மாதமே வி.எச்.பி **'பஜ்ரங்தள்'** (Bajrang Dal) என்ற அமைப்பை உருவாக்கியது. இது அனுமானைப் போன்ற வலிமையுடையவர்களைக் கொண்ட விஎச்பியின் தீவிரவாதக் கிளையாகும். இந்த **'வானரப் படை'**யின் தலைவராக அகில **பாரதீய வித்யார்த்தி பரிஷத்** (ABVP)தின் அமைப்புச் செயலராகவும் (1970 – 74), 1980லிருந்து ஆர்.எஸ்.எஸ்ஸின் பிரச்சாரகராகவும் இருந்த **வினாய் கத்யார்** நியமிக்கப்பட்டார். விஎச்பி பஜ்ரங்தளத்தை ராமர் கோயிலை 'விடுவிப்பதற்காக'ப் பயன்படுத்தியது!

### 23.7.5 யாத்திரைகள்

1984 ஜூலை 27–ம் தேதி **ஸ்ரீராமஜென்ம பூமி முக்தியக்ன சமிதி** என்ற அமைப்பு **மகந்த் அவைத்ய நாத்தின்** தலைமையின் கீழ் தோற்றுவிக்கப்பட்டது! தியாகம் செய்து ராம ஜென்ம பூமியை விடுவிப்பதே இதன் நோக்கமாகும். இந்த நோக்கத்தோடு இந்த அமைப்பு பீகாரிலுள்ள **சித்தார்மார்கியிலிருந்து** ஊர்வலமாகப் புறப்பட்டு லக்னோ வழியாக டெல்லி செல்லத் திட்டமிட்டது. இதேபோன்று விஎச்பியும் ராமஜென்ம பூமியை முஸ்லிம்களிடமிருந்து விடுவிக்க பீகாரிலிருந்து அயோத்தியாவுக்கு ஒரு வார கால ரத யாத்திரைக்கு ஏற்பாடு செய்தது. ஆனால் பிரதமர் இந்திரா காந்தி கொல்லப்பட்டதால் இவ்விரு முயற்சிகளும் கைவிடப்பட்டன! 1984 இறுதியில் நடைபெற்ற தேர்தலில் பாஜகவுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டதால் விஎச்பி ராமர் கோவில் பிரச்னையை எழுப்பவில்லை. எனினும் 1985 அக்டோபர் 31 ஆம் தேதி விஎச்பி உடுப்பியில் கூட்டிய இரண்டாவது 'தர்ம சனத்' கூட்டத்தில் அடுத்த ஆண்டு மார்ச் முதல் தேதியிலிருந்து சத்தியாகிரகப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தது. அந்த அறிவிப்பைத் தொடர்ந்து உத்திரப்பிரதேசத்திலும், பீகாரிலும் 25 தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திலிருந்து **ராம் – ஜானகி ரத யாத்திரைகள்** புறப்பட்டன (1985 நவம்பர் – டிசம்பர்)!

### 23.7.6 நீதிமன்றத்தில் வழக்கு

1986 ஜனவரி 26–ம் தேதி அயோத்தியில் 1950–ல் தொடரப்பட்ட வழக்குக்கு சம்பந்தமில்லாத யு.எம்.பாண்டே என்ற வழக்குரைஞர் முன்சிப் நீதிமன்றத்தில் பாபர் மசூதி பூட்டைத் திறந்து விடப்பட வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார். ஆனால் முன்சிப் நீதிமன்ற உத்திரவின்றி இந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். பாண்டே பைசாபாத் செஷன்ஸ் நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்தார். வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதி மசூதியைத் திறந்துவிட உத்தரவிட்டார் (1986 ... பாபர் ...

## 23.9. பஞ்சாயத்துப் புனரமைப்பு

### 23.9.1. அமைதிப் புரட்சி

பஞ்சாயத்துப் புனரமைப்பு நரசிம்மராவ் ஆட்சியின் சாதனைகளில் அதற்குக் காரணம் உள்ளாட்சிச் சீர்திருத்தம் உச்சகட்டத்தை எட்டியதாகும். துவக்கி வைக்கப்பட்ட அதிகாரப் பரவல் பஞ்சாயத்து ராஜ்ய அமைப்பு புதுப்பித்துப் புத்தாக்கம் கொடுத்தார் ராஜீவ் காந்தி. 64வது சட்டத்திருத்தத்தின் பஞ்சாயத்துக்களை அரசியலமைப்புச் சட்டமயமாக்கும் (Constitutionalis Panchayats) துணிகரமான முயற்சியை மேற்கொண்டார் (1989). அதன் தொடர்ச்சியாகப் பிரதமர் ராவ் **73வது சட்டத்திருத்தத்தின் மூலம்** (1992) காந்தியின் பஞ்சாயத்துப் புனரமைப்புக் கனவை நனவாக்கினார். நாடாளுமன்ற **ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இச்சட்டத்திருத்தம் 1993 ஏப்ரல் 24** **நடைமுறைக்கு வந்தது.** இந்நடவடிக்கை மில்லியன் கணக்கான மக்கள்

...றத்தில் பங்கேற்பதற்கான பஞ்சாயத்து ராஜ்ய அமைப்புப் புரட்சியாகக ...டது.

### 23.9.2. சிறப்பியல்புகள்

பஞ்சாயத்துப் புனரமைப்பு பற்றிய 73வது சட்டத்திருத்தத்தின் சிறப்பியல்புகளாவன: 1)ஒவ்வொரு கிராமத்திலும் 'கிராம சபை' ஏற்படுத்துவதற்கு மாநில பஞ்சாயத்துச் சட்டத்தில் வழி செய்யவேண்டும்; 2) ஒவ்வொரு மாநிலத்திலும் மூன்றடுக்குப் பஞ்சாயத்து அமைப்பு முறையை ஏற்படுத்தல்; 3) மூன்றடுக்குப் பஞ்சாயத்து அமைப்புகளின் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்; 4) ஒடுக்கப்பட்டோர் மற்றும் பழங்குடி மக்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் உரிய இட ஒதுக்கீடு செய்ய வேண்டும்; 5) ஒவ்வொரு பஞ்சாயத்து அமைப்பும் ஐந்தாண்டு காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும். இவ்வமைப்பு சட்டப்படி கலைக்கப்பட்டால் கலைக்கப்பட்ட ஆறுமாதங்களுக்குள் மீண்டும் சட்டப்படித் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்; 6) மாநிலச் சட்ட மன்றம் பஞ்சாயத்து நிறுவனங்களுக்குப் பொருத்தமான தீர்வைகள் விதித்து வசூலிப்பதற்கான அதிகாரத்தை வழங்கலாம். அதேபோன்று மாநில தொகுப்பு நிதி (Consolidated Fund) யிலிருந்து மானியம் பெறுவதற்கு வழிவகுக்கலாம்; 7) ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பஞ்சாயத்து நிதி நிலையைப் பரிசீலித்துப் பரிந்துரை கூறுவதற்காக மாநில நிதிக்கமிஷனை ஏற்படுத்தல்; 8) சட்டத்திருத்தத்தின் முதலாவது அட்டவணையில் பஞ்சாயத்து நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுவதற்கான விரிவான திட்டங்கள் பட்டியலிடப்பட்டன; 9) இச்சட்டத்திருத்தம் செயல் படுத்தப்படும்போது நடைமுறையில் உள்ள பஞ்சாயத்து அமைப்புகள் எஞ்சிய பதவிக்காலம் வரை நீடிக்கும்; 10) இச்சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வந்த ஓராண்டுக்குள் – 1994 ஏப்ரல் 23 க்குள் – மாநிலச் சட்டமன்றங்கள் 73வது சட்டத்திருத்தத்துக் கேற்றவாறு மாநிலப் பஞ்சாயத்துச் சட்டங்களில் தக்க மாற்றங்களைச் செய்ய வேண்டும். எனவே, புதிய பஞ்சாயத்து ராஜ்ய அடிப்படைக் கட்டமைப்பு இந்தியா முழுவதும் ஒன்றாகவே இருக்கும்.

### 23.9.3. மதிப்பீடு

73வது சட்டத்திருத்தத்தின் மூலம் செய்யப்பட்ட பஞ்சாயத்துப் புனரமைப்பு சமகால இந்திய வரலாற்றில் **குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்.** முதல் முறையாக அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டு விதிகளின் 40 வது சரத்துக்குச் சட்ட வடிவம் கொடுக்கப்பட்டது இந்தியாவுக்குப் பொதுவான பஞ்சாயத்து ராஜ்ய கட்டமைப்பைக் கொண்டு வந்து பஞ்சாயத்து நிறுவனங்களுக்கு சட்டப் பாதுகாப்பளித்தது **வரலாற்றுச் சாதனையாகும்.** தாழ்த்தப்பட்டோரும் பெண்களும் என்றுமில்லாத அளவுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இச்சட்டத் திருத்தத்தை மாநிலச் சட்டமன்றங்களும் ஏற்றுக் கொண்டது இந்தியக் கூட்டாட்சி பலப்படவும், ஜனநாயகம் வளப்படவும் வழிவகுக்கவல்லது.

## 23.10. இட ஒதுக்கீட்டுக் கொள்கை

### 23.10.1. உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

**இட ஒதுக்கீட்டுக்கொள்கை** சமகால இந்தியச் சவால்களில் ஒன்றாக நீடிக்கிறது. பிரதமர் இந்திரா காந்தி மண்டல் கமிஷன் ஒதுக்கீட்டு பூதத்தைக் குடுவைக்குள் அடைத்து வைத்தார். வி.பி.சிங் குடுவையைத் திறந்துவிட்டார். சந்திரசேகர் அரசாங்கம் அப்பூதத்தை எதிர்கொள்வதற்கு முன்பே கவிழ்ந்துவிட்டது. நரசிம்மராவ் அரசாங்கம் சாதுர்யமாக இடஒதுக்கீட்டுப் பூதத்தை அடக்கும் பொறுப்பை உச்ச நீதிமன்றத்திடம் ஒப்படைத்தது.

...மறுபரிசீலனை செய்து, ...
...செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

## ...4 இந்தியாவும் கூட்டு சேரா இயக்கமும்
## India and Non-Aligned Movement

கூட்டுசேரா இயக்கம் **1961** ம் ஆண்டு நடைபெற்ற கெய்ரோ மாநாட்டில் இந்தியாவின் நேரு, எகிப்தின் நாசர், யூகோஸ்லாவியாவின் டிட்டோ ஆகியோரின் ...கூட்டு முயற்சியால் உருவானது. இது கூட்டு சேராக் கொள்கையின் நிறுவன ...பாடாகும். பனிப்போர் (Cold War) உச்ச கட்டத்தில் இருந்தபோது ...விக்கப்பட்ட இந்த இயக்கம் பல சாதனைகளைச் செய்தது. சோவியத் ஒன்றியம் ...ண்டுபோனபின் இருதுருவ உலகு (Bipolar World) அமெரிக்காவை மையப்படுத்திய ...துருவ உலகாயுற்று! இம்மாறிய சூழ்நிலையில் கூட்டு சேரா இயக்கத்துக்கு எதிர்காலம் ...ண்டா என்ற கேள்வி எழுந்தது.

காலனி ஆதிக்கமும், ஏகாதிபத்தியமும், இனவாத
நிகழ்வுகளாகிவிட்டன. இவற்றுக்கு பதில் **உலகமயமாக்கல்** (Globalisation)
பொருளாதாரச் சவாலாக உருவெடுத்தது. இப்புதிய சவால்களை
மறுசீரமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் கூட்டுசேரா இயக்கத்துக்கு
சர்வதேச அரசியல் அரங்கத்தில் இவ்வியக்கம் புதிய பயணத்தைத் தொடங்கியது
உச்ச மாநாடுகள் **கார்டஜீனா, டர்பன், கோலாலம்பூர்** ஆகிய நகரங்களில்
நடைபெற்றன.

2003 பிப்ரவரி மாதம் மலேஷியத் தலைநகர் **கோலாலம்பூரில்** நடந்த
கூட்டுசேரா இயக்க உச்ச மாநாட்டில் பிரதமர் வாஜ்பாயும், வெளியுறவுத்துறை அமைச்சர்
யஷ்வந்த் சின்ஹாவும் பங்கேற்றனர். "**கூட்டுசேரா இயக்கம் தேவைதானா என்று**
**கேட்கின்றனர். இந்த இயக்கத்தின் வளர்ச்சித் திட்டத்தின் எந்த அம்சமும்**
**பொருத்தமற்றது என்று கூறமுடியாது**" என்று கூறினார் பிரதமர் வாஜ்பாய்.
நாடுகளைக் கொண்ட கூட்டுசேரா இயக்கம் பின்வரும் **கோலாலம்பூர் பிரகடனத்தை**
வெளியிட்டது: 1) சீரமைக்கப்பட்ட ஐ.நா. அவை மூலம் **பலதரப்பு உலகுக்காக** (Multilat-
eral world) ஒற்றுமையுடன் செயல்படல்; 2) ஐ.நா. அவை மூலம் ஈராக் நெருக்கடிக்கு
தீர்வு காணல்; 3) உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றுபட்டு செயல்படல்;
4)பாலஸ்தீனப் பிரச்னைக்கு சுமூகமாகத் தீர்வுகாணல்; 5) உலகமயமாக்கலை
எதிர்கொள்ளல்; 6) அணு ஆயுத அபாயத்துக்குப் பலதரப்பு அணுகுமுறை மூலம்
தீர்வுகாணல்; 7) ஜனநாயக அடிப்படையில் புது உலகு படைத்தல்; 8)
பிரச்னைகளைத் தொடர்பு படுத்தாமல் பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு
காணல்; 9) முதலீடு மற்றும் தடையற்ற வர்த்தகப் பரிமாற்றம் பற்றி கவனிக்க கூட்டுசேரா
வர்த்தக அமைப்பை (NAM Business Forum) ஏற்படுத்தல்; 10) உலக மயமாக்கலில்
தேசப்பொருளாதார வளர்ச்சியை மறுசீரமைத்தல்.

கோலாலம்பூர் கூட்டுசேரா இயக்கத்தில் பங்கேற்ற பிரதமர் வாஜ்பாய்
**பலதரப்புவாதம்** (Multilateralism), அணுஆயுத மற்றும் ஏவுகணைப் பெருக்கம்
பயங்கரவாதத்துக்கு எதிரான ஐக்கியப் போராட்டம் பற்றிய இந்திய நிலையை
தெளிவுபடுத்தினார். தெற்கு–தெற்கு வர்த்தகத் தொடர்பு மற்றும் முதலீடு
கூட்டுசேரா இயக்கம் மறுசீரமைக்கப்படுவதற்கு இந்தியா ஒத்துழைக்கும் என்றார்.
அதுமட்டுமல்ல. 300 பில்லியன் டாலர் ஆதார மூலதனத்தோடு **உலக வறுமை ஒழிப்பு**
**நிதி** (Global Poverty Eradication Fund) உருவாக்குவது பற்றி கூட்டுச் சேரா நிதி
விவாதிக்க வேண்டும் என்ற யோசனையையும் முன்வைத்தார் பிரதமர் வாஜ்பாய்.
**பொருளாதார வளர்ச்சியை மையப்படுத்தி** கூட்டுசேரா இயக்கம் மறுசீரமைக்கப்பட்டு
இவ்வியக்கம் விரைவாக மாறிவரும் சர்வதேச சூழ்நிலைச் சவாலை வெற்றிகரமாக
எதிர்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

நடவடிக்கை மலர்ந்து 1991ல் புதிய பொருளாதாரக் கொள்கையாக வெளி...
**"சுதந்திர இந்தியப் பொருளாதார வரலாற்றில் முக்கிய மைல்கல்"**
இக்கொள்கையின் **முப்பெரும் தூண்களாவன**: 1)தாராளமயமாக்கல்; 2) ...
**மயமாக்கல்; 3)உலகமயமாக்கல்.** இவையே 21ம் நூற்றாண்டு இந்தியாவின்
பொருளாதாரப் பாதைகளாகும்.

## 32.1.1 தாராளமயமாக்கல் (Liberalisation)

அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட இந்தியா தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்ட கட்டுப்பாடுகளால் பொருளாதாரச் சுதந்திரம் பெற முடியவில்லை! பொருளாதாரச் சுதந்திரத்துக்கான ஒரு வழியே தாராளமயமாக்கலாகும். 'தாராளமயமாக்கல்' என்ற சொல் **உரிமம்** (Licence), **இசைவாணை** (Permit) மற்றும் **உரிமைப் பங்கு** (Quota) ஆகிய முப்பெரும் தடைகளைத் தளர்த்தி, தனியார் துறையைத் தடையின்றி வளரவிடுவதைக் குறிக்கிறது. அதாவது தனியார் துறையில் ஒரு தொழிலைத் துவங்கவோ அல்லது தொழிலை விரிவுபடுத்தவோ அல்லது ஒரு தொழிலை மற்றொரு தொழிலுடன் இணைக்கவோ விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை, விதிகளை, நடைமுறைகளை விலக்கிக் கொள்வதாகும். வேறுவிதமாகக் கூறுவதாயின் அரசாங்கப் பொதுத்துறைக்கும் தனியார் துறைக்குமிடையே இருந்த 'இரும்புத் திரை'யை நீக்குவதாகும். சுருங்கக்கூறின் **தனியார் துறையை அரசாங்க ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதே** தாராளமயமாக்கல் என்று கூறப்படுகிறது.

தாராளமயமாக்கல் கொள்கையின் மூலம் தொழில் முதலீடு, தொழில் து... தொழிலை விரிவுபடுத்தல், அந்நியச் செலாவணி, வெளிநாட்டு வர்த்தகம் ஆகிய... மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டன;

[illegible] இதன் [illegible] ... உரைப்படுத்தப்பட்டன. [illegible] உணவுப் பதனிடுதல், மருந்து, ஆயுள் காப்பீடு [illegible] தொழில்களில் தனியார் பங்கேற்பும், அந்நிய முதலீடும் [illegible] பொதுத்துறைத் தொழில்களின் பங்குகளை வெளிநாட்டுக் கம்பெனிகள் [illegible] இந்தியக் கம்பெனிகளின் [illegible] இறக்குமதி ஏற்றுமதி காப்பு வரி / சுங்க வரி குறைக்கப்பட்டதால் [illegible] வர்த்தகம் பெருமளவு வளர்ந்தது. வர்த்தகக் கணக்கில் ரூபாய் [illegible] (Rupee Convertibility) அனுமதிக்கப்பட்டது. இவற்றின் விளைவாக [illegible] பொருளாதாரம் நாட்டின் உலகப் பொருளாதாரத்துடன் [illegible] இணைக்கப்பட்டது.

## [illegible] தனியார்மயமாக்கல் (Privatisation)

அரசாங்க ஆதரவு, அரவணைப்பு, பாதுகாப்பின் கீழ் துவக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் கட்டுப்பாடின்றி வளர்ந்து 'வெள்ளை யானைகளாக' (White Elephants) [illegible]. 1950ல் அரசாங்கம் 5 பொதுத்துறை நிறுவனங்களில் 29 கோடி ரூபாய் முதலீடு செய்தது. 1991ல் இந்நிறுவனங்களின் எண்ணிக்கை 236 ஆகப் பெருகி 1,01,797 கோடி ரூபாயை மூலதனமாகக் கொண்டிருந்தன! இவற்றுள் பல நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தன. இலாபம் ஈட்டிய நிறுவனங்களிடமிருந்து சேமிப்பு மற்றும் மூலதனத்திலிருந்து கிடைத்த பயனும் மிகக் குறைவாக இருந்தது. மக்களின் வரிப் பணத்தைத் தொடர்ந்து விரயமாக்க விரும்பாத அரசாங்கம் தனியார்மயமாக்கல் கொள்கையை ஏற்றுக் கொண்டது.

'**தனியார்மயமாக்கல்**' என்றால் பொதுத்துறை நிறுவனங்களின் **உரிமை** (Ownership), **அமைப்பு** (Organisation), **மேலாண்மை** (Management), **செயல்பாடு** (Operation), **கட்டுப்பாடு** (Control) ஆகியவற்றைத் தனியார் வசமாக்கலாகும். அதாவது பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை (Shares) தனியாருக்கு விற்றுவிடுவது. **பங்கு விலக்கல்** (Disinvestment) **கொள்கை** மூலம் தனியார்மயமாக்கல் செயல்படுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் **தொழில் கொள்கை அறிக்கை** (1991) தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களில் பங்கு விலக்கல் பற்றி அரசாங்கத்தின் நோக்கத்தை அறிவித்தது. பங்கு விலக்கல் பற்றிய **ரெங்கராஜன் கமிட்டி** (1993) இதற்கான பரிந்துரைகளைச் செய்தது. **1999** டிசம்பர் மாதம் **பங்கு விலக்கல் துறை** (Department of Disinvestment) புதிதாக உருவாக்கப்பட்டது. பங்கு விலக்கல் பற்றி முடிவெடுக்க விரிவான, [illegible] முறை, நிர்வாக நடைமுறை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 1) பொதுத்துறை நிறுவனத்தை முழுமையாக விற்று விடலாம்; 2) அரசாங்கமும் தனியாரும் கூட்டாக நிர்வகிக்கலாம்; 3)மூடிவிடலாம்; 4) தொழிலாளர்களே பொறுப்பேற்று நடத்தலாம்; 5) நிதிக் கட்டமைப்பை மறுசீரமைக்கலாம்; அல்லது 6) சார்பு நிலையங்களின் பங்குகளை வைத்திருக்கும் கம்பெனிகளை (Holding Companies)ப் போன்று அமைப்பு மாற்றம் செய்யலாம். தனியாருக்குக் குறிப்பிட்ட காலத்துக்குக் குத்தகைக்கு விடலாம்;

தனியார்மயமாக்கல் கொள்கைப்படி **மாடர்ன் புட்ஸ்** (Modern Foods) என்ற பொதுத்துறை நிறுவனம் லீவர் கம்பெனிக்கு விற்கப்பட்டது. **பாரத் அலுமினியம் கம்பெனி** [illegible] ஸ்டர்லைட் இண்டஸ்ட்ரீசுக்கு விற்கப்பட்டது. **அஸ்வின் நிசாம்** என்ற நிறுவனம் [illegible] மகேந்திரா என்ற தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. **மங்களூர் கெமிக்கல்** [illegible] என்ற நிறுவனத்திற்கு [illegible] மற்றும் **பெர்டிலைசர்** என்ற அரசாங்க நிறுவனம் ரூயி குரூப் என்ற நிறுவனத்திற்கு [illegible] வளமான **எண்ணெய் நிறுவனங்களைக்** (HPCL,

# 13. இந்திரா காந்தியின் ஆட்சி I
# 1966–1967

சுதந்திர இந்தியாவில் அதிகாரப் பசிமிக்க பிரதமர்
இந்திரா காந்திதான்

– காத்தரின் பிராங்க்

## றப்பும், வளர்ப்பும்

இந்திரா பிரியதர்சினி 1917 நவம்பர் 19 ஆம் தேதி ஜவஹர்லால் நேருவுக்கும் நேருவுக்கும் மகளாகப் பிறந்தார். இந்திரா அலகாபாத்திலிருந்த மாடர்ன் பள்ளி– ட் செசிலா பள்ளி–இல்லக் கல்வி–சுவிட்சர்லாந்து ஜெனிவா சர்வதேசப் பள்ளி மீண்டும் அலகாபாத்தில் செயின்ட் மேரி கான்வெண்ட் பள்ளி (1927)–பூனாவில் துணைப் பள்ளி–சாந்திநிகேதன், பிரிட்டனில் பிரஸ்டல் பள்ளி(1935) பாட்மிட்டன் ஆக்ஸ்போர்டு சாமர்வைல் கல்லூரி (1936) என்று பல்வேறு கல்வி நிலையங்களில் கற்றார். இந்திரா இங்கிலாந்தில் மாணவியாக இருந்த போது வரலாற்றிலும் டவியலிலும் ஆர்வம் கொண்டார். தொழிற்கட்சியில் உறுப்பினரானார். சோஷலிச ந்தத்தில் ஈடுபாடு கொண்டார். இந்திரா பிரியதர்சினி முறையாகக் கற்றதை விட பெற்ற முறைசாராக் கல்வியே அதிகம். நேரு சிறையிலிருந்த போது இந்திராவுக்கு வரலாறு பற்றி எழுதிய 200 கடிதங்களும் தந்தை மகளுக்குக் கொடுத்த அரிய சல் கல்வியாகும். 1941 மார்ச் மாதம் இந்தியா திரும்பிய இந்திரா பிரியதர்சினி ண்டனில் இருந்தபோது காதலித்த பெரோஸ் காந்தியைத் திருமணம் செய்து ண்டார் (1942 மார்ச் 26). பெரோஸ் காந்தி சொராஸ்டரிய சமயத்தைச் சேர்ந்த பார்சி பைச் சேர்ந்தவர். 'காந்தி' என்ற சிறப்புப் பெயரை தன் பெயருடன் இணைத்துக் ண்ட பெரோஸ், மகாத்மா காந்திக்கு எந்த உறவும் இல்லை.

## தையும் மகளும்

இந்திராநேரு திருமணத்திற்குப் பிறகு இந்திரா காந்தி ஆனார். இந்திரா ந்தியும் பெரோஸ் காந்தியும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் கலந்து காண்டு சிறை சென்றனர். விடுதலையானவுடன் தனிக்குடித்தனம் துவங்கினர். யர்களுக்கு ராஜீவ் (1944 ஆகஸ்டு), சஞ்சய் (1946 டிசம்பர்) என்ற இரு மகன்கள் றந்தனர். இந்தியப் பிரிவினையின் விளைவாக டெல்லியில் வெடித்த இனக்கலவரத்தின் போது இந்திரா காந்தி மகாத்மா காந்தியின் தலைமையில் இன ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். கமலாவின் மறைவுக்குப் பின் (1936) நேரு டெல்லி தீன் மூர்த்தி இல்லத்தில் வாழ்ந்து வந்தார். இந்திரா காந்தி தன் தந்தையின் வேலைப் பளுவைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு தன் பிள்ளைகளோடு தீன் மூர்த்தி இல்லத்துக்கே வந்து விட்டார். தீன் மூர்த்தி இல்லத்தில் இந்திரா காந்தி தந்தை ஜவஹர்லால் நேருவுக்கு மூன்று வழிகளில் உதவியாக

### 13.4.9. வங்கிகள் தேசியமயமாக்கப்படல்

**பொருளாதாரக் கொள்கை**

பிரதமர் இந்திரா காந்தி 1969 ஜூலை 30–ஆம் தேதி பெங்களூரில் ... அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் முதன் முதலாக அவரது ... பொருளாதாரக் கொள்கை பற்றிய குறிப்பை விவாதத்திற்கு வைத்தார். அக்... குறிப்பில் காணப்பட்ட முக்கிய திட்டங்களாவன: 1) ஆடம்பரச் செல... நிர்ணயித்தல்; 2) பொது நிதி நிறுவனங்களின் கடன் வழங்கும் முறையில் மாற்... 3) புதிய தொழில் முனைவோருக்கும் பின்தங்கிய பகுதிகளுக்கும் அதிக நி... செய்தல்; 4) ஏகபோக உரிமைக் கமிஷனுக்கு (Monopolies Commissions) உறுப்... நியமித்தல்; 5) பொதுத்துறை நிறுவனங்களுக்கு அதிக சுயாட்சி அதிகாரங்கள் ... 6) அந்நிறுவனங்களைத் திறம்பட நடத்துவதற்கான ஆட்களைக் தேர்... 7)நுகர்வோர் தொழில்களில் 'பெரும்புள்ளிகள்' நுழைவதைத் தடை செய்து ... சிறு தொழில்கள் மற்றும் கூட்டுறவுத் துறைகளுக்கு ஒதுக்கல்; 8) படித்த... இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்; 9) நாட்டின் தொழ... திறனுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய அந்நிய முதலீட்டைத் தடை ... 10)பொருளாதாரக் குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டித்தல்.

### 13.4.10. வங்கிகள் அரசுடைமையாக்கப்படல்

1967 அக்டோபர் 25–ஆம் தேதி நடைபெற்ற அமைச்சரவைக் குழு கூ... பிரதமர் இந்திரா காந்தி வங்கிகளைத் தேசிய மயமாக்கும் '**சோஷலிசத் திட்...** கொண்டு வந்தார். அத்திட்டத்தை ஜெகஜீவன்ராம், சவான், சுவரன் சிங் ஆ... ஆதரித்தனர். ஆனால் மொரார்ஜி தேசாய், சத்ய நாராயண் சின்ஹா, சென்ன... ஆகியோர் கடுமையாக எதிர்த்தனர். தன்னை நிலைப்படுத்திக் கொள்வத... மொரார்ஜி தேசாயையும் அவரது ஆதரவாளர்களையும் விரோதித்துக் கொள்ள வி... இந்திரா காந்தி வங்கிகளை தேசியமயமாக்கும் திட்டத்தை வலியுறுத்தவில்லை. ... மொரார்ஜி தேசாயின் வங்கிகளின் மீதான '**சமூகக் கட்டுப்பாடு**(Social Contro... Banks) பற்றிய திட்டத்தை ஏற்றுக் கொண்டார். பின்னர் பெங்களூர் கா... கூட்டத்தின்போது (1969 ஜூலை 30) மொரார்ஜி தேசாயை நிதி அமைச்சர் பதவியிலி... நீக்கிவிட்டு, நிதி இலாகா பொறுப்பை அவரே எடுத்துக் கொண்டு, பொதுமக்கள் ... வைப்புத் தொகை ஐம்பது கோடிக்குமேல் உள்ள **14 பெரிய வங்கி... தேசியமயமாக்கினார்**. அதற்கான அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்த அ... சட்டத்தில் தற்காலிகக் குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரி கையொப்ப...

### 11.4.11 மன்னர் மானிய ஒழிப்பு, 1970

#### 'இளம் துருக்கியர்'

இந்திரா காந்தி பதினான்கு வங்கிகளை அரசுடைமை ஆக்கிய பின்னர் மன்னர் மானிய ஒழிப்பில் (Abolition of Privy Purses) தீவிர கவனம் செலுத்தினார். 1969 நவம்பர் மாதம் இந்திய தேசிய காங்கிரஸ் பிளவுபட்டபின் காங்கிரசிலிருந்த 'இளம் துருக்கியர்' (Young Turks) மன்னர் மானியத்தை ஒழித்தேயாக வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தனர். 'இளம் துருக்கியர்' என்போர் இந்திரா காங்கிரசின் 'இஞ்சிக் குழு' (Ginger Group)வினர். அதாவது கட்சி அரசியலை விறுவிறுப்பாகச் செயலாற்றும்படித் தூண்டும் உட்கட்சி கோஷ்டியினர். இவர்கள் காங்கிரஸ் முற்போக்குவாதிகள். நேருவின் சோஷலிசக் கொள்கைகளையும், திட்டங்களையும் தீவிரமாக ஆதரித்தவர்கள். மோகன் தாரியா, சந்திரசேகர் ஆகியோர் பிரபல இளம் துருக்கியர்கள். இவர்கள் இந்திரா காந்தியின் மறைமுக ஆதரவோடு மொரார்ஜி தேசாயின் 'வலதுசார் அணுகுமுறை'யைக் கடுமையாக எதிர்த்தனர். இளம் துருக்கியர் ஒன்று சேர்ந்து 1967 ஜூன் மாதம் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் அரசாங்கம் மன்னர்களுக்கு அளித்து வந்த மானியத்தையும், சிறப்புச் சலுகைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டுமென்று ஒரு 'திடீர்த் தீர்மானத்தை' (Snap Resolution) கொண்டு வந்து நிறைவேற்றிவிட்டனர். மொரார்ஜி தேசாய் அத்தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தார். இந்திரா காந்தி அக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

#### மானிய ஒழிப்பு

மன்னர் மானிய ஒழிப்புத் தீர்மானத்தை அடுத்து இந்திரா காந்தி மன்னர்களுடன் பேசி இப்பிரச்னைக்குத் தீர்வுகாண விரும்பினார். உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் 'மன்னர் ஒருங்கமைப்பு' (Concord of Princes)டன் பேச்சு வார்த்தை நடத்தினார். மன்னர்கள் சார்பாக தரங்கதாரா மகாராஜா பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டார். மன்னர் மானியத்தைப் படிப்படியாகக் குறைத்து பத்தாண்டுகளில் நிறுத்தி விடுவதாகவும், வருவாய் குறைந்துள்ள மன்னர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை அதிகரித்துக் கொடுப்பதாகவும் கூறினார் சவான். மன்னர் மானியம் 'கருணைக் கொடை' அல்ல என்றும், பரஸ்பர நம்பிக்கையோடு இந்திய அரசிடம் ஒப்படைத்த மாநிலங்களுக்கு இழப்பீடாகக் கொடுக்கப்படும் காணிக்கையாகும் என்றும், தங்கள் கழுத்தில் தாங்களே சுருக்கிட்டுக் கொள்ள முடியாது என்றும் மன்னர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. அரசியல் சட்டப் பாதுகாப்பு இருக்கிறது என்ற தைரியத்தில் அவர்கள் தங்களது கோரிக்கைகளில் பிடிவாதமாக இருந்தனர். பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

### 11.4.12 24 –வது சட்டத் திருத்தம்

பேச்சு வார்த்தையால் சாதிக்க முடியாததை அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் செய்து முடிக்கத் துணிந்தார் இந்திரா காந்தி. அரசியலமைப்புச் சட்டத்தின் 29, 291, 366–வது சரத்துகள் மன்னாள் மன்னர்களுக்கு மானிய

# 23. நரசிம்ம ராவ் ஆட்சி (1991–1996)

> பி.வி.நரசிம்ம ராவ் கூடுமுனையை அடையும் வரை அதிகாரத்தைக் குவித்தார்.
>
> – சயீத் நக்வி

## 23.1 வாழ்க்கைக் குறிப்பு (1921 – 2004)

பி.வி.நரசிம்ம ராவ் 1921 ஜூன் 28 ஆம் தேதி ஆந்திராவில் வாரங்கல் மாவட்டத்தில் நரசப்பேட்டா தாலுகாவைச் சேர்ந்த லகனேபள்ளி என்ற கிராமத்தில் மத்தியதர பிராமண குடும்பத்தில் பிறந்தார். வங்கரா மற்றும் எலூரு கிராமப் பள்ளிகளில் படித்த நரசிம்மராவ் உயர்நிலைக் கல்வி பெற வாரங்கல் வந்தார். மெட்ரிக் தேர்வில் முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்றார் (1937). வாரங்கல் நகரக் கல்லூரியில் 'இண்டர் மீடியட்' படித்தார். அரசியலில் தீவிர பங்கேற்றதால் கல்லூரியிலிருந்து வெளியேற்றப் பட்டார் (1938). பின்னர் நாகபுரி பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். இண்டர் தேர்வில் முதல் வகுப்பில் தேறிய ராவ் புனா பர்கூசன் கல்லூரியில் படித்து அறிவியலில் இளங்கலைப்பட்டம் பெற்றார். பின்னர் சட்டப்பட்டம் பெற்றார்.

நரசிம்ம ராவ் மாணவராயிருந்தபோதே அரசியலில் ஈடுபாடு கொண்டார். காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. ஐதராபாத்தில் வக்கீல் தொழில் செய்தபோதும் அரசியலில் பங்கேற்றார். 1942–ல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் தொடங்கிய போது ராவ் வக்கீல் தொழிலைத் துறந்துவிட்டு தேச விடுதலைப் போராட்டத்தில் குதித்தார். இந்தியா விடுதலை அடைந்தபின் நரசிம்ம ராவ் ஐதராபாத்தை நிஜாமின் ஆட்சியிலிருந்து விடுவிக்க சுவாமி இராமானந்த தீர்த்தர் துவக்கிய போராட்டத்தில் கலந்து கொண்டார். மதக்கலவரத்தை மையமாக வைத்து அவர் எழுதிய 'நீலநிற பட்டுப் புடவை' என்ற சிறுகதை சலசலப்பை ஏற்படுத்தியது.

ஐதராபாத் இந்தியாவுடன்இணைக்கப்பட்டபின் (1948) நரசிம்ம ராவ் தெலுங்கானா சென்றார். ராவ் கரீம் நகர்த் தொகுதியில் போட்டியிட்டு மக்களவை உறுப்பினரானார். வினோபாபாவின் பூதான இயக்கத்துக்கு ஆதரவளித்தார் (1951). விசால ஆந்திரம் அமைக்கப்பட்டபின் ராவ் கரீம் நகர் ஜில்லாவில் 'மந்தனி' சட்டப்பேரவைத் தொகுதியில் வெற்றி பெற்றார் (1957). ராவ் மீண்டும் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் சஞ்சீவி ரெட்டி அமைச்சரவையில் இடம் பெற்றார். பின்னர் பிரம்மானந்த ரெட்டியின் அமைச்சரவையிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார். 1967 தேர்தலில் வெற்றிபெற்ற ராவ் தொடர்ந்து அமைச்சராகப் பணியாற்றினார்.

தெலுங்கானா கிளர்ச்சியின் போது பிரதமர் இந்திரா காந்தி தலையிட்டு சமரசத் தீர்வு கண்டார். அதாவது தெலுங்கானாவைச் சேர்ந்தவர்கள் ஆந்திராவின் முதலமைச்சராக வேண்டும். அதன்படி பிரம்மானந்த ரெட்டி முதல்வர் பதவியை ராஜிநாமா செய்தார் ... மீண்டும் மார்ச் மாதம்

நடைபெற்ற சட்டப் பே... ராவ் மந்தனி' தொகுதியில் போட்டியிட்டு வென்றார். ஆந்திராவின் முதலமைச்சராகத் தொடர்ந்து திறமையாகப் பணியாற்றினார். பிரதமர் இந்திரா காந்தியின் ஆலோசனைப்படி நரசிம்ம ராவ் 1973 ஜனவரி 17 ஆம் தேதி முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்தார். இந்திரா காந்தியின் இதயப்பூர்வமான ஆதரவாளரான ராவ் 1977 தேர்தலில் போட்டியிட்டு 'ஜனதா அலை' யையும் மீறி மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1980 தேர்தலில் ஹனுமந் கொண்டா மக்களவைத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்ற ராவ் இந்திரா காந்தியின் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்திரா காந்திக்குப்பின் பிரதமரான ராஜீவ் காந்தி ராவை பாதுகாப்பு அமைச்சராக்கினார். சந்திரசேகர் அரசு கவிழ்ந்தவுடன் நரசிம்ம ராவ் பிரதமர் பொறுப்பேற்றார் (1991 ஜூன் 21).

## 23.2. பத்தாவது நாடாளுமன்றத் தேர்தல், 1991

சுதந்திர இந்தியாவின் பத்தாவது நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் 1991 ஆம் ஆண்டு இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது. அத்தேர்தல் தலைமைத்தேர்தல் கமிஷனர் டி.என்.சேஷன் கொண்டு வந்த பல புரட்சிகரமான நடைமுறைகளால் மிகுந்த எச்சரிக்கையுடன் நடத்தப்பட்டது. 1991 மே 20 ஆம் தேதி முதல் சட்டத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த இந்திரா காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தி தமிழ்நாட்டில் ஸ்ரீபெரும்புதூரில் கோரமாகக் கொல்லப்பட்டார் (மே 21). ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதால் மே 23 ஆம் தேதி நடக்கவிருந்த இரண்டாம் கட்டத் தேர்தல் ஜூன் 15 ஆம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டது. இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட இத்தேர்தலில் எக்கட்சிக்கும் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. சந்திரசேகரின் ஜனதா தளம் (சோஷலிஸ்ட்) பரிதாபகரமாகத் தோற்றது. காங்கிரஸ் 225 இடங்களைப் பெற்றுத் தனிப்பெரும் கட்சியாக இருந்தது. பா.ஜ.க வுக்கு 119 இடங்களிலும், ஜனதா தளத்துக்கு 53 இடங்களும் கிடைத்தன. 1989 பொதுத் தேர்தலைப் போன்றே இத்தேர்தலிலும் எக்கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமையால் மீண்டும் **"தொங்கு நாடாளுமன்றம்"** (Hung Parliament) அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

## 23.3. சிறுபான்மை அரசாங்கம்

### 23.3.1 அமைச்சரவை

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதால் அடுத்த காங்கிரஸ் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. சில காங்கிரஸ் தலைவர்கள் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி அப்பொறுப்பை ஏற்கவேண்டும் என்றனர். சோனியா காங்கிரஸ் தலைவராக மறுத்ததால் காங்கிரஸ் தலைவர் பதவிக்குப் பி.வி. நரசிம்ம ராவ், அர்ஜுன் சிங், சரத் பவார் ஆகியோர் பரிசிலிக்கப்பட்டனர். 1991 ஜூன் 20 ஆம் தேதி நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சி மக்களவை உறுப்பினராக இல்லாத நரசிம்மராவை ஒரு மனதாக அதன் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. மக்களவை தனிப்பெரும் தலைவரான நரசிம்மராவை அரசாங்கம் அமைக்குமாறு அழைப்பு விடுத்தார் குடியரசுத் தலைவர் (ஜூன் 2). குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமனால் பதவிப் பிரமாணம் செய்துவைக்கப்பட்ட மூன்றாவது பிரதமரான ராவ் இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராகப் பொறுப்பேற்றுச் **சிறுபான்மை அரசாங்கத்தை** (Minority Government) அமைத்தார். 58 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை நரசிம்மராவ் தலைமையின்கீழ் ஆட்சிப் பொறுப்பேற்றது.

### 22.3.2 சபாநாயகர் தேர்தல்

1991 ஜூலை 9–ல் பத்தாவது மக்களவையின் முதல் கூட்டம் கூட்டப்பட்டது. சபாநாயகரை முறையாகத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டது. மரபுவழி சபாநாயகர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பார். ஆனால் காங்கிரசுக்கு அறுதிப் பெரும்பான்மையின்மையால் மற்றொரு கட்சியின் ஆதரவின்றி ஆளும் கட்சியைச் சேர்ந்தவரை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்க இயலாது. ஜனதா தளமும் இடதுசாரிக் கட்சிகளும் ஓய்வு பெறவிருந்த சபாநாயகர் ரபிராயைத் தேர்ந்தெடுக்க விரும்பினர். பிரதமர் பி.வி. நரசிம்ம ராவ் 'மதவாதக் கட்சி' யான பா.ஜ.க.வின் ஆதரவோடு முன்னாள் துணை சபாநாயகரான **சிவராஜ் பட்டீலை** சபாநாயகராக்கினார். பா.ஜ.க. வைச் சேர்ந்த ஒருவரைத் துணை சபாநாயகராக்கக் காங்கிரஸ் சம்மதித்தது. சிறுபான்மை அரசாங்கம் சமயச்சார்பின்மைக் கொள்கையை விட்டுக்கொடுத்து முதல் தடையைக் கடந்தது!

### 23.3.3 நம்பிக்கை வாக்கெடுப்பு

1991 ஜூலை 11ஆம் தேதி குடியரசுத் தலைவர் நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார். 1991 ஜூலை 15ஆம் தேதி மக்களவை நம்பிக்கை வாக்கெடுப்பில் தேசிய முன்னணியும், இடதுசாரிக் கட்சிகளும் கலந்துகொள்ளாமையால் நரசிம்ம ராவின் சிறுபான்மை அரசாங்கம் உயிர் பிழைத்தது. நான்கு நாட்கள் விவாத முடிவில் நம்பிக்கைத் தீர்மானத்துக்கு ஆதரவாக 241 வாக்குகளும், எதிராக 111 வாக்குகளும் கிடைத்தன. ராவ் ஆட்சியைக் கவிழ்த்து இடைத் தேர்தலை சந்திக்க எந்த கட்சியும் தயாராயில்லை. எனவே நரசிம்ம ராவ் நம்பிக்கை வாக்கெடுப்பு பெறுவதற்குச் சூழ்நிலைக் கட்டாயம் சாதகமாக இருந்தது.

## 23.4. புதிய பொருளாதாரக் கொள்கை

### 23.4.1. பொருளாதார நெருக்கடி

நரசிம்ம ராவ் பிரதமர் பொறுப்பேற்றபோது இந்தியாவின் பொருளாதார நிலை மிகுந்த கவலை அளிக்கக் கூடியதாக இருந்தது. நாடு பொருளாதார நெருக்கடியில் நலிந்து கொண்டிருந்தது. அதற்குக் காரணம் அந்நியச் செலவாணி அடிமட்டத்தில் இருந்தது; ஏற்றுமதி–இறக்குமதி தேக்க நிலையை அடைந்தது; தொழில் வளர்ச்சி விகிதம் எதிர் மறையாக இருந்தது; உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகள் மிகக் குறைவாக இருந்தன; கடன் சுமை அபாய அளவை எட்டியது; வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் (non-resident Indians-NRIs) தங்களது இந்திய சேமிப்பைக் குறைக்கலாயினர்; சர்வதேச வங்கிகள் இந்தியாவுக்குக் கடனுதவி அளிக்கத் தயங்கின; வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருள்கள், குறிப்பாகப் பெட்ரோலியப் பொருள்கள், இறக்குமதி செய்வது இயலாத காரியமாயிற்று.. சுருங்கக்கூறின் இந்தியப் பொருளாதாரம் நோயுற்ற நிலையில் இருந்தது.

### 23.4.2. டாக்டர் மன்மோகன் சிங்

டாக்டர் மன்மோகன் சிங் நரசிம்ம ராவ்அரசாங்கத்தில் நிதி அமைச்சராக இருந்தார். அவர் காங்கிரஸ் கட்சிக்கு வெளியிலிருந்துஅழைத்துவரப்பட்டவர். பொருளாதார மேதை. சர்வதேச நிதி நிறுவனங்களுடன் நன்கு தொடர்பு கொண்டிருந்தவர். உலக நிதி நிலையற்றி நன்கறிந்தவர். இந்தியாவை எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியை, குறிப்பாக அந்நியச் செலாவணிச் சவாலைச் சமாளிக்கக்கூடிய திறமையுடையவர். அவரது பொருளாதார அணுகுமுறை சமகால இந்தியப் பொருளாதார வரலாற்றில் குறிப்பிடத்தக்க திருப்பு முனையை ஏற்படுத்தியது எனலாம்.



### 23.4.3. பொருளாதாரப் புரட்சி

மூச்சுத் திணறிக் கொண்டிருந்த இந்தியப் பெருளாதாரத்துக்கு உலக வங்கி (World Bank)க் கடன்கள் என்ற பிராண வாயுவைச் செலுத்தி உயிர்பிழைக்க வைக்கும் முயற்சியை மேற்கொண்டார் நிதி அமைச்சர் மன்மோகன் சிங், ஆனால் கடன் கொடுக்கும் நிறுவனங்கள் பல நிபந்தனைகளை விதித்தது; 1) பண வீக்கத்தை 8% ஆகக் கட்டுப்படுத்த வேண்டும்; 2) பணச் செலவுப் பற்றாக் குறையை (Fiscal deficit)க் குறைக்க வேண்டும்; 3) ரூபாய் மாற்று விகிதத்தை (Convertibility of rule)ப் படிப்படியாக மாற்றியமைக்க வேண்டும்; 4) தங்கத் தீர்வைத் தடையை நீக்க வேண்டும்; 5) அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை விலக்க வேண்டும். எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டு ராவ் அரசாங்கம் புதிய பொருளாதாரக் கொள்கையைத் தொலைநோக்குடன் வகுத்துத் துணிவுடன் செயல்படுத்தியது.

**அமைப்பு மாற்றம்** (Structural change), **தாராளமயமாக்கல்** (liberalisation), **தனியார் மயமாக்கல்** (Privitisation), **நவீனமயமாக்கல்** (modernisation), **உலகமயமாக்கல்** (globalisation) ஆகியவை புதிய பொருளாதாரக் கொள்கையின் பரிமாணங்கள் அல்லது சிறப்பியல்புகள் ஆகும். சோஷலிசம், கலப்புப் பொருளாதாரம், பொதுத்துறைக்கு முன்னுரிமை கைவிடப்பட்டது. மாறாக, தனியார் துறையை ஊக்குவித்து, போட்டிப் பொருளாதாரத்துக்கு வாய்ப்பளித்து, சந்தைப் பொருளாதார முறை பின்பற்றப்பட்டது. பிரதமர் ராஜீவ் காந்தி துவக்கிய பொருளாதாரப் புரட்சி ராவ் அரசாங்கத்தால் முழு மூச்சுடன் முன்கொண்டு செல்லப்பட்டது.

ஒருங்கிணைந்த புதிய பொருளாதாரத் திட்டத்தின் விளைவாக 1) பொருளாதார, தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் அரசாங்கக் குறுக்கீடும், கட்டுப்பாடும், நிர்வாக நடைமுறைகளும் தளர்த்தப்பட்டு, எளிதாக்கப்பட்டன; 2) சந்தைப் பொருளாதாரத்திற்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டது; 3) அரசு மானியம் படிப்படியாகக் குறைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது; 4) நஷ்டத்தில் இயங்கி வந்த பொதுத்துறை நிறுவனங்களின் அரசாங்க முதலீடு படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டு அதற்கு பதில் தனியார் முதலீடு ஊக்குவிக்கப்பட்டது; 5) அத்யாவசியத் தொழில்கள் தவிர பிற தொழில்களுக்கு உரிமம் (Licence) வழங்கும் முறை பெரிதும் தளர்த்தப்பட்டது அல்லது விலக்கிக் கொள்ளப்பட்டது; 6) சர்வதேச சந்தையின் தரக்கட்டுப்பாட்டுக்கேற்ப ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் ராவ் அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு நம்பகமான வடிவம் கொடுத்துச் செயல்படுத்தினார்.

புதிய பொருளாதாரச் சீர்திருத்தத்தின் விளைவாகப் பல நன்மைகள் ஏற்பட்டன. 1) பணவீக்க விகிதம் கணிசமாகக் குறைந்தது; 2) ஏற்றுமதி அதிகரித்ததால் அந்நியச் செலாவணி சேமிப்பு அதிகரித்தது; 3) தாராளமயப் பொருளாதாரக் கொள்கையால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலதனம் பெருகியது. 4) வரிக்கொள்கை மாற்றத்தின் மூலம் சேமிப்பை அதிகரித்தது; அரசாங்க வருவாயைப் பெருக்கி, உற்பத்தி அளவு உயர்த்தப்பட்டது; 5) இந்தியா சர்வதேச சந்தையில் வெளிநாடுகளுடன் போட்டியிட்டு விற்பனை செய்யும் தன்னம்பிக்கையையும் துணிவையும் பெற்றது; 6) வெளிநாட்டு இந்தியர்கள் தடையின்றித் தங்கம் கொண்டு வருவதற்கு அனுமதி அளித்ததின் மூலம் தங்கத்தின் விலை கட்டுப்படுத்தப்பட்டது; 7) அந்நியச் செலாவணி அதிகரித்ததன் மூலம் இந்திய வளர்ச்சிக்கழகத்தின் சேமிப்பு உயர்ந்தது; 8) தொழில் நட்டங்களால் ஏற்படும் விளைவுகளிலிருந்து தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக 'தேசிய நவீன

நிதி நிறுவப்பட்டது; 9) பொது ... விரும்பத்தக்க மாற்றங்கள் செய்யப்பட்டன; 10) தொழிற்சாலைகளின் பெருக்கத்தால் சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சாப்பாட்டின் சுவை சாப்பிட்டால் தான் தெரியும். அதே போன்று புதிய பொருளாதாரக் கொள்கையின் பயன் விலைவாசிக் குறைவில் தான் பிரதிபலிக்க வேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்தாத எந்தப் பொருளாதாரக் கொள்கையும் நீடித்த நன்மையைத் தராது. வேலையின்மையும், வறுமையும், விலைவாசியும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் ஆரோக்கியத்தை அறிவதற்கான அளவு கோலாகும். இந்த அளவு கோலைக் கொண்டு பார்த்தால் ராவ் அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கை மக்களின் அன்றாட அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்கவில்லை. அந்நியச் செலாவணி நெருக்கடியைச் சமாளிக்க ரூபாயின் மதிப்பு இருமுறை குறைக்கப்பட்டது. அதேபோன்று வெளிநாட்டுச் செலாவணியைச் சரிக்கட்ட இந்திய இருப்பில் இருந்த தங்கத்தை வெளிநாட்டில் அடகு வைக்க நேர்ந்தது. சுருங்கக்கூறின், நரசிம்மராவ் அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கை உடனடிப் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க உதவியதேயன்றி மக்களின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை. இந்தியப் பொருளாதார நோயாளி காப்பாற்றப் பட்டார்; ஆனால் நோய் நீடித்தது.

### 23.4.4. வரவு-செலவுத் திட்டம்

நிதி அமைச்சர் மன்மோகன் சிங் சமர்ப்பித்த 1991–1992 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் (Budget) பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. குறிப்பாக உரமானியத்தை விலக்கிக்கொள்ளும் திட்டமும், ராஜீவ் காந்தி அறக்கட்டளைக்கு மானிய வழங்கும் திட்டமும் கடுமையான கண்டனத்துக்குள்ளாயின. உரமானியத்தால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட இழப்பைக் குறைக்க மானிய நீக்கத்தால் அரசுக்கு ரூ.2000 கோடி சேமிப்புக்கான திட்டத்தை முன் வைத்தார் நிதி அமைச்சர். சர்வதேச நிதி நிறுவனத்தின் நிர்பந்தத்தால் உரமானிய நீக்க நடவடிக்கையை மேற்கொண்டார் என்று குற்றஞ்சாட்டுக்கு இலக்கானார் மன்மோகன் சிங். காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு ஏற்பட்டது. காபினெட் கூட்டத்தில் உரமானிய விலக்கல் பற்றி முடிவெடுப்பதற்குக் காரணமான மூத்த அமைச்சர்கள் கூட மக்களவை விவாதத்தின் போது நிதி அமைச்சருக்கு ஆதரவாக இல்லை. "மன்மோகன் சிங் இதுபோன்று தண்டிக்கப்படுவதை அவரது வாழ்நாளில் எதிர்கொண்டிருக்க முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார் ஒரு செய்தியாளர். நிதி அமைச்சர் ராஜினாமா செய்தார். ஆனால் பிரதமர் அதை ஏற்கவில்லை. நிதி அமைச்சர் உரமானிய விலக்கலை 40% லிருந்து 30% ஆகக் குறைத்து நிலைமையைச் சமாளித்தார். ராவ் அரசாங்கம் மற்றொரு இடர்ப்பாட்டிலிருந்து தப்பியது.

வரவு-செலவுத் திட்டத்தில் ராஜீவ் காந்தி அறக்கட்டளைக்கு ரூ.100 கோடி மானியம் கோரப்பட்டது. அம்மானியம் ஐந்தாண்டுகளுக்குக் கொடுக்க வழி வகுக்கப்பட்டது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவாக நிறுவப்பட்ட அந்த அறக்கட்டளைக்கு சோனியா காந்தி ஆயுள் தலைவராகவும், ராகுல், பிரியங்கா, சுமன் துபே, சர்மா மற்றும் சிலர் அறங்காவலர்களாக (Trustees)வும் இருந்தனர். உரமானியத்தை விலக்க வேண்டுமென்ற நிதி அமைச்சர் குடும்ப அறக்கட்டளைக்கு பொதுமக்களின் வரிப்பணத்தை மானியமாகக் கொடுக்க முன்வந்ததை எதிர்க்கட்சிகள் கடுமையாகக் கண்டித்தன. சோனியா காந்தி அரசாங்க மானியத்தை ஏற்க மறுத்து பிரதமருக்குக் கடிதம் எழுதியதால் அதுபற்றிய சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

### 23.5. காவிரி நதிநீர் ...

கர்நாடக அரசாங்கத்தின் அணுகுமுறை காவிரி நதி நீர்ப்பங்கீட்டை நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சனையாக்கிவிட்டது. இது பற்றித் தமிழ்நாடு–கர்நாடக மாநிலங்களுக்கிடையே இருதரப்புப் பேச்சுவார்த்தைகளால் பலன் ஏதும் ஏற்படவில்லை. 1989-ல் பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதி சித்ததோஷ் முகர்ஜியின் தலைமையில் அமைக்கப்பட்ட காவிரி நதிநீர்ப் பங்கீட்டு **நடுவர் மன்றம்** (Tribunal) 1991 ஜூன் 25 ஆம் தேதி அதன் தீர்ப்பை வழங்கியது. அத்தீர்ப்பின்படி கர்நாடக அரசாங்கம் ஆண்டுக்குக் குறிப்பிட்ட அளவு (205 tmc) தண்ணீரைத் தமிழ் நாட்டுக்குத் திறந்துவிட வேண்டும். ஆனால் கர்நாடக அரசாங்கம் அத்தீர்ப்பை ஏற்க மறுத்துவிட்டது. காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சனை நரசிம்மராவின் சிறுபான்மை அரசாங்கத்துக்குப் பெரிய சவாலாக இருந்தது. 1991 ஜூலை 25 ஆம் தேதி கர்நாடக அரசாங்கம் நடுவர் மன்றத் தீர்ப்பைச் செயலிழக்கச் செய்வதற்கு எதிராக வெளியிட்ட அவசரச்சட்டம் (Ordinance) பிரச்சனையை மேலும் சிக்கலாக்கியது. காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சனை அரசாங்க நிலையிலிருந்து நடுவர் மன்ற நிலைக்கு இறங்கி வீதிக்கு வந்துவிட்டது. இருமாநிலங்களிலும் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு முறையே எதிராகவும் ஆதரவாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

நரசிம்ம ராவ் அரசாங்கத்துக்கு காவிரி நதிநீர்ப் பங்கீடு பற்றி நேரடி நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மத்திய அரசாங்கம் நடுவர் மன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு பதிலாக உச்சநீதிமன்றத்தின் ஆலோசனையைக் கேட்க முடிவு செய்தது (ஜூலை 28). நடுவர் மன்றத் தீர்ப்பு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. காவிரி நதிநீர்ப் பங்கீட்டில் தமிழ் நாட்டின் உரிமையை நிலைநாட்டும் பொருட்டு அமைச்சர் வாழப்பாடி கே. ராமமூர்த்தி பதவியை ராஜினாமா செய்தார். அ.இ.அ.தி.மு.க. ராவ் அரசாங்கத்துக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டுவிடுமோ என்ற அச்சம் பிரதமருக்கு ஏற்பட்டது. அப்படி ஏதும் நடக்கவில்லை.

மத்திய அரசாங்கம் காவிரி நதிநீர்ப் பங்கீடு பற்றிய நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பைப் பற்றிய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு பின்வருமாறு வழங்கப்பட்டது: 1) கர்நாடக அரசாங்கம் பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லத்தக்கதல்ல; 2) நடுவர் மன்றத்துக்கு இடைக்காலத் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் உண்டு; 3) இம்மன்றத்தின் தீர்ப்பை அரசாங்க இதழில் (Gazettee) பதிவு செய்ய மத்திய அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் 'ஆலோசனை'யை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. 1991 டிசம்பர் 12 ஆம் தேதியிட்ட அரசாங்க இதழில் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு பதிவு செய்யப்பட்டது. ஆனால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பிரச்சனையைத் தீர்க்காமல் தீர்வைத் தள்ளிப் போடுவது பிரதமர் நரசிம்ம ராவின் ராஜதந்திரமாக இருந்தது.

### 23.6. காங்கிரஸ் தலைவர் ராவ்

பி.வி. நரசிம்ம ராவ் பிரதமர் பொறுப்பேற்றபோது நாடாளுமன்ற உறுப்பினராயில்லை. எனவே ராவ் ஆந்திர மாநிலத்தில் 'நந்தியால்' தொகுதியில் போட்டியிட்டு 5,80,287 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் (1991 நவ.17). இத்தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி நரசிம்மராவுக்கெதிராக வேட்பாளரை நிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நரசிம்ம ராவ் நந்தியால் தேர்தலில் வெற்றிபெற்ற பின் 1991 ஏப்ரல் 14, 15, 16 தேதிகளில் காங்கிரசின் 79வது மாநாட்டைத் திருப்பதியில் கூட்டினார். பல ஆண்டு காலமாக நடத்தப்படாமலிருந்த காங்கிரஸ்

# 17.ஜனதா புரட்சி 1977–1979

ஜனதா சூறாவளி அடிப்படை உரிமைகள் மீதான கட்டுப்பாடுகளுக்கு எதிரான தீர்ப்பாகும்.

– குல்தீப் [illegible]

## 17.1 ஜனதா கட்சியின் எழுச்சி

1977–ஆம் ஆண்டு சமகால இந்திய வரலாற்றில் திருப்பு முனையை ஏற்படுத்திய ஆண்டாகும். அந்த ஆண்டில் நாடாளுமன்ற மக்களவைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வீழ்ச்சி அடைந்து ஜனதா கட்சி எழுச்சி பெற்று ஆட்சி அமைத்தது. ஜனதா கட்சியின் எழுச்சி 1) இந்தியாவின் நெருக்கடி நிலையை முடிவுக்குக் கொண்டு வந்தது; 2) நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் புதுப்பித்துப் புத்துயிர் அளித்தது; 3) நேரு–காந்தி குடும்ப ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. "இது போன்ற பழங்கற்காலத்திலிருந்து தற்காலம் வரை இந்திய வரலாற்றில் நிகழ்ந்ததில்லை"–ஜோன் [illegible]

### 17.1.1 எழுச்சிக்கான பின்னணி

ஜனதா கட்சி ஒரு தெளிவான குறிக்கோளையோ, கொள்கையையோ, திட்டத்தையோ, அமைப்பையோ கொண்ட அரசியல் கட்சி அல்ல. மாறாக, அது பல குறிக்கோள்களையும், கொள்கைகளையும், திட்டங்களையும், அமைப்புகளையும் கொண்ட பல கட்சிகளின் இணைப்பாகும். இப்பலகட்சி இணைப்புக்கான பின்னணிக் காரணங்களாவன:

### 17.1.2 பாரதீய ஜனதா தளம் (Bharatiya Janata Dal)

நான்காவது பொதுத்தேர்தலுக்குமுன் இந்திய தேசிய காங்கிரசிலிருந்து பிரிந்துவந்த **சரண்சிங்** பாரதீய கிரந்தி தளம் (Bharatiya Granti Dal) என்ற கட்சியைத் துவக்கினார். அக்கட்சியோடு சம்யுக்த சோஷலிட் கட்சி, உத்கல் காங்கிரஸ், ராஷ்ட்ரீய லோக் தந்திரிக் கட்சி, கிசான் மஸ்தூர் கட்சி (அரியானா) கேத்திபாரி கிசான் யூனியன் (பஞ்சாப்), சுதந்திரா கட்சி ஆகிய கட்சிகள் சேர்ந்து **பாரதீய லோக் தளம்** என்ற புதிய கட்சியை 1974ஆம் ஆண்டின் மத்தியில் உருவாக்கின.

**பாரதீய லோக் தளத்தின் நோக்கங்களாவன:**

1) ஒருமித்த கருத்துடைய காங்கிரசல்லாத, கம்யூனிஸ்டல்லாத எதிர்க்கட்சிகளை ஒரு குடையின்கீழ்க் கொண்டுவருதல்; 2) இந்திரா காங்கிரசுக்கு பதில் தேசிய மாற்றுக் கட்சியை உருவாக்குதல்; 3) நடைமுறை சாத்தியமான பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றல்; 4) சிதறிக் கிடந்த வாக்குகளை ஒன்று திரட்டி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அரசாங்கத்தையும், நிர்வாகத்தையும் உறுதி செய்தல். சுருங்கக்கூறின் இந்திரா காங்கிரசுக்கு மாற்று அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற பாரதீய [illegible] ளமாயிற்று.

ஜெயப்பிரகாஷ் [illegible] மக்கள் இயக்கம் (People's Movement) பாரதீய லோக் தளத்தின் நோக்கம் தேசிய அங்கீகாரம் பெறுவதற்குக் காரணமாகவும் கருவியாகவும் இருந்தது. ஓரணியாகத் திரண்ட காங்கிரஸ்–கம்யூனிஸ்ட் அல்லாத எதிர்க் கட்சிகளின் அமைப்பு ஜே.பி.இயக்கத்தின் செல்வாக்கின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. அதன் விளைவாக எதிர்க் கட்சிகளிடையே இருந்த கொள்கை வேறுபாடுகளும் மாறுபாடுகளும் 'நடைமுறைக்குச் சாத்தியமான ஒருமித்த கருத்து' (Pragmatic Consensus) என்ற கடலில் கரையலாயின. எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தேசிய ஒருங்கிணைப்புக் குழு (A National Coordination Committee) அமைக்கப்பட்டது. அக்குழுவில் பாரதீய லோக் தளம், ஜன சங்கம், ஸ்தாபன காங்கிரஸ் மற்றும் சோஷலிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகள் இடம்பெற்றன. அக்குழுவின் தலைவரான மது லிமாயே புதிய கட்சி பின்பற்றுவதற்கான சமூக–பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தார். அத்திட்டத்துக்குப் பரவலான வரவேற்பு இருந்தது. எனவே ஜே.பி.இயக்கம் ஜனதா கட்சி உருவாவதற்கு உந்துகோலாக இருந்தது.

### 17.1.4 ஜனதா மோர்ச்சா (Janata Morcha)

குஜராத் கிளர்ச்சியின் தாக்கத்தாலும், மொரார்ஜி தேசாயின் உறுதியான உண்ணாவிரதத்தின் விளைவாகவும் சிமன்பாய் பட்டேலின் அமைச்சரவை கலைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து குஜராத்தில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் ஜே.பி. இயக்கத்தை ஆதரித்த கட்சிகள் ஒன்று சேர்ந்து **ஜனதா மோர்ச்சா** என்ற முன்னணியை உருவாக்கின. ஜனதா மோர்ச்சா **பொதுத் திட்டத்தை** (Common Programme)த் தயாரித்து அதை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்டு வென்றது. குஜராத்தில் காங்கிரசல்லாத **பாபுராவ் பட்டேலின்** தலைமையில் ஜனதா மோர்ச்சா அரசாங்கம் அமைக்கப்பட்டது. அப்புதிய புரட்சிகரமான மாநிலப் பரிசோதனை மத்தியிலும் சாத்தியம் என்ற நம்பிக்கை எதிர்க்கட்சிகளிடையே எழுந்தது. எனவே ஜனதா மோர்ச்சாவின் குஜராத் வெற்றி ஜனதா கட்சி எழுவதற்கு முன்னுதாரணமாக இருந்தது.

### 17.1.5 கூட்டுக் கட்சி முயற்சிகள் (Efforts Towark A Federal Party)

தேசிய மாற்றுக் கட்சியின் தேவை, ஜே.பி. இயக்கத்தின் தாக்கம், ஜனதா மோர்ச்சா முயற்சி வெற்றி ஆகியவற்றை மனதில் கொண்டு முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் ஒருதேசிய கூட்டுக் கட்சியை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். உதாரணமாக ஜன சங்கத்தின் வாஜ்பாயி மற்றும் குவாலியர் ராஜ மாதா, ஸ்தாபன காங்கிரசின் அசோக் மேத்தா, சோஷலிஸ்ட் கட்சியின் என்.ஜி.சோரே ஆகியோர் கட்சிகள் இணைப்பு நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டனர். அவர்களுடைய முயற்சி வீண்போகவில்லை.

1975 ஜுன் 20–லிருந்து 24 தேதிகளில் பாரதீய லோக்தளம், ஸ்தாபன காங்கிரஸ், சோஷலிஸ்ட் கட்சி, அகாலி தளம் ஆகிய கட்சிகளின் ஆட்சிக் குழுவினர் புது டெல்லியில் ஒன்று கூடி ஒரு தேசிய கூட்டுக்கட்சி அமைப்பது பற்றி ஆலோசித்தனர். எதிர்க்கட்சிகளின் ஆட்சிக் குழுவினர் கூட்டுக் கூட்டத்துக்கு மொரார்ஜி தேசாய் தலைமை தாங்கினார். ஜெயப்பிரகாஷ் நாராயண் பாட்னாவிலிருந்து வந்து சிறப்புரையாற்றினார். மது லிமாயே கூட்டுக் கட்சித் திட்டத்தை நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு வந்தார். அத்திட்டம் பிரதிநிதியாளர்களால் அங்கீகரிக்கப்பட்டது. கூட்டுக் கட்சி அமைப்பது பற்றிய விவாதத்தின் போதுதான் இந்திரா காந்திக்கு எதிரான அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்புவெளியாயிற்று. அத்தீர்ப்பும், அதைத் தொடர்ந்து பிரகடனப்படுத்தப்பட்ட நெருக்கடி நிலையும் எதிர்க் கட்சிகளின் கூட்டுக் கட்சி முயற்சிக்கு உத்வேகத்தைக் கொடுத்த

கைது செய்யப்பட்டனர் (1975 ஜூன் 24). அமைப்பது முடிவெடுத்த அன்று நள்ளிரவில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் எஞ்சியிருந்த எதிர்க்கட்சித் தலைவர்களும் பல்லாயிரக்கணக்கான கட்சித் தொண்டர்களும் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி சிறையிலடைக்கப் பட்டனர். பத்திரிக்கை சுதந்திரம் பறிமுதல் செய்யப்பட்டது. நானாஜி தேஷ்முக், ஜார்ஜ் பெர்னாண்டர்ஸ், கர்ப்பூரி தாக்கூர் போன்றோர் தலைமறைவாயினர். நெருக்கடி நிலையை எதிர்த்து மேற்கொள்ளப் பட்ட சத்தியாக்கிரக போராட்டங்கள் ஒடுக்கப்பட்டன. அத்தகைய சூழ்நிலையில் சிறைப்பட்டிருந்த தலைவர்கள் சர்வாதிகாரக் காங்கிரசை ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு இந்திய நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சியை மீட்கத் தீர்மானித்தார். **“ஸ்ரீகிருஷ்ணலைப் போன்று ஜனதா கட்சியும் சிறையில் பிறந்தது”** என்று குறிப்பிட்டுள்ளார் ஜே.எ.நாயக். எனவே எதிர்க்கட்சித் தலைவர்களின் நெருக்கடி நிலைச் சிறை அனுபவம் ஜனதா கட்சி தோன்ற பெரிதும் காரணமாக இருந்தது.

### 17.1.7 ஜனதா கட்சியின் தோற்றம்

1977 ஜனவரி 18–ஆம் தேதி பொதுத் தேர்தல் நடத்தப்படுவதைப் பற்றி அறிவிக்கப்பட்டதேயன்றி நெருக்கடி நிலை விலக்கிக் கொள்ளப்படவில்லை. தேர்தலை சந்திக்க இரண்டுமாதகால அவகாசம்கூட இல்லை. கட்சித் தொண்டர்கள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட வில்லை. விடுதலை செய்யப்பட்ட தலைவர்களும் நெருக்கடி நிலை **“கண் துடைப்புச் செயல்”** என்றே கருதினர். எனினும் அவர்கள் தயக்கத்தை கைவிட்டுத் துணிந்து செயல்படத் துவங்கினர்.

“சிறையில் பிறந்த கட்சி” க்கு முறையான வடிவம் கொடுக்கப்பட்டது. மொரார்ஜி **தேசாய்** தலைவராகவும், **சரண் சிங்** துணைத் தலைவராகவும் புதியதாக உருவாக்கப்பட்ட **ஜனதா கட்சி** (Janata Party) க்குப் பொறுப்பேற்றனர். ஜன சங்கம், ஸ்தாபன காங்கிரஸ், சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள் பொதுச் செயலாளார்கள் ஆனார்கள். பின்னர் மே மாதம் முதல் தேதி **எஸ்.சந்திரசேகரைத்** தலைவராகக் கொண்ட ஜனதா கட்சி அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஜனதா கட்சி தேர்தலை சந்தித்தபோது “கட்சிகளின் கலவை” யாக அமைந்த அரசியல் ஏற்பாடாக இருந்ததேயன்றி சம்மந்தப்பட்ட கட்சிகளின் பொதுக்குழுக்களால் முறைப்படி அங்கீகரிக்கப்பட்ட தனிக்கட்சியாக இல்லை. ஜனதா கட்சி அரசியல் இயற்பியல் மாற்றமே (Physical Change)–யன்றி வேதியில் மாற்ற (Chemical Change)மல்ல. சுருங்கக் கூறின், நெருக்கடி நிலையால் ஏற்பட்ட பிரசவ வலியால் குறைப்பிரசவக் குழந்தையாகப் பிறந்ததே ஜனதா கட்சி ஆகும்.

## 17.2. 1977 பொதுத் தேர்தல்

### 17.2.1 தேர்தல் அறிவிப்பு

1977 ஜனவரி 18 ஆம் தேதி பொதுத் தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்ட அன்றே, குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற மக்களவையைக் கலைத்து விட்டார். ... முன்பே மக்களவை கலைக்கப்பட்டு ... நீக்கப்பட்டது.

3). குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது அகால மரணமடைந்ததால் (மார்ச் 11) அவருக்கு பதில் பிடி.ஜாட்டி (B.D Jatti) நடப்புக் குடியரசுத் தலைவராக (Acting Oesident)ச் செயல்பட்டார். 1977 மார்ச் 21–ஆம் தேதி நெருக்கடி நிலை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதோடு மக்களவைக்கான தேர்தல் பற்றிய அறிவிப்பும் வெளியிடப்பட்டது. சிறையிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். பிரதமர் இந்திரா காந்தி நெருக்கடி நிலைக் கேடயத்தை வைத்துக்கொண்டு சாசுவத சர்வாதிகாரியாகி விடுவார் என்ற எதிர்க்கட்சியினரின் முன்கணிப்பு பொய்த்துப் போயிற்று.

### 17.2.2 ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கை

1977 பிப்ரவரி 10 ஆம் தேதி ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கை (Election Manifesto) வெளியிடப்பட்டது. ஜனதா கட்சி காந்திய மதிப்புகளுக்கு (Gandhian Values)த் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது. இந்தியாவின் பண்பாட்டு மரபைப் போற்றி, விடுதலைப் போராட்டத்தின் உன்னதமான நோக்கங்களை மனதில்கொண்டு, ஜனநாயக சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும் என்று தேர்தல் அறிக்கை கூறியது.

### 17.2.3 தேர்தல் முடிவுகள்

பொதுத் தேர்தல் பற்றிய அறிவிப்பு நாட்டில் மிகுந்த பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது. 1977 மார்ச் 21–ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் 320 மில்லியன் மக்கள் வாக்களிக்கும் தகுதியைப் பெற்றிருந்தனர். 200 மில்லியன் வாக்காளர்கள் வாக்களித்தனர். இந்த எண்ணிக்கை 1971 தேர்தலில் “இந்திரா அலை” வேகமாக வீசியபோது வாக்களித்தோரின் எண்ணிக்கையைவிட அதிகம். உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயகத் தேர்தல் அது. சமகால இந்தியாவில் மிக அதிகமான வாக்களார்கள் பங்கேற்றத் தேர்தலும் இதுதான்.

1977 தேர்தலின் “கதாநாயகக் கட்சி” யான ஜனதா கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் போட்டியிட்ட 493 இடங்களில் 27C இடங்களைக் கைப்பற்றின. வாக்களித்தோரில் 43 விழுக்காடு இடங்கள் இவற்றுக்குக் கிடைத்தன. இத்தேர்தலில்இந்திரா காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. அக்கட்சியால் மொத்தம் 35 விழுக்காடு இடங்களில் மட்டுமே வெற்றிபெற முடிந்தது. காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்ட 49 அமைச்சர்களில் 15 பேர் மட்டுமே வெற்றி பெற்றனர். உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார், அரியானா ஆகிய வடஇந்திய மாநிலங்களில் இந்திரா காங்கிரசுக்கு ஒரு இடம் மட்டுமே கிடைத்தது.

ரே பரேலியில் போட்டியிட்ட இந்திரா காந்தி, ராஜ் நாராயணிடம் தோற்றுப் போனார். அதேபோன்று அமேதி தொகுதியில் சஞ்சய் காந்தி தோற்றார். காங்கிரசின் தோழமைக் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியையும் வாக்காளர்கள் நிராகரித்தனர். அக்கட்சியால் 7 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியால் மேற்கு வங்காளத்தில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. வட மாநிலங்களில் வீழ்ச்சியடைந்த காங்கிரசால் ஆந்திரா, கர்நாடகா, தமிழ் நாடு, கேரளா ஆகிய தென் மாநிலங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. புதிய நாடாளுமன்றத்தில் பாதி இடங்களைப் பிடித்த ஜனதா கட்சிக் கூட்டணி ஜெகஜீவன் ராமின் ஜனநாயகக் காங்கிரஸ் மற்றும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவோடு ஆட்சியை அமைப்பதற்குப் போதிய பலத்தைப் பெற்றது.

1977 தேர்தல் ...

ஒப்புதல் வாக்கெடுப்பு (Referendum) என்றே கூறலாம். மக்களின் அடிப்படை உரிமை பற்றிய கருத்துக்கணிப்பாகும். வாக்காளர்கள் நெருக்கடி நிலையை இந்திரா காந்தியோடு இணைத்துப் பார்த்ததால் அவரையும் அவரது கட்சியையும் நிராகரித்தனர். கடுமையாக தண்டித்தனர். இத்தேர்தல் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் நிலைமைக்குத் தக்க மாறுதலடையக் கூடிய தன்மைக்கு (resilience) நல்ல முன்னுதாரணமாகும். இந்திரா காந்தியின் அரசியல் ஆளுமைக் கவர்ச்சியும் (charisma), சாணக்கியத் தந்திரங்களும் நேரு–காந்தி குடும்பப் பின்னணியும், சூறாவளி சுற்றுப் பயணமும் எடுபடவில்லை.

இந்த அரசியல் தேர்தல்கொந்தளிப்பு காங்கிரசின் பிரளயப் பேரழிவாகும். நெருக்கடி நிலை நீக்கம் இந்திரா காந்திக்கு மக்களின் ஆதரவைப் பெற உதவவில்லை. தேர்தல் முடிவு அவருக்கு "மோசமான அழிவு", "முழுமையான இழப்பு" என்று குறிப்பிட்டுள்ளார் பூபுல் ஜெயகர். இத்தேர்தல்முப்பதாண்டு காலஇடையறா காங்கிரஸ் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தது என்று கருதுகிறார் வால்பெர்ட். "1937–இல் உருவான காங்கிரஸ் மரபு 1977–இல் நிலை குலைந்தது. "இந்திரா காந்தியின் தனிப்பட்ட தோல்வி நேரு குடும்ப வரலாற்றின் மிகவும் மோசமான நிலையைக் குறிக்கிறது" என்று எழுதியுள்ளார் தாரிக் அலி. "பத்தொன்பது மாதகால நெருக்கடிக் கொடுமை ஜனதா சூறாவளியால் அடித்துச் செல்லப்பட்டது; மக்களின் மனக்குமுறல் மகிழ்ச்சியுடன் ஆச்சர்யமாக வெளிப்பட்டது" என்று விமரிசித்தார் குஷ்வந்த் சிங்.

### 17.2.4 ராஜ் நாராயண்

1977 தேர்தலில் ரே பரேலி தொகுதியில் ராஜ் நாராயண் இந்திரா காந்தியை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்றதால் மக்களால் பெரிதும் பேசப்பட்டார். இந்திரா காந்தி இவரிடம் தோல்வி காணும் அளவுக்கு மக்களிடையே செல்வாக்கு இழந்திருந்தார். ராஜ் நாராயண் வாரணாசிக்காரர். மண்ணின் மைந்தர். இளவயதில் குத்துச் சண்டை வீரராக இருந்தவர். இவர் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களின் வாழ்க்கை சந்தங்களை நன்கறிந்தவர். அவர்களின் பாடல்கள், புராணக் கதைகள், விருப்பு வெறுப்புகள் கோபதாபங்கள், வேண்டுதல், வேண்டாமைகள் ஆகிய அனைத்தும் அவருக்கு அத்துபடி. ராஜ் நாராயண் பழமைக் கருத்துகளிலும் மூடநம்பிக்கைகளிலும் ஊறிப்போனவர் அனுமார் உபாசகர்.

ராஜ் நாராயணனின் அரசியல்பிரவேசம் விளையாட்டுத் தனமானது. 1971 பொது தேர்தலில் இவர் இந்திரா காந்திக்கு எதிராகப் போட்டியிட்டு ஒரு இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் தோற்றார். இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று அலகாபாத் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்; வெற்றி பெற்றார். பின்னர் நெருக்கடி நிலை நீக்கப்பட்டுப் பொதுத் தேர்தல் நடைபெற்ற போது ராஜ் நாராயண் மீண்டும் இந்திரா காந்திக்கு எதிராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மொரார்ஜி தேசாய் அமைச்சரவையில் இடம் பெற்றார். அதன்பின் இவரும் ஜார்ஜ்பெர்னாண்டஸும் ஜனதா அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்தனர். சோஷலிஸ்ட் தலைவர்களில் ஒருவரான ராஜ் நாராயண் "அரசியல் கோமாளி" என்று அறியப்பட்டார்.

## 17.3 இரத்தம் சிந்தாப் புரட்சி

1977 பொதுத் தேர்தலின் விளைவாகச் சமகால இந்தியாவில் பெரும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. முப்பதாண்டு காலம் தொடர்ந்து ஆட்சி செய்து வந்த காங்கிரஸ் கட்சிக்கு பதில் ஜனதா கட்சி ஆட்சியைப் பிடித்தது. தேர்தலில் தோல்வியுற்ற ... வழிவிட்டு விலகினார். ...

அறிவிக்கப்பட்டபின் இந்திரா காந்தி எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்துக்கு எவ்வித கட்டுப்பாடும் விதிக்கவில்லை. மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதித்தார். இது இவரது தகுதிக்குரிய தனிச்சிறப்பாகும்" என்று குறிப்பிட்டுள்ளார் வி.கே.நரசிம்மன். 1977 துவக்கத்தில் பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் புட்டோ பெரிய அளவில் ஆள்மாறாட்டத் தில்லுமுல்லுகள் (rigging) செய்து எதிர்க்கட்சிகளைத் தலைதூக்கவிடாமல் செய்து விட்டார். அதோடு ஒப்பிட அதே ஆண்டு இந்தியாவில் நடத்தப்பட்ட தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் இருந்தது என்பதில் ஐயமில்லை. ஆளும் கட்சி நெருக்கடிக் கால அதிகாரங்கள் அனைத்தையும் வைத்துக் கொண்டு, தேர்தலை நியாயமாக நடத்தி, அமைதியான ஆட்சிமாற்றத்துக்கு வழிவகுத்தமைக்கு இணையான முன்னுதாரணம் உலக வரலாற்றில் இல்லை. இந்த ஆட்சி மாற்றம் நாடாளுமன்ற ஜனநாயக வரலாற்றில் நிகழ்ந்த "இரத்தம் சிந்தாப் புரட்சி" (Bloodless Revolution) ஆகும்.

## 17.4 ஜனதா அரசாங்கம்

### ஆட்சி மாற்றம்

இந்தியா சுதந்திரம் பெற்று முப்பதாண்டுகள் கழித்து காங்கிரஸ் ஆட்சிக்குப் பதில் ஜனதா ஆட்சி ஏற்பட்டது. 1977 மார்ச் 22–ஆம் தேதி தேர்தலில் தோல்வியுற்ற இந்திரா காந்தி தனது பிரதமர் பதவி விலகல் கடிதத்தைக் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்தார். சம்பிரதாயப்படி அவர் புதிய பிரதமர் பதவிப் பொறுப்பேற்கும் வரை பதவியில் நீடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். தேர்தலில் வெற்றி வாகை சூடிய ஜனதாத் தலைவர்களும் உறுப்பினர்களும் தேசபிதா காந்தியடிகளின் சமாதியில் கூடி (மார்ச் 24) காந்தி காட்டிய வழி சென்று, ஒற்றுமையுடன் செயல்பட்டு, பொதுவாழ்வில் நேர்மையையும், வாய்மையும் தூய்மையையும் கடைபிடிப்பதென்று சூளுரை எடுத்துக் கொண்டனர். அதன்பின் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஜெயப்பிரகாஷ் நாராயணும், ஆச்சார்ய கிருபளாணியும் ஜனதா கட்சித் தலைவர்களின் ஒருமித்த கருத்தறிந்து மொரார்ஜி தேசாயின் பெயரை நாடாளுமன்ற மக்களவைத் தலைவராகப் பரிந்துரை செய்தனர். அவர்களது பரிந்துரை ஒருமித்த ஒப்புதலைப் பெற்றது. மொரார்ஜி தேசாய் பிரதமர்பொறுப்பேற்று அரசாங்கத்தை அமைக்குமாறு குடியரசுத் தலைவரால் அழைக்கப்பட்டார்.

## 17.5 பிரதமர் மொரார்ஜி தேசாய்

1977 மார்ச் 23–ஆம் தேதி பிற்பகல் மொரார்ஜி தேசாய்க்கு ராஷ்டிரபதி பவனில் பிரதமர் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. தேசாய் இந்தியாவின் நான்காவது பிரதமராகப் பொறுப்பேற்றார். 19 மாதகால வனவாசத்துக்குப்பின் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் மீண்டும் அரியணை ஏறியது. இந்நிகழ்ச்சியை "மூச்சுத் திணறிக் கொண்டிருந்த நாட்டின் ஜனநாயக மறுபிறப்பு" என்று குறிப்பிட்டுள்ளார் வி.கே.நரசிம்மன். பிரதமர்மொரார்ஜி தேசாய் ஜனதா கட்சியின் தேர்தல் பிரகடன வாக்குறுதிகளை நிறைவேற்றத் தயாரானார். 81 வயதான பிரதமர் மொரார்ஜி தேசாய் காந்தி ராஜ்யத்தை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

### ஜனதா அரசாங்க நடவடிக்கைகள்

#### 17.5.1 ஜனநாயக முறையை மீட்டல்

சமகால இந்திய வரலாற்றில் முதல் காங்கிரசல்லாத ஜனதா அரசாங்கத்தின் முதல் முக்கியப் பணி நெருக்கடிக்கால யதேச்சதிகார ஆட்சி முறையை அகற்றி மக்கள் ஜனநாயக முறையை மீட்டதாகும். 1977 மார்ச் 27–ம் தேதி 1971ல் பிறப்பிக்கப்பட்ட 'வெளி நெருக்கடி' (External Emergency) நீக்கப்பட்டது. மக்களின் 'அடிப்படை உரிமைகள்'

22.5. ஆட்சியின் வீழ்ச்சி

22.5.1 ராஜீவ் காந்தியின் ராஜதந்திரம்

சந்திரசேகர் பிரதமரான இரண்டு மாதங்களுக்குள் அவருக்கும் அவரை வெளியிலிருந்து நிபந்தனையற்ற ஆதரவளிப்பதாக உறுதி கூறிய ராஜீவ் காந்திக்குமிடையே கருத்து மாறுபாடுகள் தோன்றின. அதற்கான காரணங்களாவன. 1) வளைகுடாப் போரின் போது இந்தியாவின் அணிசேராக் கொள்கைக்கு எதிராக அமெரிக்கப் போர் விமானப்படை விமானங்களுக்கு இந்திய விமான நிலையங்களில் எரிபொருள் வழங்க அனுமதித்தது; 2) தகுதி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சர்களை நீக்காதது; 3) மத்திய அரசாங்கத்தின் திறமையற்ற பஞ்சாப் மற்றும் காஷ்மீர்க் கொள்கை; 4) நாட்டின் பொருளாதார நிலையைக் கையாண்டமுறை; 5) சிறுபான்மை அரசாங்கத்தை ஆதரிக்கும் 'பரிசோதனை' ஏமாற்றமளித்தல்; 6) யாவற்றுக்கும் மேலாக இரண்டு அரியானா போலீசார் ராஜீவ் காந்தியின் நடவடிக்கைகளைக் கண்காணித்தது.

சந்திரசேகரின் நண்பரான அரியானா முதலமைச்சர் ஓம் பிரகாஷ் சௌதாலா ராஜீவ் காந்தியின் நடவடிக்கைகள் பற்றியும், அவரைச் சந்திக்க வருகின்றவர்கள் பற்றியும் தகவல்களைத் திரட்டுவதாகவும், அத்தகவல்கள் பயங்கரவாதிகளின் கைக்குக் கிடைக்கலாம் என்றும், இது ஒரு அரசியல் தலைவரை அவமதிப்பதாகும் என்றும் ராஜீவ் காந்தி குடியரசுத் தலைவரிடம் முறையிட்டார். அதன்பின் 1) அரியானா அரசாங்கம் பதவி விலக வேண்டும்; 2) அரியானா உள் துறை அமைச்சரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்; 3) டெல்லியின் துணை நிலை ஆளுநர் பதவி விலக வேண்டும் என்ற காரியசாத்தியமற்ற கோரிக்கைகளை வற்புறுத்தினார். இதற்கிடையே தேவிலால், அருண் நேரு, ஆரிப் முகமது கான் ஆகியோர் ராஜீவ் காந்தியின் தலைமையை ஆதரிப்பதாக வதந்திகள் கிளம்பின. மாற்று அரசு அமைப்பதற்கான முயற்சி நடப்பதாக ராஜீவ் காந்தி குடியரசுத் தலைவரிடம் கூறினார். 'ராஜீவ் காந்தி மாற்று அரசாங்கத்துக்குத் தலைமை தாங்கத் தயாராக இருந்தது மட்டுமல்ல; அதில் ஆர்வமுடையவராகவும் இருந்தார்' என்று குறிப்பிட்டுள்ளார் ஆர்.வெங்கட்ராமன்.

22.5.2 பிரதமரின் பதவி விலகல்.

1991 மார்ச் 5 ஆம் தேதி நாடாளுமன்றம் கூடிற்று. காங்கிரஸ் உறுப்பினர்கள் ராஜீவ் காந்தியை வேவுபார்த்த விவகாரம் பற்றி நீதிமன்ற விசாரணை நடத்த வேண்டும் என்று கோரினர். உரியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்வரை மக்களவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கூறி வெளி நடப்பு செய்தனர். 'கோரம்' இன்மையால் மக்களவை இருமுறை ஒத்திவைக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி கூறும் கூட்டம் நடைபெற முடியாமல் போயிற்று. காங்கிரஸ் தொடர்ந்து மக்களவைக் கூட்டத்தைப் புறக்கணித்ததால் பிரதமர் சந்திரசேகர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு மக்களவையைக் கலைத்து விடுமாறு குடியரசுத் தலைவரைக் கேட்டுக் கொண்டார் (மார்ச் 6). பிரதமர் சந்திரசேகரின் ராஜிநாமாவை ஏற்றுக்கொண்ட குடியரசுத் தலைவர் அடுத்த அமைச்சரவை அமையும்வரைப் பொறுப்புப் பிரதமராக நீடிக்குமாறு சந்திரசேகரைக் கேட்டுக்கொண்டார். நிதி மசோதா நிறைவேற்றப்பட்டது (மார்ச் 11,12). 1991 மார்ச் 13 ஆம் தேதியன்று குடியரசுத் தலைவர் மக்களவை கலைக்கப்பட்டதென்றும், புதிய மக்களவை 1991 ஜூன் 5 ஆம் தேதிக்குள் அமைக்கப்பட வேண்டும் என்றும் அறிவித்தார். எந்த [illegible] அரசாங்கம் அமைக்க முன்வராதபோது மக்களவையைக் கலைத்து [illegible] நிதி மசோதாக்களை அவசரச் சட்டத்தின் மூலம் கொண்டு [illegible]

[illegible] நாடாளுமன்றத்திலேயே நிறைவேற்றியது, [illegible] புதிய மக்களவை அமைப்பதற்கான [illegible] முன்கூட்டியே அறிவித்தல் போன்ற ஆரோக்கியமான ஜனநாயக மரபுகளை [illegible]டுத்தினார் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன்.

22.6. மதிப்பீடு

வி.பி.சிங் பொதுவாழ்வில் நேர்மையைக் கடைப்பிடித்தார். தூய்மையான [illegible]மையான நிர்வாகத்தைக் கொடுக்க வேண்டும் என்பதில் குறியாக இருந்தார். [illegible] இருப்பினும் பிறகட்சிகளின் ஆதரவோடு சிறுபான்மை தேசிய முன்னணி அரசாங்கத்துக்குத் தலைமை தாங்கிய அவரால் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. 'கூண்டுக்கிளை கைதி' போல் செயல்பட வேண்டியதாயிற்று. வி.பி.சிங்கின் 'மண்டல் தீர்வு' [illegible]தீக் கலவரங்களில் முடிந்தது. அதேபோன்று அவரது பாபர் மசூதிப் பிரச்னை [illegible] கலவரங்களைத் தீவிரப்படுத்தியது. வி.பி.சிங் சமூக சமய [illegible]ஒதுக்கீடு முறை வகுப்புக் கலவரங்களைத் தீவிரப்படுத்தியது. ஜனதா தளத்தின் உட்கட்சிப் [illegible]க்காகப் பொருளாதார நீதியைப் பலி கொடுத்தார். ஜனதா தளத்தின் உட்கட்சிப் [illegible]சலும், தேசிய முன்னணிக் கட்சிகளுக்கிடையே நிலவிய பதவிப் போட்டியும், [illegible]த்திரிகைகளின் எதிர்ப்பும் வி.பி.சிங்கின் வீழ்ச்சியை உறுதி செய்தன. பிரதமர் வி.பி.சிங்குக்குப் பிரச்னைகளைத் தோற்றுவிக்கத் தெரிந்த அளவுக்கு அவற்றைத் தீர்க்கத் தெரியவில்லை. சுருங்கக் கூறின், பத்துமாத கால தேசிய முன்னணி அரசாங்கம் [illegible]க்குறுதிகளைக் கொடுத்து பதவிக்கு வந்து மக்கள் நம்பிக்கையைக் கெடுத்துப் பதவியை இழந்தது. வி.பி.சிங்குக்குப் பிறகு பிரதமரான எஸ்.சந்திரசேகரின் பதவிக்காலம் 'அரசியல் அபத்தம்' ஆகும். நாஞ்சில் கி.மனோகரனால் 'சாதனையின் விளைநிலமா'கக் [illegible]ருதப்பட்ட சந்திரசேகர் ஆட்சி வேதனையின் தரிசு நிலமாயிற்று.

தான் உள்ளது. கிராமங்கள் இந்தியாவின் குருதி நாளங்கள்.

## 43.3 பஞ்சாயத்து ஆட்சி முறை (Panchayat Raj)

**'கிராம சுயராஜ்யம்'**

கிராமப் பஞ்சாயத்துகள் இந்தியாவின் பாரம்பரிய மிக்க உள்ளாட்சி சுயாட்சி அமைப்புகள். இவை அடுக்கடுக்கான படையெடுப்புகளுக்குப் பின்னரும் நிலைத்து நீடித்தன. இவற்றைக் கண்டு வியந்த **சார்லஸ் மெட்காப்** (Charles Metchalfe) 'கிராமப்

...யத்துக்கள் சிறிய குடியரசுகள்' என்று வர்ணித்தார். கிழக்கிந்தியக்
...னியினரால் 1687ல் முதல் மதராஸ் மாநகராட்சி துவக்கப்பட்டதிலிருந்து இந்திய
...ராட்சி வரலாறு துவங்கியது எனலாம். ரிப்பன் பிரபு (Lord Ripon)வின் தீர்மானம்
...) ஊராட்சி அரசாங்கத்தை 'அரசியல் மற்றும் பொதுமக்கள் கல்விக்கான கருவி'
... கருதியது. 1921ல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்திய அரசாங்கச் சட்டம் (GOI Act)
... ஆட்சிக்கு அடித்தளமிட்டது. விடுதலைப் போராட்டத் தலைவர்கள், குறிப்பாக
..., 'கிராம சுயராஜ்யம்' பற்றி உரக்கக் குரலெழுப்பினார்.

**...லிதழ் ஜனநாயகம்'**

காந்தி கிராம ராஜ்யத்தின் மூலம் கிராம வளர்ச்சிகாண வேண்டும் என்று கனவு
...டார். கிராம வளர்ச்சி மூலம் கிராம சுயராஜ்யத்தை அடைய வேண்டும் என்று
...பினார் நேரு. எனவே அவரது அரசாங்கம் காந்தியின் பிறந்த நாளன்று (1952
...டோபர் 2) சமுதாய வளர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. ஐந்தாண்டுகளுக்குப்
...னர் மூன்று அடுக்கு–கிராமப் பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியம், மாவட்ட மன்றம்–
... பஞ்சாயத்து ஆட்சி முறையை கொண்டு வந்து நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது.

1960 களில் 'புல்லிதழ் ஜனநாயக' (Grass-root Democracy) த்தின்மீது மத்திய
...சாங்கத்துக்கு இருந்த ஆர்வமும், அக்கறையும், அரவணைப்பும் குறைந்தன. 1977
...ச் மாதம் ஜனதா அரசாங்கம் அமைக்கப்பட்டபின் பஞ்சாயத்து ஆட்சிமுறை புத்துயிர்
...ற்றது. பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங்களை பலப்படுத்துவதற்கான பரிந்துரைகளைச்
...ய்வதற்காக அமைக்கப்பட்ட **அசோக மேத்தா குழு** (Asoka Mehta Committee) வின்
...க்கையின் அடிப்படையில் பஞ்சாயத்து ஆட்சிமுறை மறுசீரமைக்கப்பட்டது. ஜனதா
...சியின் அகால வீழ்ச்சிக்குப்பின் பஞ்சாயத்து ஆட்சி தேக்கமுற்றது. பிரதமர் ராஜீவ்
...ந்தியின் ஆட்சிக் காலத்தில் **(1984–89)** புல்லிதழ் ஜனநாயகத்தைப் புதுப்பிக்கும் முயற்சி
...னப்பார்வத்துடன் மேற்கொள்ளப்பட்டது. **சிங்வி குழு** (Singhvi Committee)
...மைக்கப்பட்டது (1987). அக்குழுவின் பரிந்துரையின்படி 64வது அரசியல் அமைப்புச்
...ட்டத்திருத்த மசோதா கொண்டு வரப்பட்டது. ஆனால் இப்புரட்சி முயற்சி
...ர்க்கட்சிகளால் நாடாளுமன்றத்தில் முறியடிக்கப்பட்டது! பின்னர் அதே மசோதா
...ரதமர் நரசிம்மராவ் ஆட்சியின்போது 73வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தமாக
...றைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டது (1992). 1993 ஏப்ரல் 24ம் தேதி நடைமுறைக்குவந்த
...ச்சட்டம் சமகால இந்திய பஞ்சாயத்து ஆட்சி முறையில் முக்கிய திருப்புமுனையை
...ற்படுத்தியது. இந்தியாவில் புதிய பஞ்சாயத்து ஆட்சி பிறந்தது.

**...வது அரசியல் அமைப்புச்சட்டத் திருத்தம், 1992**

**...nstitution (73rd Amendment) Act, 1992**

இந்த சட்டம் பஞ்சாயத்து ராஜ்ய வரலாற்றில் முக்கிய மைல்கல் ஆகும்.
...ச்சட்டத்தின்கீழ் 1) அனைத்து பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங்களுக்கும் சட்ட அந்தஸ்து
...nstitutional Status) வழங்கப்பட்டது; 2) இருபது இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள்
...தொகையைக் கொண்ட அனைத்து மாநிலங்களும் மூன்றடுக்குப் பஞ்சாயத்து ஆட்சி
...றையைப் பின்பற்ற வேண்டும்; 3) ஐந்தாண்டுக்கு ஒருமுறை தவறாமல் முறையாக
...சாயத்துத் தேர்தல்களை நடத்த வேண்டும்; 4) பஞ்சாயத்துகளில் பிற்படுத்தப்பட்டோர்,
...ங்குடியினர், பெண்கள் ஆகியோருக்கு மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்குக்குக்
...றையாமல் இடஒதுக்கீடு செய்ய வேண்டும்; 5) பஞ்சாயத்துக்களின் நிதி அதிகாரங்கள்
...ய பரிந்துரைகள் செய்ய **மாநில நிதிக் கமிஷன்கள்** (State Finance Commission)

அமைக்கப்பட வேண்டும்; 6) மாவட்டம் முழுவதுக்கும் வரைவு வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்காக மாவட்டத் திட்டக் குழு (District Planning Committee) அமைக்கப்பட வேண்டும்.

73வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டப்படி பஞ்சாயத்துக்கள் சுயாட்சி அமைப்புகளாக செயல்படுவதற்கான அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படுதல் வேண்டும். குறிப்பாக பஞ்சாயத்துக்கள் மூன்று முக்கிய துறைகளில் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு ஏற்றவகையில் இந்த அதிகாரங்களும், பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட வேண்டும்; 1) பொருளாதார வளர்ச்சி மற்றும் சமுதாய நீதியைப்பெருவதற்கான திட்டம் தீட்டுவதற்காக; 2) இத்திருத்தச் சட்டத்தின் பதினோராராவது அட்டவணை (Eleventh Schedule of the Constitution)யில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள 29 பொருள்களை செயல்படுத்துவதற்காக; 3) பொருத்தமான வரிகள், தீர்வை வரி, சுங்கவரி, கட்டணம் போன்றவற்றை வசூலிக்க, 1994ல் தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ்ய சட்டம் இயற்றப்பட்டது. 1996 ம் ஆண்டு பஞ்சாயத்துகள் விரிவாக்க சட்ட (Panchayats (Extension to the Scheduled Areas) Act, 1996)ப்படி 1996 டிசம்பர் 24லிலிருந்து பஞ்சாயத்து ஆட்சிமுறை 8 மாநிலங்கள் பழங்குடியினர் பகுதிகளுக்கு (ஆந்திரா, பீகார், குஜராத், இமாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம், ஒரிசா, ராஜஸ்தான்) விரிவுபடுத்தப்பட்டது.

**பஞ்சாயத்து ராஜ்ய அமைப்பு முறை**

பஞ்சாயத்து ராஜ்ய அமைப்புமுறை அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்று 73வது சட்டத்திருத்தச்சட்டம்தெளிவாகக் கூறுகிறது. அதன்படி ஒவ்வொரு மாநிலத்திலும் மூன்றடுக்குப் பஞ்சாயத்து ஆட்சி முறை அமைக்கப்பட வேண்டும்: 1) கிராமப் பஞ்சாயத்துகள்; 2) பஞ்சாயத்து சமிதிகள் என்று அழைக்கப்படும் பஞ்சாயத்து ஒன்றியங்கள் 3) ஜில்லா பரிஷத்துகள் என்று அறியப்படும் மாவட்ட மன்றங்கள்.

## கிராமப் பஞ்சாயத்து

3000 லிருந்து 5000 வரை மக்கள் தொகையுடைய ஒவ்வொரு கிராமத்திலும் கிராமப் பஞ்சாயத்து அமைக்கப்பட வேண்டும். ஐந்தாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் பஞ்சாயத்துத் தேர்தலில் 18வயது நிரம்பிய அனைவரும் பஞ்சாயத்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றுள்ளனர். பஞ்சாயத்துத் தலைவரும் உறுப்பினர்களும் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். பெண்கள், பிற்படுத்தப்பட்டோர், பழங்குடியினருக்கு உரிய இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்; கிராமப் பஞ்சாயத்துப் பணிகள் 1) கட்டாயப் பணிகள்; 2) விருப்பப் பணிகள்; 3) வளர்ச்சிப் பணிகள்; 4) நிறுவனப் பணிகள்; 5) பிற பணிகள் என்று பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஏதோ ஒருகாரணத்தால் கிராமப்பஞ்சாயத்து கலைக்கப்பட்டால் ஆறு மாதங்களுக்குள் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

**கிராம சபை**

73வது சட்டத்திருத்தச் சட்டப்படி கிராம சபை 'சட்ட அந்தஸ்து' பெற்றுள்ளது. கிராம சபை என்பது கிராமப் பொதுமன்றம் ஆகும். இதில் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளோர் அனைவரும் உறுப்பினர்கள் ஆவர். பஞ்சாயத்து உறுப்பினர்களாக இல்லாதவர்களும் "கிராமத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை பெற்றுள்ளனர்" கிராமங்களில் ஓரம் கட்டப்பட்ட ஏழை எளியோர்கூட இக்கூட்டத்தில் பங்கேற்று தங்கள்

...களைப் பாதிக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் விவாதத்தில் பங்கேற்க... சபையின் மூலம் கிராமப் பஞ்சாயத்தின் நடைமுறைகள் ஒளிவு மறைவின்றி ...வாக விமரிசிக்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதன் ... கிராம சமுதாய ஒற்றுமை பலப்படும்.

கிராம சபையின் **முக்கிய பணிகளாவன:** 1) கிராமத்தில் செயல்படுத்த வேண்டிய ...த் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து திட்டமிடுவதற்கு உதவி செய்தல்; 2) ... பஞ்சாயத்தின் ஆண்டுத் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தல்; 3) பெண்கள், ...டோர், பழங்குடியினர் பங்கேற்க வாய்ப்பளித்தல்; 4) கிராமப் பஞ்சாயத்தின் ...களை சரிபார்த்தல்; 5) மத்திய-மாநில வளர்ச்சித் திட்டங்களின் பயனைப் ...தற்குத் தகுதியுடையோரைத் தேர்ந்தெடுத்தல்; 6) கிராம வளர்ச்சிக்காக ...கொள்ள வேண்டிய திட்டங்களை அங்கீகரித்தல்.

## பஞ்சாயத்து ஒன்றியம்

பஞ்சாயத்து ஒன்றியம் மூன்றடுக்குப் பஞ்சாயத்து ஆட்சி முறையின் இடை நிலை அமைப்பாகும். இது பல உறுப்பினர்களைக் கொண்ட கூட்டமைப்பாகும். இதில் 1) பதவிவழி கிராமப் பஞ்சாயத்துத்தலைவர்கள்; 2) ஒன்றிய எல்லைக்குட்பட்ட சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்; 3) இடஒதுக்கீட்டு முறையில் இடம் பெறுவோர்; 4) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்; 5) கூட்டுறவுகள், நகராட்சிகள், ஊரகங்கள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவோர் இடம்பெறுகின்றனர். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்படும் ஒன்றியக் கூட்டத்தில், பெரும்பான்மை வாக்கு அடிப்படையில், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் விவாதிக்கப்பட்டு, முடிவெடுக்கப்பட்டு, நிறைவேற்றப்படுகின்றன. ஒன்றியத்தின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. பணிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட வரிகள் விதிப்பதற்கு பஞ்சாயத்து ஒன்றியத்துக்கு அதிகாரம் உண்டு. இது தவிர நில வருவாயிலிருந்து ஒரு பங்கு இதற்கு ஒதுக்கப்படுகிறது. ஒன்றிய அளவில் செயல்படுத்துவதற்கான வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி கிடைக்கிறது. இவையன்றி மாவட்ட மன்றத்திலிருந்து கிடைக்கும் மானியத்தொகை மற்றும் மாநில அரசாங்கம் வழங்கும் கடன் ஒன்றியத்துக்குக் கிடைக்கின்றன.

### மாவட்ட மன்றம்

மாவட்ட மன்றம் மூன்றடுக்கு பஞ்சாயத்து ராஜ்யத்தின் உச்ச நிலை அமைப்பாகும். இது அடிப்படையில் மாவட்ட வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைக்கும் நிறுவனமாகும். இந்த மன்றத்தில் 1) பதவிவழி பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள்; 2) மாவட்ட எல்லைக்குட்பட்ட சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்; 3) இடஒதுக்கீட்டின்படி இடம்பெறுவோர்; 4) மாவட்ட ஆட்சித்தலைவர்; 5) மாவட்டத்தில் உள்ள நகராட்சித் தலைவர்கள், கூட்டுறவு மத்திய வங்கித் தலைவர்கள், மாவட்ட 'கெஜட்' பதவி பெற்ற அதிகாரிகள் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவர். தமிழ் நாட்டில் மாவட்ட ஆட்சியரே இம்மன்றத்தின் தலைவர்.

### மதிப்பீடு

சமகால இந்தியாவில் **அதிகாரப் பரவல் முறை** (decentralisation of power)யின் கீழ் புதிய பஞ்சாயத்து ஆட்சிமுறை 1957ல் அறிமுகப்படுத்தப் பட்டதிலிருந்து பல படிநிலைகளைத் தாண்டி வளர்ந்துள்ளது; ஏற்ற இறக்கங்களைக் கண்டுள்ளது. இவ்வளர்ச்சியில் பிரதமர்கள் நேரு, மொரார்ஜி தேசாய், ராஜீவ் காந்தி, நரசிம்மராவ்